# பராசக்தி

குண்டலினி சக்தியை எழுப்புவதில் ஒரு சாதகரின் அனுபவங்கள்

**கர்னல் டி.ஸ்ரீனிவாசுலு**

Copyright © 2017 T Sreenivasulu

All rights reserved.

# சமர்ப்பணம்

காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள ஸ்ரீநகரின் தெருக்களில், எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரைநிர்வாணமாக சுற்றித் திரிந்த அந்தப் பெண்ணிற்கு என் வந்தனம் ! எந்த மார்க்கத்தை சேர்ந்தவர் என்பதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக கடைசி வரை எவருடைய இறுதிச் சடங்கை செய்யவே முடியவில்லையோ அந்த மகா யோகினியான லல்லேஸ்வரி அல்லது லால்தேட் அல்லது லல்லாவிற்கு இந்நூல் சமர்ப்பணம் !



**2009-ம் வருடம் ஸ்ரீஸ்ரீ  சுவாமி சகஜானந்தா**
**தீர்த் ஜீ அவர்கள் தம் 85-ம் வயதில்**

# பொருளடக்கம்


ஆசிரியரின் தலைவணக்கம்
நன்றி
தவத்திரு சுவாமி சகஜானந்த தீர்த்தரின் அருளாசி
முன்னுரை
யோகா என்றால்
சித்த மகாயோகா
மகா யோகா முறையின் நான்கு பாதைகள்
குண்டலினி சக்தி
சக்தி மார்க்கம்
சக்தி மார்க்கத்தின் ரகசிய வரலாறு
கிரியை
ஆற்றலின் பல்லடுக்கு வெளிப்பாடு
குண்டலினி சக்தியை எழுப்புதல்
கிரியையின் வெளிப்பாடு
மூளைதண்டுவட மண்டலத்தில் சக்தியின் ஏற்றம்
சக்தியின் இயக்கம்
மூளைதண்டுவட மண்டலத்தின் விசேஷ எதிர் வினைகள்
சக்திக்கும் சாதகருக்கும் நடுவிலுள்ள இடைமுகம்
வாழ்வே கிரியையாக
கிரியையினால் ஏற்படும் மனமாற்றம்
யோக சாதனையின் போது குருவின் வழிகாட்டுதல்
கடைசியாக ஒரு வார்த்தை
அருஞ்சொல் விளக்கம்
ஆசிரம முகவரிகள்

# ஆசிரியரின் தலைவணக்கம்

என்னுடைய மாயை இந்த சக்தி! என்னுடைய புத்தி இந்த சக்தி!
என்னுடைய அகந்தை இந்த சக்தி! என்னுடைய மனம் இந்த சக்தி!
என்னுடைய உடல் இந்த சக்தி! என்னுடைய அன்பு இந்த சக்தி!
என்னுடைய கோபம் இந்த சக்தி! என்னுடைய பெருமிதம் இந்த சக்தி!

என்னுடைய காமம் இந்த சக்தி! என்னுடைய பேராசை இந்த சக்தி!
என்னுடைய மூச்சு இந்த சக்தி! என்னுடைய ஜீவாதாரம் இந்த சக்தி!
என்னுடைய வாழ்க்கை இந்த சக்தி! என்னுடைய கனவு இந்த சக்தி!
என்னுடைய உறக்கம் இந்த சக்தி! என்னுடைய பணிவு இந்த சக்தி!

காலம் என்பது இந்த சக்தியே! அண்டவெளி என்பதும் இந்த சக்தியே! இந்த சக்திக்கு என் தலைவணக்கம்!

அனைத்திற்கும் அப்பாற்பட்ட சத்தியம் இந்த சக்தி!
சர்வமூல உணர்வு இந்த சக்தி!
சர்வ ஆனந்த அனுபவம் இந்த சக்தி!

மிக புதிரானது இந்த சக்தி!
என்றும் அழியாதது இந்த சக்தி!

இதுதான் குண்டலினி சக்தி!
கடவுளுக்கே தெரியாத சக்தி!

# நன்றி

சக்திபாத யோகத்தில் நான் தீட்சை பெற்ற இடம் என் பால்யகால நண்பர் டாக்டர் வி.வி.எஸ்.எஸ் சந்திரசேகரன் மற்றும் அவரது மனைவி திருமதி. வி. ராஜேஸ்வரியின் வீடு. இதற்காக நான் இவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டவனாவேன்.

என் சக சாதர்களான திரு கமலர் குமார், திரு. ரவி குமார் கௌஷிக், திரு. அஜய் ஹம்சாகர் ஆகியோர் இந்நூலின் ஆரம்ப வரைவை யோகாவின் பார்வையில் பகுப்பாய்வு செய்து திருத்திக் கொடுத்துள்ளனர். அதற்காக இவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய குரு சுவாமி சித்தானந்த தீர்த்தரின் ஆசிகளின்றி நான் ஒருபோதும் இந்நூலை எழுதியிருக்க முடியாது. குருஜீயவர்கள் ஆரம்ப கட்டத்திலிருந்தே இந்நூலின் உருவாக்கத்தை தொடர்ச்சியான முறையில் கண்காணித்து யோகா கண்ணோட்டம் என்னும் பிரதான பாதையிலிருந்து என் எழுத்து மாறிவிடாமல் பார்த்துக்கொண்டார்.

இந்நூலை அழகான முறையில் நேர்த்தியாக வடிவமைத்து உயர்தரமாக அச்சிட்டுக் கொடுத்தமைக்காக என்னுடைய பதிப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை வெளியிட தேவையான அனுமதிகளை எனக்கு வழங்கிய இந்திய ராணுவத்தின் ராணுவப் புலனாய்வு இயக்குநரகத்திற்கு என்னுடைய நன்றி.

நூலை சிறப்பான முறையில் தமிழாக்கம் செய்து கொடுத்த நண்பர் திரு.ஆர்.எஸ். ஸ்ரீநிவாசனுக்கும் என்னுடைய நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

# தவத்திரு சுவாமி சகஜானந்த தீர்த்தரின் அருளாசி

சிருஷ்டி கர்த்தாவான கடவுளைக் கண்டடைய தனிப்பட்ட மனிதர்கள் தேர்ந்தெடுக்கும் பாதைகள் தனித்தனியானவை. பாதை எதுவாக இருந்தாலும் அதில் சரியாகப் பயணித்தால், கடவுளின் அருள் எப்போதுமே துணையாக வரும்.

கடவுள் என்றால் யார் என்பது பற்றிய தனிப்பட்ட மனிதர்களின் பார்வையும், தனித்தனியே வேறுபடுகிறது. உலகைப் பற்றிய ஒவ்வொருவரின் பார்வையும் ஒவ்வொன்றாக இருப்பது போலத்தான் இதுவும். இதை இன்றும் நன்றாக புரிந்து கொள்ள, சில உதாரணங்களைச் சொல்கிறேன்.

தனிப்பட்ட மனிதர்கள், கடவுளை, தாயாகவோ, தந்தையாகவோ, காதலியாகவோ, மகன் அல்லது மகளாகவோ, லோகாயத உறவுகளின் அடிப்படையில் எப்படி வேண்டுமானாலும் வழிபடலாம். மனித உறவுகளின் இதர வடிவங்களுக்கும் இது பொருந்தும். உதாரணமாக கடவுளை போர்க்களத்தில் வைத்து தோற்கடிக்க வேண்டிய எதிரியாக ஒருவர் கருதலாம். அல்லது சர்வ சுலபமாக யாரையும் வீழ்த்தி விடக்கூடிய ராணுவத் தளபதியாக கடவுளைப் பார்க்கலாம். இதுபோலவே சர்வ ஞானத்தை வழங்கக்கூடிய ஞானகுருவாக கடவுளை ஒருவர் எடுத்துக் கொள்ள முடியும். சர்வ சக்தி வாய்ந்த ஆணாகவோ அல்லதுபேரழகு படைத்த பெண்ணாகவோ, அல்லது கருணையே

வடிவான தாயாகவோ, தந்தையாகவோ சகோதரன் அல்லது சகோதரியாகவோ - இப்படி எந்த வடிவத்திலும் மனிதர்கள் கடவுளைக் காண முடியும், இதற்கான பட்டியல் முடிவற்றது.

இந்த உலகில், இந்த நொடியில் பல கோடி மனிதர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எத்தனையோ கோடிப் பேர் ஏற்கனவே வாழ்ந்து மடிந்திருக்கிறார்கள். இன்னும் பல கோடி, மனிதர்கள் இனிப் பிறந்து வாழப்போகிறார்கள். இந்த எல்லாப் பல கோடி மனிதர்களிலும், கடவுளைப் பற்றிய பார்வை, ஒருவருக்கொருவர் வேறுபடும். கடவுளை நாம் எப்படிப் பார்த்தாலும், கடவுள் நம்முடைய தனிப்பட்ட உணர்வுள் மற்றும் குணாதிசயங்களுக்கு ஏற்பவே, அமைதி, ஆத்ம திருப்தி மற்றும் மன நிம்மதியை அருள்கிறார், மனம் முற்றிலுமாக சாந்தியடையும்போது, நமக்குள் உறைந்திருக்கும் ஆன்மா, மனம் என்னும் கடலின் சலனமற்ற நீர்ப்பரப்பில் தனது நிஜமான தெய்வீகத் தன்னமயின் தோற்றம் பிரதிபலிக்கக் காண்கிறது.

எல்லா யோக முறைகளின் இறுதி நோக்கம் இதுவே. அதன் பிறகு என்ன நிகழ்கிறது என்பதே, தன்னைத் தானே அறியும் குறிக்கோளை நோக்கிய இறுதிப் பயணம் ஆகும். இந்த இறுதிக்கட்டத்தில்தான் தனிப்பட்ட மனிதர்களின் ஆன்மா கடவுளோடு ஒருங்கிணைகிறது. யோக சாஸ்திர நூல்களின்படி, மனித ஆன்மாவின் இந்த மோட்ச நிலை, கடவுளின் சித்தப்படி நடக்க வேண்டிய ஒரு காரியமாகும். அதாவது தனிப்பட்ட மனிதர்கள் எவ்வளவுதான் முயன்றாலும், இவனுக்கு மோட்சம் கிடைக்கட்டும் என கடவுள் திருவுள்ளம் கொள்ளாவிட்டால், மோட்சம் ஒருபோதும் கிட்டாது. வேறு வழிகளில் இதை சாதிக்க, யோக சாஸ்திரங்கள் அல்லது வேறு எந்த ஆதாரங்களிலும் எந்த உபாயமும் இல்லை. எனவே கடவுளிடம் முற்றிலுமாக சரணாகதி அடைந்தால் மட்டுமே, மோட்சம் கிடைக்கும்.

மோட்சத்தை எட்ட நாம் பின்பற்றும் எல்லாப் பாதைகளும்! வெறும் வழிமுறைகளே தவிர அதுவே முடிவல்ல. தனிப்பட்ட ஒருவர் தனிப்பட்ட எந்த ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தாலும் அந்தப் பாதையில் அவருக்கு கிடைக்கும் அனுபவங்களும் தனிப்பட்ட அனுபவங்களாகவே அமையும்.

அதே சமயம், மனிதர்கள் ஒட்டுமொத்த குணாதிசயத்தில் ஒருவருக்கொருவர் வேறுபட்டாலும், மனிதர்களுக்கிடையே சில ஒற்றுமைகளும் உள்ளன. இந்த ஒற்றுமைகள் காரணமாகவே, பிறவாமையை நோக்கிய பாதையில் கிடைக்கும் அனுபவங்களிலும் சில ஒற்றுமைகள் இருப்பது போல் நமக்குப் படுகிறது.

இந்த பொதுவான அனுபவங்களை அடிப்படையாக வைத்தே, பல்வேறு யோக முறைகள் மற்றும் தத்துவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஒவ்வொரு யோக முறையும், தத்துவமும் குறிப்பிட்ட ஒரு வகைப்பாட்டைச் சேர்ந்த, குறிப்பிட்ட குணாதிசயங்களை பெற்றுள்ள மனிதர்களுக்கு ஏற்றதாக இருக்கும். எனவேதான், யோக முறைகள், தத்துவங்கள் எல்லாமே கடவுளை அறிவதற்கான வழிகள் தான் என்கிறோம்.

மனிதன் மனிதனாய் பிறந்ததன் ஒரே நோக்கம், தனிப்பட்ட ஆன்மாக்களை கடவுள் என்னும் பேரான்மாவுடன் ஒருங்கிணைப்பதே ஆகும். இத்தகைய ஐக்கியத்தை சாதிப்பதற்கான தகுதி, மனித உடலுக்கு மட்டுமே இருப்பதாகவும் யோக சாஸ்திர நூல்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.

மனிதனைச் சுற்றியுள்ள இந்த பிரபஞ்சம் வெறும் மாயத்தோற்றமாகும். வெள்ளித்திரை மீது காட்டப்படும் பிம்பம் போலவே இந்தப் பிரபஞ்சம் அமைகிறது. பிரபஞ்சம் என்பது மாயத்தோற்றமே அன்றி நிஜமல்ல என்பதை நாம் உணரவேண்டுமானால், யோக சாஸ்திர முறைகளைப் பலகாலம் கடைப்பிடிப்பதுடன், ஏற்கனவே அதை உணர்ந்த குரு ஒருவரின் நல்லாசி கிடைக்க வேண்டியதும் அவசியமாகும். இந்த இரண்டும் சேர்ந்தால், கடவுள் எப்போது திருவுள்ளம் கொள்கிறாரோ அப்போது மனிதனின் மனத்தில் இந்த உண்மை தானாகவே புலனாகும். இத்தகைய ஆத்ம தரிசனம் கிடைத்தவுடன் மனிதன் தன் தெய்வீகத் தன்மையை உணர்ந்துவிடுவான்.

சுருங்கச் சொன்னால், கடவுளை உணர்ந்த ஒரு மனிதன் விரும்பினால், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா சக்திகளையும் கட்டுப்படுத்தக்கூடிய மகா சக்திமானாக திகழ முடியும். ஆயினும், பிரபஞ்சமே வெறும் மாயத்தோற்றம்தான் என்பதால், கடவுளை

உணர்ந்த ஒருவருக்கு, பிரபஞ்சத்தின் சக்திகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியமே இல்லாமல் போகலாம். அத்துடன் கடவுளை உணர்ந்த ஒருவர், கடவுளில் இருந்தும் கடவுளின் புறவடிவமான பிரபஞ்சத்திலிருந்தும் வேறுபட்டவராக தம்மை கருதிக்கொள்ளவே முடியாது என்பதால், பிரபஞ்சத்தின் சக்திகளை கட்டுப்படுத்த தேவையே இராது.

இந்த நிலையில், மனிதன் இவ்வுலகில் செய்யத்தக்கது எதுவுமே இல்லை. அதற்கு மேல் இவ்வுலகில் வாழ வேண்டிய அவசியமும் மனிதனுக்கு இல்லை. அப்படியே வாழ்ந்தாலும், வாழ்க்கை என்பது பற்றிய மனிதனின் புரிதல் வழக்கமான புரிதலில் இருந்து முற்றிலும் வேறுப்பட்டதாகவே இருக்கும். ஏனென்றால் வாழ்வதாக நம்மை நாமே கருதிக்கொள்வதற்கு காரணம், நமது அறியாமையே. இந்த அறியாமை நீங்கிவிட்டால், வாழ்க்கை என்பதற்கே பொருளில்லை.

எனவே அறியாமையை அகற்றி, கடவுளை அறிய ஒவ்வொருவரும் முயல வேண்டுமென்பது, மிகவும் இயல்பான ஒன்று. பிரபஞ்சம் என்கிற மாயத்தோற்றத்திலிருந்து விடுபட்டு, அறியாமையை அகற்றி கடவுளை அறிவதற்கான வாய்ப்பை, கடவுள் இந்த மனிதப் பிறவியில் மட்டுமே நமக்கு வழங்குகிறார். இதற்குத் தேவையான உயிரியல் அம்சங்கள் மனித உடலில் மட்டுமே அமைந்துள்ளன. ஆன்மீக சாதனைக்கு ஏற்றதாக மனிதனின் உடல் அமைந்திருப்பது கடவுளின் கருணையன்றி வேறல்ல.

ஆயினும் புறவுலகம் என்னும் மாயத் தோற்றத்திலிருந்து கவனத்தை அகற்றி, நிஜமான அகவுலகை நோக்கித் திருப்பும் போக்கு, பொதுவாக, உலகின் துன்பங்களையெல்லாம் அனுபவித்து ஆடிப்போன பிறகே தொடங்குகிறது. உண்மையில் நம்முடைய முந்தைய கர்ம வினைகளுக்கு ஏற்றபடியான இன்ப-துன்பங்களை இந்த உலகமே நமக்கு வழங்குகிறது. இன்ப-துன்பங்களை அனுபவிக்க அனுபவிக்கவே, மனம் பக்குவப்பட்டு, அகவுலகை நோக்கி திரும்பத் தொடங்குகிறது. உன்னத லட்சியங்களுடன், ஆன்மீகப் பாதையில் பயணிக்க வேண்டுமெனக் கனவு காணும் எந்தவொரு மனிதனும், லோகாயத வாழ்க்கையில் பல சோதனைகளை சந்திக்க

வேண்டியிருக்கும். சோதனைகளுக்கிடையில்தான் ஆன்மீக சாதனை புரியமுடியும் என்கிற கருத்து எவருக்கும் உகந்ததாக இல்லை. உலக வாழ்வின் சுகங்களை அனுபவித்துக்கொண்டே ஆன்மீக சாதனை புரிய முடிந்தால் நல்லது என்றுதான் ஒவ்வொருவரும் நினைக்கிறோம். ஆனால் உலக வாழ்க்கை அவ்வளவு இன்பமானதாக இருந்தால், அதிலிருந்து விடுபட்டு ஆன்மீகப் பாதையில் செல்லவே நாம் விரும்ப மாட்டோம் அல்லவா? எனவேதான் கடவுள் மனிதர்களுக்கு துன்பங்களைக் கொடுத்து, துன்பத்திலிருந்து விடுபட்டு ஆன்மீகப் பாதைக்கு வரமாட்டார்களா என விரும்புகிறார். ஏனென்றால், பெரிதாக ஏதாவது துன்பம் வந்தால் தானே நாம் கடவுளைப் பற்றியே நினைக்கிறோம்.

துன்பம் வந்தால்தான் ஆன்மீகப் பாதைக்கு திரும்ப முடியும் என்பது, கசப்பு மருந்து போன்றதே. மருந்து கசப்பாகவே இருந்தாலும், நோய் நீங்க வேண்டுமானால் மருந்தை விழுங்கித்தானே ஆக வேண்டும்? அது போல மனிதனை பிடித்துள்ள அறியாமை நோய் அகல வேண்டுமானால், துன்பங்களை அனுபவித்தே ஆக வேண்டும். அதன் பின்னரே கடவுளை நோக்க ஆன்மீகப் பயணம் தொடங்க முடியும்.

கடும் துன்பங்கள் என்ற போர்வையில், கடவுள் நமக்கு வழங்கும் இந்த அமிர்தத் துளியை அருந்தியவர்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள். லோகாயதமான கோணத்திலிருந்து பார்த்தால் நிதி ரீதியிலோ, தொழில் ரீதியிலோ அல்லது வேறு விதங்களிலோ வாழ்க்கையில் வெற்றிபெற முடியாத மனிதர்களே, இந்த சமுதாயம் தோல்வியாளர்களாகவே கருதுகிறது. இத்தகைய மனிதர்களும் தோல்வியடைந்தவர்களாகவே தங்களை கருதிக்கொண்டு தன்னம்பிக்கை இழக்கிறார்கள். அத்துடன் வாழ்வில் தோல்வியடைந்த மனிதர்களிடமிருந்து செல்வம் விலகிப்போகிறது. சொந்த பந்தங்கள் அகன்று விடுகிறார்கள். வாழ்க்கையின் இத்தகைய எல்லா அசம்பாவிதங்களையும், ஒரு விதத்தில் கசப்பு மருந்தாகவே கருத முடியும்.

ஏனென்றால் வாழ்க்கையில் கடும் துன்பங்களை சந்திப்பவர்கள், அதனால் துவண்டுவிடாமல் கவனத்தை உள்நோக்கி

திருப்புவதற்கான வாய்ப்பாக, துன்பங்களை எடுத்துக்கொள்ள முடியும். அவ்வாறு நமக்குள்ளே உறைந்துள்ள தெய்வீக சக்தியை நோக்கி நமது கவனத்தை திருப்ப நம்மால் முடிந்தால், துன்பங்களை நாம் வெற்றிகரமாக சமாளித்துவிட்டதாகப் பொருளாகும்.

அதேசமயம் லோகாயத ரீதியில் தோல்விகளை சமாளித்து மீண்டும் வெற்றி பெற முயல வேண்டும் என்பது இதற்கு அர்த்தமல்ல. ஏனென்றால், நிதி ரீதியிலோ அல்லது தொழில் ரீதியிலோ மீண்டும் வெற்றி பெற முயல்வதாக இருந்தால், நாம் நமது கவனத்தை உள்நோக்கித் திருப்பவில்லை என்றே பொருள். தோல்விகளைத் தொடர்ந்து நாம் நமது கவனத்தை உள்நோக்கித் திருப்ப முடிந்தால் ஒரு கட்டத்தில் நம்மை நாமே அறிவது சாத்தியமாகும். இத்தகைய மெய்யறிவு நமக்கு கிடைத்துவிட்டால், பொய்யான இந்த புறவுலகின் எல்லா நிகழ்வுகளையும் முழுமையாக கட்டுப்படுத்தும் அபார சக்தி, நமக்கு கிடைத்துவிடும். இத்தகைய சக்தி பெற்ற ஒரு மனிதனுக்கு அதற்கு மேல் வாழ்க்கையின் துன்பங்கள் ஒரு பொருட்டாகவே இராது. ஒரு காலத்தில் கசப்பு மருந்தாக இருந்த வாழ்க்கைத் துன்பங்கள் மூலம், இப்போது எவ்வளவு அசாதாரண சாதனை படைத்துள்ளோம் என்பது அந்த மனிதனுக்குப் புரியும். வேதனைகளையே இப்படி சாதனைகளாக மாற்ற முடியும் என்பதால்தான், அதிக துன்பங்களைச் சந்திக்கும் மனிதர்களை பாக்கியவான்கள் என்றோம்.

ஒவ்வொரு தாயும்கூட உடல்நலம் குன்றியுள்ள குழந்தைக்கு மருந்து புகட்டும்போது, இதே பிரச்னையை எதிர்கொள்கிறார். குழந்தைக்கு கொடுக்கும் மருந்து சர்க்கரை தடவியதாக இருக்க வேண்டியுள்ளது. அப்படியில்லை என்றால், குழந்தை மருந்தை விழுங்காது. ஆனால் மருந்தில் சர்க்கரை தடவியிருந்தால் குழந்தை அதை மருந்தென்று அறியாமலேயே எளிதாக விழுங்கிவிடும். மேலும் சந்தோஷமாகவே குழந்தை நோயிலிருந்து குணமாகிவிடும்.

இதுபோலவே, மனிதர்கள் தமக்குள் உறைந்திருக்கும் தெய்வீக சக்தியை புரிந்து கொள்ளாமல், அறியாமை நோயில் உழன்று கொண்டிருக்கிறார்கள். இந்த நோயிலிருந்து விடுபட எந்த

## பராசக்தி

மனிதருக்கு, எந்த மருந்தை, எந்த அளவில் கொடுக்க வேண்டும் என்பது, எல்லாம் அறிந்த கடவுளுக்கு நன்றாகவே தெரியும். வாழ்வில் கடவுள் நமக்குத் தரும் துன்பங்கள்தான் அந்த மருந்து. ஆனால் வாழ்க்கைத் துன்பங்கள் என்னும் கசப்பு மருந்தை சர்க்கரை தடவிய மருந்து போல் கருதி எடுத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பாகும்.

வாழ்வின் சோதனைகளைத் தொடர்ந்து, கவனத்தை உள்நோக்கித் திருப்பி, நமக்குள் உறைந்துள்ள குண்டலினி சக்தியை எழுப்பிவிட்டால், நம்முடைய மனதில் ஆழமான பல தாக்கங்கள் ஏற்படுகின்றன. குண்டலினி யோகத்தை பின்பற்றும் ஒருவரின் மனதில், சமநிலை பலமடங்கு அதிகரிக்கிறது. அதற்கு மேல், புறவுலகம் மற்றும் கடவுளைப் பற்றிய நம்முடைய புரிதலும், அபரிமிதமாக மேம்படுகிறது.

குண்டலினி சக்தியை தட்டி எழுப்பியவுடன், சாதகரின் உடலிலும், மனதிலும் மற்றும் அன்றாட வாழ்விலும் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை, இந்நூலின் ஆசிரியர் மிகத் தெளிவாக விளக்கயுள்ளார். இந்த மாற்றங்கள் மிகவும் சிக்கலானவை என்றாலும், அதைப்பற்றி புரியும்படி எடுத்துக் கூறுவதில் ஆசிரியர் நன்றாகவே வெற்றி பெற்றுள்ளார். ஆசிரியரின் விளக்கங்கள் வெறும் கருத்தியல் விளக்கங்களாக அன்றி, அவரது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் அமைந்திருப்பது, இந்நூலின் சிறப்பம்சமாகும்.

இந்த புத்தகம் சாஸ்திரங்கள், தத்துவங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றிய கல்வி ரீதியிலான விவாதமல்ல. மாறாக, ஆசிரியர் பெற்ற நேரடி அனுபங்களின் தொகுப்பு. ஆதி காலத்திலிருந்து மனித குலம் எழுப்பி வரும் ஆழமான பல ஆன்மீக கேள்விகளுக்கு சரியான பதில் இந்நூலில் அடங்கியுள்ளது.

குண்டலினி யோகத்தை பின்பற்றும்போது ஏற்படும் அனுபவங்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வது, சாஸ்திர மரபுகளை மீறுவதாகாதா என்ற கேள்வி இந்த புத்தகத்தை படிக்கும் போது ஏற்படலாம். இது ஆராயத்தக்க ஒரு கேள்வியே என்றாலும், குண்டலினி யோகத்தின் அனுபவங்களை நூலாசிரியர் எடுத்துக் கூறியிருப்பதன் மூலம், மனித குலத்திற்கு தீமை

எதுவும் இல்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். எனவே, குண்டலினி யோகத்தின் அனுபவங்களை வெளிப்படுத்தியதற்காக ஆசிரியரை எந்த வகையிலும் குற்றம் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால், ஆசிரியர் எவ்வித சுயநல நோக்கங்களும் இன்றி, முழுக்க முழுக்க மனித குலத்தின் நன்மை கருதியே தமது அனுபவங்களை பகிரங்கப்படுத்தியுள்ளார்.

நூலாசிரியர் இந்த நூலை எழுதிக்கொண்டிருந்த போது, கையெழுத்துப் பிரதியை அவ்வப்போது என்னிடம் காட்டுவதுண்டு. குண்டலினி யோகத்தின் அனுபவங்கள் பற்றியும், கோட்பாடுகள் குறித்தும் நூலில் தாம் குறிப்பிடும் கருத்துக்கள் சரிதானா என்கிற உள்ளார்ந்த அச்சம், நூலை எழுதும்போதே அவருக்குள் இருந்து வந்தது. ஆனாலும், சரியான நோக்கத்துடன் செய்யப்படும் காரியங்கள் சரியானதாகவே அமையும் என்பதில் எனக்கு எந்த ஐயப்பாடும் இல்லை.

இந்தப் புத்தகம் அறிவார்ந்த விவாதங்களை தூண்டும் நோக்கம் கொண்டதல்ல என்பதை, இங்கே மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். தெய்வீக சக்தியின் அதிர்வலைகளை உணர்ந்த ஒரு சாதகர், அந்த உணர்வை அப்படியே வெளிப்படுத்த, இந்நூலில் முயன்றுள்ளார். தெய்வீக சக்தியின் அதிர்வலைகள் எந்த ஆதாரத்திலிருந்து பிறக்கிறதோ அந்த ஆதாரம்தான் இந்நூலை எழுத அவரைத் தூண்டியுள்ளது என்பதை மறக்கவேண்டாம் என வாசகர்களை கேட்டுக்கொள்கிறேன்.

தத்துவ ரீதியில், யோக சாதனை பற்றிய புதிய விளக்கங்கள் எதுவும் இந்த நூலில் இடம் பெறவில்லை. காலங்காலமாக யோகிகளும், ஞானிகளும் வலியுறுத்தி வருகின்ற கருத்துக்களையே ஆசிரியர் இந்நூலில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தமது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் இக்கருத்துக்களை அவர் எடுத்துச் சொல்லும் விதமே இந்நூலை, சுவாரசியமாக்குகிறது.

ஆசிரியர் இந்நூலை ஒரே மூச்சில் எழுதி முடிக்காமல், அவ்வப்போது உள்ளுணர்வு தூண்டும் நேரங்களில் அமர்ந்து எழுதியிருப்பதாக நான் அறிகிறேன். எல்லாம் வல்ல இறைவனின் மேன்மை பற்றிய உணர்வூக்கம் மனதிற்குள் எப்போதெல்லாம்

பொங்கியெழுகிறதோ அப்போதெல்லாம் இந்நூலின் ஒரு பகுதி எழுதப்பட்டுள்ளதால், நூலை எழுதியவர் ஆசிரியரே அல்ல. எல்லாம் வல்ல ஆதிசக்தி எடுத்துக்கொடுத்த வார்த்தைகளை நூலாசிரியர் எழுதி வந்திருக்கிறார் என்றுதான் நான் கருதுகிறேன்.

மனித குலத்தின் மனங்களில் மண்டிக்கிடக்கும் அறியாமை இருளை போக்குவதாக இந்த நூல் அமையட்டும். ஆன்மீக ரீதியில் முன்னேறத்துடிக்கும் அன்பர்களுக்கும், சாதாரண மனிதர்களுக்கும், அது சாத்தியமே என்பதற்கான நம்பிக்கையை இந்த நூல் கொண்டுவந்து சேர்க்கட்டும்.

**ஸ்ரீஸ்ரீ சுவாமி சகஜானந்தா தீர்த் ஜீ**

# முன்னுரை

கடந்த சுமார் *2500* ஆண்டுகளில், மனித குலம் பல முக்கியமான மாற்றங்களை சந்தித்து இருக்கிறது. சமூகப் பொருளாதார மாற்றங்களோடு சம்பந்தப்பட்ட வரலாற்று சம்பவங்களைப் பற்றி இங்கே நாம் பேசவில்லை. மாறாக, பல புதிய உண்மைகளை மனித குலம் உணர்ந்து வருவது பற்றி பேசுகிறேன்.

தற்போதுள்ள பல மதங்கள் கிறிஸ்துவ சகாப்தம் தொடங்குவதற்கு முன்பாக இருக்கவில்லை என்பது, வாசகர்களுக்கு தெரியும். கிறிஸ்துவ சகாப்தம் தொடங்கிய பின்னர்தான் பல மதங்கள் பிறந்தன. இதன் மூலம் உலகின் சில பகுதிகளில், மனித குலத்தின் மதம் சார்ந்த பார்வையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மேலும் பூமிதான் பிரபஞ்சத்தின் மையம் என்ற கருத்து அரிஸ்டாட்டில் மற்றும் பிளேட்டோ காலத்தில் நிலவியது. பின்னர் கோப்பர்நிகஸ் மற்றும் கலிலியோ காலத்தில், இக்கருத்துக்கள் மாற்றம் கண்டன.

புதிய உண்மைகள் உணரப்பட்டதால் பூமி உள்ளிட்ட கிரகங்கள்தான் சூரியனை சுற்றி வருவதை மனித குலம் புரிந்து கொண்டது. இதல்லாது நியூட்டன் காலத்தில் பிரபஞ்சத்தின் இயக்கம் ஒரு இயந்திரத்தின் இயக்கம் போன்றதாக கருதப்பட்டது. ஆனால் பிற்பாடு உருவான ஐன்ஸ்டீன் சார்பு கொள்கை மற்றும் குவாண்டம் இயக்கவியல் கருத்துக்களால், பிரபஞ்சத்தின் இயக்கம் ஒருவிதமான கணக்குதான் என்ற புரிதல் ஏற்பட்டது.

## பராசக்தி

பிரபஞ்சத்தைப் பற்றிய மனிதனின் கருத்துக்கள் ஒரு போதும் நிலையானதல்ல என்பதற்கு, இதுவே உதாரணம். எனவே இப்புத்தகம் மனித குலத்தின் மத நம்பிக்கைகள், தத்துவ அணுகுமுறைகள் அறிவியல் சாதனைகள் மற்றும் இறுதியாக அமைதியைத் தேடுவதற்கான மனிதனின் முயற்சிகள் பற்றிய பிரச்சனைகள் பற்றி பேசுகிறது.

*21* ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு வாசகராக, கடந்த சுமார் *2500* ஆண்டுகளில் பிறந்த பல்வேறு மதங்கள் பற்றி நீங்கள் நன்றாகவே அறிந்திருப்பீர்கள். உலகில் இன்றுள்ள பல மதங்கள் அந்த காலகட்டத்தில் பிறந்தவை. இதில் ஒரே விதிவிலக்கு, இந்துமதம் மட்டுமே. இந்துமதம் எப்போது உருவாயிற்று. யாரால் உருவாயிற்று என்பதற்கு வரலாற்று சான்றுகள் ஏதுமில்லை. இந்து மதம் எப்போது முதல் நடைமுறையில் இருக்கிறது என்பதை ஊகிப்பது கூட சாத்தியமாக இல்லை.

மேல்திசை மற்றும் கீழ்திசை நாடுகளில் உருவான பல்வேறு தத்துவ முறைகளுக்கும் மேற்கண்ட கருத்து பொருந்தும். உதாரணமாக இந்திய தத்துவ முறைகள் எப்போது பிறந்தன என்பதற்கும் வரலாற்று சான்றுகள் கிடையாது. இந்த *2500* ஆண்டுகளுக்கு பலகோடி ஆண்டுகள் முன்பிருந்தே மனித குலம் இந்த பூவுலகில் வாழ்ந்து வருகிறது.

*2500* ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தில் நடந்தது பற்றி நமக்கெதுவும் தெரியாது என்றாலும், பூமியின் பல்வேறு பிராந்தியங்களில் அந்த காலகட்டத்திலும் பல நாகரீகங்கள் தழைத்தோங்கி இருந்திருக்கலாம் என்பதை ஊகிக்க முடியும். இந்த நாகரீகங்கள் இன்று நம்மால் அறியப்படாத மத நம்பிக்கைகள் மற்றும் தத்துவ அணுகுமுறைகளை பின்பற்றி இருக்கலாம்.

கடந்த *2500* ஆண்டுகளின் பதிவு செய்யப்பட்ட வரலாறு மட்டுமே இப்போது நமக்கு கிடைப்பதால் மனித குலத்தின் வரலாறு முழுவதிலும் என்ன நடந்தது என்பதை புரிந்து கொள்வதற்கான எடுத்துக்காட்டாக, இந்த *2500* ஆண்டு கால வரலாற்றின் மீது நான் கவனம் செலுத்தப்போகிறேன்.

நம்முடைய பல்வேறு மதங்கள் மற்றும் தத்துவங்கள் மட்டுமின்றி, நவீன அறிவியல் ஆராய்ச்சிகள் கூட இந்தக் காலக்கட்டத்தில் தோன்றி வளர்ந்தவைதான். அரிஸ்டாட்டில் கோப்பர் நிக்கஸ், கலிலியோ நியுட்டன், ஐன்ஸ்டீன் போன்றவர்கள் எல்லாம் இந்த காலக்கட்டத்தில் தோன்றியவர்களே.

கடைசியாக, மனிதனின் அடிப்படை தேவையான நிம்மதி பற்றி இப்போது பேசுவோம். மனித குலத்தின் நிம்மதிக்காக கடந்த *2500* ஆண்டுகளில் எவ்வளவு ரத்தம் சிந்தப்பட்டுள்ளது என்பதை நினைவுபடுத்திக் கொண்டால், நிம்மதியின் அவசியம் பற்றி மேலும் விளக்கத் தேவையே இராது.

எந்த ஒரு மதம், தத்துவம் அல்லது அறிவியலாக இருந்தாலும், அதனால் மனிதனுக்கு மனநிம்மதி கிடைக்காவிட்டால், வேறு என்ன பலன்? எனவே, எல்லா மதங்கள், தத்துவங்கள் மற்றும் அறிவியல் கருத்துக்களும், மனிதனின் நிம்மதிக்காகவே படைக்கப்பட்டுள்ளன.

மனநிம்மதியும் மகிழ்ச்சியும் மானுட ஆன்மாவின் அடிப்படைத் தேவையல்லவா? எனவே மதங்கள் தத்துவங்கள் மற்றும் அறிவியலுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் மேம்போக்கானவை என்பதையும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், இவற்றின் நோக்கம் ஒன்றே என்பதையும், நாம் புரிந்து கொள்ள முடியும்.

மனிதகுல வரலாற்றில் மதங்கள் தத்துவங்கள் மற்றும் அறிவியல் கருத்துக்கள் புதிது புதிதாக வந்து சென்று கொண்டுதான் இருக்கின்றன. இதில் எதுவும் நிரந்தரமாக நிலைப்பதில்லை. இறுதியாக நிலைக்க வேண்டியது, மனிதனின் மன நிம்மதியே. நிம்மதி என்பது மனிதகுலத்தின் ஜீவாதார உரிமை என்பதால், இந்த புத்தகம் அதைப் பற்றியே முக்கியமாக பேசுகிறது.

ஒவ்வொரு மனிதனும் எதையாவது செய்து நிம்மதி அடைய முயன்று கொண்டுதான் இருக்கிறான். அக வாழ்வில் நாம்

அடையும் நிம்மதி என்பது புறவாழ்வில் நாம் அடையத் தகுந்த வீடுபேற்றின் ஓர் அடையாளம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையாக புரிவதே இதற்கு காரணம்.

ஆரம்பத்தில் நிம்மதி; இறுதியாக வீடுபேறு - இதுவே ஒவ்வொரு மனிதனின் இயற்கையான நோக்கமாகும்.

இதற்காக நாம் என்னவெல்லாம் முயல்கிறமோ, அதுதான் யோகா. இந்த நிம்மதியையும் வீடு பேற்றையும் எப்படி அடைவது என்பது பற்றியே, இந்த புத்தகம் முழுவதும் பேசப்படுகிறது. இந்நூலின் முக்கிய அம்சங்கள் பற்றி இப்போது, மேலும் சற்று விளக்குகிறேன்.

இந்த பிரபஞ்சம் முழுவதும் ஆற்றலால் நிரம்பி உள்ளது. அண்டவெளியில் ஆற்றல் நீக்கமற நிறைந்திருப்பதை நவீன அறிவியலும் ஒப்புக் கொள்கிறது. ஆனாலும், ஆற்றல் என்றால் என்ன என்பதை, அறிவியலும் மத தத்துவங்களும் வெவ்வேறு விதமாக புரிந்து கொள்கின்றன. ஆற்றல் என்றும் சக்தி என்றும் அழைக்கப்படும் அடிப்படை தத்துவத்தை, மதமும், அறிவியலும் விளக்க முற்படும்போது மனிதகுலத்தின் பாஷையில் சரியான சொற்கள் கிடைப்பதில்லை என்றே எனக்குப் படுகிறது. வார்த்தைகள் ஒரு புறம் இருக்க, ஆற்றல் அல்லது சக்தி என்றால் என்ன என்பதை சரியாக புரிந்து கொள்ளும் திறன், மனித அறிவுக்கு உள்ளதா என்பதே சந்தேகம்தான். ஆனால் உலகமும் மனிதகுலமும் இந்த ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக தனித்து இயங்க முடியாது என்பது மட்டும், நன்றாகப் புரிகிறது. அதேசமயம் இதை முழுமையாக ஏற்றுக் கொண்டு, எல்லா வல்ல மகா சக்தியிடம் நம்மை ஒப்புக் கொடுக்க, நமது மனம் தயங்குகிறது. நான் என்னும் அகந்தை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருப்பதே இதற்கு காரணம். இந்த அகந்தையை முழுமையாக அகற்றாத வரை, நம்மை மீறிய சக்தியிடம் நம்மை ஒப்புக் கொடுப்பது சாத்தியமானதல்ல. இதைப் பற்றி இந்நூலின் ஒரு அத்தியாயத்தில் விளக்கமாக பேசி இருக்கிறேன்.

பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ள இந்த ஆற்றலின் ஒரு பகுதிதான், மனிதனின் அறிவு. ஆனால் விஞ்ஞானம் இந்த

முக்கிய அம்சத்தை மறந்துவிட்டதால், மதமும் தத்துவமும் இதுபற்றிய ஆராய்ச்சிகளை எடுத்துக் கொண்டுவிட்டன. பிரபஞ்சத்தின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கோட்பாடு ஒன்றை உருவாக்குவதற்கான விஞ்ஞானத்தின் முயற்சி, இந்த அணுகுமுறைக்கு முற்றிலும் மாறானது. மனிதனின் அறிவே பிரபஞ்ச ஆற்றலின் பிரிக்க முடியாத ஒரு பகுதிதான் என்கையில், அதே அறிவைக் கொண்டு, அந்த அறிவையும் உள்ளடக்கிய பிரபஞ்சம் பற்றிய ஒருங்கிணைந்த கோட்பாட்டை எப்படி உருவாக்க முடியும்?

விஞ்ஞானத்தின் அடிப்படைத் தவறு, இங்கே தான் நேர்ந்து இருக்கிறது.

அதாவது, அறிவென்பது பிரபஞ்ச ஆற்றலின் ஒரு பகுதி என்பதை விஞ்ஞானம் மறந்துவிட்டு காலம்-வெளி என்று எதையெல்லாமோ ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்த முயற்சியில், ஒளி கூடத் தப்ப முடியாத கருந்துளைகள், காலம்-வெளி இரண்டுக்கும் அர்த்தமில்லாத சிங்குலாரிட்டி- இப்படி பல அதிசயமான உண்மைகளை விஞ்ஞானம் கண்டுபிடித்திருந்தாலும், மனித அறிவை முழுமையாக புரிந்து கொள்ளும் திறனை இன்னும் எட்டவில்லை. அடிப்படை அணுகுமுறையே தவறாக இருப்பதால், அப்படி எட்டுவது சாத்தியம் என்றும் தோன்றவில்லை.

பிரபஞ்சம் எப்படித் தோன்றியது. அது எங்கே போய் முடியப் போகிறது என்பது பற்றிய விஞ்ஞானத்தின் நவீன கொள்கைகள், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் யோக சாஸ்திர நூல்களில் என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதற்கு இணையாகவே அமைந்துள்ளன.

இதைப்பற்றி சுருக்கமாக விளக்க முயல்கிறேன்.

கடவுளிடம் இருந்து தோன்றிய ஆதிபராசக்தியே பிரபஞ்சமாக வடிவெடுத்துள்ளது. இந்த சக்தி பெரு வெடிப்பின்போது வெளிப்பட்டதாகவும், பெரு வெடிப்பே பிரபஞ்சம் உருவானதன் ஆரம்பப் புள்ளி என்றும் விஞ்ஞானம் சொல்கிறது. பெருவெடிப்பு அல்லது எந்தவொரு பெயரிலும் இந்த ஆரம்பப் புள்ளியை

அழைத்துக் கொள்ளலாம். இந்த பெருவெடிப்பிற்கு முன்பு வெளி-காலம் இரண்டிற்கும் எந்த பொருளும் இல்லை.

அண்டவெளி-காலம் இரண்டுமே பெருவெடிப்பிற்கு பின்னர் ஆரம்பமானவை. வெளி-காலம் இரண்டிற்கும் பொருளில்லாத சிங்குலாரிட்டி என்னும் நிலை, பிரபஞ்சத்தின் சில பகுதிகளில் இன்றும் கூட இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். பலவித கணக்குகளை போட்டு இதை நிரூபிக்க அவர்கள் முயல்கிறார்கள். இந்த கணக்குகளையெல்லாம் புரிந்து கொள்ளும் அளவிற்கு நான் விஞ்ஞானி அல்ல. ஆனால் அதேசமயம், கருந்துளைகள், சார்புக் கொள்கை போன்ற அதிநவீன விஞ்ஞான கொள்கைகளுக்கு இடையிலேயே ஒன்றுக்கொன்று இணக்கம் இல்லை என்பதை, அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். நவீன விஞ்ஞானத்தை நான் படித்த வரை, ஐன்ஸ்டினின் சார்புக் கொள்கையும், அதற்குபின் வந்த குவாண்டம் கோட்பாடும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதில்லை. எனவே, பிரபஞ்சத்தின் கட்டமைப்பு குறித்து மதத் தத்துவமும் விஞ்ஞானமும் ஏற்கனவே என்ன சொல்லி இருக்கிறதோ அதை மறுக்க, நான் இந்த புத்தகத்தில் முயலப் போவதில்லை. ஒருவேளை அதையும் மீறி, பழங்கால தத்துவம் அல்லது நவீன விஞ்ஞானத்திற்கு மாறுபட்டதாக இந்நூலின் எந்தவொரு பகுதியாவது தோன்றினால், தத்துவ ஞானிகளும் கோட்பாட்டு இயற்பியல் அறிஞர்களும் என்னை மன்னிக்க வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆனாலும், பேரண்ட சக்தி என்பதில் மனிதனும் மனிதனின் அறிவும் அடக்கம் என்பதை வாசகர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். பேரண்ட சக்தியின்றி, மனிதனின் அறிவு, தனியாக இருக்க இயலாது.

எனவே, அதிசூட்சுமமான பேரண்ட சக்தியின் சற்றே ஸ்தூல வடிவமான மனித அறிவினால், பேரண்ட சக்தியின் சூட்சுமத் தன்மையை முற்றிலுமாக புரிந்து கொள்ள முடியாது. பேரண்ட சக்தியின் இந்த அதிசூட்சும வடிவம், எல்லாவற்றையும் அறிந்தது என்பதையும், இந்த சக்தி கடவுளுக்கு நிகரானது என்பதையும் இந்நூலின் அடுத்த பகுதிகளில் விளக்கவிருக்கிறேன். இந்த சக்தியே தனிப்பட்ட மனிதர்களின் ஆன்மாவாகவும் வடிவெடுக்கிறது. இது குறித்தும் இந்நூலில் விளக்கப்படுகிறது.

அதே சமயம் மனித அறிவு என்பது, அதிசூட்சுமமான பேரண்ட சக்திக்கு அடுத்த நிலையில் உள்ள, சற்றே ஸ்தூலமான வடிவம் என்பதை ஏற்கனவே பார்த்தோம். மனித அறிவுடன் நான் என்கிற எண்ணமும் கலந்தே இருப்பதால்தான், தனிப்பட்ட மனிதர்களும் கடவுளும் வெவ்வேறானவை என்பது போல் தோன்றுகிறது.

மனித ஆன்மாவை இதுபோல நினைக்க வைப்பதே, கடவுளின் திருவிளையாடல்தான் என்பதை, நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது பற்றியும் வரவிருக்கும் அத்தியாயம் ஒன்றில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

அதேசமயம், மாயத்தோற்றமான இந்த பிரபஞ்சத்தின் முதலாவது சிருஷ்டியாக, மனித அறிவை வகைப்படுத்த முடியும். எனவே, குறிப்பிட்ட எல்லை வரை, பிரபஞ்சத்தின் எல்லா ரகசியங்களையும் மனித அறிவினால் புரிந்துகொள்ள முடியும். இதைக் கருத்தில் கொண்டே ஆதிசக்தியின் சற்றே ஸ்தூல வடிவமான மனித அறிவிற்கு, யோக சாஸ்திர நூல்களில் போதிய மதிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

உண்மையில், சிருஷ்டி கர்த்தாவான ஆதிசக்தி செயல்படுவதன் வெளிப்பாடே, மனித அறிவாகும். ஆனால் மனித அறிவு என்பது, ஆதிசக்தியோ அல்லது கடவுளோ அல்ல.

மனித அறிவாக வடிவெடுத்த ஆதிசக்தி, அடுத்தடுத்த கட்டங்களில் மனித மனமாகவும், ஐம்புலன்களாகவும், அடுத்தடுத்த ஸ்தூல வடிவங்களை எடுக்கிறது. இந்த நிலையில்தான் ஆதிசக்தியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, எதையும் செய்யும் சுதந்திரம் தனக்கு இருப்பது போல் மனிதன் உணர்கிறான்.

மனம் என்ற நிலையிலிருந்து, ஆதிசக்தியானது, பல்வேறு ஜீவ சக்திகளாக பரிணமிக்கிறது. இந்த ஜீவ சக்திகளின் தொகுப்பே, இறுதியாக, எலும்பு, ரத்தம் மற்றும் தசைகளாலான மனித உடலாக உருவெடுக்கிறது. ஆதிசக்தி இவ்வாறு படிப்படியாக மனித வடிவெடுப்பது பற்றி, இந்நூலின் ஒரு அத்தியாயத்தில் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## பராசக்தி

தனிப்பட்ட மனிதர்கள் நிலையிலான இந்த சிருஷ்டி காரியம் முடிந்த பின்னர், மனித உடலில் எஞ்சியுள்ள ஆன்மீக சக்தி ஒன்றாக திரட்டப்பட்டு, ஜனன உறுப்புக்கும் ஆசன வாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் உறைந்து விடுகிறது. அதன் பின்னர் இந்த சக்திதான், பொய்யான இந்த வெளியுலகை நிஜம்போல் நமக்கு காட்டத் தொடங்குகிறது.

மூளை-தண்டுவட நரம்பியல் மண்டலத்தின் உதவியுடன், நமக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தி - நம்முடைய மனதில் திரையிட்டுக் காட்டும் பொய்யான உலகையே, நிஜமென நாம் நம்புகிறோம். தனிப்பட்ட மனிதர்களின் தனிப்பட்ட உலகங்களுக்கு இணையாக, ஒட்டுமொத்த மனிதர்களுக்கான பொய்யான உலகம் ஒன்றும் இதே போல உருவாக்கப்படுகிறது. இந்நூலின் ஒரு அத்தியாயத்தில் இதைப்பற்றி விளக்கியுள்ளேன்.

தனிப்பட்ட மனிதனுக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தி, உண்மையில், பிரபஞ்ச சக்தியின் சிறு வடிவமாகும். இதை இன்னொரு விதத்தில் சொல்வதானால், பிரபஞ்ச சக்தியை மனிதன் புரிந்து கொள்ள, முதலில் தன்னைத்தானே புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, தனிப்பட்ட மனிதர்களின் ஆன்மாவும், எல்லையற்ற பிரபஞ்ச சக்தியும், இரண்டும் ஒன்றே தவிர வெவ்வேறல்ல.

எனவே, பிரபஞ்சத்தின் ஊற்றுக்கண்ணை புரிந்துகொள்ள, மேலும் மேலும் வெளியே சென்று ஆராயத் தேவையில்லை. பிரபஞ்சத்தின் எல்லா சக்திகளும், மனிதனின் ஆன்மாவிற்கு உள்ளேயும் அடங்கியுள்ளன. ஆயினும், மனிதன் தன்னைத்தானே புரிந்து கொள்ள வேண்டுமானால் மனதையே ஆய்வுக் களமாகவும் ஆய்வுப் பொருளாகவும் மாற்றி மனதின் மூலமாக, மனதால், மனதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேலும், ஆதிசக்தியின் அதி சூட்சும இயல்புகளைப் புரிந்துகொள்ளும் சக்தி அடிப்படையில் மனித அறிவுக்கு கிடையாது என்பதால், யோக சாதனையின் முன்னேறிய கட்டங்களில் ஆதிசக்தி தன் இயல்புகளை தானாகவே வெளிப்படுத்திக்கொள்ளும் போது மட்டுமே, ஆதிசக்தியின்

அதிசூட்சும இயல்புகளை சாதகர் புரிந்துகொள்ள முடியும். மனித அறிவு என்பதும், ஆதிசக்தியின் இன்னொரு வடிவமே தவிர வேறொன்றுமல்ல. அதாவது மனித ஆன்மாவாக எந்த ஆதிசக்தி வடிவெடுக்கிறதோ, அதே சக்திதான் அதே நேரத்தில், மாயத்தோற்றமான இந்த உலகையும் படைக்கிறது. எனவே, ஆதிசக்தியின் நிஜமான இயல்புகளை, மனிதன் தன் புத்தி மூலமாக முயற்சிகளால் புரிந்துகொள்ளவே இயலாது. மாறாக மனம் எவ்வித சலனமுமின்றி முற்றிலும் அமைதியான நிலையில் இருக்கையில், புத்தியானது தனது இயல்பான பாகுபாட்டுச் செயல்களைக் கைவிட்டு முழுமையாக மனதிடம் சரணடையும்போது, ஆதிசக்தியானது, தனது நிஜமான இயல்புகளை, மனிதனின் மனதிற்கு வெளிப்படுத்திக் கொள்கிறது. இதனால் மனிதனின் இயல்பான அறியாமை அகன்று, ஆதிசக்தியை புரிந்துகொள்ளும் திறன் மனதிற்கு கிடைக்கிறது. தூசு படிந்த வைரத்தைப் பட்டை தீட்டும்போது வைரம் தன் பிரகாசத்தை எப்படி தானாகவே வெளிப்படுத்திக்கொள்கிறதோ, அது போன்றதே இதுவும்.

இவ்வாறாக, மனிதன் தன்னைத்தானே உணரும் செயலையே யோகா என்கிறோம்.

புனிதமான இந்த மெய்யறிவு மனிதனுக்கு வரவேண்டுமானால் ஏற்கனவே மெய்யறிவு பெற்ற குரு ஒருவரின் உதவி தேவை. ஏற்கனவே மெய்யறிவு பெற்ற குருவானவரே, சாதகருக்குள் உடைந்துள்ள ஆன்மீக சக்தியை தட்டியெழுப்பி, எப்போதும் வெளிநோக்கி திரும்பியுள்ள இந்த சக்தியின் பார்வையை உள்நோக்கித் திருப்ப முடியும்.

மனிதனுக்குள் உறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியின் பார்வையை அகவயமாக திருப்பினால் மட்டுமே, அந்த சக்தியின் நிஜமான தன்மையை புரிந்துகொள்ள இயலும்.

இவ்வாறாக, ஆன்மீக சக்தியை உள்நோக்கித் திரும்பும்போது, சிருஷ்டி காரியம் முடிந்து இதுவரை உறைந்து கிடந்த அந்த சக்தி, சம்ஹார காரியத்தில் ஈடுபட்டு, படைப்பை அற்றுப்போகச் செய்கிறது. இதனால் மனிதனின் நான் என்கிற அகந்தை அகன்று, வாழ்வின் இயல்பான உணர்ச்சிகளின் பிடியிலிருந்து சாதகர்

விடுபடுகிறார். இந்த நிலையில்தான் ஆதிசக்தியின் நிஜமான இயல்புகள், தானாகவே சாதகருக்குப் புரியத் தொடங்குகின்றன. குரு ஒருவரின் உதவியுடன் யோக சாதனையில் ஈடுபடும் ஒருவருக்குள், இந்த மாற்றங்கள் படிப்படியாக எப்படி நிகழ்கின்றன என்பதை, இந்த நூலில் விளக்கியுள்ளேன்.

நிஜமான மெய்யறிவின் முதலாவது ஒளிக்கீற்று சாதகரின் மனதிற்குள் பளிச்சிடத் தொடங்குகையில், மதம், தத்துவம் மற்றும் அறிவியலுக்கு இடையிலான வித்தியாசம் மங்கிவிடுகிறது. வழக்கமான பவுதிக விதிகள் முறிந்து போகின்றன. (அதாவது அண்டவெளியின் கருத்துளைப் பகுதியில் பவுதிக விதிகள் எப்படி பொருந்தாதோ அது போல, மெய்யறிவு பெற்ற மனிதரின் வாழ்விலும் பவுதிக விதிகள் வேலை செய்வதில்லை) மனிதனின் ஆன்மாவை அவனுடைய உடலுக்குள் கட்டிப் போட்டிருப்பதே பிரபஞ்சத்தின் பவுதிக விதிகள்தான் என்பதால் பொருந்தாதோ பவுதிக விதிகள் அற்றுப் போனவுடன், அதற்கு மேல், ஆன்மா மனித உடலுக்குள் கட்டுண்டு கிடப்பதில்லை. மனிதன் கடவுளில் இருந்து வேறுபட்டவனாக தன்னை கருதிக் கொள்வதற்கே, இந்த பவுதிக விதிகள்தான் காரணம் என்பதால், பவுதிக விதிகள் அற்றுப்போனவுடன், மனிதன் தன்னையும் கடவுளையும் ஒன்றாகப் பார்க்கும் சக்தியை பெறுகிறான்.

எனக்குத் தெரிந்த அறிவியலைப் பொறுத்த வரை பிளாக் ஹோல் எனப்படும் கருந்துளைகளிலும் இதே போல்தான் நடப்பதாக, நான் கருதுகிறேன். பொதுவாக பிரபஞ்சத்தின் கோள்களையும், விண்மீன்கள் மற்றும் நட்சத்திரக் கூட்டங்களையும் பவுதிக விதிகள் கட்டுப்படுத்துகின்றன. அதாவது பவுதிக விதிகளின் அடிப்படையில்தான் பிரபஞ்சம் இயங்குகிறது. ஆனால் எந்த ஒரு கோளோ அல்லது விண்மீனோ, அதன் இறுதிக்காலத்தில், தனக்குள் தானே இடிந்து நொறுங்கிக் கருந்துளையாக மாறும் போது, அந்த கருந்துளைக்குள் பவுதிக விதிகள் செல்லுபடியாவதில்லை.

சரி, பவுதிக விதிகள் முறிந்து போய்விட்டால் அதற்கு பிறகு என்ன நடக்கிறது? நிஜமான மெய்யறிவை நோக்கிப் பயணிக்கும் சாதகரை பவுதிக விதிகள் கட்டுப்படுத்த முடியாது என்பதால்தான்,

வழக்கமாக மற்றவர்கள் செய்ய முடியாத அற்புதங்களை அவரால் செய்ய முடிகிறது. இது மிக உயர்ந்த ஓர் ஆன்மீக நிலைதான் என்றாலும், இந்த நிலையும் கூட, இறுதியான மோட்சம் அல்ல. அதாவது பவுதிக விதிகள் அற்றுப்போன பிறகும் கூட, யோகியானவர், சில யோக விதிகளின் கட்டுப்பாட்டில் தான் நீடிக்கிறார். மேலும் மேலும் யோக சாதனையில் ஈடுபட்டு, இன்னும் இன்னும் உன்னத நிலைகளுக்கு உயரும்போதே இந்த யோக விதிகளும் அற்றுப் போகின்றன. பவுதிக விதிகள், யோக விதிகள் ஆகிய இரண்டின் கட்டுப்பாட்டில் இருந்தும் முழுமையாக விடுபட்ட யோகியே, மெய்யறிவு பெற்றவராவார். ஆனால் யோக விதிகளின் கட்டுப்பாடு அற்றுப்போகும் இந்த நிலை எப்போது ஏற்படுகிறது என்பதை யாருமே புரிந்துகொள்ள முடியாது. யாரைப் புரிந்து கொள்ள யோகியானவர் முயல்கிறாரோ, அந்த கடவுளே பார்த்து இவருக்கு மெய்யறிவு கிடைக்கட்டும் என திருவுள்ளம் கொண்டால் மட்டுமே யோக விதிகளும் அற்றுப்போய், கடவுளை முழுமையாக அறியும் நிலை சாத்தியமாகும். பல சந்தர்பங்களில், பவுதிக விதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட யோகிகள், அதனால் கிடைக்கும் அற்புத சக்திகளையே பெரிதென எண்ணி மயங்கி விடுவதால், அந்த நிலையில் இருந்து கீழே விழுந்து, மீண்டும் உயர முடியாமல் தவிக்கும் நிலையை சந்தித்து இருப்பதையும், வாசகங்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

மனிதனுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தி இதுபோல உள்நோக்கில் திரும்பி மூளை - தண்டுவட மண்டத்தில் மேலேறுகையில், சாதகரின் உடலிலும் மனதிலும், அன்றாட வாழ்விலும் பலப்பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே குண்டலினி சக்தியை தூண்டுவதென்பது, வெறும் கருத்தியல் சார்ந்த நிகழ்வு அல்ல மாறாக, உடல், மனம் மற்றும் வாழ்வியல் ரீதியிலான பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டே, குண்டலினி சக்தியை எழுப்ப முடியும்.

இதுபற்றி இந்த புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. அல்லது, குண்டலினி சக்தியை தூண்டுவது பற்றிய கருத்தியல் ரீதியிலான விவாதங்களுடன், அதன் நேரடி விளைவுகள் பற்றிய நடைமுறை ரீதியிலான விவாதங்களும் இந்த புத்தகத்தில் சேர்ந்தே விவாதிக்கப்பட்டுள்ளதாக சொல்லலாம்.

**பராசக்தி**

இந்த நூலின் தலைப்பும், இந்த அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதாவது குண்டலினி சக்தியை எழுப்ப வேண்டுமானால், முதலில் மனிதப் பிறவி வேண்டும்.

மனிதனாக பிறவி எடுத்த ஆன்மா மட்டுமே, தன் உடலுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியை எழுப்புவதன் மூலம், கடவுளும் தானும் ஒன்றே என்பதை புரிந்து கொள்ள முடியும். வானத்தில் வசிக்கும் தேவர்-தேவதைகளாக இருந்தாலும் அவர்களும், மனிதப் பிறவி எடுத்தே இதை சாதிக்க முடியும். அதாவது, தேவர்கள் கூட மனிதப் பிறவி எடுத்து, யோக சாதனையில் ஈடுபட்டு வெற்றி பெறாதவரை, கடவுளின் சக்தியை புரிந்து கொள்ள இயலாது. ஆனால் சாதாரண மனிதர்களாகிய நாமோ, இத்தகைய தேவர்-தேவதைகளைக் கூட கடவுளாகத்தானே வழிபடுகிறோம்? அதனால்தான் மனிதப் பிறவியால் மட்டுமே புரிந்து கொள்ளத் தக்கதான பிரபஞ்ச சக்தியை, கடவுளும் அறியாத சக்தி என நான் குறிப்பிடுகிறேன்.

இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை வாசகர்கள் வேறெங்கும் காண்பது அரிது.

ஏனென்றால், குண்டலினி சக்தியை எழுப்பும் போது என்ன நிகழ்கிறது என்பதை, சாதகர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவது, யோக சாஸ்திர நூல்களின் படி ஏற்கத்தக்கது அல்ல. அதாவது இந்த அனுபவங்களை அவரவர் சொந்தமாக அனுபவித்துதான் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, குண்டலினி சக்தியை எழுப்புவதில் வெற்றி பெற்றவர்கள், அந்த அனுபவங்களை மற்றவர்களுக்கு சொல்வது மரபல்ல. அவ்வாறு எடுத்துச் சொன்னால், ஆன்மீக ரீதியில் சாதகருக்கு ஊறுவிளையும் என்றே பொதுவாக நம்பப்படுகின்ற போதிலும், இந்த புத்தகத்தில், முற்றிலும் உலக நன்மையை கருத்தில் கொண்டு பாரம்பரிய மரபு மீறப்பட்டுள்ளது. குண்டலினி சக்தியை எழுப்பும் முயற்சியில் ஈடுபடுவோர் அந்த முயற்சியின்போது, உடல்-மனம் மற்றும் வாழ்வில் ஏற்படக்கூடிய புதிரான மாற்றங்களால் குழம்பி விடக்கூடாது - பின் வாங்கி விடக் கூடாது என்ற ஒரே நல்லெண்ணத்தில், இது பற்றிய என் சொந்த அனுபவங்கள், இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குண்டலினி சக்தியை எழுப்பும்போது நவீன அறிவியலுக்குப் புறம்பான பல்வேறு மாற்றங்கள், உடல், மனம் மற்றும் வாழ்வில் ஏற்படவே செய்யும் என்பதை, அடிப்படையில் வாசகர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்பதும், இந்நூலை எழுதுவதில் என்னுடைய நோக்கங்களில் ஒன்றாக இருந்துள்ளது. குண்டலினி சக்தியை எழுப்புவது பற்றிய சாஸ்திரங்கள் மற்றும் தத்துவங்களை மட்டுமே வாசகர்கள் பயின்றால் போதுமானதாக இராது என்றும், மற்றொரு சாதகரின் நேரடி அனுபவங்களைத் தெரிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும் என்றும், நான் கருதுகிறேன்.

குறிப்பாக, சித்தமகா யோகத்தில் ஈடுபடும் சாதகர்களுக்காக, இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. சித்த மகா யோகம் என்பது, சக்திபாத யோக பரம்பரை என்னும் ரகசிய பரம்பரையை சேர்ந்த யோகிகளால் பின்பற்றப்படும், ஓர் யோக முறையாகும். ஆனாலும் சித்த மகா யோகம் அல்லாது, இதர யோகா முறைகளுக்கும் குண்டலினி சக்தியை எழுப்புவதே நோக்கம் என்பதால், இந்நூல் எல்லா யோக முறைகளை பயில்பவர்களுக்கும் ஏற்றதே. ஆகையினால், எந்த ஒரு யோக முறையைப் பின்பற்றக்கூடிய சாதகரும் இந்நூலை படிக்கலாம். யோக சாதனைக்கான ஒரு நடைமுறை வழிகாட்டியாக இந்நூல் திகழும். யோக சாதனை குறித்து பொதுவாக அனைவருக்கும் ஏற்படக்கூடிய பல்வேறு கேள்விகளுக்கு இந்நூலில் பதில் கிடைக்கலாம்.

குண்டலினி சக்தியை எழுப்புகையில் என்ன நிகழ்கிறது என்பதற்கு அப்பாற்பட்டு, வாழ்க்கை என்றால் என்ன? கடவுள் என்றால் என்ன? போன்ற பொதுவான கேள்விகள் குறித்தும் இந்நூலில் பேசப்படுவதால், யோக சாதனையில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டுமின்றி, சாதாரண வாசகர்களும் தாராளமாக இந்நூலை படிக்கலாம்.

யோக சாதனையில் ஆர்வம் இல்லாத சாதாரண வாசகர்களுக்கு இந்நூலின் உள்ளடக்கத்தை புரிந்து கொள்வது சற்று கடினமாக இருக்கக்கூடும். ஆனாலும் மேற்கொண்டு சரியான பாதையில் சென்று, யோக மார்க்கத்தில் இறங்க வேண்டும் என்ற ஆர்வத்தை

இந்நூல் அவர்களுக்கு ஏற்படுத்தும் என, நான் எதிர்பார்க்கிறேன். குண்டலினி சக்தியை எழுப்புகையில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துக் கூறும் முன்பாக, யோக சாதனை குறித்து சாதாரண வாசகர்களுக்கான பொதுவான சில அத்தியாயங்களை, நான் இந்நூலில் சேர்த்து இருப்பதற்கு, இதுவே காரணம்.

இந்நூலை படிப்பதன் மூலம் ஒரே ஒரு வாசகராவது உணர்வூக்கம் பெற்று சரியான ஆன்மீகப் பாதையில் திரும்புவாரேயானால், இந்நூலை எழுதுவதற்காக நான் மேற்கொண்ட முயற்சி வீண் போகவில்லை என்று எடுத்து கொள்வேன்.

கடவுளை அறிவதற்கான சரியான பாதையில் திரும்புவதற்கான உணர்வூக்கம் வாசகர்களுக்கு கிடைக்கட்டும் என்று, என்னுடைய குருவான சுவாமி சகஜானந்த தீர்த்தரின் பாதம் பணிந்து வேண்டிக்கொள்கிறேன்.

-

**நூலாசிரியர்**

# யோகா என்றால் என்ன?

அண்ட வெளியில் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அதிஅற்புத சக்தியே தெய்வீக சக்தியாகும். கண்ணுக்குப் புலப்படும் பிரபஞ்சத்திற்கு உள்ளேயும் அதற்கு வெளியிலும் இந்த அதிஅற்புதசக்தி எங்கும் பரவி உள்ளது.

மனித குல நாகரிகம் தொடங்கியது முதல் ஒவ்வொரு மதமும் பல்வேறு விதங்களில் இந்த ஒரே உண்மையைத்தான் வலியுறுத்தி வருகின்றன. ஆயினும் பிரபஞ்ச மகா சக்தியை புரிந்து கொள்வதில் உலக மதங்களுக்கு இடையே பல வேறுபாடுகளை காண முடிகிறது. உயிரியல் ரீதியில் மனிதர்களுக்கு இடையே வித்தியாசம் இல்லாவிட்டாலும் வேறு பல விதங்களில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் மாறுபடுவது போலத்தான் இதுவும். தத்துவவியல் ரீதியில் ஒவ்வொரு மனிதருக்கு உள்ளே அடங்கியுள்ள ஆன்மாவில் வேறுபாடு இருக்க முடியாது என்றாலும், நடைமுறையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு தனித்துவம் இருப்பதை நாம் காண்கிறோம். அடிப்படையில் மனிதர்களின் பிரபஞ்ச அனுபவம் ஒன்றுதான் என்றாலும், மேம்போக்காகப் பார்த்தால் ஒவ்வொரு மனிதனின் அனுபவமும் ஒவ்வொரு விதமாகவே அமைகிறது. தத்துவம் என்பதையும் தெய்வீகம் என்பதையும் தனிப்பட்ட மனிதர்கள் எப்படி புரிந்துகொள்கிறார்கள் என்பதை பொறுத்து அனுபவம்

மாறுகிறது.

மனிதர்கள் தங்களின் தகவல் பரிமாற்றத்திற்காக கண்டுபிடித்த மொழிகளிலும் பல வித்தியாசங்கள் உள்ளன. மொழிகளுக்கு இடையில் பொதுவான அம்சங்கள் மிகவும் குறைவு. அப்படி இருக்கையில் மதங்களை புரிந்து கொள்வதில் மனித இனங்களுக்கு இடையே வித்தியாசம் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. உண்மையில் மொழிகளுக்கு இடையிலான வேறுபாட்டில் இருந்தே மதங்களுக்கு இடையிலான பிணக்குகள் பிறந்திருக்க வேண்டும்.

இத்தனை வேறுபாடுகளுக்கு இடையில் பிரபஞ்சத்தை எப்படி புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் நவீன அறிவியலின் வெற்றிதான், சில ஒற்றுமைகளை கொண்டு வந்திருக்கின்றது. ஆயினும் உலகில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அறிவியல் ரீதியில் பிரபஞ்சத்தை புரிந்து கொண்டால் போதாது, அதற்காக மதங்களின் பெயரால் நிரந்தரமாக சண்டை போட்டுக் கொள்வதும் ஏற்கத்தக்கது அல்ல. இது எத்தனை வீணானது என்பதை மனித குலம் புரிந்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

உண்மையில் மதங்கள், தத்துவங்கள், கொள்கைகள் மற்றும் விஞ்ஞானத்தை ஒருங்கிணைத்து ஒன்றாக புரிந்துகொண்டால்தான் உலகில் நிரந்தர அமைதி மற்றும் மகிழ்ச்சி ஏற்படும். ஆனால் எல்லோரும் அப்படி புரிந்து கொள்வது இயன்ற காரியமாக இல்லை.

அப்படியானால் இதற்கு என்னதான் தீர்வு ?

கடவுளே மனிதனாக வடிவெடுத்து பூமிக்கு இறங்கி வந்தால்தான் அமைதி கிடைக்குமா?

அப்படியும், ராமனாக, கிருஷ்ணனாக, புத்தராக, இயேசுவாக, நபியாக கடவுள் ஏற்கனவே அவதாரம் எடுக்கத் தானே செய்தார் ?

அதனால் அமைதி வந்துவிட்டதா ?

அவதார புருஷர்களால் இந்த உலகில் என்ன விளைவு ஏற்பட்டது?

அவதார புருஷர்கள் வந்ததால் உலகில் எல்லோரும் மகிழ்ச்சியானவர்களாக மாறிவிட்டார்களா?

இந்த எல்லாக் கேள்விகளுக்கும் இல்லை என்பதே பதில். உள்ளபடி பார்த்தால், அவதார புருஷர்கள் வந்த பிறகுதான் உலகில் அமைதியின்மை அதிகரித்து இருக்கிறது. மதங்கள்தான் ஒரே தத்துவமான கடவுளை பல பெயர்களில் பல துண்டுகளாகக் கூறு போட்டு, மனிதர்களிடையே இந்த வித்தியாசத்தை விதைத்து வளர்த்துள்ளன.

இது போன்ற வித்தியாசங்களை மறந்து விட்டு ஒவ்வொரு மனிதனின் உடலுக்குள்ளும் ஆன்மாவிற்குள்ளும் ஊடுறுவி நிற்கும் ஒரே சக்தி ஆதி அந்தமில்லா தெய்வீக சக்தி தான் என்பதையும், இந்த சக்தியை கூறுபோட முடியாது என்பதையும், அனைவரும் புரிந்து கொள்வது அவசியம். உலகின் ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு பாதையில் பயணித்தாலும், இறுதியில் அவை சென்று சேரும் இடம் இந்த மகா சக்தி என்னும் சிகரம்தான் என்பதையும் புரிந்து கொண்டால் மட்டுமே, மக்கள் அமைதியாக வாழ முடியும். ஒரு மதம் பெரியது என்றோ, மற்றொரு மதம் சிறியது என்றோ, ஒரு மதத்தின் பாதை வலியது என்றோ, மற்றொரு மதத்தின் பாதை மெலியது என்றோ ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொள்வதில் எந்தப் பொருளும் இல்லை.

எல்லா மதங்களும் சென்று சேரும் இடம் ஒன்றுதான் என்பதை இரண்டு விதங்களில் புரிந்து கொள்ள முடியும். ஒன்று, குறிப்பிட்ட மதம்தான் கடவுளை அடைய சிறந்த பாதை என்ற பார்வை. இரண்டு, எல்லா மதங்களும் சமமே என்ற பார்வை.

இந்த இரண்டு பார்வைகளுமே சரிதான் என்றும், இரண்டுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை என்றும் நம்மால் வாதிட முடியும்.

இரண்டும் சரிதானா, அது எப்படி? குறிப்பிட்ட ஒரு மதத்தை பின்பற்றுவோர் தங்களின் மதம்தான் சிறந்தது என்று கூறுவதை நாம் எப்படி நியாயப்படுத்த முடியும் என்று நீங்கள் கேட்கலாம்.

ஒரு உதாரணம் மூலமாக இதை விளக்குகிறேன்.

மலையேற்ற சாகசத்தை ஈடுபடும் ஒருவருக்கு, சிகரத்தை எட்டுவது மட்டுமே குறி. அதற்காக அவர் ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து சிகரத்தை எட்டிவிட்டால், அவரைப் பொறுத்த வரை அந்தப் பாதை தான் சிகரத்தை அடைவதற்கான சரியான பாதை, மற்றவர்கள் தேர்தெடுக்கும் பாதையை விட தனது பாதைதான் சிறந்த பாதை என்று சொல்லிக் கொள்ளும் மற்றவர்கள், மற்ற பாதைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து சிகரத்தை அடைந்துவிட்டால், அவர்களும் தங்களின் பாதை தான் சரியான பாதை என்று சொல்லிக் கொள்ளலாம். அதிலும் எந்தத் தவறும் இல்லை.

ஆனால் இதில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். பாதை எதுவாக இருந்தாலும் சிகரத்தை அடைந்து விட்டவர்கள் யாரோ, அவர்கள் மட்டும்தான் தங்களின் பாதை பற்றிப் பெருமை பேச முடியும். மலையேற்றத்தில் முதல் அடிகூட எடுத்து வைக்காதவர்களும், கொஞ்ச தூரம்கூட ஏற முடியாமல் திணறிக் கொண்டிருப்பவர்களும், தங்களின் பாதை பற்றி பீற்றிக் கொள்ள இயலாது. அதாவது கஷ்டப்பட்டு சிகரத்தை அடைந்தவர்கள், அந்த அதி உன்னத ஊயரத்திலிருந்து கீழே உள்ளவர்களைப் பார்த்து சொல்வதற்கும், கீழே உள்ளவர்கள் உச்சியை அண்ணாந்து பார்த்துப் பேசுவதற்கும், நிறைய வித்தியாசம் இருக்கிறது.

கடவுளை உணர்வதற்கான ஆன்மீக முயற்சியும் மலையேற்றம் போன்றதே. இதிலும், ஆன்மீக வழியில் கடுமையான பல படிகளைக் கடந்து நிஜமாகவே கடவுளை உணர்ந்தவர்கள் யாரோ, அவர்கள் மட்டும்தான், தாங்கள் தேர்ந்தெடுத்த பாதை பற்றிப் பெருமை பேச முடியும். இந்த ஆன்மீக முயற்சியில் இன்னும் ஈடுபடாதவர்களுக்கு, ஆன்மீகப் பாதையின் கஷ்டங்கள் பற்றி முழுமையாக தெரியாது. ஏற்கனவே கடவுளை உணர்ந்தவர்கள் வகுத்துக் கொடுத்துள்ள சாத்திரங்களில், ஆன்மீகப் பாதை பற்றி

என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதுதான் அவர்களுக்குத் தெரியும். நேரடியான முழு அனுபவம் அவர்களுக்கு இல்லை. எனவே, தாங்கள் தேர்ந்தெடுத்த பாதைதான் சரியான பாதை என்று அவர்கள் சொல்லிக் கொண்டால், அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இது ஒரு புறம் இருக்க, எந்த ஒரு மனிதனும் குறிப்பிட்ட ஒரு மதத்தை பின்பற்றுகிறோம் என்பதற்காக, தம்மை அந்த மதத்தை சார்ந்தவராக சொல்லிக் கொள்ள இயலாது. ஏனென்றால், யார் வேண்டுமானாலும், புறவயமான சில மதச் சடங்குகளை செய்து விட்டு அந்த மதத்தில் சேர்ந்து விட முடிகிறது. ஆனால் வெறும் சடங்குகள் மதமல்ல.

அதுபோலவே, எந்த ஒரு மனிதரும், குறிப்பிட்ட மதம் ஒன்றைப் பின்பற்றும் குடும்பத்தில் பிறந்ததை வைத்து, தம்மை அந்த மதத்தைச் சேர்ந்தவராக சொல்லிக் கொள்ள இயலாது. அப்படி சொல்லிக் கொள்வது சரியென வைத்துக் கொண்டால், இரண்டு வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த கணவன் - மனைவிக்குப் பிறந்த குழந்தைகளுக்கு என்ன மதம்? இந்த இரண்டில் ஒரு மதத்தை பெற்றோர் தங்களின் குழந்தைகளுக்குத் தேர்ந்தெடுத்தால், இரண்டுமல்லாத மூன்றாவது மதத்தை, தானே தேர்ந்தெடுக்கும் உரிமை குழந்தைகளுக்கு இல்லையா ?

எனவே பிறப்பை வைத்து யார் மீதும் மத முத்திரை குத்த முடியாது. குறிப்பிட்ட ஒரு மதத்தின் நடைமுறைகளைப் பின்பற்றக் கூடிய எல்லோரையும் அந்த மதத்தினராகச் சொல்லி விடவும் முடியாது.

மத மாற்றம் கூடாது என்றோ, மாற்று மதங்களுக்கு இடையில் திருமணங்கள் கூடாது என்றோ நான் சொல்வதாக இதற்குப் பொருளல்ல. யார் எந்த மதத்தைப் பின்பற்றினாலும்., அதன் மூலம் ஆன்மீக நிலையின் உச்சத்தை எட்டிக் கடவுளை உணர்ந்திருந்தால் மட்டுமே, உள்ளபடி தங்களை அந்த மதத்தினராகச் சொல்லிக் கொள்ள முடியும் என்பதே நான் சொல்ல வரும் கருத்து, கடவுளை உணர வேண்டும் என்ற இறுதி

நோக்கல்தான் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமே தவிர, கடவுளை உணர்வதற்கான பாதைகளில் எது சரியான பாதை என்பதில் பிணக்குகள் தேவையில்லை. இப்படி மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்பவர்கள், அதைக் கைவிட்டு நிஜமாகவே ஆன்மீகப் பாதையில் முதல் அடி எடுத்து வைத்தால், சண்டையிட்டது எவ்வளவு வீண் என்பதை மிக விரைவிலேயே புரிந்து கொள்வார்கள்.

கடவுள் என்ற தத்துவத்தை, பல மதங்களின் பெயரால் பல கூறுகளாகத் துண்டுபோட்டதே கூட கடவுளின் திருவிளையாடல்தான் என்று தோன்றுகிறது. ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்த மனிதர்களும் ஒவ்வொரு இயல்பினராக இருப்பதால், அவரவர் தேவைகளுக்கு ஏற்ப கடவுள் தம்மைத் தாமே வெவ்வேறு மதங்களின் பெயரால் வெவ்வேறு விதங்களில் வெளிப்படுத்திக் கொள்கிறார். வெவ்வேறு சமூகத்தினரை வெவ்வேறு இயல்பினராகப் படைத்தது கடவுளின் லீலைகளில் இன்னொரு அற்புதம்தான். ஆனால் வெவ்வேறு இயல்புள்ள வெவ்வேறு சமூகத்தினர் மற்றவர்களின் கடவுளை விடத் தங்களின் கடவுள்தான் உயர்ந்தவர் என்று நிலைநாட்ட எப்போதும் முயல்வதே, மதப் பிணக்குகளுக்குக் காரணம் !

நிம்மதிக்காகவே மதம். ஆனால் தாங்கள் ஏற்கனவே நிம்மதியாக, மகிழ்ச்சியாகத்தான் இருப்பதால், மதம் என்ற கருத்தே தேவையில்லை ; கடவுள் என்ற தத்துவத்திற்கே அவசியமில்லை என்று சொல்லக் கூடிய சில சமூகங்களும் இந்த உலகில் உண்டு. இதில் துளியேனும் உண்மையிருந்தால், இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் உலகின் எந்த ஒரு சமூகமும் நிம்மதியாக இல்லை என்பதுதானே நிதர்சனமான உண்மை?

நவீன காலத்தில் கடவுளை வியாபாரமாகவும், விளம்பரப் பொருளாகவும் சிலர் மாற்றி விட்டார்கள். கடவுளை நேரே கண்டவர்களாக இவர்கள் தங்களைச் சொல்லி கொள்வதில் உண்மை இருக்கிறதோ, இல்லையோ, இவர்களை நம்பக் கூடிய

கூட்டம் நம்பிக் கொண்டுதான் இருக்கிறது. இயற்கையில் சிருஷ்டியே ஒரு மாயத்தோற்றம்தான் என்பதால், கடவுளையும் இப்படி ஒரு மாயத் தோற்றமாகப் புரிந்துகொள்கிறார்கள் போலும்! ஆனால் கடவுளை மாயத் தோற்றமாக அன்றி நிஜமாகவே புரிந்து கொள்ளும் வழிகளில் ஒன்றான யோகாவை இவர்கள் வியாபாரமாக்கி விட்டதே வேதனை.

கடவுளையும், கடவுளை அடைவதற்கான வழிகளையும் மலினமாக்கி விட்ட வியாபாரிகளிடமிருந்து தப்புவதற்கு என்ன வழி ?

இந்தக் கேள்விக்கு பதில் நம்முடைய மனதில் இருக்கிறது.

நாம் நம்முடைய மனதிற்குள் கடவுளைக் கண்டடைய முயன்றால், தவறான வழிகாட்டுதல்களில் இருந்து விடுபடலாம்.

இதை, மெய்யறிவு, தன்னைத் தானே உணர்தல், பிரத்யக்ஷ தரிசனம், மோட்சம் - இப்படிப் பல பெயர்களில் அழைக்கிறார்கள். ஆனால் நம்முடைய மனதிற்குள்ளேயே கடவுளைக் கண்டடைவது, முற்றிலும் நாம் மட்டுமே உணரக்கூடிய ஓர் அந்தரங்க அனுபவம் என்பதில் மட்டும் சந்தேகமில்லை. ஏற்கனவே ஆன்மீக நிலையில் உயர்ந்தவர்கள் இந்த முயற்சியில் மற்றவர்களுக்கு ஓரளவு உதவக் கூடும் என்றாலும், மெய்யறிவின் பலன்கள் முழுக்க முழுக்க சாதகருக்கே உரியவை.

நிஜமாகவே ஆன்மீக நிலையில் முன்னேறியவர்கள் எந்த வகையில் மற்றவர்களுக்கு உதவ முடியும்மென்றால், விளக்கானது எப்படி தன்னுடைய பிரகாசத்தை இழக்காமலேயே வேறு பல விளக்குகளை ஏற்றமுடிகிறதோ அது போல, நிஜமாகவே உயர்ந்த ஆன்மீக நிலையில் உள்ளவர்கள், தாமும் அவ்வாறு உயர வேண்டுமென்ற ஆசை உளளவர்களை அம்முயற்சியில் ஈடுபடுத்துவதற்கான ஆரம்பப் பொறியாக இருக்க முடியும். ஆனால் இறுதியில் நோக்கம் நிறைவேற, சாதகரின் முயற்சிதான் முக்கியம். சாதகர் தாமாகவே முயன்றுதான் கடவுளைக் கண்டடைய முடியும்.

இப்படி நமக்குள் நாமே கடவுளைக் காண்பதற்கான முயற்சிகளை எப்படிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்கான வழிமுறைதான், யோகா, மனதிற்குள் கடவுளை உணர்ந்து விட்டால், கடவுளும் மனிதனும் ஒன்றாகிவிடுவார்கள். மெய்யறிவை அடைந்த ஒரு மனிதனும் கடவுளும் வெவ்வேறு அல்ல.

இதற்கும் மேல், ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சிறுவடிவம்தான் என்பதை யோக சாஸ்திர நூல்கள் வலியுறுத்துகின்றன. கடவுளின் சிறு வடிவமான மனிதன், தன் மனதிற்குள் தானே கடவுளை உணரும்போது, தன்னுடைய இயல்பும் கடவுளின் இயல்பும் அடிப்படையில் ஒன்றுதான என்பதையும் உணர்கிறான்.

இப்படி தமக்குள் தாமே கடவுளை உணர்ந்தவர்கள் மட்டுமே, மனித குலத்திற்கு வழிகாட்டிகளாகத் திகழ முடியும். இப்படிப்பட்டவர்கள் எத்தனை பேரை ஆன்மீக வழிக்குத் தூண்ட முடியும் என்பது ஒரு பொருட்டல்ல. ஆன்மீக வழியில் மற்றவர்களைத் தூண்ட இவர்களால் மட்டும்தான் முடியும் என்பதே நாம் அறிய வேண்டிய கருத்து. இப்படி மற்றவர்களை ஆன்மீக வழியில் தூண்டக் கூடிய உன்னத புருஷர்களையே, ரிஷி, முனிவர், புனிதர், குரு, ஆச்சார்யர் என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கின்றோம். இவர்களின் பெயர் முக்கியமல்ல, ஆனால் ஆன்மீக நிலையில் உயர்ந்து தமக்குள் தாமே கடவுளைக் கண்டவர்கள் என்பதே முக்கியம்.

எந்த ஒரு மனிதரும், தமக்குள் தாமே கடவுளைக் காண விரும்பினால், அதை ஏற்கனவே சாதிக்க குரு ஒருவரால் தூண்டப்படுவதே முதல்படி. மெய்யறிவை அடையாத ஒருவர் மற்றவர்களை அதற்குத் தூண்ட முடியாது. எரிந்து கொண்டிருக்கும் விளக்காள் தான் மற்ற விளக்குகளை ஏற்ற முடியுமே தவிர, அணைந்த விளக்கு அல்ல. அதுபோல மெய்யறிவை சாதிக்காத எவரும், அவர்கள் தம்மை

குருவென்று சொல்லிக்கொண்டாலும், மற்றவர்களை ஆன்மீக மார்க்கத்தில் தூண்டமுடியாது. அதே சமயம், மிக உயர்ந்த ஆன்மீக நிலையில் உள்ள குருவினால், ஒருவர் ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியுமே தவிர, கடவுளை அறிவதற்கான பயணத்தின் அடுத்தடுத்த கட்டங்களை தமது சொந்த முயற்சியின் மூலமாகவே கடந்தாக வேண்டும். வெளி உதவிகளால் இம்முயற்சியில் எந்தப் பலனும் கிடைக்க முடியாது. கடவுள் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் மறை பொருளாக ஏற்கனவே இருப்பதால், வெளி உதவிகளுக்கு அவசியமுமில்லை. ஆனால் குருவின் ஆரம்பத் தூண்டுதலுக்கு மேல், குறிப்பிட்ட கட்டத்தை எட்டும் வரை, அவரது நேரடி மேற்பார்வை தேவைப்படலாம். முதல் முதலில் நடக்கப் பழகும் குழந்தைக்கு ஆரம்பத்தில் நடை வண்டியின் உதவி தேவைப்படுவதை, இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நடைவண்டி இல்லாமல் நடக்க முடியும் என்ற கட்டத்தை எட்டி விட்டால், அதன் பின்னர் குழந்தை தானாகவேதான் நடக்க வேண்டும். அதுபோல, ஆரம்பத்தில் குருவின் மேற்பார்வை தேவைப்பட்டாலும், குறிப்பிட்ட கட்டத்திற்கு மேல், சொந்த முயற்சியின் மூலமாகவே ஆன்மீகப் பாதையில் பயணிக்க வேண்டும். குருவானவர் சாதகரின் கையைப் பிடித்துக் கொண்டு கடைசி வரை வரமாட்டார்.

இந்த குழந்தை - நடைவண்டி உதாரணத்தை இனி வரவிருக்கும் அத்தியாயங்களில் நான் மேலும் விளக்குவேன்.

மனித குலத்தை உள்ளடக்கிய இந்த பிரபஞ்சம், ஆதி அந்தமில்லாத தெய்வீக சக்தியின் புறவயமான வெளிப்பாடாகும். கடவுள்தான் பிரபஞ்சத்தின் வடிவில் தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார். பிரபஞ்சத்தையும், அதற்கு அப்பால் உள்ள கற்பனைக்கு எட்ட வெளியையும் நீக்கமற நிறைத்திருப்பதும், ஆதியந்தமில்லாத கடவுளின் அற்புத சக்திதான்.

தனிப்பட்ட மனிதர்களுக்குள் இந்த அற்புத சக்தியே நீக்கமற நிறைந்துள்ளது. கடவுள் என்கிற தெய்வீக சக்தியே மனித

உருவாக வடிவெடுத்துள்ளது.

இவ்வாறாக, ஒட்டுமொத்த மனிதகுலம், தனிப்பட்ட மனிதர்கள் என்ற இரண்டு இணையான படிநிலைகளில் கடவுள் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார் என்று சொல்ல முடியும். இந்த இரண்டு நிலைகளைப் பற்றி பிற்பாடு இன்னும் விளக்கமாகச் சொல்லவிருக்கிறேன்.

இப்போதைக்கு, மனிதகுலத்தையும், தனிப்பட்ட மனிதர்களையும் உள்ளடக்கிய இந்த பிரபஞ்சமும், அதற்கு அப்பால் உள்ள கற்பனைக்கு எட்டாத வெளியும், முழுக்க முழுக்க கடவுளின் அற்புத சக்தியே தவிர, வேறொன்றும் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். எனவே, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வீக சக்தியை நமக்குள் நாமே கண்டுகொண்டு, அந்த சக்தியிடம் சரணாகதி அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதே, இந்தப் புத்தகத்தின் பிரதான நோக்கமாகும். தெய்வீக சக்தியை நமக்குள் உணர்வதும், அந்த சக்தியிடம் முழுமையாக சரணாகதி அடைவதும், ஒன்றே. அண்ட சராசரங்களைக் கட்டியாளும் சக்தி, கடவுளின் அற்புத சக்தி. அந்த சக்திதான் கடவுள். சக்திக்கும் கடவுளுக்கும் வித்தியாசமில்லை. அதே போல கடவுளின் அற்புத சக்திதான் பிரபஞ்சமாகவும், அதற்கு அப்பால் உள்ள வெளியாகவும், மனித குலம் மற்றும் தனிப்பட்ட மனிதர்களின் உள்ளுணர்வாகவும் வடிவெடுத்துள்ளது. ஆனால் கடவுள் மனிதகுலமாக வடிவெடுத்த பின்னர், அதாவது, கடவுளின் சக்தி மனிதகுலமாக வெளிப்பட்ட பின்னர், அந்த சக்தி, ஆதியந்தமில்லாத இந்தப் பிரபஞ்ச வெளியின் ஆழமான ஏதோ ஓரிடத்தில் தூங்காமல் தூங்கும் நிலைக்குச் சென்றுவிட்டது. அது எங்கே இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பது நமக்கு சாத்தியமானதல்ல. அந்த சக்தி தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொண்டால் மட்டுமே அதை நாம் உணர முடியும். மற்றபடி சாதாரண மனித அறிவினால் இந்த சக்தியைப் புரிந்து கொள்ளமுடியாது. அதே சமயம், அதியுன்னத ஆன்மீக நிலைக்கு உயர்ந்துள்ள யோகிகளுக்கு இந்த சக்தியை புரிந்து கொள்ளும் வல்லமை இருக்கிறது. இப்படி சாதாரண மனித அறிவினால் புரிந்துகொள்ள முடியாத சக்தி, பிரபஞ்சமாகவும்,

மனிதகுலமாகவும் தொடர்ந்து மாயத்தோற்றம் காட்டுவதை வைத்தே, அது தூங்காமல் தூங்கும் நிலையில் இருப்பதாகச் சொல்கிறோம்.

இதே சக்தி, தனிப்பட்ட மனிதர்களுக்குள்ளும் தூங்காமல் தூங்கும் நிலையில் இருந்து கொண்டேதான் இருக்கிறது. முடிவற்ற பிரபஞ்சத்தைப் போல அன்றி, மனித உடல் என்பது, வரையறைக்கு உட்பட்ட வடிவம் என்பதால், உடலுக்குள் எங்கே இந்த சக்தி உறைந்திருக்கிறது என்பதை யோகிகள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி, கடவுளின் சக்தி, மனித உடலில், ஆசனவாய்க்கும், ஜனன உறுப்புக்கும் இடைப்பட்ட பகுதியில், மூளை-நரம்பியல் மண்டலத்தின் மூலாதாரத்தில் உறைந்திருக்கிறது. அதை நம்மால் உடனடியாக உணரமுடியவில்லையே தவிர, அந்த சக்திதான், நமது உள்ளுணர்வில் மாயத் தோற்றமாக இந்தப் பிரபஞ்சத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

மனித உடலுக்குள் உறைந்திருக்கும் இந்த சக்தியை, குரு ஒருவர் மூலமாகத் தட்டியெழுப்பினால், அந்த சக்தி உள்நோக்கித் திரும்பத் தொடங்கும். இதுவரை வெளிப்பிரபஞ்சத்தை நோக்கியிருந்த இந்த சக்தியின் பார்வை, இப்போது உள்நோக்கித் திரும்புகையில், தனிப்பட்ட மனிதர்களின் தோற்ற வெளிப்படுகிறது. இதைத்தான், நமக்குள் நாமே கடவுளைக் காண்பது என்கிறோம். மெய்யறிவு, தன்னைத் தாமே உணர்தல், மோட்சம் என்று பல பெயர்களில் அழைக்கப்படும் உன்னத ஆன்மீக நிலை இதுவே. இந்த நிலை வந்துவிட்டால், மனிதன் உள்ளுக்குள் பிரகாசமடைந்து, கடவுளுடன் இரண்டறக் கலந்து விடுகிறான்.

இதுவரை, தனிப்பட்ட மனிதர்கள் ஆன்மீக எழுச்சி அடைவது பற்றிப் பேசினோம். மனிதகுலம் முழுவதும் ஒரே காலத்தில் இதுபோல ஆன்மீக எழுச்சி அடைய முடியுமா என்று வாசகர்கள் கேட்கலாம். பழமையான சமஸ்கிருத கிரந்தங்களில் இதுபற்றிப் பேசப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும்,

## பராசக்தி

கடவுள் தன் சிருஷ்டி முழுவதையும் சம்ஹாரம் செய்கிறார். அதன்பிறகு மறுபடியும் உயிர்களை சிருஷ்டிக்கிறார். இப்படியாக, யுகங்கள் தோறும் இந்த சிருஷ்டி-சம்ஹார சுழற்சி தொடர்ச்சியாக நடப்பதாக பழமையான சமஸ்கிருத நூல்கள் கூறுகின்றன.

இதுபற்றி நான் சொல்ல நினைப்பது முற்றிலும் என் சொந்தக் கருத்தாகும். இவ்வளவு பெரிய கேள்விக்கு பதில் சொல்லும் ஞானம் எனக்கில்லை என்றாலும், அனுமானத்தின் அடிப்படையில் விளக்க முயல்கிறேன்.

தனிப்பட்ட மனிதர்களைப் பொறுத்த வரை, அவர்கள் தங்களுக்குள் கடவுளைக் காணும் ஆன்மீக முயற்சியில் வெற்றி பெறும்போது, சிருஷ்டி அற்றுப்போகிறது. அந்த சூழ்நிலையில் மனிதன் மெய்யறிவு பெறும் காரியம் மிகவும் கட்டுப்பாடான ஒரு விதத்தில் நிகழ்கிறது. யோக அப்பியாசமும், குருவின் கருணையும் இணைந்து இந்த இறுதி நிலையை சாதிக்கின்றன. தனிப்பட்ட மனிதர்கள் நிலையில், சிருஷ்டி அற்றுப்போதல் எப்படி நிகழ்கிறது என்பதை, இந்நூலின் மற்றொரு அத்தியாசத்தில் விளக்கியிருக்கிறேன்.

ஆனால், யுகங்களின் முடிவில் சிருஷ்டி முழுவதையும் (அதாவது மனிதகுலம் உள்ளிட்ட எல்லா உயிர்களையும்) கடவுள் சம்ஹாரம் செய்யும்போது, எல்லா உயிர்களும் மெய்யறிவு பெற்றுவிடுவதாகச் சொல்லமுடியாது.

இதற்கான காரணம் மிக எளிதானது. முதலில் பிரளயத்தின்போது (அதாவது எல்லா உயிர்களின் ஒட்டுமொத்த சம்ஹாரத்தின் போது) அறிவியலின் விதிகளும் யோக சாஸ்திர விதிகளும் செயலற்றுப் போவதை உணர, மனிதர்களுக்குச் போதிய நேரமிராது. (அறிவியல் விதிகள் மற்றும் யோகசாஸ்திர விதிகள் முடங்கிப் போவது என்றால் என்ன என்பதை பின்வரும் அத்தியாயாம் ஒன்றில் விளக்கியிருக்கிறேன்.)

இரண்டாவது, மெய்யறிவு என்பது கடவுளின் இஷ்டப்படி நடக்கக் கூடிய ஒரு காரியம். அனைத்து உயிர்களையும் பிரளயகாலத்தில்

மொத்தமாக சம்ஹரிக்கையில், அனைத்து உயிர்களும் மெய்யறிவு பெறட்டும் என்ற சித்தம் கடவுளுக்கு இருந்தால் மட்டுமே, அனைத்து உயிர்களும் மெய்யறிவு பெற முடியும். ஆனால் பிரளய காலத்தில் கடவுள் அவ்வாறு திருவுள்ளம் கொள்வதில்லை. அதற்காக நாம் விளக்கம் சொல்ல முடியாது. கடவுளின் இயல்பு, எல்லா விஷயங்களைப் போலவே இதிலும் புதிராகவே உள்ளது என்பதைத் தவிர, இதுபற்றி வேறெதுவும் சொல்ல என்னால் இயலவில்லை.

ஆனால் தனிப்பட்ட மனிதர்களின் விஷயத்தில், அவர்கள் தானும் கடவுளும் வேறல்ல என்பதை தமக்குள் தாமே புரிந்துகொள்கிறார்கள். கடவுளின் சக்தியும் தனிப்பட்ட மனிதர்களின் தான் என்னும் உணர்வும் ஒன்றேதான் என்பதால், மெய்யறிவு பெற்றவர்கள் தங்களை உணர்வதுடன், கடவுளின் சக்தியையும் புரிந்து கொள்கிறார்கள்.

எனவே, மெய்யறிவு பெற்ற தனி மனிதர்கள், ஆதியந்தமில்லாத தெய்வீக மகாசக்தி எங்கே இருக்கிறது என்பதை வெளியில் தேடத் தேவையில்லை. நமக்குள்தான் அந்த சக்தி இருக்கிறது. நாமேதான் அந்த சக்தி என்பது அவர்களுக்கு நன்றாகவே புரியும்.

மனித உடலுக்குள் தண்டுவடத்தின் மூலாதாரத்தில் மறைந்திருக்கும் அதியற்புத ஆன்மீக சக்தி குருவினால் தூண்டப்படும் போது, உள்நோக்கித் திரும்புவதுடன், மூளை-தண்டுவட நரம்பியல் மண்டத்தில், மேல்நோக்கியும் ஏறத் துவங்குகிறது. இறுதியில் இந்த சக்தி மூளையைத் தொடும்போது, மனிதன் அதன் இயக்கத்தை உடல் முழுவதும் உணர ஆரம்பிப்பான்.

இது எப்படி நிகழ்கிறது என்பதை விளக்க நவீன விஞ்ஞானத்தால் முடியாது. ஆன்மீக சக்தி உடலுக்குள் பரவிப் பாய்வதை நேரடி அனுபவம் மூலமாக மட்டுமே உணர முடியும்.

இன்னும் சொல்லப் போனால், மெய்யறிவை சாதிக்கும்போது, ஆன்மீக சக்தி உடலுக்குள் பரவும் காரியம் மட்டுமே நிகழ்கிறதா என்றால், அவ்வாறில்லை என்பதுதான் சரி. ஆன்மீக சக்தி உடலுக்குள் பாய்வதற்கு அப்பாற்பட்டு, உடல் முழுவதும் நரம்பு மண்டலம் தூண்டப்படுகிறது. பிறகு சாதகரின் முயற்சியேதும் இன்றியே, அவரது மனம், புலன் நுகர்ச்சி சார்ந்த அழுக்குகளிலிருந்து சுத்திகரிக்கப்படுகிறது. சாதகரின் மனம் கடவுளின் மனதுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக, புதிய இடைமுகமே உருவாகி விடுகிறது.

ஆன்மீக சக்தி மூளைப் பகுதியை எட்டும்போது, மனம் மேலும் மேலும் உயர்ந்த தளங்களுக்கு இட்டுச் செல்லப்படுகிறது. மெய்யறிவின் முதலாவது வெளிச்சம் உள்ளுக்குள் பரவத் தொடங்குகையில், சாதகர் எல்லையில்லாப் பேரானந்தம் அனுபவிக்கத் துவங்குகிறார். இந்த அனுபவம் எத்தனை பரவசமானது என்பதை எந்த மொழியின் வார்த்தைகளாலும் விவரிக்க முடியாது. அதியற்புதமான இந்தப் பேரானந்த அனுபவத்தை பகுத்தறிவு ரீதியில் விளக்க, நவீன அறிவியல்-பழங்கால அறிவியல் எதனாலும் இயலாது.

குண்டலினி சக்தி என்னும் பேரண்ட சக்தி விழித்துக் கொள்ளும்போது நிகழக்கூடியது இதுவே.

பேரண்ட மகாசக்தியுடன் இவ்வாறு ஒருங்கிணைவதற்கான வழிமுறைதான் யோகா!

இந்தப் புத்தகம் குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்வதில், என் சொந்த அனுபவம் பற்றிய விவரணையாகும். எவ்வித விருப்பு-வெறுப்புமின்றி, என் அனுபவத்தை எடுத்துச் சொல்ல நான் முயன்றுள்ளேன். குண்டலினி அனுபவத்தை வெளியில் சொல்வது, யோக பாரம்பரியத்தின் மரபுகளை மீறியதாகும். அப்படியிருந்தும், எவ்வித சுயநல நோக்கமுமின்றி, முற்றிலும் உலக நன்மைக்காகவே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

இங்கே, யோகா என்றால், ஆசனங்கள்-மூச்சுப்பயிற்சிகளின்

தொகுப்பு என்ற எண்ணம் பலருக்கு இருப்பதை வாசகர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உண்மையில், ஆசனங்கள் மற்றும் மூச்சுப் பயிற்சிகள் உள்ளுக்குள் ஆன்மீக சக்தியை எழுப்புவதற்கான சாதனங்களே தவிர, அவையே யோகாவல்ல. ஆனாலும் ஆசனங்கள் மற்றும் மூச்சுப்பயிற்சிகளை பல்வேறு யோகா முறைகளில் ஒன்றாக கருத முடியும். தியானம் என்பது மற்றொரு யோகா முறை. பக்தி, பலன்கருதாத கர்மயோகம், தாந்திரீகம் கூட ஒரு வித யோகா முறைதான். இப்படி வேறு பல யோகா முறைகளும் உள்ளன. இதில் எந்த யோகா முறையை நாம் கடைபிடித்தாலும், இறுதியில் உள்ளுக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தியை விழிப்படையச் செய்வதில் நாம் வெற்றி பெறும் வரை, இவை வெறும் வழிமுறைகளே தவிர, யோகாவல்ல. ஆன்மீக சக்தி விழிப்படைந்த பின்னர் தான், அது யோகாவாகிறது. இன்னும் சொல்லப்போனால், ஆன்மீக சக்தி விழிப்படைந்த பின்னர்தான் யோகா ஆரம்பிக்கிறதே தவிர, அதற்கு முன்பல்ல. ரயில் பயணத்தில் ஆன்வேர்ட் ஜர்னி முடிந்த பின்னர் ரிடர்ன் ஜர்னி தொடங்குவது போலத்தான் இதுவும். புறவயமாக செயல்பட்டு, பிரபஞ்சம் என்னும் மாயத் தோற்றத்தை நமக்குக் காட்டிக் கொண்டிருக்கும் நமது மனம், புத்தி, அகங்காரம் மற்றும் ஐம்புலன்களின் இயல்பானது, உள்நோக்கித் திரும்பி, அகவயமாக நமது சுயத்தை நமக்கு காட்டத் தொடங்கும்போதே, யோகாவின் பாதையில் நாம் நடக்கத் தொடங்குகிறோம்.

எனவே யோகாப்பியாசத்தில் ஈடுபடும் ஒருவர் முதலில் தன் கவனத்தை உள்நோக்கித் திருப்ப வேண்டும். ஆனால் தனிப்பட்ட எந்த ஒரு மனிதரும், தனது சொந்த முயற்சியால் இதை சாதிக்க முடியாது. குருவின் தூண்டுதல் கிடைத்தால் மட்டுமே, புறவயமான மனதை உள்நோக்கித் திருப்ப முடியும். இதைப் பற்றி பிற்பாடு விளக்கமாகச் சொல்கிறேன்.

உள்ளுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியைத் தட்டி

எழுப்பிவிட்டால், உள்நோக்கிய பயணம் ஆரம்பிக்கிறது. அதன் பின்னர் சிருஷ்டி அற்றுப்போய், சிருஷ்டிக்கு ஆதாரமான சக்தி எதுவோ, அந்த ஆதி சக்தியில் தனிப்பட்ட மனிதர்களின் ஆன்மா கரைந்துவிடுகிறது. இந்த நிலையில் தனிப்பட்ட மனிதர்களின் ஆன்மாவிற்கும், கடவுள் சக்திக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தீயில் அடங்கியுள்ள தீப்பொறிக்கும் தீக்கும் எப்படி வித்தியாசமில்லையோ, அதுபோலத்தான் இதுவும்.

எனவே உள்ளுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியைத் தட்டியெழுப்பப் பல யோகா முறைகள் உள்ளன. இதில் எந்த முறையைப் பின்பற்றி குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்தாலும், கடவுளுடன் ஐக்கியமாவது சாத்தியமே.

# சித்த மகாயோகா

குண்டலினி சக்தியை எழுப்ப எந்த யோகா முறையை நாம் பின்பற்றினாலும், குண்டலினி சக்தியை எழுப்பிய பின்னர் தொடங்கும் உள்நோக்கிய பயணத்தின் பாதை ஒன்றுதான். இந்த மகத்தான ஆன்மீக நெடும்பாதைக்கே சித்தமகா யோகா என்று பெயர்.

ஏற்கனவே சொன்னபடி, உலகில் தற்போதுள்ள எல்லா யோகா முறைகளும், அதாவது தாந்திரீக சடங்குகள், மத ஆசாரங்கள், தத்துவங்கள், கொள்கைகள்-இவை அனைத்துமே, அடிப்படையில் உள்ளுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியைத் தட்டி எழுப்புவதற்கானவை. புற உலகை நோக்கி நிற்கும் இந்த சக்தியை அகவயமாகத் திருப்பி, உள்நோக்கிய பயணத்தை தொடக்கிவைக்கும் திறனுள்ள நேரடியான அல்லது மறைமுகமான எந்த ஒரு உபாயத்தையும் நாம் பயன்படுத்தலாம். பொதுவாக இத்தகைய என்னென்ன உபாயங்கள் உள்ளன என்பது பற்றி ஓர் அத்தியாயத்தில் விவரித்துள்ளேன்.

மனிதன் தனக்குள் தானே கடவுளை உணர, தானும் கடவுளும் வேறெல்ல என்னும் மெய்யறிவைப்பெற, நம்மோடு உடன்பிறந்த செந்தரமான வழி இது. அதாவது புற உலகை நோக்கி நிற்கும் ஆன்மீக சக்தியை உள்நோக்கித் திருப்பாமல் எவரும் மெய்யறிவு பெற இயலாது. உண்மையில் கடவுள்களாகப் பார்த்து நமக்குக்

கொடுத்துள்ள வரம் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். ஏனென்றால் மனிதர்கள் மட்டுமே, உரிய முறையில் முயன்றால், தன் உடலுக்குள் தானே, ஆன்மீக சக்தியின் விழிப்பை உணர முடியும். அப்படியிருக்கையில், யோகாவின் அதியற்புதத் திறன்பற்றி, அதன் உன்னதமான பலன்கள் பற்றி நமக்கு வேறெந்த சந்தேகமும் இருக்க முடியாதல்லவா?

அது சரி, ஆனால் இந்த உள்நோக்கிய பயணம் என்பது எதற்காக?

மனிதனைப் படைத்தது கடவுளின் ஆன்மீக சக்தி. படைப்பிற்குப் பின்னர் அதே தெய்வீக சக்தி, மனித உடலுக்குள் உறைந்து, புற உலகை நோக்கித் திரும்பி நிற்பதால்தான், மாயத்தோற்றமான இந்தப் புற உலகையும், நம்மையும் கடவுளில் இருந்து வேறுபட்டதாக நாம் உணர்கிறோம். இந்த மாயத்திரை விலகினால்தான், மனிதனும் கடவுளும் மீண்டும் ஒன்றாக முடியும். கடவுளும் நாமும் வேறல்ல என்பதை மனிதனின் ஆன்மா புரிந்துகொள்ள முடியும். இந்தத் திரை விலக வேண்டுமானால், படைப்பு அற்றுப்போக வேண்டும். படைப்பு அற்றுப்போக வேண்டுமானால் புற உலகை நோக்கி நிற்கும் ஆன்மீக சக்தியை மீண்டும் உள்நோக்கித் திரும்பினால் தான் முடியும். எனவேதான, மெய்யறிவை சாதிக்க ஆன்மீக சக்தியின் உள்நோக்கிய பயணம் அவசியமாகிறது.

தனிப்பட்ட மனிதர்களில் படைப்பு அற்றுப்போய், இந்த உள்நோக்கிய பயணம் எவ்வாறு நிகழ்கிறது என்பதை இப்போது விளக்குகிறேன்.

கடவுளின் ஆன்மீக சக்தி, சிறு அளவிலான ஒரு பிரபஞ்சத்தைப் போல மனிதனாக வடிவெடுத்த பின்னர், தூங்காமல் தூங்கும் நிலைக்குச் சென்று விடுகிறது. சிருஷ்டிகாரியம் முடிந்து விட்டது என்ற பொருளில்தான், தூங்காமல் தூங்குதல் என்கிற வார்த்தையை நாம் பயன்படுத்துகிறோமே தவிர, கடவுளின் ஆன்மீக சக்தி ஒருபோதும் தன் இயக்கத்தை முற்றிலுமாக

நிறுத்திவிடுவதில்லை. சிருஷ்டிகாரியம் முடித்த இதே சக்திதான், நமது மனம், புத்தி, அகங்காரம் மற்றும் ஐம்புலன்கள் மூலம் மாயத்தோற்றமான புற உலகை நமக்குக் காட்டி நிற்கிறது.

இந்த சக்தியை, தகுதி வாய்ந்த குரு ஒருவரின் மூலம் தட்டியெழுப்பினால், அது உள்முகமாகத் திரும்பி, யோக சாதகரின் தனிப்பட்ட ஆன்மாவை அழித்து, சிருஷ்டிபங்கம் செய்கிறது. இதனால் தனிப்பட்ட மனிதனின் ஆன்மா, தான் எங்கிருந்து வந்ததோ, அதே கடவுளின் சக்தியில் கரைந்து விடுகிறது. இதன் காரணமாக, புற உலகின் மாயத்தோற்றம் மனதிலிருந்து மறைந்து, மனம் முழுவதும் கடவுளைப் பற்றிய அதியுன்னத அறிவினால் நிறைகிறது. கடவுளின் இயல்பு வெட்ட வெளிச்சமாக புரிய ஆரம்பிக்கிறது.

எனவே, கடவுளின் எந்த மகாசக்தி மனிதனைப் படைத்ததோ, அதே சக்திதான் சிருஷ்டி காரியத்தின் திசைக்கு நேர் எதிர்திசையில் செயல்பட்டு, சிருஷ்டிபங்கம் செய்யவேண்டும். பழங்காலம் தொடங்கி இன்று வரை, பலப்பல மதங்கள், ஆச்சாரியர்கள் மற்றும் குருமார்களால், மோட்சம், ஆன்மீக விடுதலை, மெய்யறிவு எனப் பல்வேறு பெயர்களால், குறிக்கப்படும் இறுதி விளைவு, இதுவேயாகும். இந்த இறுதி சாதனையை கடவுளின் கருணையின்றி சொந்த முயற்சி மூலம் சாதிக்க யாராலும் முடியாது.

கடவுளைத் தேடி மனிதன் உலகின் எல்லா மூலைகளுக்கும் செல்லலாம். மிகவும் கடுமையான முறையில் தவமியற்றலாம். இன்னும் பல வழிபாடுகளில் ஈடுபடலாம். தனிப்பட்ட மனிதர்கள் இப்படி என்னதான் பெருமுயற்சி எடுத்தாலும், கடவுளின் கருணை இல்லாவிட்டால், இது எல்லாமே வீண்தான். ஏனென்றால், கடவுளின் கருணை இருந்தால்தான், சரியான குரு கிடைப்பார். சரியான குரு ஒருவர்தான், சாதகரின் உடலுக்குள் உறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியைத் தூண்டமுடியும். அதுவரை நாம் என்ன முயற்சி எடுத்தாலும், தற்காலிக மன அமைதி

கிடைக்கலாமே தவிர, வேறெந்தப் பலனும் ஏற்படாது.

இதனால்தான், எல்லாம் வல்ல இறைவனிடம் சரணாகதி அடைய வேண்டியதன் அவசியத்தை, உலகின் எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன. ஏனென்றால், தன்னைத் தானே அறிந்து கொண்டு கடவுளையும் அறிய, அதுவொன்றே வழி.

உடலுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியைத் தட்டி எழுப்பிவிட்டால், கடவுளை அறிவதற்கான மெய்யறிவு நெடும்பாதையில் பயணிக்கத் தொடங்கி, இறுதி மோட்சத்தை எட்டிவிட முடியும். சுருங்கச் சொன்னால், குண்டலினி சக்தி விழிப்படைந்து விட்டால், கடவுள் பற்றிய எல்லாவிதமான கருத்துக்களும் அதிரடியாக மாற்றம் கண்டுவிடும். மதங்களுக்கு இடையிலான வித்தியாசம் மனதிலிருந்து அறவே அகன்று விடும்.

இதை எல்லா மதங்களையும் உள்ளடக்கிய மகா மதம், ஐக்கியமதம், யோகா முறை என்றும் சொல்லலாம்.

கடவுள் என்கிற தத்துவம், மனித புத்தியின் புரிதலுக்கு அப்பாற்பட்டது. ஆனால் மனிதன் கண்டு பிடித்த மொழிகளோ, புத்தியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. புத்தியினால் உருவான மொழியை வைத்துக் கொண்டு, புத்தியின் எல்லைக்கு அப்பாற்பட்ட கடவுள் தத்துவத்தை முழுமையாக விவரிக்க இயலாது. எனவே, நமது மதங்கள், தத்துவங்கள், யோகா முறைகள் எல்லாமே, உள்ளுக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியைத் தட்டி எழுப்பும் புள்ளி வரை தான் வெவ்வேறு பாதைகளில் நம்மை இட்டுச் சொல்ல முடியும். அதற்கு அப்பால், கடவுள் என்கிற தத்துவத்தை உணரும் பாதை, எல்லோருக்குமே ஒன்றுதான். இந்தப் புள்ளிக்கு மேல், நமது மனதின் கட்டமைப்பே ஒட்டு மொத்தமாக மாறிவிடும், கடவுள் என்கிற தத்துவம் பற்றிய நமது புரிதலே அதிரடியாக மாறிவிடும் என்பதை உறுதியாகச் சொல்லவிரும்புகிறேன். இதுபற்றி

இன்னொரு அத்தியாயத்தில் விரிவாகப் பேசப்படும். சாதாரண வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், குண்டலினி சக்தியை எழுப்பியவுடன், தனக்கு என்னதான் ஆயிற்று என்பதே சாதகருக்குப் புரியாது. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் இந்த மாற்றங்கள் நிகழ்ந்துவிடும். அதன்பிறகு சாதகரின் தரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கத் தேவையின்றி, கடவுளின் சக்தியே கடவுளை அறியும் பாதையில் அவரை இழுத்துச்செல்லத் தொடங்கிவிடும்.

சித்த மகா யோகத்தைக் கடைபிடிப்பவர்களில், உள்ளுக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தி குருவின் கருணையினால் தூண்டப்படுகிறது. ஏற்கனவே, மெய்யறிவு பெற்றவரான குரு, கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஊடகமாக செயல்பட்டு, மனிதகுலத்திற்கு நன்மை புரிகிறார். மனிதனுக்குள் உறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியை, சக்திபதம் என்கிற முறை மூலம் அவர் தூண்டுகிறார். சக்தி பதம் என்ற வார்த்தைக்கு, ஆற்றல் இறங்குதல் எனப் பொருள். இதைப் பற்றி பிற்பாடு மேலும் விளக்குகிறேன்.

ஆக, சித்த மகா யோகம் என்பது, மற்ற யோகா முறைகளைப் போல அன்றி, தனிப்பட்ட யோகா முறையல்ல. மாறாக, குண்டலினி சக்தியை வெவ்வேறு யுக்திகள் மூலம் தூண்டக்கூடிய பல்வேறு யோகா முறைகள் கடைசியில் எந்தப் பாதையில் போய்ச் சேருகின்றதோ, அந்தப் பாதையின் பெயரே சித்தமகாயோகம்.

எனவே, பல்வேறு சாத்திரங்கள், மதங்கள், தத்துவங்கள், யோகா முறைகள் மற்றும் தாந்திரீக சடங்குகள் மூலம் மனிதகுலம் என்னென்ன நன்மைகளைத் தேடுகிறதோ, அந்த எல்லா நன்மைகளுமே, சித்த மகா யோகத்தை அப்பியாசம் செய்யக்கூடிய சாதகருக்கு ஏற்கனவே கிடைத்து விட்டதாக எடுத்துக் கொள்ளலாம். மகாயோகம் என்ற பெயருக்குக் காரணமே இதுதான்.

ஆனால், குருவின் கருணை மழையினால் மனிதருக்கு கிடைக்கும் இந்த மகாயோகம், கடவுளைப் பற்றிய அறிவைக் கொடுத்துவிடுவதில்லை. குருவானவர் கையாளும் சக்திபதம் என்கிற யுக்தி குண்டலினி சக்தியைத் தூண்டுவதற்கு மட்டுமே உதவும்.

குண்டலினி சக்தி ஒரு முறை தூண்டப்பட்டுவிட்டால், சாதகர் கடவுளை உணரும் பாதையில் பயணிக்கத் தொடங்கிவிடுகிறார். அதன்பிறகு அவர் வழக்கமான வாழ்விற்குத் திரும்புவதேயில்லை. அநேகமாக இந்த நிலையில்தான். முந்தைய பல பிறவிகளைப் பற்றிய ஞாபகங்கள் வருகின்றன. மனிதருக்குள் குண்டலினி சக்தி விழிப்படைவது, மிகமிக அபூர்வமான ஒரு நிகழ்வாகும். உண்மையில், மனித குலத்தின் கடவுள் வழிபாடு முழுவதும் இதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. அனைத்து யோகா முறைகள் மற்றும் தாந்திரீக சடங்குகளின் இறுதி நோக்கமும் இதுவே. குண்டலினி சக்தியை எழுப்ப முடியாவிட்டால், எந்த விதமான மதச்சடங்குகள், வழிபாடுகள் மற்றும் யோகா முறைகளால் எந்தப் பலனும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், குண்டலினி சக்தியை எழுப்பும் அளவிற்கு குரு ஒருவரின் கருணைக்குப் பாத்திரமாகும் தகுதியை, எந்த ஒரு மனிதரும் ஒரே பிறவியில் பெற்றுவிட முடியாது. பலப்பல பிறவிகளில் கடுமையான பல்வேறு முயற்சிகளை எடுத்தால்தான் ஏதோ ஒரு பிறவியில் அத்தகைய தகுதி கிடைக்கும்.

குண்டலினி சக்தி தூண்டப்படுவதால், லோகாயத ரீதியில் பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழ்வதில்லை.

ஆனால், ஆன்மீக ரீதியில் மனிதனுக்கு என்னென்ன தேவையோ, அவை அனைத்தும் குண்டலினி சக்தி விழிப்படையும் போது கிடைத்துவிடுகின்றன. குண்டலினி சக்தி விழிப்புறுகையில், லோகாயத ரீதியில் பல பலன்களும், சக்திகளும் கிடைக்கும் என்ற கருத்து வெறும் நம்பிக்கை

மட்டுமே. மனிதர்கள் கோவிலுக்கோ, வழிபாட்டுத் தலங்களுக்கோ சென்று கடவுளை வணங்கும் போது, லோகாயதமான நன்மைகளை வேண்டுவதே இயல்பு என்பதால்தான், குண்டலினி சக்தியிடமிருந்தும் சாதாரண மனிதர்கள் இதே போன்ற பலன்களை எதிர்பார்க்கிறார்கள், கடவுளை வழிபடும் போது, பொதுவாக மனிதர்கள் ஆன்மீக மேம்பாட்டை பேண்டுவதில்லையே தவிர, கடவுள் மனிதர்களுக்கு அருள்புரிவதாக இருந்தால், ஆன்மீக மேம்பாட்டைத்தான் அருள்கிறாரே தவிர, லோகாயத நன்மைகளை அல்ல. இதை முதலில் அனைவரும் புரிந்து கொண்டால்தான், குண்டலினி சக்தியால் நிகழும் மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

அதே போல, குருவானவர் யாரை வேண்டுமானாலும் சித்தமகா யோகத்திற்குக் கொண்டுவந்து விட முடியாது. ஏனென்றால், குண்டலினி சக்தி எழுப்பப்படும் போது, அதன் வேகத்தைத் தாங்க எல்லோராலும் இயலாது. மேலும் மனம் சரியாகப் பக்குவப்பட்டதாக இருக்கவில்லை என்றால், அது வேலை செய்யாது. சித்த மகாயோகம் என்று ஒன்று இருப்பதையே வரலாற்றின் சில கட்டங்களில் யோகிகள் ரகசியமாக வைத்திருந்ததற்கு இதுவே காரணம். அதாவது வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், கிட்டத்தட்ட 600 ஆண்டுகளுக்கு ஒரு முறை, சித்தமகாயோகம் ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததைப் புரிந்து கொள்ள முடியும். அத்தகைய கால கட்டத்தில், சமுதாயத்தின் பொதுவான மனநிலை, குண்டலினி சக்தியின் வேகத்தைத் தாங்கக் கூடியதாக இல்லை என்பதே இதற்குப் பொருள். சக்திபாத யோகிகள் பொதுவாக இப்படித்தான் கருதுகிறார்கள். குண்டிலினி சக்தியின் வேகத்தைத் தாங்க முடியாத ஒரு சமூகத்தில், எல்லோரும் ஆளுக்கொரு குருவிடம் ஓடி, குண்டலினி சக்தியை எழுப்பச் சொன்னால் என்னவாகும் என்பதை சற்று யோசித்து பாருங்கள்!

ஆனால் என்னைப் பொறுத்தவரை, இது இப்படி இருக்கிறதே

என்பது பற்றி எனக்கு வருத்தம் தான் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன். எதை வேண்டுமானாலும் விரும்பக்கூடிய சுதந்திரம், தன் செயல்கள் மூலம் தலையெழுத்தை மாற்றிக் கொள்ளும் அதிகாரம் மனிதனுக்கு இருப்பதாகச் சொல்லப்படுவது, ஐயகோ, வெறும் மாயத் தோற்றம் போலிருக்கிறதே!

இந்த உலகம், கடவுளின் படைப்பு. கடவுளிடம் சரணாகதி அடைவதைத் தவிர, மோட்சத்திற்கு வேறுவழி இல்லை. கடவுளின் கருணை மட்டுமே மனிதனைக் கடைத்தேற்ற முடியும். இதை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம்.

சேற்றையே சுகமென நினைத்து, சேற்றுக் குழிக்குள் புரண்டு கொண்டிருக்கும் பன்றி, முள்ளோ அல்லது வேறு ஏதாவதோ, குத்தினாலோ அல்லது கடித்தாலோ தவிர, சேற்றிலிருந்து வெளியே வர விரும்பாது.

கிணற்றுத் தவளையை யாராவது தூக்கிக் கடலுக்குள் போடும் வரை, கிணற்றைத்தான் உலகமாக எண்ணிக் கொண்டிருக்கும். அதுபோல, மனிதர்களும், வாழ்க்கை என்ற சேற்றுக்குழி அல்லது கிணற்றுக்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கையில் பெரும் துன்பங்கள் வந்து, கஷ்டங்களை அனுபவிக்காத வரை, வாழ்க்கைக்கு வெளியே என்ன இருக்கிறது என்பதை அறிய நாம் விரும்பமாட்டோம். சரியான குரு ஒருவர் அமைந்து, அவர் நம்மை வாழ்க்கைக்கு வெளியே தூக்கிப் போடும் வரை, வாழ்க்கைக்கு வெளியே என்ற கருத்தையே நாம் புரிந்து கொள்ளமாட்டோம்.

உலக வாழ்க்கைக்கு அப்பால் ஒரு வாழ்க்கை இருக்கிறது. கடவுளை அறிந்து, கடவுளுடன் ஐக்கியமான நிலையில் திளைப்பதே அந்த வாழ்க்கை என்பதை, குண்டலினி சக்தி

நமக்குப் புரியவைக்கிறது. கடவுளும் நாமும் வேறல்ல என்பதைப் புரிந்து கொண்டு, கடவுளுக்குள் கரைந்து வாழும் வாழ்க்கையே நிரந்தரமான சத்தியம். அதற்கு மேல் வேறெந்த சத்தியமும் இல்லை. அந்த சத்தியத்திற்கு நம்மை இட்டுச் செல்வதே குண்டலினி சக்தியின் வேலை.

சித்த மகாயோகம், நவீன விஞ்ஞானத்தாலும், பகுத்தறிவினாலும் விளக்க முடியாதது. சூரியனைப் போலப் பிரகாசித்து, உலக வாழ்விற்கு அப்பாற்பட்ட உண்மைகளை விளக்கவல்லது. மனித குலத்திற்கு மிக அதிகமாகத் தேவைப்படும் அமைதியை, நிம்மதியை அள்ளித் தரக் கூடியது.

சித்தமகா கோயகத்தை கடைபிடிப்பவராக நீங்கள் இருந்தால், உலகம் முழுவதும் நரகத்திற்குப் போனாலும் உங்களுக்குக் கவலையில்லை. ஏனென்றால் நிரந்தர சத்தியத்தைக் கண்டவராக, நிரந்தர ஆனந்தத்தில் திழைப்பவராக, ஓர் நிரந்தர வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். சித்த மகாயோகம் மனித குலத்திற்கு வழங்கும் வாக்குறுதி இது.

இப்படியாக, அனைத்து யோகா முறைகள், தத்துவங்கள், மதங்கள், விஞ்ஞானம் என அனைத்தின் சங்கமமாக சித்தமகா யோகம் திகழ்வது பற்றி விளக்க, என்னால் முடிந்த அளவிற்கு சிறுமுயற்சி எடுத்துள்ளேன்.

புலன்களுக்கு இலக்கான இந்தப் புற உலகிற்கு அப்பாற்பட்டு, மனிதனுக்குள் மறைந்து கிடக்கும் ஆன்மீக உலகின் கதவுகளைத் திறந்து, இது தொடர்பான என்னுடைய சொந்த அனுபவங்களை, உலக நன்மைக்காக விளக்கிச் சொல்வதே என் நோக்கம்.

இதற்காக மிகவும் தாழ்மையுடன் எவ்வித விருப்பு வெறுப்புமின்றி என் மனதைத் திறந்து காட்டியிருக்கிறேன்.

# மகா யோகா முறையின் நான்கு பாதைகள்

நமக்குள் உறைந்துள்ள ஆன்மீக சக்தியை உணர்வதன் மூலம், நம்மை நாமே உணர்வதற்கான, அதாவது, ஆத்ம தரிசனத்திற்கான சித்தமகாயோகம் என்னும் நெடும்பாதையை அடைய, நான்கு பூர்வாங்கப் பாதைகள் இருப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன. இப்பாதைகள், குண்டலினி சக்தி விழிப்படையும் வரையிலான யோக மார்க்கங்களைக் குறிக்கும். இங்கே வாசகர்கள் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். கடவுளை வழிபடுவதற்காக நாம் பின்பற்றச்கூடிய எல்லாமுறைகளுமே (அதாவது பல்வேறு யோக மார்க்கங்கள், தாந்திரீக சடங்குகள் எல்லாமே) முற்றிலும் குண்டலினி சக்தியை எழுப்பும் நோக்கத்திலானவைதான். வேத சாஸ்திர பாஷையின்படி, இத்தகைய எல்லா முயற்சிகளும் மிக அற்பமானவை. கடவுளை அறிவதற்கான நிஜமான முயற்சி, குண்டலினி சக்தியை எழுப்பிய பின்னரே தொடங்குகிறது. ஆனால் இதுவும் அப்படியே எடுத்துக் கொள்ளத்தக்க கருத்து அல்ல. ஏனென்றால் குண்டலினி சக்தி விழித்துக் கொண்டுவிட்டால், சாதகர் தன் முயற்சியில் செய்யத்தகுந்த காரியம் எதுவுமே இல்லை. குண்டலினி சக்தி விழிப்படைந்த பிறகு, செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களையும், அந்த சக்தியே செய்ய ஆரம்பித்து விடுகிறது,

ஆக, குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்வது, ஆத்ம தரிசனத்திற்கான முதல் கட்ட முயற்சியாகும். எனவேதான், இதற்கு முந்தைய முயற்சிகளை பூர்வாங்க முயற்சிகளாகக் கூறுகிறேன்.

இதில் முதலாவது பாதை, கடவுளிடம் முற்றிலுமாக பக்த பூண்டு, முழுவதுமாக சரணம் அடைந்து விடுவதாகும்.

இந்தப் பாதையைக் கடைபிடிக்கும் ஒருவர், தான் செய்யக்கூடிய எல்லாக் காரியங்களையும் கடவுளுக்குப் படைக்கும் படையலாகச் செய்கிறார். இத்தகைய ஒரு மனநிலையில், மனிதனின் மனத்தில் புலன்களால் ஏற்பட்ட பதிவுகள் மிக விரைவாக அழிந்து போகின்றன. இவ்வாறாக, எண்ணங்களற்ற ஒரு நிலையை சாதகர் அடைகிறார். எண்ணங்களற்ற ஒடுங்கிய இந்நிலையை எட்டுவதே அனைத்து யோகா முறைகளின் இறுதி நோக்கமாகும்.

ஆத்ம தரிசனத்திற்கான மிக வேகமான பாதையாக இந்தப் பாதை கருதப்படுகிறது.

இந்தப் பாதையை கடைபிடிக்கும்போது, நமது விதி மிக வேகமாக வெளிப்படத் தொடங்குகின்ற போதிலும், கடவுளின் முழுப் பாதுகாப்பும் கிடைப்பதை வாசகர்கள் மனதில் கொள்ள வேண்டுகிறேன். சரியான பாதையில் இருந்து, பக்தன் வழுவுவதை கடவுள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். பக்தனைக் கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதால், இந்தப் பாதை மிகவும் பாதுகாப்பான பாதையாகக் கருதப்படுகிறது.

ஆத்ம தரிசனத்திற்கு சரணாகதியைப் பயன்படுத்தும் இந்த யுக்தி, எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களுக்கு மிகவும் ஏற்றதாகும்.

அடுத்த பாதை, பாவ-புண்ணியக் கணக்கை இந்தப் பிறவியிலேயே அனுபவித்துத் தீர்த்து விடும் பாதையாகும். பாவ-புண்ணியங்களின் பலன்களை விருப்பு-வெறுப்பின்றி அனுபவித்துத் தீர்பபதன் மூலமாக, மனித மனத்தின் பழைய பதிவுகள் அழிக்கப்படுவதை,

இப்பாதை சாத்தியமாக்குகிறது. இதுபற்றி மேலும் சற்று விளக்குகிறேன்.

புலன்களைப் பயன்படுத்தி நாம் செய்யக்கூடிய ஒவ்வொரு காரியமும், அது பாவமா, புண்ணியமா என்பதைப் பொருத்து, நமது மனதில் சில பதிவுகளை ஏற்படுத்துகிறது. இந்தப் பதிவுகளே நமது எதிர்கால விதியை நிர்ணயிக்கக் கூடிய விதைகளாகும். ஒருமுறை செய்த பாவ-புண்ணியத்தின் பலனை அனுபவிக்கும் போது நாம் எப்படி அதை எதிர்கொள்கிறோம் என்பதைப் பொருத்து, புதிய பதிவுகள் மனதில் உருவாகின்றன. இப்புதிய பதிவுகளே எதிர்கால விதிக்கான புதிய விதைகளாக மாறிப்போவதால், இதுவே முடிவற்ற ஒரு சுழற்சியாகத் தொடர்கிறது. அதே சமயம், நாம் என்ன காரியம் செய்கிறோம் என்பது பற்றிய முடிவு, முற்றிலும் நமது கட்டுப்பாட்டிலுள்ள ஒன்று என்பதை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஒரு காரியத்தை செய்யும் வரை, அதை செய்யலாமா - கூடாதா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் நமக்கு இருக்கிறது. ஆனால் எந்த ஒரு காரியத்தையும் செய்து விட்டோமென்றால், அதன் பலன்கள் மீது நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. பலன் என்னவாக இருக்கும் என்பதை கணிக்கவும்கூட நம்மால் இயலாது. எனவேதான், எந்தக் காரியத்தையும் செய்யும் முன்பாகத் தீர யோசிக்க வேண்டுமென்கிறார்கள். பாவ-புண்ணியத்தால் ஏற்படும் பலன்களை அனுபவிக்கும்போது, நாம் எப்படி எதிர்வினை புரிகிறோம் என்பதற்கும் இது பொருந்தும். இது நம்விதி என நினைத்து, பாவ-புண்ணியத்தின் பலன்களை விருப்பு-வெறுப்பின்றி அனுபவிக்கப் பழகிக் கொண்டால், பாவ-புண்ணியங்களால் மனதில் ஏற்பட்ட பதிவுகள் நீங்கி, பாவ-புண்ணியக் கணக்கு தீரும் ; புதிய பதிவுகளும் ஏற்படாது. விதி எப்படி அமைந்தாலும், அமைதியை இழக்காமல், நடப்பது நாராயணன் செயல் என்றிருந்தால், பாவ-புண்ணியக் கணக்கில் புதிய பதிவுகள் சேருவதைத் தவிர்ப்பது சாத்தியமே.

இந்த இடத்தில், யோக சாதகர்களுக்கு ஒரு சின்ன டிப்ஸ், பாவ-புண்ணியத்தின் பலன்களை அனுபவிக்கும் போது மனதில் புதிதாக ஏற்படும் பதிவுகளை அழிப்பது, ஏற்கனவே உள்ள

பதிவுகளை அழிப்பதைக் காட்டிலும் சுலபமாகும். இது முற்றிலும், விதியை எதிர்கொள்வதில் நாம் எந்த அளவு உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கிறோம் என்பதைப் பொருத்தது. உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதைத் தவிர்த்தால், புதிய பதிவுகளை சுலபமாக அழித்துவிடலாம். உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்தால், புதிய பதிவுகளை அழிப்பது கடினமாகும். அவ்வளவே.

விதியை அனுபவிப்பதில் உணர்ச்சிகளுக்கு இடம் தரக்கூடாது என்று சொல்லிவிட்டோமே தவிர, நடைமுறையில் அது அத்தனை எளிதானதல்ல. எனவேதான், பொதுவாக இப்பாதை கடினமான பாதையாகக் கருதப்படுகிறது. உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதை எப்படியோ தவிர்த்து விட்டாலும் கூட, பாவ-புண்ணியக் கணக்கு முழுவதையும் நாமேதான் அனுபவித்துத் தீர்க்க வேண்டும் என்பதால், இது மிக நீண்ட ஒரு பாதையாகவே அமையும். அதாவது, இந்தப் பாதையில் முன்னேற்றம் மிக மெதுவாகவே ஏற்படும். ஆனால் இந்த முன்னேற்றம் நிரந்தரமானது என்பதையும் மறந்துவிடக்கூடாது. அதே சமயம், இந்தப் பாதையை கடைபிடிக்கும்போது, ஏதேனும் ஒரு காரணத்திற்காக அதிலிருந்து சற்று விலக நேர்ந்தாலும், அதனால் ஏற்பட்ட மனப்பதிவுகளை அழிக்க வேண்டியிருப்பதால், விட்ட பாதையை மீண்டும் பிடிக்க நாளாகும். எப்படியானாலும் நல்லது-கெட்டதை ஒன்றாகப் பார்க்கும் மனப்பக்குவம் உள்ளவர்களுக்கு இதுவே பொருத்தமான பாதை.

மூன்றாவது பாதை, அறிவின் பாதை, அறிவின் பாதை என்பதில் ஒரு சிக்கல் இருக்கிறது. ஏனென்றால், கடவுளின் ஆன்மீக சக்திதான் பிரபஞ்சமாக வடிவெடுத்துள்ளதே தவிர, அவரது அறிவு அல்ல. எனவே ஆன்மீக சக்தியின் மூலம்தான் கடவுளை அறியமுடியுமே தவிர, லோகாயதமான அறிவினால் அது சாத்தியமல்ல. அறிவினால் கடவுளை உணரமுடியாது என்பதை, சாதகர் முதலில் உணர வேண்டும். உலகைப் பற்றிய நமது அறிவு உண்மையில் பயனற்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அதைப் புரிந்து கொள்வதற்தே, முதலில்

## பராசக்தி

உலகைப் பற்றிய அறிவை சேகரித்தல் அவசியமாகிறது. அதாவது, உலகைப் பற்றிய அறிவை சாதகர் முதலில் தேடவேண்டும். அந்த அறிவு பயனற்றது என்பதை அதன் பின்னரே உணரவேண்டும். அறிவைத் தேடும் முயற்சியிலேயே இறங்காமல், அறிவு பயனற்றது என்று தத்துவம் பேசிக் கொண்டிருந்தால், ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவாது.

இதை மேலும் சற்று விளக்குகிறேன். கடவுள் தத்துவத்தை விளக்கக் கூடிய நூல்கள் உலகின் பல மொழிகளிலும் ஏராளமாக உள்ளன. ஆனால் யோகாவின் பார்வையைப் பொருத்தவரை, இந்த எல்லா நூல்களையும் கரைத்துக் குடித்தவனுக்கும், அதைப் பற்றி ஒன்றுமே தெரியாத பாமரனுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. இதற்கான காரணம் மிக எளிமையானது -படித்தவன், பாமரன் ஆகிய இருவருமே கடவுளை நேரடியாக உணர்ந்தவர்கள் அல்ல! கடவுளை உள்ளுக்குள் இருந்துதான் உணரவேண்டுமே தவிர, புற உலக அறிவைப் பற்றிய நூல்களால் அல்ல. தெய்வீக சக்தி மனிதனுக்குள் இருந்துதான் மனிதனுக்குள் பரவுகின்றதே தவிர, வெளியில் இருந்து அல்ல. ஒவ்வொரு மனிதனுக்குள் இந்த சக்தி உறைந்து கிடைக்கிறதே தவிர, புற உலகில் எங்கோ ஓரிடத்தில் அல்ல!

ஆனாலும், கடவுளைப் பற்றிய சாத்திரங்களும் இன்னும் பிற நூல்களும், கடவுளை உணர்வதில் முக்கியப் பங்காற்றவே செய்கின்றன. அதாவது மறைமுகமான பங்கு.

இத்தகைய நூல்களை முறையாகப் பயில்வதன் மூலம், கடவுளைப் பற்றிய புரிதலில் வேண்டாதவற்றைத் தள்ளி, வேண்டியனவற்றைக் கொள்ள முடியும். மாயத் தோற்றமான இந்த உலகம் பொய் என்பதைப் புரிந்து கொள்ள அறிவார்ந்த நூல்கள் உதவுகின்றன. இப்படியாகப் புற உலகம் பொய்யெனத் தள்ளிவிட்டால், மனதில் சிந்திக்க ஏதுமிராது. எண்ணங்களற்ற மனம், பளிங்கு போல் நிஷ்களங்கமாகி, உள்ளுக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தியை பிரதிபலிக்கத் தொடங்கும். அப்போது அந்த சக்தியை நமக்கு நாமே தெளிவாக

உணரமுடியும். கடவுளும் நாமும் ஒன்றேதான் என்பதை, துடைத்து விட்ட கண்ணாடிபோல், நம் மனமே நமக்குக் காட்டத் தொடங்கிவிடும்.

பொதுவாக, அறிவைத் தேடும் வேட்கையுள்ளவர்களுக்கு மிகவும் பொருத்தமான பாதை இதுவாகும்.

இந்தப் பாதையில் செல்லும் ஒருவர், புற உலகைப் பற்றிய அறிவை மேலும் மேலும் சேகரிக்கும் அதே வேளை, மனதிற்குள்ளேயே அத்தகைய அறிவைத் தொடர்ச்சியாக விவாதித்து, சர்வ சத்தியமான கடவுளைப் பற்றிய அறிவு இதுவல்ல என்று தள்ளிக் கொண்டே வரவேண்டும்.

இது மிகவும் கடினமான, அதிகக் காலம் பிடிக்கக்கூடிய ஒரு முயற்சி. சாத்திர நூல்களையும் விஞ்ஞானப் புத்தகங்களையும் பயில்வதன் மூலம், மேலும் மேலும் அறிவை சேகரிக்கும் ஒருவருக்கு, படைப்பைப்பற்றி எல்லாமே புரிந்துவிட்டது போல ஒருமாயத் தோற்றம் ஏற்படவே செய்யும். ஆனாலும் இதனால் ஏற்படும் கர்வத்தைப் புறந்தள்ளி, தொடர்ந்து இதே முயற்சியில் ஈடுபட்டுவந்தால், நிறைந்த பாத்திரத்தில் இருந்து நீர் வழிந்தோடுவது போல, இதுவரை நாம் சேகரித்த அறிவு எல்லாமே வீண் என்பது ஒரு கட்டத்தில் புரியும். அந்தக் கட்டத்தில், சாதகர் தன் அறிவைப் பற்றிய கர்வத்தை முற்றிலுமாக இழந்து, கடவுளுக்கு முன் தான் மிகவும் தாழ்மையானவர் என்பதை உணர்வார் !

நான்காவது பாதை, உள்ளுக்குள் மனதைக் கட்டுப்படுத்தும் பாதையாகும். இது அடிப்படையில் தியானம் மூலமாக மனதைக் கட்டுப்படுத்துவதைக் குறிக்கிறது.

இந்தப்பாதையில், சில யுக்திகள் மூலம், மனம் எண்ணங்களற்ற நிலைக்கு இட்டுச் செல்லப்படுகிறது. ஒரு பிம்பம், சப்தம் அல்லது ஏதோ ஒன்றின் மீது கவனத்தைக் குவிப்பதன் மூலம், இதை சாத்தியமாக்கலாம். எண்ணங்களை சிதறவிடாமல், இப்படி ஒரே விஷயத்தின் மீது குவிக்கும் அப்பியாசத்தில் தொடர்ந்து ஈடுபட்டால், ஒரு கட்டத்தில் மனம் காலியாகி, எண்ணங்களோ,

## பராசக்தி

உணர்ச்சிகளோ இல்லாத நிலைக்கு, எண்ணங்கள் அல்லது உணர்ச்சிகளால் பாதிக்கப்படாத நிலைக்குச் சென்று விட முடியும். அந்த நிலை வந்துவிட்டால், அதன்பிறகு மனதை தொடர்ந்து அமைதியாக வைத்திருக்க தியானமோ, வேறெந்த முயற்சிகளோ தேவையில்லை.

பொதுவாக அறிவியல் மனப்பான்மை உள்ளவர்களுக்கு இம்முறை மிகவும் பொருத்தமானது. இத்தகைய மனிதர்கள், கடவுள்தன்மை உட்பட எதையும், பரிசோதனை மூலம் நிரூபித்தபின்னரே ஏற்றுக்கொள்வார்கள். கடவுளை முற்றிலுமாக உணரும் முயற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், இந்த முயற்சி சரிதான் என்பதற்கு, அவர்களுக்கு நிரூபணம் தேவை. தியானத்தினால் கிடைக்கும் நிஷ்சலனமான மனம், இத்தகைய நிரூபணமாக அமையும்தான் என்றாலும், குருவின் நேரடி மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபடுவது பொதுவாகவே ஆபத்தானது. குருவின் மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபட்டு, ஒருவேளை அதில் வெற்றியும் பெற்றால், குண்டலினி சக்தி கட்டுப்பாடற்ற முறையில் திடீரெனத் தூண்டப்படும். அதன் ஆற்றலைத் தாங்கும் நிலையில் சாதகர் இல்லாவிட்டால், அவரது உடலுக்கும், மனதுக்கும் ஏற்படக்கூடிய சேதத்தை பிற்பாடு சரிசெய்யவே முடியாது.

எனவே, குருவின் நேரடி மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபட்டு வருவோர், மேற்கண்ட பத்தியை மீண்டும் ஒருமுறை படித்துப் பார்க்க வேண்டுகிறேன். தயவு செய்து குருவின் மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இடத்தில், பிரபஞ்ச சக்தியுடன் எனக்கு ஏற்பட்ட மயிர்க்கூச்செரியும் அனுபவம் ஒன்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். யோகா முறைகள் மற்றும் குண்டலினி சக்தியின் எழுப்புதலுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றாலும், குருவின் நேரடி மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபடக்கூடாது

என்பதை மேலும் வலியுறுத்தவே இந்த அனுபவத்தைச் சொல்கிறேன். உண்மையில் பிரபஞ்ச சக்திக்கும் இந்த அனுபவத்திற்கும் கூட சம்பந்தம் கிடையாது. சூஷ்ம வடிவிலான பிரபஞ்ச சக்தியின் சற்றே ஸ்தூல வடிவமான மனிதனுக்குள் உறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியுடன் சம்பந்தப்பட்டது இந்த அனுபவம் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சித்த மகாயோகத்தில் என்னுடைய ஈடுபாடு தொடங்கயிராத காலத்தில், இந்த அற்புதமான அனுபவம் எனக்கு ஏற்பட்டது.

ஹைதராபாத்தில் ரேக்கி என்னும் கிழக்கத்திய பிராணசிகிச்சை முறையைக் கையாளும் பெண் ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டு, அதில் நானும் ஈடுபட விரும்பி, அவரை சந்திக்க நேரம் கேட்டேன். நேரம் ஒதுக்கப்பட்டதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட நேரத்தில் அவரை சந்திக்க, அவரது வீட்டிற்குச் சென்றேன்.

அங்கே என்னை ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று நாற்காலி ஒன்றில் அமர்த்தி, கண்களை மூடிக்கொள்ளச் சொன்னார்கள். ரேக்கி குருவான அந்தப் பெண், எனக்கு சில அடிகள் முன்பாக தியானக் கோலத்தில் அமர்ந்திருந்தார்.

அவரது உதவியாளர் ஒருவர், எங்கள் இருவருக்கும் இடையில் நின்று கொண்டு, என் உச்சந்தலையில் கை வைத்தார். அவர் அவ்வாறு செய்யும்போது, ரேக்கி குருவிடமிருந்து பிராணசக்தி என்னுள் பாயும் என்று எனக்கு ஏற்கனவே சொல்லப்பட்டிருந்ததால், நானும் அத்தகைய உணர்வை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். ஆனால் பிராணசக்தி என்னுள் பாய்வது போன்ற உணர்ச்சியெதுவும் எனக்கு உண்டாகவேயில்லை. அமர்வு முடிந்தபின்னர், அத்தகைய உணர்வு எனக்கு ஏற்பட்டதா என்று என்னிடம் கேட்கப்பட்டபோது, நான் அதையே பதிலாகச் சொன்னேன். இதை வைத்து ரேக்கி பிராணசிகிச்சை பற்றி உடனடியாக எந்த முடிவுக்கும் வரவேண்டாம் என்றும், மீண்டும் ஒருமுறை முயற்வதற்காக 4 நாள் கழித்துத் திரும்ப வருமாறும் எனக்கு அறிவுறுத்தப்பட்டது.

இது நடந்த இரண்டு தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் இரவு, நான் படுக்கையில் சாய்ந்தபடி புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென என் உச்சந்தலையில் கிர்ரென ஏதோ சுழல்வது போல் ஓர் உணர்வு ஏற்பட்டது. அதற்குமேல் புத்தகத்தில் கவனம் செலுத்த முடியாததால், தலையில் ஏற்பட்ட உணர்வை மனதுக்குள் கவனிக்க ஆரம்பித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அந்த உணர்வு தீவிரமடைந்து, தலைவழியே என் உடம்புக்குள் பரவத் தொடங்கியது. உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிய அந்த உணர்வு கொஞ்சநேரத்திலேயே, கை-கால் விரல்கள் வழியாக, வெளியே, காற்றுக்குள் வழிய ஆரம்பித்ததையும் நான் நன்றாக உணர்ந்தேன். அடுத்த சில நிமிடங்களில் இந்த உணர்வு இன்னும் தீவிரமடைந்து, என் மண்டைக்குள் குடைய ஆரம்பத்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தக் குடைச்சல் தாங்க முடியாத அளவிற்கு அதிகரித்தது. என்ன செய்வது என்றே புரியவில்லை என்றாலும், நான் ஒருவாறு சமாளித்து எழுந்து உட்கார்ந்தேன். படுத்திருந்த வரை பாடாய்ப்படுத்திய அந்த உணர்வு, எழுந்து அமர்ந்த கணத்திலிருந்து படிப்படியாக குறைய ஆரம்பித்தது. ஆனாலும் உடம்புக்குள் ஏதோ ஒரு ஆற்றல் இறங்கிவிட்டதன் தாக்கம் நீடிக்கவே செய்ததால், அன்று இரவு முழுவதும் என்னால் தூங்க முடியவில்லை.

மறுநாள் காலை எழுந்தபோதும் ஒரு மாதிரியாகவே இருந்தபோதிலும், பகல் முழுவதும எப்படியோ சமாளித்தேன். மாலையில் சற்றுக் காலார நடந்து வரலாம் என்று வெளியே போனபோது, இன்னொரு பயங்கரம் காத்திருந்தது. அது போக்குவரத்து நெரிசல் மிகுந்த, பிரதான கடைவீதி. அங்கே நடந்து கொண்டிருக்கும் போதே திடீரென எனக்குத் தலை சுற்றி கண்கள் இருண்டுவிட்டன. ஒரு கணம் எதிரில் நடப்பது எதுவுமே தெரியாமல் திக்குமுக்காடிப் போனேன். நல்ல வேளையாக இந்த இருட்டடிப்பு சில வினாடிகள் மட்டுமே நீடித்தது. அதன்பிறகு இயல்பு நிலை சற்றுத் திரும்பி விட்ட போதிலும், மேற்கொண்டு வெளியில் இருக்க தைரியம் வராததால், உடனடியாக அறைக்குத்

திரும்பினேன். வழியெங்கும் மீண்டும் அதே மாதிரி வந்து விடுமோ என்ற பயம் எனக்குள் இருக்கவே செய்தது. அப்படி எதுவும் நடக்கவில்லையே தவிர, இந்த சம்பவத்தின் தாக்கம் இரவு முழுவதும் நீடித்ததால், அன்று இரவிலும் நான் சரியாகத் தூங்கவில்லை.

மறுநாள் காலை, ரேக்கி குருவை பார்க்க வேண்டிய நாள். இன்று அவரைப் பார்க்காமல் இருந்துவிடக்கூடாது என்ற எண்ணத்துடன் மீண்டும் அவரது வீட்டிற்குப் போனேன். நடந்ததை அவரிடம் எடுத்துச் சொன்னவுடன் அதற்கு அவர் கூறிய விளக்கம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

அதாவது, முதல் நாள் நான் அவரை பார்க்கச் சென்றபோது பிராண சக்தியை என்மீது பாய்ச்ச அவர் மேற்கொண்ட முயற்சி ஏதோ காரணத்தால் பலிக்கவில்லை. இப்படி தர்ம சங்கடம் ஆகிவிட்டதே என்று அவர் மிகவும் கவலைப்பட்டு, தான் உபாசிக்கும் தெய்வத்தின் காலில் விழுந்து கதறியிருக்கிறார். அதன் பிறகு நான் அவர் முன் இல்லாத நிலையிலும், தொலைதூரத்தில் இருந்து என்மீது பிராண சக்தியைப் பாய்ச்ச அவர் மீண்டும் முயற்சி எடுத்ததன் விளைவே, எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்.

தந்திரோபாய ரீதியில் இது சாத்தியம்தான் என்பதை நான் ஏற்கனவே படித்திருக்கிறேன். ஆனாலும் இரண்டு நாட்களாக நான் நேரடியாக அதைத்தான் அனுபவித்தேன் என்பதை உணரும் போது எனக்கு மெய்சிலிர்ப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் பற்றியும் அதன் உடனடி விளைவுகள் பற்றியும் நான் மேற்கொண்டு எதுவும் சொல்லப்போவதில்லை.

ஆனால் இந்த சம்பவம் நடந்து பல ஆண்டுகள் வரை, என் உடல் ஏதோ குப்பைத் தொட்டிபோல் ஆகிவிட்டது. உடலுக்குள் எந்தக் காரணமுமின்றி ஏதோ ஒரு ஆற்றல் மூலைக்கு மூலை ஓடுபோன்ற ஒரு உணர்ச்சி அடிக்கடி ஏற்பட்டது. மனநிலைக்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகவும் தெரியவில்லை. சில

சமயங்களில் இந்த உணர்வு மிகவும் எரிச்சலூட்டுவதாய் இருந்தது. அதைவிடக் கொடுமை, இந்த உணர்ச்சியிலிருந்து எப்படி விடுபடுவது என்பது பற்றிக் கொஞ்சமும் தெரியவில்லை. இதைப்பற்றி பேசவும் ஆளில்லை. பேசினாலும் நம்புவார்களா என்று தெரியவில்லை. இப்படியாக, இனம்புரியாத ஒரு சங்கடத்துடன் நான் பல ஆண்டுகள் வாழ நேரிட்டது, அதாவது சித்தயோகம் எனக்கு அறிமுகமாகும் வரை.

சித்தமகாயோகத்தால் இந்த உணர்ச்சி எப்படி நீங்கியது என்பதைப் பிற்பாடு பார்க்கலாம். ஆனால் இப்போதைக்கு நான் சொல்ல வருவது என்னவென்றால், பேரண்ட சக்தியின் ஆற்றல், கட்டுப்பாடற்ற விதத்தில் நம் உடலுக்குள் செயல்பட ஆரம்பித்தால் அதைத் தாங்குவது மிகக் கடினம். குருவின் நேரடி மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபட்டால், இந்த ஆற்றல் கட்டுப்பாடற்ற விதத்தில் தூண்டப்பட நேரலாம். எனவே குருவின் நேரடி மேற்பார்வையின்றி தியானத்தில் ஈடுபட வேண்டாம் என வாசகர்களை எச்சரிக்கவே இந்த சம்பவத்தை விவரித்துள்ளேன்.

பேரண்ட சக்தியைத் தூண்டும் முன்பாக, தேவையான குன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முழுமையாக எடுக்க வேண்டியது அவசியம். குருவின் நேரடி மேற்பார்வை இருந்தால் மட்டுமே, இத்தகைய முன்னெச்சரிக்கை சாத்தியமாகும்.

அதே சமயம், வாசகர்களை பயமுறுத்துவது என் நோக்கமல்ல. ஏனென்றால், கட்டுப்பாடற்ற விதத்தில் தூண்டப்பட்டால் பயங்கர விளைவு ஏற்படுத்தக் கூடிய அதே சக்திதான், முறையான விதத்தில் தூண்டப்படும்போது ஆத்மதர்சனம் என்னும் உன்னத இலக்கிற்கு வழி வகுக்கிறது. எனவே குருவின் முறையான வழிகாட்டுதலுடன் தியானத்தில் ஈடுபடுவதில் எந்தத் தவறும் இல்லை.

இப்போது சித்தமகாயோகம் என்னும் ராஜபாட்டையை சென்றடைவதற்கான நான்கு பூர்வாங்கப் பாதைகளைப் பற்றிய விவாதங்களுக்கு மீண்டும் திரும்புவோம்.

நாம் விளக்கிய இந்த நான்கு பாதைகளில் எந்த ஒரு பாதையை ஒருவர் தேர்ந்தெடுத்தாலும், ஏதோ ஒரு கட்டத்தில் குண்டலினி சக்தி தூண்டப்படும். பேரண்ட சக்தி, கடவுளின் ஆன்மீக சக்தி, உள்ளுக்குள் உறைந்திருக்கும் சக்தி எனப் பல்வேறு விதங்களில் நாம் குறிப்பிடும் சக்தி, இதே குண்டலினி சக்திதான்.

குண்டலினி சக்தியைத் தூண்டப் பல முறைகள் உள்ள போதிலும், குண்டலினி சக்தி தூண்டப்படும் புள்ளியில் இருந்து, இந்த எல்லாப் பாதைகளும் ஒரே பாதையாக ஐக்கியமாகி விடுகின்றன. அதன் பின்னர் ஆத்ம தரிசனத்தை நோக்கி நாம் பயணிக்கும் இந்தப் பாதைதான் சித்தமகாயோகம் என்னும் நெடும் பாதையாகும்.

அதாவது, யோக சாதனையின் ஆரம்ப கட்டத்தில்தான் குண்டலினி சக்தியை தூண்டும் நோக்கத்திற்காக, வெவ்வேறு யோக முறைகள் தேவைப்படுகின்றன. வெவ்வேறு மனிதர்களின் இயல்பு வெவ்வேறாக இருப்பதே இதற்குக் காரணம். அவரவர் இயல்புக்கு ஏற்ற யோகமுறை ஒன்றைத் தேர்ந்தெடுத்து, குண்டலினி சக்தியை எழுப்பிவிட்டால், அதன் பின்னர் ஆத்ம தரிசனத்தை நோக்கி சாதகரை அழைத்துச் செல்லும்பொறுப்பை குண்டலினி சக்தியே ஏற்றுக் கொண்டுவிடுவதால், குண்டலினி சக்தி நம்மை அழைத்துச் செல்லும் பாதை அனைவருக்கும் ஒன்றே. உள்நோக்கிய இந்தப் பாதையில் பயணித்து, இறுதியில் ஆத்ம தரிசனம் என்னும் இலக்கை நாம் எட்டுகிறோம். நம்மை நாமே அறிதல், கடவுளும் நாமும் ஒன்றே என்பதை உணர்தல், மெய்யறிவு அடைதல், மோட்சம் எனப் பல பெயர்களில் குறிப்பிடப்படுவதும் இதுவே. முன்பின் அறியாப் புதிரான இப்பாதையில் நாம் பயணிக்கும்போது நமக்கு என்ன நிகழ்கிறது என்பதை பற்றியே இப்புத்தகம் முழுவதும் பேசப்படுகிறது.

# குண்டலினி சக்தி

குண்டலினி சக்தி பற்றி உலகம் முழுவதிலும் பலப்பல மொழிகளில் எத்தனையோ புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. உண்மையில் குண்டலினி சக்திக்கு ஓராயிரம் பெயர்கள் இருப்பதாக சமஸ்கிருத நூல்கள் கூறுகின்றன. எனவே குண்டலினி என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு என்ன பொருள் என்பது பற்றிய பண்டிதத் தனமாக விளக்கத்தில் நான் ஈடுபடப்போவதில்லை. மாறாக, குண்டலினி சக்தி என்றால் என்பது பற்றி நம்முடைய தேவைக்கு நாம் எதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையே இங்கு விளக்கப் போகிறேன்.

வார்த்தைக்கு வார்த்தை பொருள் சொல்வதாக இருந்தால், குண்டலினி சக்தி என்பதற்கு, சுருண்டு கிடக்கும் சக்தி எனப் பொருளாகும். பாம்புபோல் சுருண்டு கிடக்கும் சக்தி என்று சொன்னால் இன்னும் நன்றாகப் பொருள் விளங்கும். பாம்புபோல் சுருண்டு கிடக்கும் இந்த சக்தியைத்தான் பல்வேறு முறைகளால் சீறிப் பாய வைக்கிறோம். (அதாவது கட்டுப்பாடான ஒரு விதத்தில்) என்று சொன்னால், சுருண்டு கிடக்கும் சக்தி என்பதற்காக பெயர்க் காரணம் புரிந்து விடும்.

சிருஷ்டிக்குப் பின்னர் தன்னை நேரடியாக வெளிப்படுத்திக் கொள்ளாமல் சுருண்டு கிடக்கும் இந்த சக்தியே, சிருஷ்டிக்குக்

காரணமான அடிப்படை சக்தியாகும் சிருஷ்டியின் போது பிரபஞ்சமாகவும் மனிதகுலம் உள்ளிட்ட ஜீவராசிகளாகவும் வடிவெடுப்பதும், இந்த சக்தியே. இன்னொரு விதமாகச் சொல்வதானால், இந்த ஆதி சக்தியின் புறவடிவமே பிரபஞ்சம்.

அதே சமயம், பிரபஞ்சம் எவ்வளவு பெரியது, அதாவது அதன் விஸ்தீரணம் என்ன என்பது குறித்து நவீன வீஞ்ஞானம் வெளியிடும் கணக்குகளின் அடிப்படையில், ஆதிசக்தியின் வீரியத்தைத் தீர்மானித்து விட முடியாது என்பதை வாசகர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

ஏனென்றால் ஆதிசக்தியென்பது, சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாத, மிகப் புதிரான சக்தியாகும்.

அதன் அளவு, பரிமாணம் பற்றியெல்லாம் நாம் பேசவே இயலாது. அளவு, பரிமாணம் பற்றிய நம்முடைய கணக்குகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது, இந்த சக்தி.

தானாகவே பார்த்து, தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலன்றி, இந்த சக்தியின் தன்மையை யாரும் புரிந்து கொள்ள முடியாது. கடும் யோக சாதனை புரிந்து, மிக முன்னேறிய ஆன்மீக நிலையிலுள்ள யோகிகளுக்கு மட்டுமே, இந்த சக்தி தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

பிரபஞ்சத்தில் எல்லாவிற்கும் மேம்பட்டது இந்த அதியுன்னத சக்தியே. உண்மையில், கடவுளுக்கும் இந்த சக்திக்கும் எந்த வேறுபாடும் இல்லை. கடவுள்தான் இந்த சக்தியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார். இவ்வளவு சொன்னபிறகும், குண்டலினி சக்தியின் அபாரத் தன்மை புரியவில்லை என்றால், நவயுக இளைஞர்களின் பாஷையில், இதை சூப்பர் ஸ்மார்ட் சக்தி என்று சொல்லிப் பார்த்தால் புரியும் என நினைக்கிறேன்.

அதே சமயம், நவீன அறிவியல் பயின்றவர்கள், ஆற்றல்-விசை என அறிவியல் குறிப்பிடும் கருத்துக்களையும், நாம் குறிப்பிடும்

குண்டலினி சக்தியையும் ஒன்றாக நினைத்துக் குழம்பிக் கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். அறிவியல் ரீதியிலான ஆற்றலும் விசையும், அதிசூஷ்ம நிலையிலுள்ள குண்டலினி சக்தியின் ஸ்தூல வடிவங்களே தவிர, இரண்டும் ஒன்றல்ல. அதன் தேவை வேறு; இதன் தேவை வேறு. இதைப் புரிந்து கொண்டால் துன், இந்தப் புத்தகத்தை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

அதிசூஷ்ம நிலையில் உள்ள ஆதிசக்தி, படிப்படியாக எவ்வாறு பௌதீக சக்தியாக வடிவெடுக்கிறது என்பது மிகவும் சிக்கலான ஒரு விஷயம். ஸ்தூலமான பௌதீக சக்தி ஸ்தூலமான பருப்பொருட்களை இயக்க வல்லதே தவிர, சூஷ்மமான ஆதிசக்திதான் எல்லாவற்றுக்கும் மேம்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். உயிரற்ற பௌதீக சக்தியைப் போலன்றி, ஆன்மீக சக்தி உயிருள்ள ஜீவனைப் போன்றது. தனிப்பட்ட மனிதர்களுக்கு உள்ளதைப் போல, இந்த சக்திக்கும் தன்னுணர்வு உண்டு. சாதாரண மனித புத்திக்கு பல மடங்கு மேம்பட்ட அதியுன்னத புத்தியுள்ள இந்த சக்தி, எல்லாவற்றையும் அறிந்ததாகும். கால தேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்ட எல்லா ஞானமும், சர்வ வல்லமை கொண்ட இந்த சக்திக்கு உண்டு.

இந்த அதியற்புத சக்திக்கு இரண்டு முக்கிய குணங்கள் இருப்பதாக யோக சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. ஒன்று நிலைத்த குணம். மற்றொன்று இயங்கு குணம். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட, ஒரு போதும் மாறாமல் என்றும் நிலைத்திருக்கும் சக்தி என்று முதலாவது குணத்தையும், சதா மாறிக் கொண்டிருக்கும் இந்தப் பிரபஞ்சமாக வெளிப்படுவதும் இதே சக்திதான் என்று இரண்டாவது குணத்தையும் விளக்கலாம். ஆனால் இவ்விரு குணங்களும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான் என்பதால், இரண்டுமே அடிப்படையில் ஒன்றுதான். இந்த ஒரே சக்தி, தன் இயல்பைத் தானாகவேதான் சாதகருக்கு வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். சாதகர், யோக அப்பியாசத்தின் முன்னேறிய நிலையுள்ள யோகியாக இருந்தால்

மட்டுமே, இது சாத்தியம். அதாவது, மனமானது, மனதை, மனதால் கண்டுணரும் போது மட்டுமே, கடவுளின் இயல்பை உணர முடியும்.

கடவுளின் இந்த அதியுன்னத சக்தியை, யோகசாஸ்திர நூல்கள் பராசக்தியென்றும வர்ணிக்கின்றன. இந்த சக்தி பிரபஞ்சமாக வடிவெடுப்பதிலும் இரண்டு நிலைகள் உண்டு.

அதாவது, எல்லோருக்கும் பொதுவாகக் காட்சியளிக்கும் பிரபஞ்சம், ஒருநிலை. தனிப்பட்ட மனிதர்கள் பிரபஞ்சத்தைப் எப்படி புரிந்துகொள்கிறார்களோ, அந்தப் பிரபஞ்சம், இன்னொருநிலை எல்லோருக்கும் பொதுவாகக் காட்சியளிப்பது ஒரே பிரபஞ்சம் போலத் தோன்றுகின்ற போதிலும், தனிப்பட்ட மனிதர்களின் மனதிற்குள் தனித்தனிப் பிரபஞ்சம் உள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இந்த இருநிலைகளில் உள்ள பிரபஞ்சங்களும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து கிடப்பதால், இருப்பது ஒரே பிரபஞ்சமே என்பது போலவும், தனித்தனி மனிதர்களுக்கு தனித்தனிப் பிரபஞ்சங்கள் இல்லை என்பது போலவும், நாம் தவறாக உணர்கிறோம். இதை மேலும் சற்று விளக்குகிறேன்.

தனிப்பட்ட அளவில் நிஜம் என நாம் உணரக் கூடியது, ஐம்புலன்களால் ஏற்பட்ட மனப்பதிவுகளில் அடிப்படையிலான நிஜம் மட்டுமே. இந்த நிஜம், ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமாக வேறுபடும். அதே சமயம், எல்லோருக்கும் பொதுவாக நாம் அனைவரும் உணரக் கூடிய புற உலகமும் நிஜம் போலவே தென்படுகிறது. இந்த புற உலகையும் நாம் நிஜமென நம்புவதற்கு, தனிப்பட்ட மனிதர்களின் மனதிற்குள் படிந்திருக்கும் உலகங்கள் தனித்தனியே பிரித்தறிய முடியாதபடி ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்திருப்பதே காரணம். அதாவது, தனிப்பட்ட உலகங்களின் பின்னிப் பிணைந்த ஒட்டு மொத்த வடிவமே, புற உலகம். இதனால் தான் புற உலகம் ஒன்றுபோலவே தோன்றினாலும், இந்த உலகைப் பற்றிய நம்முடைய அனுபவங்கள் ஒருவொருக்கொருவர் வித்தியாசமாக

உள்ளன. அதாவது, ஒருவருக்கு சரியெனப் படுவது, இன்னொருவருக்கு தவறாகப் படுவதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். வாசகர்கள் இதை நன்கு புரிந்து கொள்ள வேண்டுகிறேன். இந்த உலகமே ஒரு மாயத் தோற்றம்தான் என்பதை நன்கு புரிந்து கொண்டால் மட்டுமே, இந்தப் புத்தகத்தை புரிந்து கொள்ள முடியும்.

நிஜம் போலத் தென்படக்கூடிய இந்த உலகம் என்ற மாயத் தோற்றத்தினால், நாம் எப்படி பாதிக்கப் படுகிறோம் என்பதை இப்போது பார்க்கலாம்.

இந்த உலகம் என்னும் மாயத் தோற்றத்தைப் படைத்தது எந்த சக்தியோ, அதாவது உலகம் என்ற மாயத்தோற்றமாக வடிவெடுத்தது எந்த சக்தியோ அந்த ஆதி பராசக்திதான், உலகத்தை நிஜம் போல நமக்குக் காட்டுகிறது.

அதே சமயம், நாம் ஆழ்ந்து உறங்கும் போது, இந்த மாய உலகம் நம் மனதிலிருந்து மறைந்து, விழிக்கும் போது மீண்டும் தோற்றத்திற்கு வருகிறது. தனிப்பட்ட மனிதர்கள் நிலையில், தூக்கத்தின் போது உலகம் சம்ஹாரம் செய்யப்பட்டு, விழித்தவுடன் மறுசிருஷ்டி செய்யப்படுவதாகவே இதைக் கருத வேண்டும். அதே சமயம், ஒட்டுமொத்த மனிதர்களையும் உள்ளடக்கிய இந்த பிரபஞ்சத்தை ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் கடவுள் சம்ஹாரம் செய்து, அடுத்த யுகத்தின் ஆரம்பத்தில் மறுசிருஷ்டி செய்கிறார். இதைத்தான் பிரளயம், ஊழிக்காலம் என்றெல்லாம் அழைக்கிறோம்.

இதை இன்னும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

அதாவது, புற உலகம் என்பது, மனதிற்கு உள்ளேயிருக்கிற அக உலகின் பிம்பமே. எனவே அன்றாட வாழ்வில் இந்த உலகைப்பற்றி நமக்கு ஏற்படக்கூடிய எல்லா அனுபவங்களும், ஐம்புலன்களின் செயல்பாடுகளால் நம் மனதில் ஏற்கனவே உருவாகியுள்ள பதிவுகளைப் பொருத்ததாகவே அமைகின்றன. இந்தப் பதிவுகள், இந்தப் பிறவியில் ஏற்பட்ட பதிவுகளாக

மட்டுமே இருக்கத் தேவையில்லை. இதற்கு முன்னர் நாம் எடுத்த பலப்பல பிறவிகளின் ஐம்புலன்களின் செயல்பாடுகளால் நமது மனதில் ஏற்பட்ட பதிவுகளும்கூட, இந்தப் பிறவியிலும் நீடிக்கவே செய்கின்றன. கடும் யோக சாதனைகள் மூலம் ஆத்மதரிசனம் அல்லது மோட்சத்தை எட்டும் வரை, இந்தப் பதிவுகளை அழிக்க முடியாது. இத்தகைய மனப்பதிவுகளுக்கு ஏற்றபடி நிஜம் என்பது வேறுபடுவதால் தான், தனிப்பட்ட மனிதர்களின் உலக அனுபவங்கள் வெவ்வேறாக அமைகின்றன.

அன்றாட வாழ்க்கையில் நாம் எத்தனையோ மனிதர்களை சந்திக்கிறோம். ஒருவருக்கொருவர் வேறுபட்ட இந்த எல்லா மனிதர்களுமே, நமது புற உலகை நாம் காண்பதற்கான ஊடகங்களே தவிர, இந்த மனிதர்கள் எவரும் நம்முடைய புற உலகை மாற்றிவிட இயலாது. அதாவது, அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் மனிதர்கள் மற்றும் நமக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலைகளுக்கு நாம் எப்படி எதிர்வினை புரிகிறோம் என்பதை வேண்டுமானால் (ஒருவிதத்தில்) நிஜமென்று சொல்லலாமே தவிர, இந்த மனிதர்களோ சூழ்நிலைகளோ நிஜமல்ல. அதாவது சமயம் நம்முடைய அனுபவங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய நம்முடைய எதிர்வினைகள் எதைப் பொறுத்து அமைகின்றன வென்றால், நம்முடைய சொந்த மனப்பதிவுகளைப் பொறுத்தே அமைகின்றன. எனவே, இந்த உலகில் எவரும் தன் இன்ப-துன்பங்களுக்கு மற்றவர்களைக் குறை சொல்ல முடியாது. ஏனென்றால், நமக்கு ஏற்படும் நன்மை-தீமைகளுக்கு முழுக்க முழுக்க நாம்தான் காரணமே தவிர, மற்றவர்கள் அல்ல. இந்தக் கசப்பான உண்மையை அனைவரும் ஏற்கத்தான் வேண்டும். கடவுள் படைத்த விதிகளின்படி, உள்ளபடியே யாரும் யாருக்கும் உதவவும் முடியாது, யாருக்கும் யாருடைய உதவியும் தேவையுமில்லை. (கடவுளை உணர்ந்த குருமார்கள், தகுதியுள்ள வேறு ஒருவரை தூண்டும் உதவி மட்டுமே இதற்கு விதிவிலக்கு)

புற உலகமென்பது வெறும் மாயததோற்றம் மட்டுமே என்பதை வாசகர்கள் இப்போது எளிதில் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். நமது புலன்களுக்கு நிஜம் போலத் தெரிகிற இந்த

உலகம், உண்மையில் நிஜமல்ல, உலகம் என்பது நம் மனதிற்குள்தான் இருக்கிறது. மனதிற்கு உள்ளே இருக்கிற உலகின் பிம்பத்தையே, மனமும் ஐம்புலன்களும் இணைந்து, முடிவெற்ற அண்டவெளி என்னும் திரை மீது திரையிட்டுக் காட்டுகின்றன. இந்த மாயபிம்பத்தையே நாம் நிஜவுலகமென நம்புகிறோம். எனவே நம்முடைய மனதிற்குள் என்ன இருக்கிறதோ அதற்கு ஏற்பவே, புற உலகைப் பற்றிய நமது பார்வை அமைகிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனி உலகம் உண்டு என்று சொல்வதன் பொருள் இதுவே.

தனிப்பட்ட மனிதர்களின் இந்த உலகம், நாம் கனவு நிலைக்குச் செல்லும் போது அழிந்து போய், புதிய உலகம் உருவாகிறது. கனவு நீடிக்கும் வரை கனவுலகம் நிஜம்போலவே உணரப்படுகிறது. புறவுலகம், கனவுலகம் இரண்டையுமே நாம் நிஜம்போல் உணர்வதில் எந்த வேறுபாடும் இல்லை. ஆனாலும், கனவு நிலையில் இருந்து விழித்தவுடன், கனவுலகம் பொய் என்பது போலவும், புற உலகம்தான் மெய் என்றும் நாம் கருதத் தொடங்கி விடுகிறோம். அதே சமயம் கனவு நிலையின்றி, ஆழ்ந்த உறக்கத்தில் நாம் இருக்கும்போது, விழிப்புநிலை, கனவு நிலை ஆகிய இரண்டு நிலைகளின் உலகங்களும் முற்றிலுமாக மறைந்து போகின்றன. இத்தகைய ஆழ்ந்த உறக்க நிலையில், நம்மைப் பற்றிய நினைப்பே நமக்கு இருப்பதில்லை. அதாவது, நான் என்கிற தன்னுணர்வும் கரைந்துபோய் விடுகிறது. நான் என்கிற உணர்வு இல்லாததால், கனவுலகம்-நனவுலகம் இப்படி எதைப் பற்றிய உணர்வும் நமக்கு இருப்பது இல்லை. நான் என்கிற உணர்வு இல்லாத இந்த ஆழ்நிலை உறக்கத்தில், நாமும் கடவுளும் வெவ்வேறு அல்ல.

ஆழ்நிலை உறக்கம் கலைந்து, நாம் விழிப்பு நிலைக்கு மீண்டும் வரும்போது, நான் என்ற உணர்வும் மீண்டுவிடுவதால், புற உலகம் மீண்டும் சிருஷ்டிக்கப்படுகிறது. ஆனால் உலகைப் பற்றிய மனிதனின் பழைய மனப்பதிவுகள் மாறுவதில்லை. உலகைப் பற்றிய என்ன அறிவோடு உறங்கச் சென்றோமோ, அதே அறிவுடன்தான் மீண்டும் விழிக்கிறோம. எனவேதான்,

உறங்கி எழுந்தபின் பழைய உலகத்திற்கே மீண்டும் வந்துவிட்டது போல நாம் உணர்கிறோம்.

இதுபோலவே, கனவு கலைந்து விழிக்கும் ஒரு மனிதன், கனவுலகைப் பற்றிய நினைவுகளுடன்தான் விழிக்கிறான். ஆனால் அன்றாட வாழ்வின் அனுபவங்களை நாம் எப்படி மறந்துபோகிறோமோ, அதுபோல கனவுலகம் பற்றிய நினைவுகளையும் சிறிது நேரத்தில் மறந்துபோகிறோம். எதையும் மறந்துவிடும் மனிதனின் இயல்புதான், நமது முந்தைய பிறவிகளைப் பற்றிய நினைவு நமக்கு இல்லாமற் போவதற்கும் காரணம். அதாவது, காலம் செல்லச் செல்ல எல்லாவற்றையும் நாம் மறந்துவிடுகிறோம். முந்தைய பிறவிகளைப் பற்றிய நினைவு நமக்கு இல்லாமல் போனதற்கு வெறும் மறதிதான் காரணம் என்பதை நம்புவது அவ்வளவு எளிதாக இராது. ஆனால் அதுவே உண்மை.

இப்படியாக, தனிப்பட்ட மனிதர்கள், தத்தம் மனப்பதிவுகளுக்கு ஏற்றபடி தத்தம் உலகை எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதையே, சாதாரண மொழியில் வாழ்க்கை என்கிறோம். எனவே, கடவுள் என்கிற மகாசக்தியின் புறவடிவமாக வெளிப்படும் உலகமும், தனிப்பட்ட மனிதர்களுக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தியின் புறவடிவமாக வெளிப்படும் தனித்தனி உலகங்களும், அடிப்படையில் ஒன்றே. எப்படியானாலும், உலகையும், அதற்கு அடிப்படையான மூலாதார சக்தியையும் ஒரு போதும் பிரிக்க முடியாது; மகா\சக்தியின் குணமே அதுதான் என்பதை வாசகர்களின் கவனத்திற்கு முக்கியமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிரபஞ்சம் என்பது எப்படி ஆதிபராசக்தியின் புறவயமான மாயத் தோற்றமோ அதுபோல, தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கை என்பதும், இதே சக்தியின் புறவயமான பொய்யனுபவமே. அதாவது, பிரபஞ்சமும் தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையும், திரை மீது காட்டப்படும் படம் போன்றதே, ஆனால் ஒட்டுமொத்த நிலையில், படம் காட்டுபவர், படம் காட்டும் கருவி மற்றும்

காட்டப்படுகின்ற படம் இப்படி எல்லாமுமாகக் கடவுளே திகழ்கிறார். தனிப்பட்ட மனிதர்கள் நிலையில், அவர்களுக்குள் உறைந்திருக்கும் இதே கடவுளின் சக்தி, இப்படி எல்லாமுமாகத் திகழ்கிறது.

மொத்தத்தில் பார்த்தால், மனிதருக்குள் மறைந்திருக்கும் ஆன்மீக சக்தியை, குரு ஒருவர் மூலம் உள்நோக்கித் திருப்பினால், அந்த சக்தி எங்கேயிருந்து வந்ததே, அதே ஆதிபராசக்திக்குள் கரையத் தொடங்குகிறது. அவ்வாறு நிகழும் போது, தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கை என்கிற மாயத்தோற்றம் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று, சாதகர் எண்ணங்களே இல்லாத சமாதி நிலைக்குச் செல்கிறார். எண்ணங்களற்ற இந்த நிலையில், தனிப்பட்ட மனிதனின் சிருஷ்டி சம்ஹாரம் செய்யப்படுவதால், சாதகர் கடவுளை உணர்கிறார். கடவுளும் தானும் ஒன்றே என்கிற அறிவைப் பெறுகிறார். இதுவே மெய்யறிவு, ஆத்மதரிசனம், மோட்சம் என்பதாகும்.

மெய்யறிவின் மூலம் நாம் உணரக் கூடிய இந்த ஆதி மகாசக்தியே, பிரபஞ்சத்திற்கு அடிப்படையான மூலாதார சக்தி. இந்த சக்திதான் பிரபஞ்சம், இந்த சக்திதான் பிரபஞ்சத்திற்கு அப்பால் உள்ள கற்பனைக்கும் எட்டாத வெளி; இந்த சக்திதான் காலம்; இந்த சக்திதான் மனிதனின் மனம், புத்தி மற்றும் அகங்காரம். மனிதன் எப்போதும் தேடுகின்ற நிரந்தர ஆனந்தம் இந்த சக்தியே. கால தேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்டு எப்போதும் நீலைத்திருக்கும் ஒரே சத்தியம் இந்த சக்தி. இந்த சக்தி தான் அன்பு; இந்த சக்திதான் நானும் என்னுடைய உயிர்மூச்சும். இப்பேர்ப்பட்ட அதியற்புத, அதியுன்னத சக்திக்கு நான் தலைவணங்குகிறேன்.

இந்த சக்தி அபாரமான ஆற்றல் படைத்தது; அதன் ஆற்றல், அள்ள அள்ளக் குறையாதது. அதன் தன்மை மிகமிகப் புதிரானது.

எந்த அளவிற்குப் புதிரானது என்றால், கடவுளே புரிந்து கொள்ள முடியாத அளவிற்குப் புதிதாரனது.

அதனால் தான் இந்த சக்தியை, கடவுளுக்கே தெரியாத சக்தி என வர்ணித்து, நான் போற்றுகிறேன். இதை இன்னும் சற்று விளக்கலாம்.

# சக்தி மார்க்கம்

சக்தி மார்க்கம் என்பது, இந்த மார்க்கத்தை பின்பற்றக் கூடிய யோகிகளால், மனித உடலுக்குள் மறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியை எழுப்பப் பயன்படுத்தப் படுகின்ற ஓர் உபாயமாகும்.

சக்தி மார்க்கத்தில் ஒருவரை யார் கொண்டு வரமுடியும் ?

சக்தி மார்க்கத்தில் ஒருவரைக் கொண்டு வரும் போது என்ன நிகழ்கிறது ?

சக்தி மார்க்கம் பற்றித் தெரியாத, பொதுவான வாசகர்களுக்காக இதைக் கொஞ்சம் விளக்கப் போகிறேன்.

முன்னேறிய ஆன்மீக நிலையில் உள்ள குருவானவர், யார் மீது அருள் புரிய விரும்புகிறாரோ, அவரை சக்தி மார்க்கத்தில் கொண்டுவருகிறார்.

ஆயினும், குறிப்பிட்ட எந்த ஒரு நபரையும் சக்தி மார்க்கத்தில் கொண்டுவரும்படி எந்த ஒரு குருவையும் கட்டாயப்படுத்த முடியாது. ஏனென்றால் குரு என்பவர் மனித ரூபத்தில் இருந்தாலும்., கடவுளுக்குச் சமமானவர். கடவுளை எப்படி நிர்பந்திக்க முடியாதோ, அதுபோலவே குருவையும் நிர்பந்திக்க முடியாது. நிர்பந்திக்க முயன்றாலும், பலன் இராது.

இது எப்படி என்பதை இன்னும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

குரு என்பவர் மனித ரூபத்தில் இருந்தாலும், ஏற்கனவே கடவுளை உணர்ந்தவர். மற்ற மனிதர்களும் கடவுளை உணர வேண்டும்; அதற்கு குருவானவர் ஓர் ஊடகமாக செயல்பட வேண்டும் என்பதற்காகவே, கடவுள் அவரை தொடர்ந்து மனித ரூபத்தில் வைத்திருக்கிறார். இந்த விதத்தில் குருமார்கள் மனித குலத்திற்கு கடவுள் அளித்துள்ள வரம். ஆனாலும் குருவானர் மனித ரூபத்தில் இருப்பதால், மனித உடலுக்கே உரிய இயற்கையான விதிகளுக்கு (யோக விதிகளுக்கு) உட்பட்டவராக அவர் செயல்பட்டால்தான், தொடர்ந்து மனித ரூபத்தில் நீடிக்கமுடியும். இத்தகைய சூழ்நிலையில், குறிப்பிட்ட எந்த ஒரு நபரையும் சக்திமார்க்கத்தில் கொண்டுவரும்படி, குருவானவரை யாராவது கட்டாயப்படுத்தினால், கடவுள் அதை அனுமதிக்கமாட்டார். அதற்கும் மேலாக, குரு மார்க்களுக்கே சில பிரத்யேக உரிமைகள் இருப்பதை, எல்லா யோக சாஸ்திர நூல்களும் பறை சாற்றுகின்றன.

குருமார்களுக்குக் கடவுள் வழங்கியுள்ள உரிமைகள் எப்படிப் பட்டவை என்பதை நான் எடுத்துச் சொன்னால், வாசகர்கள் மிகுந்த வியப்படைவீர்கள்.

யோக சாஸ்திர நூல்களின்படி, குருவானவர் கடவுளின் கோபத்தில் இருந்துகூடி ஒருவரைக் காப்பாற்ற முடியும். ஆனால் குருவின் கோபத்திற்கு ஆளான ஒருவரை, கடவுள்கூடக் காப்பாற்ற முடியாது! இத்தகைய சிறப்பான உரிமையை, ஆதி காலந்தொட்டு கடவுளே குருமார்களுக்கு வழங்கியிருக்கிறார். இதையும் யோக சாஸ்திர நூல்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்கின்றன.

நம்முடைய விதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரம் மனிதனுக்கு இருப்பதாக, பல சமயங்களில் நாம் நினைத்துக் கொள்கிறோம். ஆயினும், நான் என்கிற சாயம் பூசப்பட்டிருக்கும் வரை, இந்த சுதந்திரம் வெறும் மாயைதான் என்பதையும், நான் என்கிற அகந்தை அகன்றால் மட்டுமே, நமது விதியை நாமே நிர்ணயித்துக்கொள்ள முடியும் என்பதையும் அனுபவஸ்தர்கள்

உணர்வார்கள், அப்படியானால், இத்தகைய சுதந்திரம் கடவுளுக்கு உண்டா என்று கேட்டால், கடவுளும்கூட, இந்த உலகைப் படைத்தவன் நானே என்கிற எண்ணமற்ற தூய ஆன்மீக சக்தியாகத் திகழும் நிலையில் மட்டுமே, இந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் என்று சொல்லலாம். ஆனால் குருவானவர், மனித வடிவில் வாழ்ந்து கொண்டே, நான் என்கிற அகந்தையை அழித்து விட்டவராகத் திகழ்வதால்தான், தகுதியுள்ள மற்றவர்களையும் சக்தி மார்க்கத்தில் கொண்டுவந்து, அவர்களின் விதியை மாற்ற முடிகிறது.

சரி, சக்தி மார்க்கத்தில் யாரைக் கொண்டுவர முடியும்? இதற்கான கடவுளின் அருள் எல்லோருக்கும் கிடைக்குமா என்றால், பொதுவாகக் கிடைக்கும் என்பதே என் பதில், மதம், மொழி, இனம், குலம் போன்ற எவ்வித பாகுபாடுமின்றி அனைவருமே, கடவுளின் இந்த அருளைப் பெறத் தகுந்தவர்கள்தான். மனிதர்களில் எவர் மீதும் கடவுள் எப்போது வேண்டுமானாலும் அருள்புரிய முடியும். இது உண்மைதான் என்பதை உலக வாழ்வில் நாம் சர்வ சாதாரணமாகப் பார்க்கவே செய்கிறோம்.

அப்படியிருக்கையில், கடவுள் ஏன் எல்லோருக்கும் அருள் புரிந்து, எல்லோரையும் கடைத்தேற்றுவதில்லை ? பிறப்பு - இறப்புச் சுழலில் இருந்து விடுவித்து மோட்சமளிப்பதில்லை ?

கடவுள், தன் சொந்த இஷ்டத்தின் பேரில்தான் மனிதனைப் படைத்திருக்கிறாரே தவிர, இதில் மனிதனின் இஷ்டத்திற்கு எந்த இடமும் இல்லை. எனவே, கடவுள் ஏன் எல்லோருக்கும் மொத்தமாக மோட்சமளிப்பதில்லை என்பதற்கும், அது அவரது இஷ்டம் என்பதே பதில். கடவுளின் தெய்வீக திருவிளையாடலுக்காகவே நாம் படைக்கப் பட்டுள்ளோம். திருவிளையாடல் காட்சியை எப்படி அரங்கேற்றுவது, எப்படி முடிப்பது என்பதெல்லாம் கடவுளின் முடிவே தவிர, இதில் நாமெதுவும் செய்ய முடியாது. பிறப்பு-மோட்சம் பற்றிய, அடிப்படையான இந்த விஷயத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

நீங்கள் உங்களுடைய விளையாட்டிற்காக பொம்மை ஒன்றை படைப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அதற்குள் உங்களுடைய குணங்களையெல்லாம் நீங்கள் பொதிந்து வைக்கிறீர்கள்; அதே சமயம், அதன் செயல்பாடுகளுக்கென சில பௌதீக விதிகளையும் நிர்ணயிக்கிறீர்கள், இத்தகைய ஒரு நிலையில், பொம்மையின் இருப்பு முற்றிலும் உங்களைச் சார்ந்தது. அதாவது நீங்களும் பொம்மையும் ஒன்றே தவிர, வெவ்வேறு அல்ல. நீங்கள் இல்லையென்றால் பொம்மையே இல்லை.

இத்தகைய பந்தப்பட்ட நிலையில், பொம்மை உங்களை எந்தக் கேள்வியும் கேட்க முடியாது. நீங்கள் விதித்த விதிகளுக்கு உட்பட்டு பொம்மை செயல்படலாமே தவிர, இஷ்டத்திற்கு ஆடும் அதிகாரம் பொம்மைக்கு இல்லை. அதே சமயம், நான் யார் என்பதை உணர்ந்து கொள்ளும் ஆத்ம தரிசனத்திற்கான உள்திறன் பொம்மைக்கு இருக்கிறது. இதே போலத்தான் கடவுளும், தன் தெய்வீக லீலைகளுக்காகவே மனிதர்களைப் படைத்துள்ளார். எனவே கடவுளின் சித்தப்படிதான் நாம் நடக்க முடியுமே தவிர, கடவுளைக் கேள்வி கேட்க முடியாது. உலக வாழ்வில் கடவுளின் சித்தத்தை மீறி நம் இஷ்டத்திற்கு ஆடும் அதிகாரம் நமக்குக் கிடையாது.

ஆயினும், ஒவ்வொரு மனிதனும் கடவுளின் அவதாரமே என்பதாலும், ஒவ்வொரு மனிதனின் இருதயத்திலும் கடவுளே குடிகொண்டிருக்கிறார் என்பதாலும், சுதந்திரமாக எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய கடவுளின் உரிமை நமக்கும் உள்ளது போல் தோன்றுகிறது. கடவுளின் இந்த அதிகாரமே மனிதமனம் மூலமாக வெளிப்பட முயலுகிறது என்றாலும், இந்த முயற்சியில், நான் என்கிற மனிதனின் எண்ணமும் கலந்து விடுவதால், உண்மையில், மனிதனுக்கு இருப்பதாகத் தோன்றும் இந்த அதிகாரத்தால், லோகாயதமான எந்தப் பலனையும் அடையமுடியாது. மாறாக, மனிதன், நான் என்ற எண்ணத்தை சுவடே இல்லாமல் அழித்துவிட்டால், இது கடவுளின் அதிகாரமே தவிர, நம்முடைய அதிகாரமல்ல என்ற உண்மை புரியும். இந்தப் புரிதலே நிஜமான மெய்யறிவாகும், மற்றபடி, நான் என்கிற

எண்ணம் நீடிக்கும் வரை, இந்த அதிகாரத்தினால் மனிதனுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால் முக்கியமான இந்த உண்மையை நாம் ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை. புரிந்துகொள்ள விரும்புவதும் இல்லை. இதனால்தான், நம்முடைய விதியை நாமே தீர்மானித்துக் கொள்ளும் அதிகாரம் நமக்கு இருப்பதாக நாம் தவறாகக் கருதி, அந்த அதிகாரம் மூலம் லோகாயதமான பலன்களைப் பெற முயல்கிறோம், கடவுளேகூட நானே பிரபஞ்சம் என்கிற எண்ணத்தை விலக்கினால்தான் சுதந்திரமாக எதையும் செய்வதற்கான அதிகாரத்தை பயன்படுத்த முடியுமென்கையில், சாதாரண மனிதர்களான நாம் எம்மாத்திரம்?

எனவே கடவுளைக் கேள்வி கேட்கும் அதிகாரம் நமக்கில்லை என்பதை வாசகர்கள் புரிநது கொள்ள வேண்டுகிறேன். கடவுள் ஏன் எல்லா மனிதர்களுக்கும் மெய்யறிவை அருளக்கூடாது என்ற கேள்வியும் இதில் அடங்கும் கடவுளின் பிரதிநிதியே குரு என்பதால், குருவிடமும் இந்தக் கேள்வியைக் கேட்க முடியாது, எந்த ஒரு தனிப்பட்ட மனிதரையும் சக்தி மார்க்கத்தில் கொண்டுவரும்படி குருவானவரை நிர்பந்திக்க முடியாது என்பதற்கும் இதுவே காரணமாகும்.

அதே சமயம், சாதகர் மெய்யறிவு பெறுவதற்கான பக்குவத்தை எட்டிவிட்டால், தானாகவே குரு ஒருவர் கிடைப்பார் என சமஸ்கிருத நூல்களில் சொல்லப்படுகின்ற கருத்தையும் பிரபலமாக நாம் அனைவரும் அறிவோம். இது ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் பொதுவான ஓர் உண்மையாகத் திகழ்கிறது. ஆனால் பகுத்தறிவு ரீதியில் இதற்கு விளக்கமளிக்க முடியாது. நாம் தயாராக இருந்தால், குரு தானே வருவார் என்பதை நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால், விடுங்கள். அவ்வளவே.

முடிந்து முடிவான இந்த விஷயம் பற்றி மேலும் பேசி நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. சுதந்திரமாக எந்த முடிவையும் எடுப்பதற்கான, இஷ்டப்படி எந்தக் காரியத்தையும் செய்வதற்கான அதிகாரம் நமக்கு இருப்பதாகத் தோன்றுவது, வெறும் பொய்த்

தோற்றமே என்றாலும், நான் என்ற எண்ணத்தை அடியோடு அழிப்பதன் மூலம் இந்த அதிகாரத்தை நிஜமாக்கி, ஆத்மதரிசனம் பெறமுடியும் என்பது மட்டுமே, நாம் அறிய வேண்டிய கருத்தாகும்.

மனித மனதின் நம்பிக்கைகள் குறித்து இப்போது கொஞ்சம் பேச விரும்புகிறேன். நாம் பொதுவாக பல விஷயங்களை கேள்வி கேட்காமல் அப்படியே எடுத்துக் கொள்கிறோம். தண்ணீர் தாகத்தைத் தீர்க்கும்; உணவு பசியைப் போக்கும். நெருப்பு சுடும்- இப்படிப் பல விஷயங்களை நாம் அப்படியே நம்புகிறோம், ஆனால் அனுபவம் அப்படித்தானே சொல்கிறது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் அனுபவத்திற்கு முன்பாகவும் நாம் அப்படித்தானே நம்புகிறோம்? சரி, அனுபவம்தான் நம் நம்பிக்கைகளுக்குக் காரணம் என்றே வைத்துக் கொண்டாலும், அனுபவத்தின் மூலம் சரி பார்க்க முடியாத பல நம்பிக்கைகளும் நமக்குள் இருக்கவே செய்கின்றன. தாய்மீது குழந்தை வைக்கும் நம்பிக்கையை, வெற்றிக்காக போர்க்களம் புகும் வீரனின் நம்பிக்கையை,, பரிசோதனை மூலம் சரிபார்க்க முடியாது அல்லவா? யாருக்கு மெய்யறிவை அருள்வது என்பது கடவுளின் அதிகாரம். நாம் தயாராக இருந்தால், மெய்யறிவு வழங்க குரு தானாகவே வருவார் என்பதெல்லாம், இத்தகைய நம்பிக்கைகளே. அதாவது, எந்தப் பரிசோதனை மூலமாகவும் இவற்றை சரிபார்க்க முடியாது. பகுத்தறிவு மூலம் விளக்க முடியாத விஷயங்கள் என்று நான் குறிப்பிட்டதும் இதுவே.

முக்கியமாக கடவுள் மேல் நாம் வைக்கும் நம்பிக்கை, தாய் மீது குழந்தை வைக்கும் நம்பிக்கைக்கு, ஒப்பானது. அதுதான் இயற்கை என்பதைத் தவிர, இதற்கு வேறு விளக்கம் ஏதுமில்லை. கடவுள் மீதான இந்த நம்பிக்கை போதிய அளவிற்கு அதிகரிக்கும் போதுதான், குறிப்பிட்ட அந்த நபரை குருவானவர் சக்தி மார்க்கத்தில் கொண்டுவர முடியும். எந்தக் கேள்வியும் கேட்காமல் கடவுளை முற்றிலுமாக நம்பும் தன்மை எந்தக் கணத்தில் நமக்கும் பீறிட்டு எழுகிறதோ, அந்தக் கணத்திலேயே,

## பராசக்தி

குருவானவர் நம்மைக் கடைத்தேற்றுவதற்காக தானே நம்முன் தோன்றுவார்! கடவுள் மீது இத்தகைய தூய, கலப்படமற்ற நம்பிக்கை உருவாகும் நிலையைத்தான், ஆத்ம தரிசனத்திற்கான தயார்நிலை என்கிறோம்.

இதை இன்னும் சற்று விளக்கலாம். யோக சாஸ்திர நூல்களின்படி, மனிதமனம், மூன்று குணங்களால் ஆனது. சத்வ குணம், ராஜச குணம், தாமச குணம் என்பவை, இம்மூன்று குணங்கள்.

ரஜஸ் என்பது, நமது இயக்க சக்தி. தமஸ் என்பது, சோம்பல் அல்லது ஜடத்தன்மை. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட சமநிலையே சத்வ குணம்.

கடவுளின் நிலையில் இருந்து பார்த்தால் ராஜச குணம், சிருஷ்டிக்கு காரணமாகிறது. தாமச குணம், சம்ஹாரத்திற்கு காரணம். படைத்தல், அழித்தல் இவ்விரு காரியங்களுக்கு இடைப்பட்ட காத்தல் தொழிலுக்கு அடிப்படையே சத்வ குணம்.

கடவுளின் இம்மூன்று குணங்கள், ஒவ்வொரு மனிதனின் மனதிற்குள்ளும் வெவ்வேறு விகிதாசாரத்தில் அமைந்துள்ளது. அல்லது இம்மூன்று குணங்களின் கலவைதான் மனம் என்றும் சொல்லலாம்.

ரஜஸ், தமஸ் மற்றும் சத்வ குணங்களின் விகிதாசாரம், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமாக அமையும் அதே வேளை, ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் இந்த விகிதாசாரம் ஒவ்வொரு நொடியும் சதா மாறிக் கொண்டேயிருக்கிறது. இதைத்தான் நிலையற்ற மனம், அலைபாயும் மனம், மனம் ஒரு குரங்கு என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால் சரியான மனப்பயிற்சிகள் மூலம் அலைபாயும் மனதை நாம் கட்டுப்படுத்த முடியும். அப்படிக் கட்டுப்படுத்தும் போது, மனதிற்குள் ராஜஸ, தாமச, சத்வ குணங்களின் விகிதாசாரம் சமநிலைப் படுகிறது. இத்தகைய சமன்பட்ட மனம், பேரமைதி கொண்டது. எண்ணங்களற்ற சமாதி நிலை என்று இதைத்தான்

சொல்கிறார்கள். இந்த நிலையில்தான் ஆத்ம தரிசனம் அல்லது மெய்யறிவுக்கு வழியேற்படுகிறது. அதாவது இந்த நிலையை எட்டும் போதுதான் குருவினால் சக்திமார்க்கத்தில் கொண்டுவரப் படுவதற்கான தகுதியை மனிதன் பெறுகிறான்.

அன்றாட வாழ்க்கையில் மனம் சதா அலைபாயும் நிலையிலும், அவ்வப்போது ஒரு சில வினாடிகளுக்கு மேற்சொன்ன சமநிலை உருவாகவே செய்கிறது. ஆனால் அதை உணர்வதற்கான பயிற்சி சாதாரண மனிதர்களுக்கு இல்லை என்பதால், அன்றாட வாழ்வில் அவ்வப்போது ஏற்படும் சலனமற்ற மனநிலையை உணரமுடிவதில்லை. வைரத்தையே பார்த்திராத ஒரு ஏழைக்கு, தூசு படிந்த ஒரு வைரம் கிடைத்தாலும், அது வைரம் என்பதை அவன் எப்படி உணரமுடியாதோ, அது போன்றதே இது. தூசுபடிந்த வைரத்தை முறையாகப் பட்டை தீட்டிவிட்டல், அதன் பிரகாசமே அது வைரம் என்பதைச் சொல்லிவிடும். அதுபோல முறையாக மனப்பயிற்சி இருந்தால் மட்டுமே, சலனமற்ற மனநிலை என்றால் என்ன என்பதை உணர முடியும்.

மூன்று குணங்களின் கலவைதான் மனம் என்பது பற்றி இப்போது மேலும் சிறிது பார்க்கலாம்.

முறையான மதச் சடங்குகள் அல்லது யோக அப்பியாசம் மூலம், மனதில் முக்குணங்கள் ஒருவிதச் சமநிலையை நோக்கி நகர்கின்றன. ஆனால் இந்த நிலையும்கூட, இன்னும் முற்றிலுமான சமநிலையல்ல. இந்நிலையில், மனம் முன்பு போல அவ்வளவு தீவிரமாக அலைபாய்வதில்லை என்றாலும், அலைபாயும் தன்மையானது இப்போதும் நீடிக்கவே செய்கிறது. இந்த அலைபாயும் தன்மை சாதகரின் அன்றாட வாழ்வில் அவர் ஈடுபடும் செயல்களை தொடர்ந்து பாதிக்கவே செய்வதால், பாவ-புண்ணியங்கள் அனைத்தையும் அவர் செய்து கொண்டுதான் இருப்பார். ஆனால் இப்போது பாவ-புண்ணியம் பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இருப்பதால், ஒரு பாவம் செய்துவிட்டால், அதற்குப் பிராயச்சித்தமாக ஏதாவது ஒரு

புண்ணியம் செய்ய அவர் முயல்வார். இதனால் இந்த நிலைக்கு மேல், அவரது பாவ-புண்ணியக் கணக்கு சமன்பட்டு விடுகிறது. இந்த நிலையில் அவர் புனிதரா, பாவியா என்று கேட்டால், இரண்டும் அவரே; அல்லது இரண்டும் அவரல்ல என்றும் சொல்லலாம். இப்படி பாவியாகவோ, புனிதராகவோ பிரித்தறிய முடியாத ஒருவரை வைத்துக் கொண்டு, கடவுள் தன் திருவிளையாடலை எப்படி நடத்த முடியும்? எனவே கடவுளின் பிரபஞ்ச விளையாட்டைப் பொறுத்து மற்றவராக மாறிவிட்ட ஒருவருக்கு, கடவுள் மோட்சமளித்து, இந்த விளையாட்டிலிருந்து அவரை விடுவிக்க முன்வருகிறார். அதற்கு ஏற்றபடி சாதகரும் மாறி மாறிப் பாவ-புண்ணியங்களில் ஈடுபட்டு ஈடுபட்டு, இது என்ன வீண் விளையாட்டு என்ற சலிப்பிற்கு வந்து விடுவதால், கடவுள் மீதான அவரது தூய நம்பிக்கை அதிகரித்து விடுகிறது. இப்படி சாதகர் - கடவுள் இருவரும் தயாராகும் போதுதான், சாதகர்முன், குருவானவர் தோன்றி, சக்தி மார்க்கத்தில் அவரை ஈடுபடுத்தி, குண்டலினி சக்தியை விழிப்புறச் செய்கிறார். குண்டலினி சக்தி விழிப்புறும் போது, சாதகர் மேலும் மேலும் ஆன்மீக நிலையில் முன்னேறி, ஆத்ம தரிசனத்தைப் பெறுகிறார். இதுதான் முழுக்கதை.

குருவானவர் சாதகரை எப்படி சக்தி மார்க்கத்தில் கொண்டுவருகிறார் என்றால், இதற்கு நான்கு முறைகள் இருப்பதாக என்னுடைய குருநாதர் எனக்குச் சொல்லியிருக்கிறார். அதாவது தொடுவதன் மூலமாகவும், பார்ப்பதன் மூலமாகவும், தெய்வீக சக்தியைப் பிரயோகிப்பதன் மூலமாகவும், அல்லது மந்திர பூர்வமாகவும், குருவானவர் சாதகரை சக்தி மார்க்கத்தில் கொண்டு வர முடியும். தேவைப்பட்டால் இதில் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளையும் குருவானவர் கையாளுவார் என்பதை அறிக.

# சக்தி மார்க்கத்தின் ரகசிய வரலாறு

சக்தி மார்க்கமென்பது, பழங்காலங் தொட்டே இந்தியாவில் ரகசியமான ஒரு மார்க்கமாக இருந்து வருகிறது. பகவான் ஸ்ரீ ராமரை அவரது குருவான வசிஷ்ட மகரிஷி சக்தி மார்க்கத்தில் கொண்டுவந்ததாக, யோக வாசிஷ்டம் என்னும் பண்டைய சமஸ்கிருத நூல் கூறுகின்றது. பகவான் ஸ்ரீராமர் புராதன பாரதத்தின் அயோத்தி சாம்ராஜ்யத்தில் யுவராஜராக இருந்தவர். கடவுளின் அவதாரமாக போற்றப்படுபவர் என்பது நமக்கு தெரியும். ஸ்ரீராமர் காலத்திற்கும் முன்பாகவே சக்தி மார்க்கம் பயன்பாட்டில் இருந்திருக்க வேண்டுமென்பதும் இதிலிருந்து புலனாகிறது. எனவே சக்தி மார்க்கம் எப்போது முதல் பயன்பாட்டில் உள்ளது என்பதை, யாராலும் உறுதியாக சொல்ல முடியாது. அதேசமயம், சக்திமார்க்கம் என்று ஒரு ஆன்மீக உபாயம் இருக்கிறது என்ற உண்மை, ஆரம்பத்திலிருந்து, அதாவது சக்தி மார்க்கம் பற்றி சாதாரண மனிதர்கள் உட்பட பெரும்பாலான மக்களுக்கு, பெரும்பாலான காலங்களில், தெரியவே தெரியாது. அதாவது மனிதகுல வரலாற்றின் ஒவ்வொரு அறுநூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை, சக்தி மார்க்கம் ரகசியமாகவும், பகிரங்கமானதாகவும் மாற்றி மாற்றி வைக்கப்பட்டு வந்துள்ளது. சக்தி மார்க்கத்தை இதுபோல ரகசியமாக வைத்திருந்ததற்கு என்ன காரணம் என்பதை

வாசகர்கள் இந்த நூலை மேலும் படிக்கையில் புரிந்து கொள்ளலாம் என நம்புகிறேன்.

வரலாற்றின் 600 ஆண்டுகளுக்கு ஒரு முறை, சக்தி மார்க்கம் பொதுமக்களுக்கு ரகசியமாக வைக்கப்பட்டதே தவிர, மார்க்கத்தை அறிந்த யோகிகள் யோகினிகள் ஒவ்வொரு காலக்கட்டதிலும் இருக்கவே செய்தார்கள். இவர்கள் வழிவழியாக தங்களின் சீடர்களுக்கு இந்த மார்க்கத்தை சொல்லிக் கொடுத்து வந்ததால், சக்திமார்க்கம் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. இது போல, சக்தி மார்க்கத்தை அறிந்தவர்களிள் பரம்பரையில் கடைசியாக அறியப்பட்டவர் ஒரு யோகினியாவார். இன்றைய ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் ஸ்ரீநகர் அருகே பத்மம்புரா என்று அழைக்கப்பட்ட ஒரு கிராமத்தில், 700 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் வாழ்ந்தார். இன்று அந்த கிராமம் ஸ்ரீநகரின் புறநகர்ப் பகுதியாக பாம்போர் என்று அழைக்கப்படுகிறது. கிழிந்த ஆடைகளை அணிந்து கொண்டு, ஸ்ரீநகர் பகுதியை சுற்றித்திரிந்த இந்த மகாயோகினையை, லல்லேஷ்வரி, லல்லா, லால்தேட் போன்றபல பெயர்களில் அழைத்தார்கள். நவீன காலத்தில் லால்தேட் என்று அறியப்படும் இந்த மகாயோகினியின் போதனைகளை வாசகர்கள் இணையதளத்தில் காணலாம்.

ஆயினும் அன்றைய காலத்தில், சக்தி மார்க்கத்திற்கும் லல்லேஷ்வரி மகாயோகினிக்கும் என்ன சம்பந்தம் என்பதை, சக்தி மார்க்கப் பரம்பரையினர் மட்டுமே அறிந்திருந்தார்கள்.

மகாயோகினி மல்லேஷ்வரியின் காலத்திற்குப் பிறகு, சக்தி மார்க்கப் பரம்பரைக்கு என்னவாயிற்று என்பது பற்றி அதிக விவரங்கள் கிடைக்கவில்லை. மல்லேஷ்வரியின் காலத்திலிருந்து இன்று வரையுள்ள 700 ஆண்டுகாலத்தில் இந்தப் பரம்பரையில் வந்த மூன்று யோகிகளின் பெயர்கள் மட்டுமே நமக்கு கிடைத்துள்ளன. ஸ்வாமி பரமானந்தர், திரிலோக்கி பாபா,

ஸ்வாமி முகுந்தானந்தா ஆகியோர் இம்மூன்று யேஸகிகள். இவர்களைப் பற்றி வேறெந்தத் தகவலும் இல்லாததால், நானும் மேற் கொண்டு சொல்ல இயலவில்லை.

இந்த இடத்தில், நாம் இப்போது யோகிகளைப் பற்றிப் பேசுகிறோம் என்பதை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். யோகிகள், இதர புனிதர்களைப் போன்றவர்களோ, மடாதிபதிகளைப் போன்றவர்களோ அல்லர். இவர்கள் தனியொரு வகையைச் சேர்ந்தவர்கள். பழங்கால சமஸ்கிருத நூல்களின்படி, யேஸகிகள், தேவதைகளுக்கும் கடவுளர்களுக்கும் மேம்பட்டவர்கள். தெய்வீக சக்தியின் மிகத் தூய்மையான மனித வடிவம். இவர்களின் ஆன்மீக பிரகாசத்திற்கு ஈடு இணையில்லை. உண்மையில் இவர்கள் தங்களின் அமானுஷ்ய சக்தியினால் தங்களின் விருப்பப்படி இன்னொரு உலகையே படைத்துக் கொள்ளமுடியும். எனவே சாதாரன லோகாயதப் பிரச்னைகள் இவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. இப்போது, யோகிகள் எவ்வளவு மேன்மையானவர்கள் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என நினைக்கிறேன்.

700 ஆண்டுகளாக சக்தி மார்க்கத்திற்கு என்னவாயிற்று என்பது சரியாகத் தெரியாவிட்டாலும், இன்றைய ஒடிசா மாநிலத்தின் பூரி நகரில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மகாயோகி சுவாமி கங்காதர தீர்த்தர் மூலமாக, சக்தி மார்க்கம் அண்மைக் காலங்களில் மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது, அவர் தமது ஒரே ஒரு சீடரை மட்டுமே சக்தி மார்க்கத்தில் கொண்டுவந்தார். ஸ்வாமி நாராயண தேவ தீர்த்தர் என்பவரே இதுபோல சக்தி மார்க்கத்தில் கொண்டுவரப்பட்ட யோகியாவார். வங்கதேசம் எனத் தற்போது அழைக்கப்படும் பகுதியில் பிறந்தவரான இவர், மூன்றாவது தலைமுறை சாதகர்களை சக்தி மார்க்கத்தில் கொண்டுவந்தார். இந்த மூன்றாவது தலைமுறையினர், நான்காவது தலைமுறைக்கு சக்திமார்க்கம் சொல்லிக் கொடுத்து, தத்தம் யோக பரம்பரைகளையும் உருவாக்கினர்.

மேற்சொன்ன யோக பரம்பரையில் வந்த குருமார்கள் யார் யார் என்பது குறித்து ஆராய்ந்து, என்னால் இயன்றவரை யாரைப் பற்றியெல்லாம் தெரியவந்ததோ, அவர்களின் கிளைகளைப் பற்றிய வரைபடம் ஒன்றை இந்தப் புத்தகத்தின் இறுதியில் கொடுத்திருக்கிறேன்.

ஆயினும் இந்தப் பாரம்பரையில் வந்த எல்லோரைப் பற்றியும் ஒரே நூலில் எழுத முடியாது என்பதால், இதில் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவரான யோகாநந்தர் வழி வந்த குருமார்கள் பற்றி மட்டுமே, இனி இந்த நூலில் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

யோகாநந்தர், இன்றைய குஜராத் மாநிலத்தின் ஜூனாகாத் நகரில் அவதரித்தவராவார். அவர் எத்தனையோ சாதகர்களை சக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தியிருந்தார். இவர்கள் எல்லோரைப் பற்றியும் இங்கே எழுதமுடியாது என்பதால், யோகாநந்தருக்குப் பின், நான்காவது தலைமுறையில் வந்த சுவாமி விஷ்ணு தீர்த்தர் மற்றும் அவரால் உருவாக்கப்பட்ட குருபரம்பரையினர் மீது நாம் கவனம் செலுத்துவோம்.

இந்த நான்காவது தலைமுறை பற்றி மேலும் பேசும் முன்பாக, மூன்றாவது தலைமுறை குருவான யோகாநந்தரைப் பற்றிக் கொஞ்சம் பார்த்து விடலாம். யோகாநந்தர் மற்ற யோகிகளைப் போலக் காவி உடைதரித்துக் காட்டில் தனியாக வாழ்ந்தவரல்ல. உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே ஆன்மீக சாதனை புரிந்தவர். இப்படி உலக வாழ்க்கையில் இருந்து கொண்டே யோகசாதனை புரியும் முறை பற்றி இப்போது தெரிந்து கொள்ளலாம்.

யோகிகளில் இரண்டு விதங்கள் உண்டு.

பெரும்பாலான யோகிகள், உலக வாழ்வைத் துறந்து, காவியுடை

அணிந்தவர்களாக காட்டில் தனியே வாழ்ந்து யோக சாதனையில் ஈடுபடுகிறார்கள். எண்ணங்களற்ற சமாதிநிலையை எட்டும் நோக்கத்துடன், மனப் பதிவுகளை அறவே நீக்கும் முயற்சியில் இவர்கள் தொடர்ந்து ஈடுபடும்போது, அதனால் ஏற்படும் சக்தி வாய்ந்த அதிர்வலைகள் உலகெங்கும் பரவி, மனித குலம் உள்ளிட்ட எல்லா ஜீவராசிகளுக்கும், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நல்குகின்றன. சுருங்கச் சொன்னால், யோகிகளின் யோகாப்பியாசத்தால் ஒரு விதத்தில் இந்த உலகமே நன்மையடைகிறது.

இவர்கள் உலக வாழ்வைத் துறந்து, முழுவதும் உள்முக வாழ்வில் கவனம் குவித்தவர்கள். எண்ணங்களற்ற சமாதி நிலைக்கு மனதை செலுத்த இடைவிடாது முயல்பவர்கள். எண்ணங்களற்ற சமாதி நிலையே யோகிகளின் இறுதிக் குறிக்கோள்.

ஆனால் இது போல் உலக வாழ்வைத் துறந்து காட்டிலே யோக சாதனை புரிபவர்களில் பலர், அதில் தோற்றுப் போவது சர்வசாதாரணம். துறவு வாழ்வின் அவசியத்தை அவர்கள் உணர்ந்துள்ள போதிலும், சுகங்களை துறப்பதற்கான திடசித்தம் இல்லாமல் போவதே தோல்விக்குக் காரணம். இவ்வாறு துறவில் தோல்விகாணும் யோகிகள், வேறு வழியின்றி மீண்டும் உலக வாழ்விற்குத் திரும்பலாம் என்றாலும், இதனால் ஏற்படும் ஆன்மீக இழப்பை ஒரு போதும் ஈடுசெய்ய முடியாது.

இவ்வாறு யோகசாதனையில் வீழ்ச்சியடைந்த ஒரு யோகி மீண்டும் யோகப் பாதைக்கு உடனடியாகத் திரும்ப எந்த ஒரு வழியோ, உபாயமோ இல்லை. யோக சாதனை பற்றிய சமஸ்கிருத நூல்களின்படி, தோல்வியுற்ற யோகி மீண்டும் யோகமார்க்கத்திற்கு திரும்ப நீண்ட காலமாகும். ஏனப்படி என்பதற்கு பகுத்தறிவு ரீதியில் எந்த விளக்கமும் இல்லை. ஆனால் அது அப்படித்தான்.

இதற்கு பயந்துதான், சில யோகிகள் சமுதாய வாழ்வில் இருந்து கொண்டே யோக சாதனையில் ஈடுபட முயல்கிறார்கள். துறவு வாழ்வில் தோல்வியடைந்து மீண்டும் சமுதாய வாழ்விற்குத் திரும்பவேண்டிய அபாயம் இந்தமுறையில் இல்லையென்பதே இவர்களுக்குள்ள நிம்மதி.

ஆனால் துறவு வாழ்க்கை சிறந்ததா? சமுதாய வாழ்வில் இருந்து கொண்டே யோக சாதனையில் ஈடுபடுவது சிறந்ததா? என்று கேட்டால், அது தனிப்பட்ட நபர்களின் பார்வையைப் பொருத்தது என்பதே பதில்.

முதலாவது பாதையில், உலக இன்பங்களின் கவர்ச்சியில் இருந்து விடுபடுவதற்கான திடசித்தம் இல்லாதவர்கள் மட்டுமே தோல்வியடைகிறார்கள். அந்த திடசித்தம் மட்டும் முழுமையாக இருந்து விட்டால், சமுதாய வாழ்வைத் துறந்து, காவியுடை தரித்துக் காட்டிலே தனித்து வாழ்ந்து யோகசாதனையில் ஈடுபடுபவர்களுக்கு, சமாதி நிலையை அடைவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம். சமாதி நிலையை அடைவது எளிதும் கூட.

இரண்டாவது பாதையில், யோகியானவர் உலகவாழ்வைத் துறக்க மறுக்கிறார். இந்தப் பாதையில் உலகவாழ்வின் சுகங்களைத் தவிர்ப்பது மிகக் கடினம். ஆனால்உலக வாழ்வின், சுக துக்கங்களை அனுபவித்துக் கொண்டே, அதன் விளைவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பற்றற்ற மனநிலை ஒன்றை அவர் உருவாக்கக் கொள்ள முடியும். அப்படியொரு பற்றற்ற மனநிலையை எட்டிவிட்டால், யோக சாதனையின் குறிக்கோளான சமாதிநிலை அடைவது சாத்தியமே. இதுபோல அன்றாட வாழ்வின் சுகதுக்கங்களை பற்றற்ற விதத்தில் அனுபவிப்பதன் மூலம், பாவ-புண்ணியக் கணக்கை தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பில்லை. அவர் தமது பாவ-புண்ணியக் கணக்கை முற்றிலும் யோகசாதனை மூலமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

அதே சமயம், சமுதாய வாழ்க்கையில் உள்ள ஒருவர், இன்ப-துன்பங்களுக்கு அப்பாற்பட்ட பற்றற்ற மனநிலை ஒன்றை வளர்த்துக் கொள்வாரேயானால், அவரும், யோகியாக, யோகசாதனை புரிபவராகவே கருதப்படுவார். எனவே, யோகசாதனை புரிகின்ற ஒருவர் சமுதாய வாழ்வில் இருக்கிறாரா, காட்டில் துறவு வாழ்க்கை மேற்கொள்கிறாரா என்பது ஒரு பொருட்டேயல்ல. அவருடைய மனநிலை, உலக வாழ்வின் இன்ப துன்பங்களின் விளைவால் பாதிக்கப்படாததாக இருக்கிறதா என்பதே கணக்கு. எனவேதான், இது தனிப்பட்ட நபர்களின் பார்வையைப் பொருத்தது என்று சொன்னேன். இரணடு பாதைகளுக்கும் தனித்தனி நன்மை-தீமைகள் இருப்பதால், இரண்டில் எதுசரி என்பதை உறுதியாக கூற முடியாது. இன்னும் சொல்லப் போனால், இந்த இரண்டில் எந்தப்பாதை ஒருவருக்குரியது என்பதை விதி தான் தீர்மானிக்கிறது.

இப்படியாக, நாம் ஏற்கனவே பார்த்த யோகாநந்த யோகியவர்கள், சமுதாய வாழ்வில் இருந்து கொண்டே யோகசாதனை புரிந்து வந்தார்.

இப்போது யோகாநந்தருக்கு அடுத்த படியான நான்காவது தலைமுறையைச் சேர்ந்த ஸ்வாமி விஷ்ணு தீர்த்தரைப் பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

இந்த யோகி, இன்றைய ஹரியானா மாநிலத்தில் உள்ள ஹிஸ்ஸாரில் பிறந்தவர். வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்த இவரை, யோகாநந்தர் சக்தி மார்க்கத்தில் கொண்டு வந்தார்.

இவர், இன்றைய மத்தியப்பிரதேஷ் மாநிலத்தின் தேவாஸ் நகரில் ஏற்கனவே இருந்த ஆசிரமத்தை நன்கு மேம்படுத்தினார். இந்த ஆசிரமத்திற்கு நாராயணகுடி சன்னியாச ஆசிரமம் என்று பெயர்.

இதல்லாது, கங்கைக் கரையில் அமைந்துள்ள இன்றைய ரிஷிகேஷ் நகரில், புதிய ஆசிரமம் ஒன்றையும் இவர்

ஏற்படுத்தினார். இந்த ஆசிரமத்திற்கு யோகஸ்ரீபீடம் என்று பெயர்.

சுவாமி விஷ்ணுதீர்த்தர், சக்தி மார்க்க யோக முறை பற்றி ஏராளமான புத்தகங்களையும் எழுதினார். இதன் மூலம் நவீன வரலாற்றுக் காலத்தில் சக்தி மார்க்கத்தைப் பிரபலப்படுத்திய முதலாமவர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

இவரிடம் தீட்சை பெற்று சக்தி மார்க்கத்திற்கு வந்த பலர், நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று சக்தி மார்க்கத்தைப் பரப்பினர். இவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும், இவர்களின் பரம்பரைகள் பற்றியும் எழுத சாத்திய மில்லை என்பதால், இந்த தலைமுறையைச் சேர்ந்த ஸ்வாமி சிவம் தீர்த்தர் மற்றும் அவரது பரம்பரையைப் பற்றி மட்டுமே இங்கே எழுதப் போகிறேன்.

ஸ்வாமி சிவம் தீர்த்தர், இன்றைய பஞ்சாப் மாநிலத்தின் நங்கல் நகரில் பிறந்தவராவார். சக்தி மார்க்க யோக முறை பற்றி ஏராளமான நூல்களை இந்தியில் இவர் எழுதியதால், இந்த யோகமுறை மிகப் பிரபலமாயிற்று. இந்த புத்தகங்கள், இந்தியாவின் பல்வேறு பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரை, இவரது குருவான ஸ்வாமி விஷ்ணுதீர்த்தர், நாராயணகுடி சன்னியாச ஆஸ்ரமத்தின் பீடாதிபதியாகப் பொறுப்பில் அமர்த்தினார்.

ஸ்வாமி சிவம் தீர்த்தர் மூலம் சக்தி மார்க்கத்திற்குக் கொண்டுவரப்பட்ட பலரில் ஒருவர்தான், இன்றைய இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த விஜயவாடாவில் வசித்து வரும் எனது குருவான சுவாமி சகஜானந்த தீர்த்தர். ஸ்வாமி சகஜானந்தர், சுவாமி கங்காதர தீர்த்தரிடமிருந்து ஆரம்பித்த யோக பரம்பரையில் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவர்.

# கிரியை

கிரியை என்றால் என்ன என்பது பற்றி முதலில் விளக்கி விட்டு, இது பற்றிய என்னுடைய அனுபவங்களை சொல்லப் போகிறேன். அப்படிச் செய்யாவிட்டால், சக்தி மார்க்க முறை பற்றி அறியாதவர்கள், சரியாகப் புரிந்து கொள்ளமுடியாது. சக்தி மார்க்க யோக முறை பற்றித் தெரிந்த வாசகர்களுக்கும், இந்த அத்தியாயம் பயனுள்ளதாவே அமையும். ஏனென்றால், கிரியை என்பது, தனிப்பட்ட மனிதர்களின் பிரத்யேக குணாதிசயங்களுக்கு ஏற்ப மாறக் கூடிய தாகும். கிரியை என்பது தனிப்பட்ட மனிதர்களின் குணாதிசயங்களுக்கு ஏற்ப ஏன் மாறுகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டுமென்றால், முதலில், தனிப்பட்ட மனிதர்களின் குணாதிசயம் எப்படி உருவாகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும், தன் புலன்கள் மூலம் இந்த உலக வாழ்வைத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறான். இதன் பலனாக, உலகைப் பற்றிய பல்வேறு சித்திரங்கள் மனதில் தொடர்ந்து பதிவாகின்றன. புலன்கள் மூலமான இத்தகைய மனப்பதிவுகள், நான் என்கிற எண்ணத்துடன் கலக்கும் போது, நமது கர்மாவாக மாறுவதாக யோக நூல்கள் கூறுகின்றன. இத்தகைய கர்மாக்களின் அடிப்படையில், நமது எதிர்கால வாழ்வின் விதி தீர்மானிக்கப்படுகிறது. அதாவது, விதிக்கு அடிப்படை, கர்மா. கர்மாக்களின் அடிப்படையிலான விதி செயல்

படத் தொடங்கும்போது புதிய கர்மாக்கள் உருவாகின்றன. இப்புதிய கர்மாக்கள் மீண்டும் எதிர்கால விதிக்கான அடிப்படையாகின்றன. இப்படியாக, கர்மா-விதி-கர்மா என்கிற சுழற்சி தொடர்ந்து நடந்து கொண்டடேயிருக்கறது- கர்மாக்களில் நல்ல கர்மா, செட்ட கர்மா என்று இரு பிரிவுகள் உண்டு. நல்வினை, தீவினை என்பது இதுவே. நல்ல கர்மாக்கள் மூலம் நம்முடைய எதிர்கால விதி நல்லதாக அமைகிறது.

கெட்ட கர்மாக்களால் கெட்ட விதி வந்து சேர்கிறது. எனவே, நல்வினை, தீவினை இரண்டும் சேர்ந்ததே மனிதனின் விதியாகும்.

அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரைப் பற்றியும், நமக்கு ஏற்படும் ஒவ்வொரு சம்பவம் பற்றியும் ஒவ்வொரு நொடியிலும் பல்வேறு பதிவுகள், ஐம்புலன்கள் மூலம் நம் மனதில் பதிவாகின்றன. இதனால் ஒவ்வொரு மனிதரைப் பற்றியும், ஒவ்வொரு விஷயம் பற்றியும் நமக்கு சில அபிப்ராயங்கள் ஏற்படுகின்றன. இந்த அபிப்ராயங்களுக்கு ஏற்பவே, இந்த மனிதர்கள் அல்லது விஷயங்கள் பற்றிய எல்லாப் பிரச்சனைகளிலும் நாம் எதிர்வினை புரிகிறோம். ஒருவரை நல்லவராக நினைத்தால், அவரது எல்லாச் செயல்களையும் நல்லதாக நம்புவதற்கும், ஒருவரை கெட்டவராக நினைத்தால், அவர் செய்கிற எல்லாவற்றையும் கெட்டதாக நினைப்பதற்கும், இதுவே காரணம். வேலை கிடைக்காமல் விரக்தியில் உள்ள இளைஞர்களைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்று, சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி மூளைச் சலவை செய்வதன் மூலம் தீவிரவாதத்தில் ஈடுபடுத்துவதாகச் சொல்லப்படுகிறதே, அதுவும்கூட இப்படித்தான். ஏனென்றால், திரும்பத் திரும்ப நாம் எதைச் சொல்கிறோமோ, அல்லது எதை நினைக்கிறோமோ, அதை நம்முடைய மனம் நம்புகிறது. திரும்பத் திரும்பச் சொல்லப்படும் விஷயங்கள் பற்றிய மனப்பதிவுகள் மேலும் மேலும் வலுப்படுவதே இதற்குக் காரணம். வாழ்க்கையின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் இது பொருந்தும். ஆனால்,

திரும்பத் திரும்ப நினைக்கப்படுகிற, அல்லது சொல்லப்படுகிற விஷயங்கள் மட்டுமே மனதில் நன்கு பதிவதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, எந்த ஒரு விஷயத்தையும் அடிக்கடி நினைக்காவிட்டால், அது பற்றிய மனப்பதிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போகின்றன.

இப்படி அடிக்கடி நினைக்கப்படுகிற விஷயங்கள் மூலம், குறிப்பிட்ட பிரச்சனைகளில் குறிப்பிட்ட விதத்தில் செயல்படும் பழக்கம் நமக்குள் உருவாகிறது. இது உடல் சார்ந்த பழக்கமாகவும் இருக்கலாம். மனம் சார்ந்த பழக்க மாகவும் இருக்கலாம். இந்தப் பிரச்னையில் இவர் இப்படித்தான் நடந்து கொள்வார்; அல்லது இப்பத்தான் முடிவெடுப்பார் என்று மற்றவர்களைப் பற்றிய ஒரு முடிவிற்கு வர, பல சமயங்களில் நம்மால் முடிகின்றதல்லவா. இதற்கு, அவர்கள் வெளிப்படுத்தும் பழக்கங்களே காரணம். இது போல, நாம் வெளிப்படுத்தும் பழக்கங்களால், மற்றவர்களும் நம்முடைய செயல்பாடுகளை கணிக்க முடியும். இத்தகைய பல்வேறு பழக்கங்களின் தொகுப்பைத்தான் ஒருவரின் குணாதிசயம் என்கிறோம். ஆங்கிலத்தில் இதை கேரக்டர் என்பார்கள். இவர் இப்படிப்பட்டவர் என்ற முடிவிற்கு நாம் வரமுடிவதற்கு, இந்தக் கேரக்டரே அடிப்படை.

இந்த கேரக்டர் அல்லது குணாதசியத்தை உடைத்துப் பார்த்தால், பல பழக்கங்களும், பழக்கங்களை உடைத்துப் பார்த்தால், புலன்களால் ஏற்பட்ட பலப்பல மனப்பதிவுகளும் கிடைக்கும்.

இந்த மனப் பதிவுகள், நம்முடைய இந்தப் பிறவியில் மட்டுமே உருவானவையல்ல. காலம் காலமாக நாமெடுத்த பல பிறவிகளில் வாழ்க்கை அனுபவங்களால் நமக்குள் உருவான மனப்பதிவுகள் ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்து வருகின்றன. இப்படி முந்தைய பிறவிகளில் ஏற்பட்ட மனப்பதிவுகளின் விளைவுகளைத் தீர்க்கவே, நாம் அடுத்தடுத்துப் பிறவியெடுக்க

நேர்கிறது. அதாவது, பிறவிக்கான அடிப்படைக் காரணமே இத்தகைய மனப்பதிவுகள்தான். மனப்பதிவுகளை முழுமையாக அழித்தால் மட்டுமே, பிறவாமை என்னும் மோட்ச நிலை சாத்தியம், மனப்பதிவுகளை யோக சாதனை மூலம் முற்றிலும் அழிக்கும் போது, மனம் கண்ணாடி போல் தெளிவடைந்து, கடவுளை அதில் காண முடியும். வாழும் போதே மோட்ச நிலையை எட்டுவதென்பது இதுவே. இந்த நிலையை எட்டி விட்டால், எஞ்சியுள்ள தேக வாழ்வை புதிய மனப்பதிவுகளே ஏற்படாத விதத்தில் கழித்து விட்டு, அதன் பின் பிறவாமை நிலைக்குச் சென்றுவிடலாம். இப்படி, வாழும்போதே மெய்யறிவு பெற்றபின்னரும், தேகத்தில் ஜீவன் நீடிக்கும் வரை வாழ்ந்து விட்டுப் போகலாம் என்ற நிலையில் உள்ள ஞானிகளே, மற்றவர்களை யோக வாழ்வில் கொண்டுவரும் சக்தியுள்ள குருமார்கள்.

இப்படி, குரு ஒருவர் மூலம் யோக வாழ்விற்கு வரக் கூடிய ஒருவரின் மனப்பதிவுகள், மிக வேகமாக அழியத் தொடங்குகின்றன. அதாவது, சாதாரன மனிதனின் மனப்பதிவுகள் அழிய அழிய அதைவிட வேகமாகப் புதிய பதிவுகள் உருவாவதே இயல்பு. ஆனால் குருவினால் யோக வாழ்வில் புகுந்துவிட்ட ஒருவரின் மனப்பதிவுகள் அழிகின்ற வேகம், புதிய மனப்பதிவுகள் உருவாகும் வேகத்தை விட மிக அதிகம் என்பதால், மொத்தத்தில் மனப்பதிவுகளை அழிக்கும் காரியம்தான் அவருக்குள் முக்கியமாக நடக்கிறது. அதிலும், உலகவாழ்வின் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாத பற்றற்ற மனநிலையும் சேர்ந்துவிட்டால், புதிய மனப்பதிவுகள் உருவாகும் வேகம் இன்னும் குறைந்து விடும். இந்தக் கட்டத்தில், சாதகர் தன் மனப்பதிவுகள் வேகமாக அழிவதை உணரத் தொடங்குவார். மனப்பதிவுகள் இதுபோல அழியும் போது, உடலிலும் மனதிலும் ஏற்படும் எதிர்வினைகளையே கிரியை என்கிறோம்.

கிரியை என்றால் என்ன என்பதை வாசகர்கள் இப்போது எளிதில் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். அதாவது, கேரக்டர்

அல்லது குணாதிசயம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டால், கேரக்டர் எப்படி உருவாகிறது என்பதை அறிந்து கொண்டால், அது எப்படி அழிகிறது என்பதையும், அவ்வாறு அழியும் போது ஏற்படக்கூடிய எதிர்வினைகள் தான் கிரியை என்பதையும் சுலபமாகவே புரிந்து கொள்ள முடியும்.

இன்னம் சற்று விளக்குவதாக இருந்தால், மனித மனதில் பல பிறவிகளாக உருவான மனப்பதிவுகளை, பிரபஞ்சத்தின் ஆதி மிகவேகமாக அழிக்கும்போது, உடலிலும் மனதிலும் உருவாகக் கூடிய எதிர்வினைகளே கிரியை. மற்றபடி, கிரியை என்கிற வார்த்தையின் மொழி ரீதியிலான பொருள் நமக்கு முக்கியமல்ல.

மனப்பதிவுகள் முற்றிலும் அழிந்துவிட்டால், மனம் எண்ணங்களற்ற சமாதி நிலைக்கு சென்று விடும். கண்ணாடிபோல் தெளிவடைந்த இந்த மனதில், கடவுளைக் காணலாம். கடவுளும் நாமும் ஒன்றே என்பதை உணரலாம். இதையே மெய்யறிவு அல்லது மோட்சம் என்கிறோம். ஆனால் கண்ணாடி போல தெளிந்த இந்த மனதிலும், கடவுள் தோற்றமளிப்பது அவரது சொந்த இஷ்டம். இது நம்முடைய இஷ்டத்தின் பேரில் சாதிக்கக் கூடிய ஒன்றல்ல என்பதையும், சமாதி நிலையில் உள்ள ஒருவர்கூட, கடவுளைப் பற்றிய மெய்யறிவைப்பெற, கடவுளின் இஷ்டப்படி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் ஆகலாம் என்பதையும் வாசகர்களுக்கு இங்கே எடுத்துக் கூறி, கிரியை பற்றிய விவாதங்களைத் தொடர்கிறேன்.

பிரபஞ்சத்தின் ஆதிசக்திக்கும் மனிதனுக்கும் இடையிலான ஊடகமாக குருவானவர் செயல்படுவதால்தான், மனப்பதிவுகளை அழிக்கும் கிரியைகள் தூண்டப்படுகின்றன. குருவின் கருணை இல்லாவிட்டால், மனிதனின் இயல்பான வாழ்க்கைச் சக்கரம் தொடர்ந்து சுழன்று கொண்டிருக்கும். பாவ-புண்ணியம், சுக-துக்கம், பிறப்பு-இறப்பு என மாறிமாறி ஏற்பட்டு, புதிய மனப்பதிவுகள் உருவாகிக் கொண்டுதான் இருக்கும். எனவே வாழ்க்கைச்

சக்கரத்தின் இயல்பான சுழற்சி நின்று, மனப்பதிவு அழியத் தொடங்க வேண்டுமானால், குருவின் அருட்பார்வை அவசியம் என்பதை அறிக.

அதேசமயம், மனப்பதிவுகளை அழிப்பதற்கான கிரியைகள், மனிதனின் உடலிலும், மனதிலும், அன்றாட வாழ்விலும் வெளிப்படத் தொடங்குகையில் என்ன நிகழ்கிறது என்பது, நவீன அறிவியலின் பகுத்தறிவுக் கொள்கைகள் மூலம் விளக்க முடியாத மிகப்பெரிய ஒரு மர்மமாகும்.

உதாரணமாக, கிரியையின் வெளிப்பாட்டினால், மனிதனுக்கு திடீரென வியர்த்துக் கொட்டலாம். வெளியில் குளிரான வானிலை நிலவுகின்ற நிலையிலும் இப்படி வியர்வை வெளிப்பட்டால், அறிவியல் காரணங்களால் அதை விளக்க முடியாது அல்லவா ?

அதுபோலவே, கிரியையின் வெளிப்பாடு ஆரம்பித்த உடன், வேறுசிலர், இதுவரை தாங்கள் கற்றறியாத யோகாசனங்களை செய்யத் தொடங்குவார்கள்.

இன்னும் சிலர், இதற்கு முன் ஒரு போதும் கற்காத மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்குவார்கள்.

வேறுசிலர், எதையோ நினைப்பது போல் கதறி அழுவார்கள்; திடீரென வாய்விட்டுச் சிரிப்பார்கள்; ஏதோ விலங்குகள் போல் கத்துவார்கள்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில், கிரியையின் விளைவுக்கு ஆளானவர் திடீரென நடனமாடத் தொடங்குவார். அவர் அந்த நடனத்தை எப்போது கற்றார் என்பது யாருக்குமே தெரியாது. வேறுசிலர் ஆவேசம் வந்ததுபோல் இருந்த இடத்திலேயே கிறுகிறுவென சுற்றுவார்கள். இன்னும் என்னென்ன செய்வார்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் என்ன நடக்கிறது என்று மற்றவர்களுக்குப் புரியாது. அதை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதும் அவர்களுக்குத் தெரியாது.

ஆனால், இது போன்ற செய்கைகள் கிரியையின் வெளிப்பாடு என்பதை சாதகர் நன்கறிவார். இது எல்லாமே மனப்பதிவுகளை அழிப்பதற்கான உடலின் முயற்சி என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். இதனால் முற்றிலும் நன்மைதானே தவிர, எந்த தீங்கும் இல்லையென்பதை அவர் நன்கறிவதால், அதுபற்றிக் கவலைப்படவே மாட்டார்.

அது மட்டுமின்றி கிரியையின் ஆவேசத்தை மற்றவர்கள்தான் கட்டுப்படுத்த முடியாதே தவிர, சாதகர் நினைத்தால், நினைத்த நொடியிலேயே நிறுத்திவிட முடியும். யோக சாதகருக்கு கடவுள் கொடுத்துள்ள வரம் இது. யோக சாதகரின் மனம் கடவுளுக்குத் தெரியும். கிரியையின் வெளிப்பாட்டினால் சாதகருக்கு ஊறு எதுவும் விளைந்த விடக் கூடாது என்பதை கடவுளே பார்த்துக் கொள்கிறார். அதனால்தான், கிரியையின் ஆவேசத்தை நினைத்தவுடன் நிறுத்திக் கொள்ளும் சக்தி யோக சாதகர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனாலும், சில சந்தர்ப்பங்களில் கிரியையின் ஆவேசத்தை சாதகராலும் நிறுத்த முடியாமல் போனால், குருவானவர் அதைக் கட்டுப்படுத்த முடியும்.

குருவானவர், சாதகரின் உச்சந் தலையில் கைவைத்து மந்திரோபதேசம் செய்வதன் மூலமாகவோ, அல்லது வேறு சில உபாயங்களைப் பயன்படுத்தியோ, சாதகரை சக்தி மார்க்கத்திற்கு கொண்டு வருகிறார் என்பதை முன்பே பார்த்தோம்.

இப்படியாக தீட்சை கிடைத்த மாத்திரத்திலேயே, சில சந்தர்ப்பங்களில், சாதகரின் உடலில் கிரியையின் வெளிப்பாடுகள் தோன்ற ஆரம்பித்துவிடும். தீட்சை பெற்ற பிறகு சாதகர் மூன்று நாட்களுக்கு குருவுடனேயே தங்கியிருக்க வேண்டுமென விதிக்கப் பட்டுள்ளது. இந்த மூன்று நாள் காலத்தில், கிரியையின் வெளிப்பாடுகள் ஏற்கனவே தோன்றியிருந்தால், குருவானவர் அதன் தீவிரத்தை சீராக்குவார். வெளிப்பாடுகள் தோன்றவில்லை என்றால் அதைத் தோற்றுவிக்கவும், தேவைப்பட்டால் கிரியையின் வெளிப்பாடுகளைத் தாமதிக்கவும் குருவினால் முடியும்.

இந்த மூன்றுநாள் ஆரம்ப காலத்திற்குப் பிறகு, சாதகர் எங்கு வேண்டுமானாலும் சென்று, யோக சாதனைகளைத் தொடரலாம். தீட்சைக்குப் பிந்திய இந்தக் காலகட்டத்தில், சாதகர் ஓரிடத்தில் அமர்ந்து மந்திரத்தை ஜபம் செய்தால், சிறிது நேரத்தில் கிரியையின் வெளிப்பாடுகள் தொடங்கிவிடும். கிரியையின் நோக்கம், காலம் காலமாக மனதில் சேர்ந்துள்ள அழுக்கை சுத்தமாகத் துடைத்து அழிப்பதே. எனவே, சாதகரின் தனிப்பட்ட குணாதிசயங்களுக்கு ஏற்ப, கிரியை வெவ்வேறு விதங்களில் வெளிப்படும். ஆயினும் எந்த விதமான மனப்பதிவுகள் முதலில் அழியும், எந்த விதமான மனப்பதிவுகள் அடுத்தபடியாக அழியும் என்பதற்கு வரையறுத்த வரிசையில்லை. ஒவ்வொரு சாதகருக்கும் ஒவ்வொரு விதமான மனப்பதிவுகள், ஒவ்வொரு விதமான வரிசையில் அழியலாம். இது, தனிப்பட்ட சாதகரின் தனிப்பட்ட குணாதிசயங்களைப் பொருத்தது. அதாவது, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட குணாதிசயங்கள் இருப்பது போல, கிரியையின் வெளிப்பாட்டிலும் தனிப்பட்ட தன்மை உண்டு. ஆனாலும் கிரியைகள் வெளிப்படத் தொடங்கிவிட்டால் சாதகருக்கு என்ன ஏற்படும் என்பது பற்றி, பொதுவான சில கருத்துக்களும் உள்ளன. அதன் அடிப்படையில், கிரியையின் பொதுவான சில வெளிப்பாடுகளை எல்லா சாதகர்களிலும் காணமுடியும் என்பதையும் உணர்க.

இதுவரை, கிரியையினால் உடல் ரீதியில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிப் பேசினோம். இனி, கிரியையின் இதர விளைவுகளைப் பற்றி பேசலாம் !

கிரியையின் சில விளைவுகளை முற்றிலும் மன ரீதியிலான விளைவுகளாக வகைப்படுத்த முடியும். இத்தகைய விளைவுகள், சாதகரின் மனதிற்குள் ஏற்படுவதால், மற்றவர்கள் இதைக் காணமுடியாது. மனதிற்குள் கிரியை வெளிப்பட ஆரம்பித்து விட்டது என்பதை, சாதகர் மட்டுமே உணர்வார். இதை உணரும்

சக்தி, யோக சாதகருக்கு கடவுள் கொடுத்துள்ள வரமாகும்.

அப்படியானால், இயல்பான எண்ணங்களுக்கும் கிரியையின் விளைவினால் மனதில் ஏற்படும் மாற்றங்களுக்கும் என்ன வித்தியாசம் என்று வாசகர்கள் கேட்கலாம். அதை இப்படி விளக்குகிறேன்:

ஒரு சாதகர், ஆசனத்தில் கண்மூடி அமர்ந்து தியானத்தில் ஈடுபடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். முடிந்தவரை எண்ணங்களை விலக்கிக் கொள்ள அவர் முயல்கிறார். இந்த முயற்சியில் தியானம் சித்திக்கிறது. இந்த தியானநிலையில், அவர் எதைப் பற்றியும் அல்லது யாரைப் பற்றியும் தாமாகவே நினைப்பதில்லை. ஆனால் அப்படியிருந்தும், அவரது மனக் கண்ணில் பலப்பல உருவங்கள் தோன்றி மறைகின்றன. இவ்வாறு தோன்றி மறையும் உருவங்களுக்கு சொந்தமானவர்களை அவர் ஒரு போதும் பார்த்திருக்க மாட்டார். இவ்வாறு மனக்கண்ணில் தோன்றி மறையும் இடங்களுக்கு அவர் ஒரு போதும் சென்றிருக்க மாட்டார். இதுபோலவே, சாதகர் ஒரு போதும் அறியாத விசித்திர விலங்குகள், செடி கொடிகள், மலர், கனிகள், காடு, மலை போன்ற திக்குத் தெரியாத இடங்களும், நவீன உலகில் காண முடியாத வாகனங்கள், ஆயுதங்கள் இன்னும் பல பொருட்களும், மனக் கண்ணில் தோன்றி மறைகின்றன.

இது எப்படி சாத்தியம்?

சாதகர் இதையெல்லாம் நேரில் பார்த்திருக்கவில்லை என்றாலும், புத்தகங்கள் மற்றும் திரைப்படங்களில் பார்த்திருக்கலாமே என்று வாசகர்கள் சொல்லக் கூடும். இத்தகைய எந்த வாய்ப்புகளுமே இல்லாத சாதகர்களுக்கும் இதே போன்ற தோற்றங்கள் மனக் கண்ணில் ஏற்படும் என்பதே இதற்கு என்னுடைய பதில். இந்த பதிலை ஏற்க மறுத்தால், வேறு விதங்களில் விளக்கம்

தேடினாலும் கிடைக்கப் போவதில்லை. ஏனென்றால், இது அறிவியல் அல்லது பகுத்தறிவால் விளக்க முடியாத விஷயம் என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். கிரியையின் விளைவுகளை, அப்படியே ஏற்கவேண்டுமே தவிர, விளக்கம் தேடுவதால் பயனில்லை. கிரியை, கிரியைதான். பலப்பல பிறவிகளில் மனித மனதில் ஏற்பட்ட பதிவுகளை, பிரபஞ்சத்தின் ஆதிசக்தி கிரியையின் போது எதிர்முகமாக அழிக்கிறது என்பதைத் தவிர, கிரியைக்கு வேறு விளக்கம் தர இயலாது.

மனப்பதிவுகளை எதிர்முகமாக அழித்தல் என்று நான் சொல்லும்போது, சிருஷ்டி, சம்ஹாரம் செய்யப் படுவதைக் குறிக்கிறேன். அதாவது, கிரியையின் விளைவினால், மனப்பதிவுகள் அழியும்போது, சிருஷ்டி எந்த ஆதிசக்தியிலிருந்து வந்ததோ அந்த ஆதி சக்தியின் ஊற்றுக்கண் நமக்குள் திறக்கிறது. சிருஷ்டிக்கு அடிப்படையான அதே சக்திதான் இந்த சம்ஹார காரியத்தையும் செய்கிறது. மனப்பதிவுகள் அழிந்து பிறகு, இதே சக்திதான், தெளிந்த மனதில் பிரதிபலித்து ஒளிர்கிறது. இந்த சக்தியும் நாமும் ஒன்றே என்பதை, இந்தக் கட்டத்தில்தான் சாதகர் பளிச்சென உணர்கிறார். இந்த மெய்யறிவை எட்டுவதற்கான வழிமுறையே கிரியை.

உடல் ரீதியிலும் மனோ ரீதியிலும் கிரியை வெளிப்படும் விதம் குறித்து, இதுவரை பார்த்தோம். கிரியை செயல்படுவதன் இன்னொரு விளைவாக, சாதகர், தமது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் கடவுளின் சாந்நித்யம் இருப்பதாக உணர்வார். பிரபஞ்சத்தின் ஆதிசக்தியும், நம் மனதிற்குள் மறைந்திருக்கும் ஆன்மீக சக்தியும் ஒன்றுதான் என்பதை, கிரியையின் இறுதியில் அவர் உணரத்தான் போகிறார் என்றாலும், அதுவரை, பிரபஞ்சத்தின் ஆதிசக்தியை தன் உடலுக்கு உள்ளேயும் வெளியிலும் தனியொரு சக்தியாக அவரால் பார்க்க முடியும் என்பதே இதற்குக் காரணம். இதுபற்றி வேறொரு அத்தியாயத்தில் விரிவாக விளக்கி இருக்கிறேன்.

கிரியை வெளிப்பட ஆரம்பித்த உடன், சாதகரின் உடல் மற்றும்

மனதில் மட்டுமின்றி, அன்றாட வாழ்விலும் பல விசித்திர நிகழ்வுகள், மற்றவர்கள் புரிந்து கொள்ள முடியாத அதிசய அனுபவங்கள் ஏற்படுகின்றன.

உதாரணமாக, மனிதரின் இயல்பான பாவ-புண்ணியக் கணக்கின்படி, வாழ்வின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், அவரது வலது காலில் பலமாக அடிபட வேண்டுமென்பது, விதியென வைத்துக் கொள்வோம். மனிதர் அடிபட வேண்டிய காலத்திற்கு முன்பாகவே சக்திமார்க்கத்தில் ஈடுபட்டு, கிரியையின் வெளிப்பாடுகள் தொடங்கி இருந்தால், இயல்பான வேகத்தைவிட அதிக வேகத்தில் மனப்பதிவுகள் அழிக்கப் படுவதன் காரணமாக, வலது காலில் சிறு காயத்துடன், அவர் தப்பிவிடுவார். சிறு காயம் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் தானாகவே உருவாகும்! விதியின்படி இன்னும்பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் நீரில் மூழ்கி இறக்க வேண்டும் என்றிருந்தால், சாலையில் செல்லும்போது யாரோ ஒருவர் தெளிக்கும் நீர் அவர்மேல் படுவதுடன், சில நாட்களிலேயே பாவக் கணக்கு தீர்ந்துவிடும்! பாவக் கணக்கைப் போலவே, புண்ணியக் கணக்கும் விரைவான வேகத்தில் தீர்க்கப்படுவதால், விதியின்படி, சாதகரின் வாழ்க்கையில் ஏற்படவேண்டிய பெரிய அளவிலான சந்தோஷங்களும், சிறு மகிழ்ச்சியாக முடிந்து போகும். அதாவது கிரியையின் வெளிப்பாடு ஆரம்பித்துவிட்டால், சாதகரின் வாழ்வில் பெரிய சந்தோஷங்களும் இல்லை; பெரிய துக்கங்களும் இல்லை. சிறுசிறு இன்ப-துன்பங்களின் வடிவில், சாதகரின் பாவ-புண்ணியக் கணக்கு வேகமாகத் தீர்க்கப்படுவதால்தான், இன்னும் பல பிறவிகள் காத்திருக்க வேண்டிய அவசியமின்றி, சாதகருக்கு இந்தப் பிறவியிலேயே மெய்யறிவு கிடைத்துவிட வாய்ப்பாகிறது. அதாவது, கடவுளைப் பற்றிய மெய்யறிவு கிடைக்க, மனப்பதிவுகளை முற்றிலுமாகத் துடைத்தழிக்க வேண்டும்; இயல்பான வாழ்வில் நாம் கற்ற அனைத்தையும் மூட்டைகட்டி வைத்தபிறகே, மனதிற்குள் தெய்வீகம் ஒளிரும்!

# ஆற்றலின் பல்லடுக்கு வெளிப்பாடு

யோக சாஸ்திர அனுகுமுறையின்படி, மனித உடலின் அமைப்பு எப்படிப்பட்டது என்பது பற்றிய விளக்கத்துடன் இந்த அத்தியாயத்தைத் துவக்க விரும்புகிறேன். நவீன உடல் பகுப்பாய்வு அறிவியலின் கருத்துக்களை மட்டுமே அறிந்து வைத்துள்ள வாசகர்கள், யோக சாஸ்திரங்களின் கருத்துப்படியான உடல் அமைப்பையும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே இதன் நோக்கம்.

யோக சாஸ்திரப்படியான உடல் அமைப்பை, நவீன அறிவியலின் படியான உடல் அமைப்புடன் ஒப்பிட்டுக் குழம்ப வேண்டாம் என வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நவீன அறிவியல்கூட, மனிதனின் உடற்கூறுகளை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதே உண்மை.

மனித உடலானது, தனக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தியை மையமாகக் கொண்டு, ஒன்றின்மேல் ஒன்றாக ஐந்து அடுக்குகளின் வடிவில் அமைந்திருப்பதாக, யோக சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

இதில் முதலாவது உள் அடுக்கு, ஆனந்தமய கோசம் என்று சொல்லப்படுகிறது. யோக சாஸ்திரங்களில் மாயை என்று அறியப்படுகின்ற, எல்லையற்ற பிரபஞ்ச சக்தியின் மாய

வடிவத்தைச் சுற்றி அமைந்துள்ள இந்த அடுக்கை, காரணசரீரம் என்றும் சொல்கிறார்கள். இந்தக் காரண சரீரத்தை அஸ்திவாரமாகக் கொண்டே, பருவவடிவ வெளி உடலின் எல்லாக் கூறுகளும் கட்டியமைக்கப்பட்டுள்ளன.

இந்த உள் அடுக்கு பற்றி, இதற்கு மேல் சொல்ல முடியவில்லை என்பதற்காக, வாசகர்கள் என்னை மன்னிக்கவும். மிகப் பெரிய ஆன்மீக விஷயமான இதைப் பற்றி அதிகம் பேசக் கூடிய தகுதி எனக்கில்லையென்பது மட்டுமல்ல; இந்த நூலின் தேவைகளுக்கு, அதைப் பற்றி அதிகம் பேச வேண்டிய அவசியமுமில்லை.

உடலின் இரண்டாவது அடுக்கு, விஞ்ஞானமய கோசம் என்று சொல்லப்படுகிறது. அறிவின் அடுக்கு என்று இதை மொழிபெயர்க்கலாம். இந்த இரண்டாவது அடுக்கில்தான், ஐம்புலன்களால் ஏற்படும் மனப்பதிவுகள் பதிவாகின்றன. மனிதனின் மனம், உள்மனம் இரண்டுக்கும் ஆரம்பப் புள்ளியாக அமைவது, இந்த அடுக்கே.

இந்த இரண்டாவது அடுக்கின் மீதுதான், யோகிகள் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள்! இந்த அடுக்கில் அமைந்துள்ள, நான் என்கிற எண்ணத்தையும், புலன்களால் ஏற்படும் மனப்பதிவுகளையும் முற்றிலுமாக அழிக்கத் தவறினால், யோக முயற்சிகளின் முக்கிய நோக்கமான, எண்ணங்களற்ற சமாதி நிலையை எட்டமுடியாது. இந்த நிலையை எட்டி, உடலின் விஞ்ஞான மய கோசத்தை நம்கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டால், அதற்கு மேல் பருஉலகின் பௌதீக விதிமுறைகள் எதுவும் நம்மைக் கட்டுப்படுத்த முடியாது!

பௌதீக விதிகளைக் கடந்து நிற்கும் இந்தநிலை மிகவும் வியப்பானதே என்றாலும், தன்னைத் தானே உணர்தல் என்னும் மெய்யறிவு நிலை இதுவல்ல என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இந்த சமாதி நிலையில் சாதகர் பௌதீக விதிகளைக் கடந்து நிற்பது உண்மைதான் என்றாலும்,

இப்போதும்கூட, யோக விதிகளுக்குக் கட்டுப்பட்டவராகவே அவர் நீடிக்கிறார். பௌதீக விதிகளுக்கு மேல், யோகசாஸ்திர விதிகளையும் கடந்து, இன்னும் பலபடி உயரும் போதுதான், மெய்யறிவு சாத்தியமாகும். இப்படி, பௌதீக விதிகள், யோகசாஸ்திர விதிகள் இரண்டையும் கடந்து நிற்கும் நிலை எப்படிப் பட்டது என்பதை, நான் மட்டுமல்ல, எவருமே முழுமையாக விளக்க முடியாது.

உடலின் மூன்றாவது அடுக்காக, மனோமய கோசம் அமைந்துள்ளது. இது மனதின் அடுக்கு என்பதை பெயரிலிருந்தே புரிந்து கொள்ளலாம். இந்த அடுக்கில் உள்ள மனம்தான், ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துகிறது. உடலுக்குள் உறைந்திருக்கும் ஆன்மீக சக்தி, சுதந்திரமாக செயல்படுவதற்கான தனது அதிகாரத்தை, இந்த மனோமய கோசம் மூலமாகவே செயல் படுத்துகிறது.

மனோமய கோசத்திற்கு அடுத்தபடியக, உடலின் நான்காவது அடுக்காக, பிராணமய கோசம் அமைந்திருப்பதாக யோகசாஸ்திர நூல்கள் கூறுகின்றன, ஜீவசக்தி அடுக்கு என்று இன்னொரு விதமாக இதைச் சொல்லாம். இந்த அடுக்கில், ஐந்து பெரிய, ஐந்து சிறிய ஜீவசக்திகள், சிக்கலான முறையில் பின்னிப் பிணைந்து, சுவாசம், ஜீரணம், ரத்த சுழற்சி, இனவிருத்தி போன்றவற்றை செயல்படுத்துகின்றன. சில தாந்திரீக முறைகளில் இந்த நான்காவது அடுக்கைத்தான் பைசாச சரீரம் என்றும் அழைக்கிறார்கள்.

இந்த நான்காவது அடுக்கிற்கு மேல், இறுதியான ஐந்தாவது அடுக்காக அமைந்திருப்பதே, மனிதனின் பருவுடல் அல்லது தேகம். நாம் உண்ணும் உணவைப் பல கூறுகளாகப் பிரித்து மறு கட்டுமானம் செய்வதன் மூலமாகவே பருவுடல் உருவாவதால், இந்த ஐந்தாவது வெளியடுக்கு, அன்னமய கோசம் என்று அழைக்கப்படுகிறது.

ஆக, ஆனந்த மய கோசத்தில் ஆரம்பித்து அன்னமய கோசம்

வரை, ஐந்து அடுக்குகளாக, மனித சிருஷ்டி அமைந்துள்ளது. இதில் முதலாவது உள்ளடுக்கான ஆனந்த மய கோசத்தை, காரண சரீரம் என்பார்கள். இதற்கு மேல் அமைந்துள்ள அடுத்த மூன்று அடுக்குகளுக்கு, மொத்தமாக, சூட்சும சரீரம் என்று பெயர். கண்ணுக்குத் தெரியாத இந்த சூட்சும சரீரத்தின் மேல், கடைசியாக அமைந்துள்ள வெளியடுக்கே, ஸ்தூல சரீரம் என்கிற பருவுடல்.

இந்தப் பருவுடலே, மேலும் செயல்படமுடியாத அளவிற்குத் தேய்மானம் அடையும் போதோ அல்லது ஆன்மா குடிகொண்டிருக்க முடியாத அளவிற்குத் தகுதிக்குறைவு அடையும் போதோ, இறந்து போகிறது.

மரணத்திற்குப்பின், ஸ்தூல சரீரத்திற்குள் இதுவரை அடைப்பட்டுக்கிடந்த இதர நான்கு சரீரங்களும் அதிலிருந்து வெளியேறினாலும், பிறகு மீண்டும் புதிய சரீரம் ஒன்றுக்குள் புகுந்து, மறு அவதாரம் செய்கின்றன. ஒரு சரீரத்திலிருந்து விடுபட்ட ஸ்தூல சரீரம் மீண்டும் எந்த விதமான சரீரத்தில் புகும் என்பது, முந்தைய பிறவிகளில் ஐம்புலன்கள் மூலம் உருவான தனிப்பட்ட குணாதிசயங்களைப் பொருத்தது.

ஆக, ஸ்தூல சரீரத்திற்கு அடிப்படையான காரண சரீரம், அதியுன்னத ஆதி சக்தியின் மூல வடிவமான மாயையினால் ஆனது.

இந்த மூலவடிவமும், கடவுளின் எல்லையற்ற சக்தியும் ஒன்றுதானே என்று வாசகர்கள் கேட்கக் கூடும். ஆம் இரண்டும் ஒன்றுதான், உண்மையில், கடவுளின் ஆதி சக்தியில்லாமல், மனிதனின் ஆன்மா இல்லை. மனித ஆன்மாவின்றி கடவுளின் ஆதிசக்தியில்லை. இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.

இன்னொரு விதமாகச் சொல்வதானால், கடவுள் சக்தியின்றிக்

## பராசக்தி

கடவுளே இல்லை. ஹாலிவுட் படங்களில் வரும் ஸ்பைடர் மேனுக்கு, சூப்பர் சிலந்தியின் சூப்பர் சக்தியில்லை என்றால், எப்படி ஸ்பைடர்மேன் இல்லையோ, அதுபோலத்தான் இதுவும். சமஸ்கிருத நூல்களில் சொல்லப்படும் சக்திமான் கதாபாத்திரத்திற்கும் இது பொருந்தும்.

அதுபோல, கடவுளின் அளப்பறிய சக்தி, எல்லையற்ற ஆன்மாவாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

அதாவது, சக்தியும், ஆன்மாவும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை. சக்தியில்லையேல் சிவமில்லை என்று சொல்வது இதைத்தான். சக்தி-ஆன்மா இரண்டுமாகத் திகழும் கடவுளின் பெருமைகளை நம்மால் முழுமையாக விளக்க முடியாததற்கு காரணம், நம் மொழிகளின் குறைபாடுமட்டுமேயல்ல. எல்லாவற்றையும் கடந்த பேருண்மையான கடவுளை யாரும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது என்பதே முக்கியக் காரணம்.

இதைப் பற்றி இன்னும் சற்றுப் பேசலாம்.

அதாவது, இந்த பிரபஞ்சத்திற்கும் அதற்கு அப்பாலும் அகண்ட பேருண்மையாகத் திகழ்வது, கடவுளின் தெய்வீக சக்தியே. இந்த தெய்வீக சக்தியின் நிஜமான தன்மைகளை யாரும் எந்தக் காலத்திலும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. நானாக இருந்தாலும், நீங்களாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும், இது பொருந்தும். நான் கடவுளைப் புரிந்து கொண்டவனாக இருந்தால், இப்போது இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கவே மாட்டேன்.

புரிந்துகொள்ள முடியாத இந்த தெய்வீக சக்தியிலிருந்து தோன்றுவதே நம்முடைய உடலின் அடிப்படை உள்ளடுக்கான ஆனந்த மயகோசம். இந்த உள்ளடுக்கை மீண்டும் தெய்வீக சக்தியில் கரைத்து விட்டால், அப்போது கிடைக்கும் அனுபவத்தையே மெய்யறிவு என்கிறோம்.

ஆனால், கடவுளை அறியக் கூடிய இந்த மெய்யறிவு யாருக்குக் கிடைக்க வேண்டுமென்பது, கடவுளின் சித்தப்படி நடக்க

வேண்டிய ஒன்று. உலகைக் கட்டுப்படுத்தும் பௌதீக சக்திகளையும், அதற்குமேல், மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளையும் கட்டுப்படுத்தக்கூடிய யோகவிதிகளையும் கடந்து சென்றால்தான், இது சாத்தியம். இது அப்படி நடக்க வேண்டுமானால், கடவுள் கருணை வைத்தால் மட்டுமே முடியும். எனவேதான், அனைவரும் கடவுளிடம் சரணாகதி அடைய வேண்டியதன் அவசியத்தை எல்லா மதங்களுமே வலியுறுத்துகின்றன.

ஆனந்த மய கோசத்தை சுற்றியமைந்துள்ள அடுத்த மூன்று அடுக்குகளையும், மொத்தமாக, சித்தசக்தி என்று சொல்வதுண்டு. இது, ஆனந்த மயகோசத்தில் அடங்கியுள்ள அதிசூட்சும சக்திக்கு அடுத்த நிலையில் உள்ள, சற்றே ஸ்தூலமான சக்தியாகும்.

பொதுவாக, இதை சித்சக்தி என்று சொன்னாலும், சித்சக்தி, புத்திசக்தி, பிராணசக்தி ஆகிய மூன்று பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன. இதில் புத்தி சக்தியென்பது, அறிவின் சக்தி. சித் சக்தியென்பது, மனதின் சக்தி. பிராணசக்தியென்பது, உயிர்சக்தி. இங்கே நான் பயன்படுத்தியுள்ள ஒவ்வொரு பெயரையும் வெவ்வேறு சமஸ்கிருத நூல்களில் பயன்படுத்தக் காணலாம். பெயர் என்னவாக இருந்தாலும், ஒரே சக்திதான் இப்படிப் பல வடிவங்களை எடுக்கிறது என்பதையும், உடலின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொரு சக்தி கட்டுப்படுத்துகிறது என்பதையும், வாசகர்கள் புரிந்து கொண்டால் போதுமானது.

ஆக, உடலின் முதலாவது உள்ளடக்கில், ஆதிசக்தி தன் தூய வடிவில் குடிகொண்டு, மாயை என்னும் பிரபஞ்ச மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகிறது. அடுத்த மூன்று அடுக்குகளில், ஆதிசக்தியின் சற்றே ஸ்தூலமான வடிவம் அடங்கியுள்ளது. அதற்கும் மேலேயுள்ள கடைசி அடுக்கான அன்னமைய கோசம் என்னும் பருவுடல்தான், ஆதிசக்தியின் முற்றிலும் ஸ்தூலமான புறவடிவமாகும். இந்தப் பருவுடல், வாழ்ந்து நடமாடுவதற்கு ஏற்ப கடவுள் படைத்துள்ள பருவுலகமே, இயற்கை அல்லது பிராக்ருதி

எனப்படுகிறது.

இப்படியாக, அதிசூட்சும நிலையில் உள்ள ஆதிசக்தி, படிப்படியாக ஸ்தூல நிலைக்குச் செல்லும் போக்கை அப்படியே திருப்பிப் பார்த்தால், ஸ்தூல சக்தியின் மூலம் செயல்படும் பௌதீக விதிகளை தாண்டிச் சென்றுதான் மீண்டும் சூட்சும நிலையை எட்ட வேண்டும்; பௌதீக விதிகளின் ஆதிக்கத்தை முதலில் நிறுத்த வேண்டும் என்று நான் சொல்வதன் பொருளும் உங்களுக்குப் புரியும். பௌதீக விதிகள் முறிந்து போகும் இந்த நிலைக்கு, யோகி ஒருவர் சென்று விட்டால் பௌதீக விதிகளுக்கு அப்பாற்பட்ட அற்புதகங்களைப் படைக்க அவரால் முடியும்! ஏனென்றால், அவர் பௌதீக விதிகளுக்கு கட்டுப்பட்டவரல்ல!

ஆனால், இத்தகைய அற்புத சக்தியை சாதாரண மனிதர்கள்தான் அற்புதமாகப் பார்ப்பார்களே தவிர, அந்த சக்தியை அடைந்துவிட்ட யோகிக்கு, அது ஒரு அற்புதமே அல்ல. ஏன் என்றால், ஆன்மீக நிலையில் அடுத்தடுத்த கட்டங்களுக்கு உயரும்போது, இத்தகைய அற்புதங்கள் எல்லாம் நடப்பது இயற்கையென்பதை, அவர் நன்றாகவே புரிந்து கொள்வார்.

ஆனால் இந்த நிலையிலும், யோகியானவருக்கு பல அற்புத சக்திகள் கிடைக்கலாமே தவிர அவர் இன்னும்கூட கடவுளை உணர்ந்தவரல்ல. பௌதீக சக்திகள் முறிந்து போன பிறகும், மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகளையும் கட்டுப்படுத்தக் கூடிய யோக விதிகள் இன்னும் செயல்பாட்டில் இருப்பதே இதற்குக் காரணம். யோகியானவர், இந்த யோகவிதிகளையும் கடந்து சென்றால்தான் கடவுளை உணரமுடியும், ஏனென்றால், கடவுள் என்பவர் ஸ்தூலப்பிரபஞ்சத்தின் பௌதீக விதிகளுக்கும், அதைத் தாண்டிய சூட்சமபிரபஞ்சத்தின் யோக விதிகளுக்கு அப்பாற்பட்டவர். இத்தகைய எந்த ஒரு விதியுமே கடவுளைக் கட்டுப்படுத்த முடியாது. அதே மாதிரியான ஒரு நிலைக்கு யோகியானவர் உயரும் போது தான், கடவுளைப் புரிந்து கொள்ள

இயலும்.

இந்த இடத்தில், மனித உடலின் மூளை-தண்டுவட அமைப்புக் குறித்து, யோகாவின் கோணத்திலிருந்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். யோகாவின் கருத்துப்படி, மனித உடலின் அமைப்பானது, மூளை- தண்டுவட மண்டலத்திற்குள் மறைந்து கிடக்கும் பிராண சக்தியுடன் சம்பந்தப்பட்டதே தவிர, எலும்பு மற்றும் தசைகளின் அமைப்பிற்கு இதில் எந்த முக்கியத்துவமும் இல்லை. மூளை-தண்டுவட மண்டலத்தை வெட்டிக் கூறுபோட்டுப் பார்த்தாலும், இந்த பிராண சக்தியைக் கண்டுபிடிக்க முடியாது. சரி, தசை மற்றும் எலும்புகளை வெட்டிப் பார்க்க வேண்டாம்; மூளை-தண்டுவட மண்டலத்தின் மின்சார அதிர்வுகளைப் பதிவு செய்யும் கருவியின் மூலம் இந்த சக்தியை உணர முடியுமாவென்றால், அதுவும் முடியாது. ஏனென்றால், மின்சார அலைகள் கூட பருவுடலுடன் சம்பந்தப்பட்ட ஸ்தூலநிலை அதிர்வுகளே. ஆனால் மூளை-தண்டுவட மண்டலத்திற்குள் அடங்கியுள்ள பிராணசக்தியோ, அதி சூட்சுமமானது. எனவே, நவீன அறிவியலின் எந்தக் கருவியும் இந்த சக்தியை அளக்கவோ, பதிவு செய்யவோ இயலாது.

யோக சாஸ்திரங்களின்படி, மூளை-நரம்பியல் மண்டலத்தில் ஆரம்பித்து, சிரசின் உச்சிவரை, ஏழு சக்கரங்கள் என்று சொல்லப்படுகின்ற, ஏழு சக்தி மையங்களில், இந்தப் பிராணசக்தியானது தங்க முடியும்.

இதில் முதலாவதான வேர்ப்பகுதிச் சக்கரத்திற்கு, மூலதார சக்கரம் என்று பெயர். ஆசன வாய்க்கும், ஜனன உறுப்புக்கும் இடையே, தண்டுவடத்தின் வேர்ப் பகுதியில் இந்தச் சக்கரம் அமைந்துள்ளது. சாதாரணமாக, இந்தச் சக்கரத்தில்தான், குண்டலினி சக்தி உறங்கும் நிலையில் தங்கியுள்ளது. இந்த சக்கரம் பற்றி, யோக நூல்களில் மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இந்தச் சக்கரத்தின் அமைப்பு மிகவும் சிக்கலானது என்றாலும்,

சக்தி சக்கரங்கள் என்றால் என்ன என்பதை வாசகர்கள் பொதுவான முறையில் புரிந்து கொள்ள ஏதுவாக, குறிப்பாக இந்த ஒரு சக்கரத்தின் அமைப்பை மட்டும், இங்கே விளக்கப் போகிறேன்.

மற்ற சக்கரங்களின் அமைப்பையும் வாசகர்கள் விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்பினால், இதைப் பற்றி இணையதளத்தில் பல புத்தகங்கள் கிடைக்கின்றன. அதைப் படிக்கலாம்.

எல்லா சக்கரங்களும், தாமரைப்பூ வடிவில் அமைந்திருப்பதாக, யோக சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இதில் மூலதார சக்கரம் என்னும் தாமரைப்பூவில், நான்கு மடல்கள் உள்ளன. இந்நான்கு மடல்களின் நிறம் சிவப்பு. குண்டலினி சக்தியின் நான்குவிதமான பிரிவுகளை, இந்நான்கு பிரிவுகள் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். கண்ணால் பார்க்கக் கூடிய நிறமாலையில் ஒவ்வொரு நிறத்திற்கும் ஓர் அதிர்வெண் இருப்பது போல, மூலதார சக்கரத்தின் நான்கு மடல்களுக்கான சிவப்பு நிறம், அதற்குள் அடங்கியுள்ள குண்டலினி சக்தியின் அதிர்வலைகளால் ஏற்படுவதாகும்.

இந்நான்கு மடல்களில் ஒவ்வொன்றிலும், ஒரு சமஸ்கிருத எழுத்து, பொன்னிறத்தில் பொறிக்கப் பட்டள்ளது. வ, கூடி ஸ ஆகியன இந்நான்கு எழுத்துகளாகும். அதாவது, இந்நான்கு எழுத்துக்களை உச்சரிக்கும் போது எழக்கூடிய ஒலி, மடல்களுக்குள் அடங்கியுள்ள சக்தியுடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக இதற்குப் பொருள்கொள்ள வேண்டும்.

ஏனென்றால், ஒலியென்பதே அடிப்படையில் ஆற்றலின் அதிர்வுதான். எழுத்துக்களின் ஒலி வடிவங்களுக்கு குறிப்பிட்ட அதிர்வலைகள் உண்டு என்பதை விஞ்ஞானமும் ஒப்புக் கொள்கிறது.

மேற்சொன்ன அமைப்பில் உள்ள தாமரைப் பூவின் முழுவடிவமே, மூலாதார சக்கரம். தாமரைப் பூவின் மடல்கள், அதன் நிறம்,

அதிலுள்ள எழுத்துக்கள், அதன் நிறம் இப்படி ஒவ்வொன்றுக்கும் உள்ளார்ந்த ஒரு அர்த்தம் இருக்கிறது.

இந்தப் பூவிற்குள் ஒரு பகுதியில் நான்கு பக்கங்களைக் கொண்ட ஒரு கனசதுரமும், அதைச் சுற்றி எட்டு ஈட்டிகளும் இருப்பதாக யோக நூல்கள் விவரிக்கின்றன. இந்த கனசதுரம் என்பது, ஐம்பூதங்களில் ஒன்றான நிலத்தைக் குறிப்பதாகும். எட்டு ஈட்டிகள் என்றால், எட்டு திசைகள். இந்த கனசதுரம், ஈட்டிகள் இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், பூமியைக் குறிக்கிறது. பூமியென்பது, அடிப்படையான ஆதிசக்தியின் ஸ்தூல வடிவத்திற்கான குறியீடு என்பதை, நாம் சுலபமாகப் புரிந்து கொள்ளமுடியும்.

பூமி தத்துவத்தைக் குறிக்கக் கூடிய இந்தப் பகுதியின் நிறம், மஞ்சள் என்றும் யோக சாஸ்திரநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிவியல் பூர்வமான மின்காந்த நிறமாலையில், மஞ்சள் நிறத்திற்கென ஓர் அதிர்வெண் உண்டு என்பதை வாசகர்கள் அறிவார்கள். எனவே, இந்த மஞ்சள் நிறமென்பதும், ஒருவித ஆற்றலையே குறிக்கிறது. மேலும், யோக சாஸ்திரங்களின்படி, பூமிதத்துவத்தின் நிறம், மஞ்சளாகும். இன்னும் சொல்லப்போனால், மஞ்சள் என்பது (வாசனை அல்லது நாற்றத்தை) முகரும் சக்தியைக் குறிப்பதாகும். இந்த மஞ்சள் பிராந்தியம் முழுவதும், லம் என்கிற சமஸ்கிருத எழுத்து பொறிக்கப்பட்டுள்ளதாம். அதாவது, லம் என்கிற எழுத்தின் தொனி, மஞ்சள் என்கிற நிறத்தின் அலையதிர்வைச் சுட்டிக்காட்டுகிறது.

பூவிற்குள்ளே, தலைகீழான முக்கோணம் ஒன்றும் உள்ளது. தலைகீழ் முக்கோணம் என்பது, பெண் ஜனன உறுப்பின் அடையாளமாகும். (சக்தி உபாசகர்களான சாக்தர்களின் புனித நூல்களில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது)

இந்தத் தலைகீழ் முக்கோணத்திற்குள், க்லிம் என்கிற மற்றொரு சமஸ்கிருத எழுத்து காணப்படுகிறது. தலைகீழ் முக்கோணத்தின் நிறம் சிவப்பு என்றும் சொல்லப்பட்டுள்ளது. க்லிம் என்கிற எழுத்தின் ஒலி, இன அவிவிருத்திக்கான பாலியல் சக்தியைக் குறிப்பதாகும். சிவப்பு நிறம், காம உணர்வின் அடையாளம்.

முக்கோணத்திற்கு மேல், சிவலிங்கம் போன்ற ஒரு அமைப்புக் காணப்படுகிறது. லிங்கம் என்பது ஆண்குறியின் அடையாளமாகும். லிங்க வடிவில் சிவனை வழிபடும் சாதகர்கள், சிருஷ்டியின் ரகசியம் ஆண்குறியில் அடங்கியிருப்பதாகக் கருதி ஆண்குறியைத்தான் வழிபடுகிறார்கள் என்பதையறிக.

குண்டலினி சக்தியானது, பாம்பு வடிவில் ஆண்குறியை சுற்றிலும், மூன்றரை சுற்றுகளாக சுற்றிக்கிடப்பதாகவும், பாம்பின் வாய், ஆண்குறியின் முனைப் பகுதியை மூடிய நிலையில் இருப்பதாகவும், உருவகம் செய்யப்படுகிறது.

இதுவரை, மூலாதார சக்கரத்தின் முழுமையான வடிவமைப்பை, விளக்கமாகப் பார்த்தோம். பிரபஞ்சத்தின் பேரண்ட சக்தியானது, மனித உடலுக்குள் எவ்வாறு அடைப்பட்டுக்கிடக்கிறது என்பதையும், அந்த சக்தியைத் தூண்டுவதன் மூலம், அதன் நிஜமான வலுவை வெளிக்கொணர முடியும் என்பதையும், வாசகர்கள் இப்போது புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். அதே சமயம், மனித உடலுக்குள் புதையுண்டு கிடக்கும் குண்டலினி சக்தியை வெளிக்கொணர்வது, அவ்வளவு சுலபமான காரியமல்ல. முதற்கண் இந்த சக்தி, உடலுக்குள் எங்கே மறைந்திருக்கிறது என்பதை, யோக சாஸ்திரங்கள் விளக்கியுள்ள போதிலும், அறிவியல் உபகரணங்களால் அந்த இடத்தைக் கண்டுபிடிக்க இயலாது. ஏனென்றால், குண்டலினி சக்தியை உள்ளடக்கிய தாமரைப் பூ வடிவ அமைப்பு, முற்றிலும் ஆதிசூட்சும சக்திப் படிமங்களாலானது. அதி நுண்ணிய ஆற்றல் படிமங்களையே கற்களாகக் கொண்டு கட்டப்பட்ட அதி சூட்சும

வீடு என்று, வேறு வார்த்தைகளில் இதை விவரிக்கலாம். இத்தகைய அதிசூட்சும ஆற்றல் படிமங்கள் ஒவ்வொன்றும், வெறும் ஜடக் கற்களல்ல. பிரபஞ்சத்தின் ஆன்மாவான பரப்பிரம்மம் பற்றிய முழுமையான உணர்வு, இந்த ஆற்றல் படிமங்களுக்கு உண்டு. இதனால் இந்த ஒவ்வொரு ஆற்றல் படிமத்தையும் கடவுளாகவே கருத முடியும். கடவுளை உணர்வதற்கான கருவி எதையும் அறிவியல் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இனியும் கண்டுபிடிக்க முடியாது! எனவேதான், சக்தி சக்கரங்களை அறிவியல் கருவிகளால் அளந்தறிய முடியாது என்றோம்.

இதை இன்னும் கூடக் கொஞ்சம் விளக்க விரும்புகிறேன்.

சக்தியும் சிவமும் ஒரு போதும் பிரிந்திருக்க முடியாது. அதாவது, ஆற்றலும் ஆன்மாவும் ஒன்றே என்பதை ஏற்கனவே பார்த்தோம். ஆனால் சக்தியானது, எந்த விதமான வேலையைச் செய்கிறது என்பதைப் பொருத்து, அதற்குப் பல பெயர்கள் உண்டு. அதாவது, பிரபஞ்சத்திலும் மனித உடலுக்குள்ளும் சக்தி பல வடிவங்களில் வெளிப்படுவதால், இந்த ஒவ்வொரு வடிவத்தையும் ஒரு தேவதையாக உருவகப்படுத்திப் பெயர் வைத்துள்ளனர். சக்தியின் பல வடிவங்களுடன் சம்பந்தப்பட்ட இந்த தேவதைகளையும் கடவுளாகவே கருதமுடியும் என்றாலும், தேவதைகள், முழுமுதற் கடவுளல்ல. முழுமுதற் கடவுளையே இது போலப் பிரித்துப் பார்க்கும் வழக்கத்தை வாசகர்கள் புரிந்து கொள்ளாவிட்டால், கடவுள் தத்துவத்தைப் புரிந்து கொள்வது கடினமாகும்,

பிரபஞ்ச இயக்கத்திற்கும் மனித உடலின் இயக்கத்திற்கும் காரணமான சக்தியின் பல வடிவங்களைக் காட்டிலும், மனிதனுக்குள் உறைந்துகிடக்கும் குண்டலினி சக்தி, பல மடங்கு சூட்சுமமானது என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன். இந்த அதிசூட்சும சக்திதான், மனிதனாக வெளிவடிவம் எடுக்கிறது. மனிதனாக வெளிவடிவம் எடுத்த பின்னரும் இதே சக்திதான் மனித உடலுக்குள் உறைந்து

கொண்டு, பிரபஞ்சம் என்கிற மாயத் தோற்றத்தை மனிதனுக்குக் காட்டிக் கொண்டேயிருக்கிறது.

குண்டலினி சக்தி உறைந்துள்ள மூலாதார சக்கரத்திலும், அடுத்தடுத்த நிலைக்கு இந்த சக்தி உயரும்போது எங்கே உறையப்போகிறதோ அந்த ஏனைய சக்கரங்களிலும், சில தேவதைகள் மற்றும் இன்னபிற வாஸ்துக்களும் உறைந்திருப்பதாக யோக சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. ஆனால் இங்கே அதைப்பற்றித் தெரிந்து கொள்வதால் நமக்கு எந்தப் பயனும் கிடையாது என்பதால், அதை விட்டுவிடுகிறேன்.

அதுசரி, இவ்வளவு நேரமாகப் படித்த விஷயங்களால் நமக்கு என்ன பலன் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. கடவுள் தத்துவம், குண்டலினி சக்தி போன்ற ஆன்மீக விஷயங்களை அதிகம் தெரிந்து கொண்டால், நான் இப்போது செய்வது போல, புத்தகம் எழுதலாம். அல்லது சொற்பொழிவு நிகழ்த்தலாம். இந்த இரண்டும்தான் பலனே தவிர, இத்தகைய ஏட்டறிவினால் மனதிற்கு நிம்மதியோ மகிழ்ச்சியோ கிடைத்துவிட முடியாது. இது போன்ற விஷயங்களைப் பயில்வதால், அறிவுசார்ந்த ஒரு திருப்தி கிடைக்கத்தானே செய்கிறது என்று உங்களில் யாராவது சொன்னால், சரி, அதையும் மற்றொரு பலனாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு மேல் ஒரு பயனும் இல்லை!

அப்படியென்றால், நாம் இதையேன் பயில்கிறோம்? மனித உடலுக்குள் உறைந்துகிடக்கும் குண்டலினி சக்தியைப் தட்டியெழுப்பி, ஆன்மீக நிலையில் மேலும் மேலும் உயர்ந்து, கடவுளை அறிவதே நம் இறுதி நோக்கமென்றாலும், முதல்கட்டமாக, குண்டலினி சக்தி, கடவுள் சக்தி இதைப்பற்றியெல்லாம் புரிந்து கொண்டால், நமது நோக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைப்படுத்த இயலும். அதற்காகவே ஏட்டறிவைப் பயில்கிறோம். ஆயினும் அது ஏட்டறிவாகவே இருந்துவிட்டால் ஆன்மாவிற்கு எந்த பயனும் இல்லை.

அந்த விதத்தில், என் உடலுக்குள் குண்டலினி சக்தி எவ்வாறு தட்டியெழுப்பட்டது, அப்படி எழுப்பும் போது என்னென்ன அனுபவங்கள் எனக்கு நிகழ்ந்தன என்பதை, வரவிருக்கும் அத்தியாயங்களில் சொல்லப்போகிறேன்.

ஆனால் அதற்கு முன்னர், மூலாதார சக்கரத்தைப் போல மீதமுள்ள ஆறு சக்கரங்கள் பற்றியும் கொஞ்சம் அறியவேண்டியுள்ளது.

மூலாதார சக்கரத்திற்கு அடுத்த படியாக, ஜன்மஸ்தானத்தின் வேர்ப்பகுதியில் அமைந்திருப்பது, ஸ்வாதிஷ்டான சக்கரம். அதற்கு அடுத்தபடியாக, நாபி ஸ்தானத்தில், மணிப்பூர சக்கரம் அமைந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக ஹிருதய ஸ்தானத்தில் அமைந்திருப்பது, அனாகத சக்கரம். அதற்கு மேல் ஐந்தாவதாக, தொண்டையின் அடிப்பகுதியில் அமைந்துள்ள சக்கரம் விஷுதா சக்கரம் எனப்படுகிறது. ஆறாவது சக்கரம், இரு புருவங்களுக்கு மத்தியில் அமைந்துளள ஆக்ஞா சக்கரம். ஏழாவது மற்றும் கடைசியாக, சிரசின் உச்சியில் அமைந்திருப்பதே சகஸ்ரார சக்கரம்.

இந்த ஒவ்வொரு சக்தி சக்கரமும், தாமரை வடிவில், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மடல்களுடன் அமைந்துள்ளது. இதில் ஒன்று முதல் ஆறுவரையிலுள்ள சக்கரங்களின் மடல்களை எண்ணிப்பார்த்தால், மொத்தம் ஐம்பது வரும். இந்த ஐம்பது மடல்களிலும், தலா ஒரு அட்சரம் வீதம், சமஸ்கிருத லிபியின் அனைத்து ஐம்பது எழுத்துக்களும் இடம் பெற்றுள்ளன. ஏழாவது சக்கரமான சகஸ்ரார சக்கரத்தில் மட்டும் ஆயிரம் மடல்கள் இருப்பதாகவும், சமஸ்கிரு பாஷையின் அனைத்து ஐம்பது எழுத்துக்களும், தலா இருபது முறை இந்த மடல்களில் இடம் பெறுவதாகவும், சொல்லப்பட்டுள்ளது.

மூலாதார சக்கரத்தில் உறைந்துள்ள சக்தியை விழிப்படையச் செய்தால், இந்த சக்தி படிப்படியாக அடுத்தடுத்த சக்கரங்களுக்கு

உயர்ந்து, இறுதியில், சிரசின் உச்சியில் உள்ள சகஸ்ரார சக்கரத்தை அடைகிறது. சகஸ்ரார சக்கரத்தை குண்டலினி சக்தி எட்டும்போதுதான், சாதகருக்கு மெய்யறிவு ஏற்படுகிறது.

அதாவது, ஆரம்பத்தில் ஸ்ருஷ்டி காரியத்தில் ஈடுபட்டு மனிதனைப் படைக்கும் ஆதிசக்தி, அதைத் தொடர்ந்து குண்டலினி சக்தியாக மூலாதார சக்கரத்தில் உறைந்திருந்து, இந்தப் புற உலகம் என்னும் பொய்த்தோற்றத்தை மானுட ஆன்மாவிற்குக் காட்டி நிற்கிறது. இப்போது மீண்டும் அதே சக்தியைத் தட்டி எழுப்புகையில், புற உலகைக் காட்டி நிற்கும் இந்த சக்தி உள் நோக்கித் திரும்புவதால், கொஞ்சம் கொஞ்சமாக சிருஷ்டி அற்றுப்போகிறது. சிருஷ்டியற்றுப் போகும் நடைமுறையின் போது, குண்டலினி சக்தி அடுத்தடுத்த சக்கரங்களுக்கு உயர்ந்து, இறுதியில் சகஸ்ரார சக்கரத்தில் உள்ள ஆதிசக்தியின் ஊற்றுக் கண்ணுடன் மீண்டும் இணைகிறது. அப்போது, ஆதிசக்தியின் தன்மை வெட்ட வெளிச்சமாக சாதகருக்குப் புரிகிறது. இதுவே மெய்யறிவை உணர்தலாகும்.

இந்த மிக நீண்டவிளக்கம் மனித உடலுக்குள் சக்தி எப்படி செயல்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள மிகவும் முக்கியமாகும்.

சிருஷ்டி காரியம் முடிந்த பின்னர் ஆதி சக்தியானது, மானுட ஆன்மாவிற்குப் புற உலகைக் காட்டி நிற்கிறது என்று பார்த்தோம். இந்த மானுட ஆன்மா என்பதும், கடவுள் என்கிற பிரபஞ்ச ஆன்மாவும் ஒன்றே தான் என்பதையும், மெய்யறிவின் போது சாதகர் இதைத்தான் பிரத்யக்ஷமாக உணர்கிறார் என்பதையும், வாசகர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

சிருஷ்டி காரியம் முடிந்த பின்னர், அதாவது மனித உடலை படைத்த பின்னர் மூலாதார சக்கரத்தில் சென்றுறையும் ஆதிசக்தியை, குரு ஒருவர் மூலம் விழிப்படையச் செய்கையில்,

இந்த சக்தி மீண்டும் உள்நோக்கித் திரும்பி, சிருஷ்டி காரியத்தை அற்றுப் போகச் செய்கிறது என்று பார்த்தோம். சிருஷ்டியானது இதுபோலப் படிப்படியாக அற்றுப் போகும் போது, அந்த உணர்வை, அதாவது குண்டலினி சக்தியின் இயக்கத்தை, உடலின் ஒவ்வொரு அணுவிலும் நாம் உணர முடியும்.

நான் எனக்குள் உறைந்திருக்கும் குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்பிய போது, இதை எப்படியெல்லாம் உணர்ந்தேன் என்பது பற்றிய எனது அனபவங்களையே இனிவரும் அத்தியாயங்களில் சொல்லப் போகிறேன்.

# குண்டலினி சக்தியை எழுப்புதல்

நான் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாத வாக்கில், சக்தி மார்க்க யோகிகளால் பின்பற்றப்படும் சித்த மகாயோகத்திற்கு தீட்சை பெற்றேன்.

இந்த யோக வகுப்பைச் சேர்ந்தவரும், எதிர் காலத்தில் என் குருவாகத் திகழப்போகிறவருமான, சுவாமி சகஜானந்த தீர்த்தர், இந்தியாவின் ஐதராபாத் நகருக்கு வரப்போவதாக, அதற்கு சில நாட்கள் முன்பாக என் நண்பர் ஒருவர் மூலமாக நான் கேள்விப்பட்டிருந்தேன்.

அந்த நண்பர், தன் வீட்டிற்கு வந்து சுவாமியை வரவேற்பதில் பங்கேற்குமாறு எனக்கு அழைப்பு விடுத்தார். நானும் அதை உடனே ஒப்புக் கொண்டு, அவரது வீட்டிற்கு சென்றிருந்தேன். அன்றைய தினம் இரவு 8 மணி வாக்கில், அங்கே வைத்துதான் என் வருங்கால குருவை முதல்முறையாக சந்தித்தேன்.

அப்படி சந்தித்தபோது, எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஆம்! 21-ஆண்டுகளுக்கு முன் இதே சுவாமிஜியுடன் நான் பயணம் செய்திருக்கிறேன்!

1986-ஆம் ஆண்டு கோடையில், நான் 15 வயதுப் பையனாக இருந்த போது, இந்தப் பயணம் நிகழ்ந்தது. ரயில்பெட்டியில் எனக்கடுத்த கீழ்ப்படுக்கை, சுவாமிஜிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. நாங்கள்

இருவரும் சுமார் 30 மணி நேரம் சேர்ந்து பயணம் செய்தோம்.

காவி உடை தரித்திருந்த சுவாமிஜி தன் ஆசிரமத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தார். அல்லது, இன்றைய உத்தரகாண்ட் மாநிலத்தில் இமயமலையின் அடிவாரத்தில் உள்ள ரிஷிகேஷ் பகுதிக்கு சென்று கொண்டிருந்தார்.

நான் அதே உத்தரகண்ட் மாநிலத்தின் மலைப்பகுதியில், இன்னும் சற்று உள்ளே அமைந்துள்ள உத்தரகாசியில் புகழ்பெற்ற நேரு மலையேற்றப் பயிற்சிக் கழகத்தில் சேர்ந்து, மலையேற்றம் பயிலச் சென்று கொண்டிருந்தேன்.

எனக்கு, முதலில் ரிஷிகேஷ் சென்று, அங்கிருந்து பேருந்து மூலம் உத்தரகாசி செல்ல வேண்டியிருந்தது.

என்னுடைய இந்தப் பயணத்திட்டம் பற்றி சுவாமிஜி அறிந்தவுடன், ரிஷிகேசத்தில் உள்ள தமது ஆசிரமத்தில் நான் தங்கிச் செல்லலாம் என்று கூறி, உதவ முன்வந்தார். உத்தரகாசிக்கு போகும் போதும், அங்கிருந்து வரும்போதும், ரிஷிகேஷ் அல்லது அருகாமை ஹரித்துவாரில் ஒரு நாள் இரவு தங்க வேண்டிய நிலையில் நான் இருந்ததே, இதற்குக் காரணம்.

ஆசிரமத்தில் தங்கலாம் என்று சொன்னதுடன் நிறுத்திக் கொள்ளாமல், சுவாமிஜி ஒரு காகிதத் துண்டை எடுத்து, அதில் தன் ஆசிரம முகவரியை எழுதி என்னிடம் கொடுத்தார். நான் அதை வாங்கிக் கொண்டேனே தவிர, ஆசிரமத்தில் தங்கிச் செல்லலாம் என்ற எண்ணம் எனக்கு வரவேயில்லை என்பதால், அதைப்பற்றி நான் சிந்திக்கவே இல்லை.

இந்த சம்பவத்தின் போது எனக்கு 15 வயது என்பதையும், சுவாமிஜிக்கு அப்போது 62 வயது இருக்கலாம் என்பதையும் வாசகர்கள் நினைவில் கொண்டால், எங்களிருவருக்கும் இடையே என்ன உரையாடல் நிகழ்ந்திருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்க முடியும்.

ரயில் டெல்லி போய்ச் சேர்ந்தவுடன், நாங்களிருவரும் தனித்தனியே பிரிந்து விட்டோம். நான் ரிஷிகேஷிற்கு அருகேயுள்ள ஹரித்துவாருக்கு, நள்ளிரவு வாக்கில் ஹரித்துவார் போய் இறங்கினேன். இறங்கிப் பார்த்தால், பேருந்து நிலையத்திலும் நகரின் தெருக்களிலும் ஆங்காங்கே கூட்டம் கூட்டமான மக்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு ஜன நெருக்கடியான ஊரா இது என்று நான் விசாரித்தபோது, கங்கைக் கரையில் 12-ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பமேளா திருவிழா அப்போதுதான் உச்சகட்டத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டேன். இத்தனை கூட்ட நெரிசலுக்கு இடையில் எனக்குத் தங்க இடம் கிடைப்பது மிகவும் சிரமமாகவே இருந்தது. ஆயினும் கடைசியில் ஒரு டார்மிட்டரியில் அதிகப் பணம் கொடுத்து ஒரு கட்டில் பிடித்து அன்றிரவு தூங்கினேன்.

மறுநாள் உத்தரகாசிக்கு செல்ல வேண்டும். அதற்கு முன், மறுபடியும் ஊர் திரும்புவதற்கான ரயில் டிக்கெட்டை முன்பதிவு செய்து விட்டு, மேற்கொண்டு பயணம் செய்யலாம் என்று நினைத்தேன். ரயில் நிலையத்தில் கும்பமேளாவையொட்டி சிறப்பு முன்பதிவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையிலும், பல மணிநேரம் வரிசையில் காத்திருந்த பின்னரே முன்பதிவு செய்யமுடிந்தது. இதன் காரணமாக, உத்தரகாசிக்கான கடைசி பஸ்ஸை தவற விட்டுவிட்டேன். நேற்று இரவு டார்மிட்டரிக்கு எவ்வளவு பணம் கொடுத்தோம் என்பதை எண்ணிப் பார்க்கையில், இன்று இரவும் இங்கே தங்குவதற்கு சரிப்படாது என்று தோன்றியது. வேறு என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, உத்தரகாசி நோக்கி கிடைக்கிற பஸ்ஸில் பயணம் செய்து, இருட்டுவதற்குள் எந்த ஊர் வருகிறதோ அங்கே இறங்கி, அங்கேயே இரவைக் கழிப்பது என்று முடிவு செய்தேன். அது மட்டுமின்றி, பக்கத்தில் உள்ள ரிஷிகேஷிற்கு நேரத்தோடு போய்விட்டால், அங்கிருந்து உத்தரகாசி செல்லும் வழியிலுள்ள தேரி நகருக்கான கடைசி பஸ்ஸைப் பிடித்து விடலாம் என்றும் எனக்குச் சொன்னார்கள். கும்பமேளா திருவிழாவின் மையக்

கேந்திரமான ஹரித்துவாரிலிருந்து விலகிச் சென்று விட்டால், மற்ற இடங்களில் தங்கும் கட்டணம் சற்றுக் குறைவாகவே இருக்கும் என்றும் தோன்றியதால், ரிஷிகேஷ் பஸ் ஏறினேன்.

ஆனால் ரிஷிகேஷ் சென்று விசாரித்தபோது, தேரி செல்வதற்கான கடைசி பஸ் புறப்பட்டுச் சென்று 20-நிமிடம் ஆயிற்று என்றார்கள். என்ன இது சோதனை என்று அக்கம்பக்கத்தில் விசாரித்தால், ரிஷிகேஷிலும் ஹோட்டல் ரூம் வாடகை அதிகமாகவே இருந்தது. ஆனாலும் இன்று இரவு ரிஷிகேஷில் தங்குவதைத் தவிர வேறு வழியில்லையே, என்ன செய்யலாம் என்று யோசித்த போது, சுவாமிஜி கொடுத்த ஆஸ்ரம முகவரி சட்டென ஞாபகத்திற்கு வந்தது. அவர் அந்த விலாசத்தை கொடுத்த போது, நான் அங்கே போவதாகவே இல்லையென்றாலும், இப்போது சூழ்நிலையின் கட்டாயம் காரணமாக, நான் அதே விலாசத்தைத் தேடிச் சென்றேன். ஒரு நாள் இரவு இலவசமாகத் தங்க முடிந்தால் இலாபம் தானே!

யோகஸ்ரீ பீடம் என்கிற அந்த ஆசிரமம், கங்கை நதியின் கரையை ஒட்டியே அமைந்திருந்தது. நான் அங்கே சென்ற போது, சுவாமிஜி இன்னும் வெளியூரிலிருந்து திரும்பவில்லை என்றார்கள். சுவாமிஜி இல்லாத நிலையில் நாம் ரூம் கேட்டால் கொடுப்பார்களோ மாட்டார்களோ என்று எனக்கு சந்தேகம். எதற்கு வீண் வேலை என்று, ரூம் கேட்காமலேயே திரும்பிவிட எண்ணியபோது, என்ன ஆச்சர்யம், சுவாமிஜி படிக்கட்டு ஏறி ஆசிரமத்திற்குள் வந்து கொண்டிருந்தார். அவரிடம் என்னுடைய நிலையை எடுத்துச் சொன்னேன். அதனால் என்னப்பா என்று கூறி, அன்றிரவு எனக்கு ரூம் கொடுக்கச் சொன்னார்.

மறுநாள், நான் இயல்பாக உத்தரகாசி புறப்பட்டுச் சென்று விட்டேன், ஆனால் 21-ஆண்டுகளுக்குப் பின்னர், அதே சுவாமிஜியை மீண்டும் சந்திப்பேன் என்று அப்போது எனக்குத் தெரியாது.

## பராசக்தி

இந்த சம்பவத்திற்கு பத்து-பதினோரு ஆண்டுகளுக்குப் பின், மீண்டும் ஒருமுறை ரிஷிகேஷ் செல்லும் சந்தர்ப்பம் வாய்த்தது. அப்போது நான் பதினைந்து வயதைக் கடந்து, 25-26 வயது இளைஞனாக இருந்தேன். இம்முறையும் சுவாமிஜியை சந்திக்க வேண்டுமென நான் விரும்பிய போதிலும், ஏனோ தெரியவில்லை ஆசிரமத்தின் பெயரும், ஆசிரமம் அமைந்திருந்த இடமும் மறந்துவிட்டது. அப்புறம் ரொம்ப விசாரித்து, ஒரு வழியாக ஆசிரமத்தை கண்டுபிடித்து விடட போதிலும், உள்ளே சென்று கேட்டபோது, சுவாமிஜி இப்போது இங்கு தங்குவதில்லை என்றும் அவர் எங்கேயிருக்கிறார் என்பது யாருக்குமே தெரியாது என்றும் சொன்னார்கள். நான் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினேன்.

அதற்கு 10-11 ஆண்டுகளுக்குப் பிறகு அதே சுவாமிஜியை இன்று மீண்டும் பார்க்கிறேன்! அதுவும் சுவாமிஜி ஹைதராபாத் வரும் அதே நாளில் நானும் ஹைதராபாத் வந்திருக்கிறேன். என்ன ஆச்சரியம் !

இந்த இரண்டாவது சந்திப்பின் போது, சித்த மகாயோகத்தில் எனக்கு தீட்சையளிக்க சுவாமிஜி ஒப்புக் கொண்டு, மறுநாள் அதிகாலை 4 மணிக்கு வரச்சொன்னார். அன்று இரவு நண்பரின் வீட்டிலேயே தங்கியிருந்து, மறுநாள் அதிகாலை வேறு சிலருடன் சுவாமிஜி முன் போய் நின்றேன்.

சுவாமிஜி எங்கள் அனைவரையும் தியானத்தில் அமரச் செய்து, எங்கள் ஒவ்வொருவரின் உச்சந்தலையிலும் கை வைத்து, மந்திர உச்சாடனம் செய்தார். தீட்சை வழங்கும் இந்த நடைமுறை ஒரு சில நிமிடங்களிலேயே முடிந்து விட்டது. இதைத் தொடர்ந்து, அடுத்த மூன்று நாட்களுக்கு தினமும் குருவை வந்து பார்க்க வேண்டுமென எனக்குச் சொல்லப்பட்டது. தீட்சை பெற்றவுடன் சாதகரின் உடலில் என்ன மாற்றங்கள் நிகழ்கிறது என்பதை குருவானவர் கவனிக்க, அவரை மூன்றுநாள் சந்திக்க வேண்டியது அவசியமாகும்.

## கர்னல் டி. ஸ்ரீனிவாசுலு

தீட்சையின்போது, என்னுடைய குரு எனக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். ஒற்றை சமஸ்கிருத உரிச்சொல்லான அந்த மந்திரத்தை தொடர்ச்சியாக உச்சாடனம் செய்ய வேண்டுமென எனக்கு அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு தொடர்ந்து மந்திர உச்சாடனம் செய்யும் போது, உடலுக்குள் ஒருவித மாற்றம் நிகழும் என்றும், இதுதான் கிரியையின் வெளிப்பாடு என்றும் கற்றுத்தரப்பட்டது. கிரியை நிகழும்போது பாவ-புண்ணியக் கணக்குத் தீர்கிறது என்பதையும், காலம்காலமாக எனக்குள் உருவான மனப்பதிவுகள் அழிகின்றன என்பதையும், சுவாமிஜி எனக்கு எடுத்துக் கூறினார். இதைத்தான் கர்மவினை ஒழிகிறது என்றும் சொல்கிறார்கள். கர்மவினை என்றால், சாதாரணமாக யாரும் புரிந்து கொள்ளலாம் என்பதால், அந்த வார்த்தையின் பொருளை மீண்டும் இங்கே விளக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

சித்தமகாயோகத்தில் தீட்சை பெற்ற இந்த காலகட்டத்தில், நான் என் வாழ்வில் மிக மோசமான நிதி நெருக்கடியில் இருந்தேன். என் திருமண வாழ்விலும் சில சிக்கல்கள் இருந்தன. இந்த சிக்கல்கள் பற்றி இன்னும் விரிவாக இங்கே பேச எனக்கு விருப்பமில்லை. ஆனாலும் வாழ்க்கைப் பிரச்சனை காரணமாக, நான் எனக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை உரிய முறையில் தொடர்ச்சியாக உச்சாடனம் செய்யவில்லை என்பதை மாத்திரம் வாசகர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, எப்போது முடிகிறதோ அப்போது மட்டும்தான் மந்திர உச்சாடனம் செய்து வந்தேன். அதே சமயம், முறையாக மந்திர உச்சாடனம் செய்கிறாயா என்று என்குரு என்னிடம் அடிக்கடி விசாரித்து வந்தார். இப்படியே ஏழெட்டு மாதங்கள் கடந்தன. அதன் பிறகு, குரு எனக்காக மந்திரத்தை மாற்றி, வேறு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார்.

மந்திரம் ஏன் மாற்றப்பட்டது என்பதற்கான காரணங்களை சற்று விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். சாதகரின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படும் போது, அதற்கேற்ப மந்திரத்தையும் மாற்ற

வேண்டியது அவசியமாகும். சாதகரின் மனநிலை என்ன என்பது குருவுக்கு எப்போதுமே தெரியும் என்பதால், தேவைக்கேற்றபடி அவரே அவ்வப்போது மந்திரத்தை மாற்றிவிடுவார்.

மந்திரம் மாற்றப்பட்ட இந்தக் காலகட்டத்தில், என்னுடைய மணவாழ்க்கை மற்றும் நிதிநிலையில் மட்டுமின்றி, தொழில்முறை வாழ்க்கையிலும் பல சிக்கல்கள் தோன்றியிருந்தன. நான் பார்த்த வேலையில் பதவி உயர்வுக்கான ஒரு நல்ல வாய்ப்பு கைநழுவிப் போனதால், தேக்கநிலை ஏற்பட்டிருந்தது. எனக்கும் என் மனைவிக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக, என் இரண்டாவது திருமணமும் தோல்வியை நோக்கி சென்று கொண்டிருந்தது. பங்குச் சந்தையிலும், வேறு சில ஆன்லைன் வர்த்தக நிறுவனங்களிலும் நான் செய்திருந்த கணிசமான முதலீடுகள் நஷ்டமடைந்ததால், மோசமான பணமுடையில் நான் சிக்கியிருந்தேன்.

இந்தப் பிரச்சனைகளெல்லாம் என் ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடையாக வந்துவிடக் கூடாது என்றே, சுவாமிஜி எனக்கான மந்திரத்தை மாற்றி புதுமந்திரம் உபதேசித்தார்.

ஆனால் ஏதேதோ காரணங்களால் இந்த இரண்டாவது மந்திரத்தையும் என்னால் முறையாகப் பயிற்சி செய்ய இயலவில்லை. இதனால் ஏற்பட்ட விரக்தியிலேயே இன்னும் ஏழெட்டு மாதங்கள் ஓடின.

இந்த முறை கொஞ்சம் கூட நம்பிக்கையில்லாத நிலைக்கு நான் சென்று விட்டேன். அதாவது இனிமேல் நான் தேற மாட்டேன் என்ற எண்ணம் எனக்கு வந்து விட்டது. மனம் நிறைய எதிர்மறை நினைவுகள் சூழ்ந்தன. இனி வாழ்வதை விட சாவதே மேல் என்ற எண்ணத்துடன், சாவதற்கான வழிகள் பற்றி இணையதளங்களில் தேட ஆரம்பித்தேன்! இந்த உலகமே எனக்கு எதிராகத் திரும்பி விட்டது போல மனதிற்குள் ஒரு தோற்றம்! ஆனாலும்

கடலின் அலைகளில் சிக்கிய ஒருவன் ஏதாவது ஒரு துரும்பைப் பிடித்துக் கொண்டாவது கரையேறி விட மாட்டோமா என்று ஏங்குவது போல, வாழ்வதற்கான பற்றுக்கோடு எங்காவது தென்படாதா என்றும் என் மனம் ஏங்கிக் கொண்டேயிருந்தது.

இந்த சமயம் பார்த்து, என் இரண்டாவது மனைவி என்னிடமிருந்து பிரிந்து விட்டாள். என் சம்பளத்தில் பெரும்பகுதியை அவளுக்கு ஜீவனாம்சமாக வழங்க வேண்டும் என்றும் உத்தரவாகியிருந்ததால், நான் பெரும் கடனாளியாக தனித்து விடப்பட்டேன். அதற்கு மேல், என் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கே பணம் கொடுக்க என்னால் இயலவில்லை. கடன் கொடுத்தவர்கள் நெருக்க ஆரம்பித்தார்கள். இப்படி வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் அடிமேல் அடிவிழ, நான் உள்ளுக்குள் நொருங்கிப் போனேன்.

இந்த சந்தர்ப்பத்தில் என் குரு, எனக்கான மந்திரத்தை மீண்டும் மாற்றினார். அதாவது மூன்றாவது முறையாகப் புதுமந்திரம்.

வாழ்வதற்கே போராடிக் கொண்டிருந்த நான், சரி இந்தத் தடவை எப்படியாவது மந்திரத்தைப் பற்றிக் கொண்டு கரையேறிவிடுவது என்று முடிவு செய்தேன். அதாவது, செய் அல்லது செத்துமடி என்பது போல.

ஆனால் இந்த முறை நான் ஒழுங்காக ஐந்தாறு மாதம் மந்திரத்தை பயிற்சி செய்தேனே தவிர, உருப்படியான எந்த மாற்றமும் நிகழவில்லை.

மந்திர உபதேசத்திற்கு அப்பாற்பட்டு, என் குரு எனக்கு ஒரு யோகாசனத்தையும் கற்றுத் தந்திருந்தார். மூச்சை அடக்கி செய்ய வேண்டிய இந்த யோகப் பயிற்சிக்கு, யோக சாஸ்திரத்தில், ஷண்முகி முத்ரா என்று பெயர். முதலில் மூக்கு வழியாக காற்றை உள்ளிழுத்து, நுரையீரலை நிரப்பிய பின்னர், இரண்டு கைகளின் எல்லாப் பத்து விரல்களையும் பயன்படுத்தி, கண்,

காது, நாசித் துவாரங்கள் இப்படி முகத்தின் எல்லா துவாரங்களையும் இறுக்கமாக மூடிக்கொண்டு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேரம் வரை உள்ளுக்குள் மூச்சை அடக்குவதே, ஷண்முகி முத்திரை.

இந்த யோகாசனத்தை நான் செய்யும்போது, என் நெற்றிப் பொட்டில் சூரிய வெளிச்சம் போன்ற பிரகாசமான ஒளி தோன்றுவதை என் மனதிற்குள் உணர்வது வழக்கம். அதாவது, மூச்சை அடக்கும் போது இந்த ஒளி என் மனக்கண்ணில் பளிச்சிடும். அடுத்த சில வினாடிகளில் வாய்வழியாக மூச்சை வெளியே விட்ட பின்னரும் கண்களைத் திறக்காமல், அடுத்த சுற்று மூச்சை உள்ளிழுப்பதற்காக அதே ஆசனத்தில் அமர்ந்திருக்கையில், மனக்கண்ணில் தோன்றிய வெளிச்சமானது, நீலம், சிவப்பு, மஞ்சள் எனப் பல வண்ணங்களாக மாறி மாறிக் காட்சியளிக்கும். எந்த வரிசையில் இந்த வண்ணங்கள் தோன்றுமென்பது இப்போது எனக்கு ஞாபகமில்லை. ஆனால் இந்த யோகாசனத்தை செய்யக் கூடிய மற்றவர்களுக்கு, இத்தகைய ஒளி தோன்றுவது அத்தனை சுலபமல்ல என்று என் குரு என்னிடம் சொன்னார். அதாவது, இத்தகைய ஒளி மனக் கண்ணில் தோன்றினால், யோகப்பியாசம் நன்கு முன்னேறிய நிலையில் உள்ளது என்று பொருள்.

இந்த யோகாசனத்தை தொடர்ந்து சில மாதங்கள் செய்து வந்த காலத்தில், எனக்குப் பகல் நேரத்தில் அடிக்கடி நாவறட்சி ஏற்பட்டது. நாவறட்சி என்பது உடம்பில் தண்ணீர் குறைந்து போவதன் அடையாளம் என்கிறது நவீன மருத்துவம். மனக் கண்ணில் தோன்றும் பிரகாசமான ஒளியின் வெப்பம் காரணமாகவே என் உடலில் தண்ணீர் குறைவதாக எனக்குச் சொல்லப்பட்டது. ஆனால் இதற்குப் பரிகாரமாக, உணவில் பசு நெற் சேர்த்துக் கொள்ளுமாறு, என்னுடைய யோக ஆசிரியர்களில் ஒருவர் யோசனை சொன்னார். உடலில் தண்ணீர் குறைவதற்கு பசுநெய் பரிகாரமாகுமா ? ஆனாலும், பசு நெய் சேர்த்துக் கொள்ள ஆரம்பித்த பிறகு நாவறட்சி போயே விட்டது.

இப்படி, யோகப் பயிற்சியின் போது சில பக்க விளைவுகள் ஏற்படலாம் என்றாலும், யோகப் பயிற்சியின் பாதகங்களை விட சாதகங்கள் பல மடங்கு அதிகம் என்பதால், யோகப்பயிற்சியின் போது ஏற்படக்கூடிய சிறு பிரச்சனைகள் குறித்து வாசகர்கள் அஞ்சத் தேவையில்லை என்பதை வலியுறுத்தவே, மேற்கண்ட நாவறட்சி உதாரணத்தை எடுத்துக் கூறினேன். அதே சமயம், ஏற்கனவே இந்த யோகப் பயிற்சி பற்றி எதுவும் தெரியாதவர்கள், தகுதி வாய்ந்த யோக ஆசிரியர் ஒருவரின் மேற்பார்வையின்றி அதில் ஈடுபடக் கூடாது என்பதையும், வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

என்னுடைய இந்த யோகப் பயிற்சியின் போது ஒருநாள், என் குரு ரிஷிகேஷில் உள்ள யோக ஸ்ரீபீட ஆஸ்ரமத்திற்குச் செல்லத் தீர்மானித்தார். என்னைத் தொடர்பு கொண்டு, முடிந்தால் ஆசிரமத்திற்கு வந்து தம்மைப் பார்க்கும்படிக் கூறினார்.

இந்தக் காலகட்டத்தில் நான் என்னுடைய வேலைநிமித்தம் காரணமாக, ஜம்முகாஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் வசித்து வந்தேன்.

குரு வரச்சொன்னதால், ஸ்ரீநகரிலிருந்து காரிலேயே ரிஷிகேஷ் செல்லத் தீர்மானித்தேன். ஸ்ரீநகருக்கும் ரிஷிகேஷுக்கும் இடையே சுமார் 500-600 கி.மீ. தூரமிருந்தாலும், இரண்டுமே இமயமலையில் அடிவாரத்தில்தான் அமைந்திருப்பதை வாசகர்களுக்கு இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இமயமலையின் அடிவாரத்தை ஒட்டி, ஸ்ரீ நகரிலிருந்து ரிஷிகேஷ் வரையுள்ள குறுகிய பாதையில் பாரதத்தின் சக்தி உபாசகர்கள் வழிபடக் கூடிய பல சக்தி பீடங்கள் அமைந்துள்ளன.

புகழ்பெற்ற இந்த சக்தி பீடங்களை ஒவ்வொன்றாக வழிபட்டுக் கொண்டே, நான் ரிஷிகேஷ் சென்றடைந்தேன். என் குரு அதற்கு முன்பாகவே ரிஷிகேஷ் வந்து சேர்ந்து, ஆசிரமத்தில் எனக்காகக்

காத்திருந்தார். இருவரும் சேர்ந்து ஆசிரமத்தில் சில நாட்கள் தங்கியிருந்தோம்.

அதன்பிறகு ஒரு நாள் என் குரு கங்கோத்ரி செல்லத் தீர்மானித்து, என்னையும் கூட வருமாறு அழைத்தார். கங்கோத்ரி என்பது, இமயமலையின் சற்றே உள்ளடங்கிய ஒரு வரிசையில் அமைந்துள்ள ஓரிடம். குட்டி ஊரான கங்கோத்ரியில் இருந்து 16 கி.மீ. அப்பால், கங்கோத்ரி பனிப் பள்ளத்தாக்கில் இருந்துதான், இந்தியாவின் மிகப் புகழ்பெற்ற கங்கை நதி உற்பத்தியாகிறது. கங்கை நதியின் உற்பத்தி ஸ்தானத்திற்கு கோமுகம் என்று பெயர். கோமுகம் என்றால், சமஸ்கிருதத்தில் பசுவின்முகம் என்று பொருள்.

நான் பதினாறு வயதுப் பையனாக இருந்தபோது, அதாவது என் எதிர்கால குருவை முதல் முறையாக சந்தித்த ஓராண்டு காலத்தில், இதே கங்கோத்ரி பனிப் பள்ளத்தாக்கில்தான் மலையேற்றப் பயிற்சி பெற்றேன் என்பதால், எனக்கு இந்தப் பகுதி ஏற்கனவே பரிச்சயம்.

என் குருவை முதல் முறையாக நான் எப்போது, எங்கே சந்தித்தேன் என்பதை பற்றி இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நான் கூறியிருப்பதை வாசகர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். அப்போது நான் உத்தரகாசிக்குப் போய்க் கொண்டிருந்தேன் என்று சொன்னேனல்லவா? அந்த உத்தரகாசி, ரிஷிகேஷிலிருந்து கங்கோத்ரி செல்லும் வழியில்தான் அமைந்துள்ளது. இந்தப் பாதை எனக்கு ஏற்கனவே தெரியும் என்பதால், நான் காரை ஓட்ட, நானும் என் குருவும் ரிஷிகேஷில் இருந்து, உத்தரகாசி வழியாக, கங்கோத்ரி சென்று சேர்ந்தோம்.

இந்தப் பயணத்தின்போது, சித்தமகாயோகம் பற்றியும், அதன் பல்வேறு அம்சங்கள் குறித்தும் என் குருவிடம் விரிவாகப் பேச எனக்கு நிறைய அவகாசம் கிடைத்தது. நாங்கள் இருவரும் என்னவெல்லாம் பேசினோம் என்பதை இங்கே முழுமையாக

சொல்லப்போவதில்லை. ஆனாலும் இந்தப் பேச்சின் முக்கியமான சில பகுதிகள், அதற்கடுத்த வாரங்களில் என் வாழ்வில் பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின என்பதால், அதைப்பற்றி மட்டும் சொல்கிறேன். இந்தப் பயணத்திற்கு அடுத்து வந்த வாரங்களில் என்ன நிகழ்ந்தது என்பதையும் நான் விளக்கும் போது, பயணம் பற்றி விரிவான முறையில் பேசப்பட்டதற்கு என்ன காரணம் என்பதை, வாசர்கள் புரிந்து கொள்ள முடியும்.

பயணத்தின்போது எங்களுடைய உரையாடலில், பூஜை புனஷ்காரங்கள் மற்றும் சடங்குகள் மூலம் உடல் ரீதியாகக் கடவுளை வழிபடுவதை விட, மானசீகமாக வழிபடுவதே சிறந்தது என்பது பற்றி, நாங்கள் முக்கியமாக விவாதித்தோம். எல்லா மதங்களும் எல்லா அறிவியலும் ஏற்பது போல, மனம் என்பது உடலை விட மேம்பட்டதாதலால், உடல் ரீதியிலான வழிபாட்டைவிட மானசீக வழிபாடுதான் சிறந்ததாக இருக்க முடியும், அல்லவா? அதாவது, கடவுளை சிலையாக வடித்து வைத்து, மலர் தூவி அர்ச்சிப்பதை விட, மனத்திற்குள்ளேயே கடவுளை மலர்களால் அர்ச்சிப்பது போலக் கற்பனை செய்வதும் சிறந்த வழிபாடாகத் தானே இருக்க முடியும்? இதுதான் என் குருவிடம் நான் கேட்ட கேள்வி. ஆம், மானசீக வழிபாடு, சரீர வழிபாட்டைவிட மேம்பட்டது மட்டும்மல்ல. பல மடங்கு சக்தி வாய்ந்ததும்கூட என்று, உடனடியாக என் குரு பதிலளித்தார். மானசீகமாக, விஸ்தாரமான முறையில் கடவுளுக்கு பூஜை செய்வது போலக் கற்பனை செய்யும் திறன் பலருக்கு இல்லையென்பதால்தான், அவர்கள் வெளிப்படையான சடங்குகளில் ஈடுபடுகிறார்கள் என்றும், சுவாமிஜி விளக்கமளித்தார்.

அப்படியானால் நான் சரீர பூஜையை விடுத்து மானசீக பூஜையில் ஈடுபடலாமா என்று அவரிடம் அனுமதி கேட்டேன். தாராளமாகச் செய்யலாம் என்று அவரும் அனுமதி கொடுத்ததால், அன்றுமுதல் மனதிற்குள்ளாக மட்டுமே கடவுளை வழிபடுவது என்று நான்

முடிவு செய்தேன்.

அதன்படியே, ரிஷிகேஷ் யாத்திரையிலிருந்து திரும்பிய பின்னர், கடவுள் படத்திற்கு ஊதுவத்தி ஏற்றி வைப்பது போன்ற சடங்குகளைத் தவிர்த்து, மந்திர உச்சாடனத்துடன், மானசீகமாகவே கடவுளை வழிபட ஆரம்பித்தேன்.

அதன்பின்னர் என் வாழ்வில் நிகழ்ந்த பிரமிக்கத்தக்க மாற்றங்களைப் புரிந்து கொள்ள, மேற்கொண்ட பத்திகளில் நான் கூறியுள்ள கருத்துக்களை வாசகர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

இனியாவது என் ஆன்மீக முயற்சிகளுக்கு உரிய பலன் கிட்ட வேண்டும்; இல்லையென்றால் செத்துமடியலாம் என்ற திடமான எண்ணத்துடனேயே, நான் மானசீக பூஜையில் ஈடுபட ஆரம்பித்தேன். ஆனால் இப்படியான மானசீக பூஜை மற்றும் மந்திர உச்சாடனத்தை சில வாரங்களுக்கு மட்டுமே என்னால் தொடர முடிந்தது. ஏனென்றால், அதற்குள் கிரியையின் சக்தி என் உடலுக்குள் வெளிப்பட ஆரம்பித்துவிட்டது.

ஆம் பிரபஞ்சத்தின் ஆதி சக்தியான குண்டலினி சக்தி, கடைசியில் என் குருவின் கருணையினால் எனக்கு அருள்புரியத் தொடங்கிவிட்டது.

என் உள்மன ஆழத்தில், சக்திவாய்ந்த எவ்வித எண்ணங்கள் ஒன்றுக்கொன்று போராடிவந்தன என்பதையும், என் குரு, இந்த எண்ணங்களையெல்லாம் முறைப்படுத்தி எப்படிக் கிரியையை என் உடலுக்குள் வெளிப்படச் செய்தார் என்பதையும், வாசகர்கள் இதற்குள் புரிந்து கொண்டிருக்கலாம்.

2007-ல் சித்தமகா யோகத்தில் நான் தீட்சை பெற்றபோது, கிரியை உடனடியாக வெளிப்படவில்லை. இந்த உள்மனத் தடைகளை அகற்ற, என் குரு மிக எளிமையான உபாயத்தைப்

பயன்படுத்தினார். அதாவது, இவனுடைய வாழ்க்கைத் துன்பங்கள் அதிகரித்தால்தான், வாழ்வதா, சாவதா என்ற எண்ணப் போராட்டம் மனதிற்குள் தீவிரமாகும். அதே சமயத்தில் இவன் தனக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரத்தையும் தொடர்ந்து உச்சாடனம் செய்து வரட்டும். இதனால் வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து விடுபட்டு ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும் என்ற பேராவல் இவனுக்குள் ஊற்றெடுக்கும். இதன் விளைவாக பலவித எண்ணங்களுக்கு இடையிலான மனப்போராட்டம், எண்ணங்களுக்கும் மந்திரத்தின் சக்திக்கும் இடையிலான போராட்டமாக உருவெடுக்கும். இறுதியில் மந்திரத்தின் சக்தி வெற்றி பெற்று கிரியையின் வெளிப்பாடு தொடங்கிவிடும். இதுதான் என் விஷயத்தில் என் குரு பயன்படுத்திய உபாயம்.

ஆனால் இந்த உபாயம் வெற்றிபெற முழுமையாக இரண்டு ஆண்டுகள் பிடித்தன. அதுவும் மானசீக பூஜையில் நான் ஈடுபட ஆரம்பித்த பிறகே, என் உடலுக்குள் கிரியை வெளிப்படத் துவங்கியது.

இந்த விதமான காலதாமதம் எல்லோருக்கும் ஏற்பட வேண்டுமென எந்தக் கட்டாயமும் இல்லை என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன். சிலருக்கு, தீட்சை பெற்ற உடனேயே கிரியை வெளிப்படத் துவங்கிவிடலாம். வேறு சிலருக்கு, என்னைவிட வேகமாக வெற்றி கிடைத்துவிடக் கூடும். இன்னும் சிலருக்கு என்னைவிட அதிகத் தாமதமும் ஆகலாம். இதெல்லாம், தனிப்பட்ட சாதகர்களின் மனப் பக்குவம் எந்த அளவு தயார் நிலையில் இருக்கிறது என்பதைப் பொறுத்தது. அதே சமயம் குருவானவர் நினைத்தால், இந்தத் தயார்நிலையை மேம்படுத்தி, உடனடியாகவும் கிரியையை வெளிப்படுத்த முடியும். என் விஷயத்தில் வலுக்கட்டாயமாக அந்தத் தயார்நிலையைக் கொண்டுவராமல், இயல்பான விதத்தில் படிப்படியாகப் போகலாம் என்று என்குரு நினைத்திருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது.

குருவானவர் எனக்குக் கற்றுக் கொடுத்த மந்திரத்தால், என்

உடலுக்குள் கிரியை வெளிப்பட்டதற்கு அப்பாற்பட்டு, தனிப்பட்ட என் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை சொல்லப் புகுந்தால், அதுவே பெரிய கதையாகிவிடும். மந்திர உச்சாடனத்தால் என் வாழ்வில் ஏற்பட்ட தாக்கங்கள், குறிப்பாக என் பொருளாதார நிலையில் ஏற்பட்ட முன்னேற்றம், அற்புதமானது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே சமயம், குருவின் கருணையினால் கடவுள் என்மேல் பொழிந்த அருள் மழையுடன் ஒப்பிடுகையில், இந்த லோகாயதப் பலன்கள் ஒரு விஷயமே அல்ல !

# கிரியையின் வெளிப்பாடு

சக்தி மகா யோகத்தில் நான் தீட்சை பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 2009-ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தின் மங்களகரமான ஒரு நாள் மாலை வேளையில், கிரியை என் உடலுக்குள் வெளிப்பட ஆரம்பித்தது.

அப்போது நான், பெண் தெய்வம் ஒன்றின் சிலை முன்பாக, தரையில், தியானப் பலகை ஒன்றின் மீது சம்மணமிட்டு அமர்ந்து, கண் மூடிய நிலையில் மந்திரத்தை மனனம் செய்து கொண்டு இருந்தேன். அதே தெய்வத்தின் உருவம், என் மனக் கண்ணில் பதிந்திருக்க, அதன்மீதே என் எண்ணங்கள் குவிந்திருந்தன.

அது என்ன கடவுள், என்ன மந்திரம் என்பதை நான் சொல்லவில்லை என்பதற்காக, வாசகர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இந்த விவரங்கள் முழுக்க முழுக்க எனக்கு மட்டுமே உரியவை. என் தேவைகளுக்கு மட்டுமே பொருத்தமானவை என்பதால்தான், அதை இங்கே குறிப்பிடவில்லை. மேலும், குருவால் சாதகருக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரத்தை மூன்றாவது நபருக்கு சொல்லக்கூடாது என்பதே விதி. அப்படி சொன்னாலும்கூட, அந்து மூன்றாவது நபருக்கா, வேறு சாதகருக்கோ அல்லது பொதுவான வாசகர்களுக்கோ, அதனால்

எந்தப் பலனும் இருக்கப்போவதில்லை. ஏனென்றால், குருவிடம் முறையாக தீட்சை பெற்று, குருமுகமாக உபதேசம் பெற்றாலன்றி, மந்திரம் வேலை செய்யாது. இது ஒரு புறமிருக்கட்டும்.

பெண் கடவுளை மனக்கண்ணில் இருத்தி, தீவிர தியானத்தில் நான் ஈடுபட்டிருந்தபோது, என்னையும் அறியாமல் திடீரென ஒரு விதமான பாலியல் கிளர்ச்சி, எனக்குள் ஏற்படத் தொடங்கியது. வாசகர்கள் கவனிக்கவும். அதீத பக்தியுடன் மனதிற்குள் நான் ஆராதித்துக் கொண்டிருப்பதோ, ஒரு பெண் தெய்வத்தை. ஆனால் உடலுக்குள் உருவாவதோ, காம இச்சை, என்ன இது கண்ராவி? திடீரென ஏதோ பாவம் செய்து விட்டது போல உணர்ந்தேன். உடனடியாக உடல் உதற ஆரம்பித்துவிட்டது. காமக் கிளர்ச்சியை எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றும் முடியாமல், இறுதியில் ஓரிரு துளிகள் விந்தும் வெளியேறிவிட்டது. கடவுளே, என்ன ஒரு அபச்சாரம்! மனதிற்குள் குற்ற உணர்வைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தேன். ஆனால் அதற்குள் இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது.

ஆம் தேகப் புணர்ச்சியின் உச்ச கட்டத்தில் விந்து வெளியேறும் போது, ஜனன உறுப்பில் தோன்றும் கிளர்ச்சிக்கு இணையான, ஆனால் அதை விட மிகவும் சுகமான, அதி ஆனந்தமான ஓர் உணர்வு, என் ஜனன ஊறுப்புக்கும், ஆசன வாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் திடீரெனத் தோன்றி, விநாடியின் பகுதி அளவிற்கு நீடித்தும், பின் மறைந்தும் மாறி மாறி வெளிப்பட ஆரம்பித்தது. இந்த பரமசுகானந்த அனுபவத்தை, இதுவரை நான் கண்டதேயில்லையென்பதால், நான் அரண்டுதான் போனேன். ஏதோ மிகப்பெரிய பாவம் நடந்துவிட்டது என்ற பயத்துடன், அந்த உணர்வைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயன்று பார்த்தேன். ஒன்றுமே முடியவில்லை என்பது மட்டுமல்ல, அந்த உணர்வு இன்னும் அதிகரிக்கவே செய்தது. எந்த அளவு என்றால், இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற அளவிற்கு அதிகரித்தது.

சுகமான உணர்வாகவே இருந்தாலும், அதையும் ஓர் அளவிற்குமேல் தாங்க முடியவில்லை. ஆனால் இந்த உணர்விலிருந்து விடுபட எதுவும் செய்ய முடியாததால், நான் அப்படியே சுமார் 15 - 20 நிமிடங்கள் வரை அமர்ந்திருந்தேன் (எவ்வளவு நேரம் என்பது இப்போது சரியாக ஞாபகமில்லை) சில நிமிடங்கள் செல்லச் செல்ல, என்ன நடக்கிறது என்பதை என்னால் கவனிக்க முடிந்தது. (இதற்குள் மந்திர உச்சாடனத்தை நான் எப்போதோ நிறுத்தியிருந்தேன்.) கிளர்ச்சியான அந்த உணர்வு தொடர்ச்சியாக இல்லை. விட்டு விட்டு ஏற்பட்டது. உள்ளுக்குள் ஏதோ ஒரு சக்தி வெடித்துப் பரவுவது போல ஆனந்தம் பரவியது. இப்படி ஏற்படும் போது, தாங்க முடியாத இன்பம் உருவாகி பின்னர் படிப்படியாகக் குறைவதையும், பின் மீண்டும் இன்ப வெடிப்பு ஏற்படுவதையும், நான் உணர்ந்தேன். இந்த உணர்வை பாலியல் சுகத்திற்கு இணையாகச் சொல்லலாமே தவிர, இதுவும் பாலியல் சுகமும் ஒன்றல்ல. இந்த இன்பம், ஜனன உறுப்பிலும் ஏற்படவில்லை :ஜனன உறுப்புக்கும் ஆசன வாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்டு, அலை வட்டங்களாக, அருகாமைப் பகுதிகளுக்குப் பரவியதையும் என்னால் உணர முடிந்தது.

15-20 நிமிடங்களுக்குப் பிறகு இந்த உணர்வு வடிய ஆரம்பித்த போது, நான் உடனடியாக எழுந்து, தொலைபேசியைத் தாவி எடுத்து, என் குருவை தொடர்பு கொண்டேன்.

கிரியை என் உடலுக்குள் வெளிப்பட ஆரம்பித்து விட்டது என்பதை சுவாமிஜி உறுதிப்படுத்தினார். இதனால் பயப்படத் தேவையில்லை என்றும், கிரியை வெளிப்படும் போது அந்த வெளிப்பாடுகளைத் தடுக்க முயல வேண்டாம் என்றும் அறிவுரை சொன்னார்.

ஐம்புலன்களால் மனத்திரையில் படிந்த அழுக்குகளை நீக்கும் நடைமுறை. இப்படித்தான் தொடங்குகிறது. சிருஷ்டி காரியம்

முடிந்து பின்னர் மனித உடலுக்குள் உறைந்தபடி புறவயமான இந்தப் பிரபஞ்சத்தை மனித மனத்திற்குக் காட்டி நிற்கும் ஆதி பராசக்தி, மீண்டும் உள் நோக்கித் திரும்பி, சிருஷ்டியைப் படிப்படியாக அழிக்கத் தொடங்கும் போது, முதலில் என்ன நடக்கும் என்பதற்கான உதாரணமே, இதுவரை நான் சொன்ன அற்புத அனுபவம்.

இந்த இடத்தில் மனிதனுடைய மூளை-தண்டுவட மண்டலத்தில் பல சக்தி சக்கரங்கள் அமைந்திருப்பது பற்றி நான் ஏற்கனவே சொன்னதை, வாசகர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். தண்டுவடத்தின் வேர்ப்பகுதியில் உள்ள சக்கரத்தில் குண்டலினி சக்தியை ஒருமுறை எழுப்பிவிட்டால், அதன் அதிர்வலைகளை, இதர சக்கரங்கள் மற்றும் உடல் முழுவதும் உணர முடியும். உடல் என்று சொல்லும் போது, மனதையும் சேர்த்துதான் சொல்கிறேன்.

ஏனென்றால், யோக சாஸ்திரங்களின்படி பிரபஞ்சம் என்பது எப்படி ஒரு மாயத் தோற்றமோ அதுபோல, உடல் என்பதும், மனித மனதில் தோன்றக் கூடிய ஓர் மாய பிம்பமே. எனவே, உடலுக்குள் ஓடக்கூடிய நாடிகளை சுத்தப்படுத்தினால், மனதும் சுத்தமாகும். அல்லது, மனதை சுத்தப்படுத்துவதன் மூலமாக, உடலையும் சுத்தப்படுத்தலாம். அதுவும் இல்லையென்றால், இரண்டையும் ஒன்றாக சுத்தப்படுத்தவும் கடவுள், தீர்மானிக்கலாம். இதெல்லாம் தனிப்பட்ட சாதகரின் மனப்பக்குவம் மற்றும் கடவுளின் சித்தத்தைப் பொறுத்தது. எது எப்படி நடந்தாலும், கிரியையின் முடிவில், பலகோடிப் பிறவிகளாக நம் மனதில் சேர்ந்துள்ள அழுக்குகள் முற்றிலுமாக நீக்கப்படுகின்றன. கோடிப் பிறவி என்று ஒரு பேச்சுக்கு சொன்னேன். உண்மையில் இதுவரை நாம் எத்தனை பிறவிகள் எடுத்திருக்கிறோமோ, யாருக்கும் தெரியாது.

கிரியை என் உடலுக்குள் வெளிப்பட ஆரம்பித்தது பற்றிய

விஷயத்திற்கு மீண்டும் வருவோம். முதல் நாள் ஏற்பட்ட அனுபவம், அதன் பின்னர் தொடர்ச்சியக ஏற்பட தொடங்கியது. அன்றாடம் நான் தரையில் அமர்ந்து மந்திரத்தை ஜபம் செய்வேன். சிறிது நேரத்திலேயே கிளர்ச்சியான அந்த அனுபவம் வந்துவிடும். விஷயம் தெரிந்த பிறகு, இப்போது இந்த அனுபவம் மிகவும் சுகமாகவே இருந்ததால், குற்ற உணர்வு ஏதுமின்றி அதை நான் முழுமையாக அனுபவித்து வந்தேன். இதுவே அன்றாடம் மந்திர ஜபம் செய்ய வேண்டுமென்ற உற்சாகத்தை தூண்டுவதாகவும் அமைந்திருந்தது. இதனால், நான் தொடர்ந்து மந்திரத்தைச் சொல்லி, சில வாரங்களிலேயே யோகத்தில் மிகவும் முன்னேறி விட்டேன்.

இப்படியாக 3-4 மாதங்கள் கழித்தன. அதன் பிறகு ஜனவரி 2010-ல், நான் என் வேலை நிமித்தமாக, இமயமலையின் அடிவாரத்திலுள்ள மற்றொரு இடமான வைஷ்ணோதேவிக்கு இடம் பெயர்ந்தேன். வைஷ்ணோதேவி, இந்தியாவில் புகழ்பெற்ற சக்திபீடங்களுள் ஒன்றாகும்.

அங்கே எப்போதும் போல மந்திர ஜபம் மற்றும் தியானத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தபோது, இன்னொரு விதமான கிரியை வெளிப்பட ஆரம்பித்தது.

இந்த அனுபவத்தை விவரிக்கும் முன்பாக, பல ஆண்டுகளுக்கு முன் நான் சித்தமகா யோகத்திற்கு வராத காலத்தில் எனக்கு ஏற்பட்ட, நம்பமுடியாத அதியற்புத அனுபவம் ஒன்றை வாசகர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இந்த அனுபவத்துடன், இதே போன்ற மேலும் பல அனுபவங்களும் எனக்கு ஏற்பட்டதுண்டு. அதையெல்லாம் பிற்பாடு இந்த நூலில் விளக்க இருக்கிறேன். ஆனால் இந்த அனுபவங்கள் ஏன் உருவாயின என்பதற்கான காரணங்களை,

சித்த மகாயோகத்திற்கு வரும் வரை நான் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை மட்டும் வாசகர்கள் இங்கே அறிக. சித்தமகா யோகத்திற்கு வந்த பிறகு, இந்த அதிசய அனுபவங்களுக்கான காரணம் எனக்குப் புரிந்தது. அதாவது, என்னுடைய முற்பிறவியில் நான் ஏற்கனவே சீத்தமகாயோகம் அல்லது வேறு ஏதோ முறையை கடைபிடித்திருக்கிறேன். அதன் விட்டகதை தொட்டகதையாகவே இந்த அனுபவங்கள் ஏற்பட்டதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அதை உறுதியாகச் சொல்லுமளவிற்கு நான் பெறிய ஆளில்லை என்பதால், அது அப்படித்தானா என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை, மிகவும் பணிவுடன் என் குருவிடம்விட்டு விடுகிறேன்.

என்னுடைய முற்பிறவிகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் முந்தைய பிறவிகளின் நினைவுகள் இந்தப் பிறவியில் சில விசித்திர அனுபவங்களாகத் தோன்ற முடியும் என்று எனக்குப் படுகிறது. இதைத்தவிர என்னுடைய விசித்திர அனுபவங்களுக்கு வேறு விளக்கம் தர என்னால் இயலவில்லை.

போகட்டும். என்னுடைய விசித்திர அனுபவம் என்ன என்பதற்கு வருவோம்.

அப்போது எனக்கு 30-31 வயது இருக்கும். நான் என் வேலை நிமித்தம் காரணமாக, இமயமலையின் தொலைதூரக் காடுகளில் வசித்து வந்தேன். ஒரு நாள் ஏதோ சிந்தனையில் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தேன். அப்போது திடீரென என் மனக்கண்ணில் ஒருவித இருட்டுவெளி தோன்றியது. அடுத்த கணமே இருட்டுக்குள்ளும் ஒரு வித அசைவை கவனித்தேன். புகை மூட்டமான நேரத்தில் மேகக் கூட்டங்கள் நகர்வதைக் காண்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில், இதைப்பார்க்க எனக்கு பயமாக இருந்தது. ஆனால் சமாளித்துக் கொண்டு, மனக் கண்ணில் என்ன நடக்கிறது என்பதை கொஞ்ச நேரம் கவனித்தேன். அதற்குள் கண் வலிக்க

ஆரம்பித்துவிட்டதால், தொடர்ந்து கவனிக்க இயலவில்லை.

அன்று மாலையும், இதே போன்ற அனுபவம் எனக்கு மீண்டும் ஏற்பட்டது. அதற்கடுத்த நாட்களிலும் இந்த அனுபவம் தொடர்ந்து நீடித்த போது, புகைமூட்ட வானில் நகரும் மேகக் கூட்டங்களை, பல வித வடிவங்கள் மற்றும் அளவுகளில், என் மணக்கண்ணில் கண்டேன்.

இந்த அனுபவம் இப்படியா? இன்னொரு நாள் அப்போதும் தூக்கம் கலைந்த போதிலும் எழுந்திருக்க மனமின்றி படுக்கையிலேயே படுத்துக் கிடந்தேன். இடது புறமாக ஒருக்களித்து நான் படுத்திருந்த நிலையில், என் கண்கள் திறந்தே இருந்தன. ஆனால் என் அறையோ, முற்றிலும் இருட்டு அப்பிக் கிடந்தது.

அந்த நேரத்தில், திடீரென என்னை மாதிரியே ஒரு உருவம்-ஏன், நானேதான் என்றும் சொல்லலாம்-என் படுக்கைக்கு அருகே என்னை மாதிரியே படுத்துக் கொண்டு என்னையே முறைத்துப் பார்ப்பது போன்ற ஒரு தோற்றம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் அந்த உருவம், அம்மணமாகவும், சற்றே கலங்கலாகவும் காணப்பட்டது. இந்தத் தோற்றம் ஒரு சில விநாடிகளுக்கே நீடித்த போதிலும், அதற்குள் இதயமே நின்றுவிட்டது போல நான் பயந்துவிட்டேன். அதன்பிறகு இருட்டுக்குள் தூங்கும் தைரியம் வராததால், விளக்கை எரிய விட்டுத் தூங்குவதே என் வாடிக்கையாயிற்று.

மூன்றாவது, இன்னொரு அனுபவம். இந்த அனுபவத்தின் போது, நன்றாக விழித்துக் கொண்டிருக்கும்போதே ஒரு பெண்ணின் முகமும் ஒரு ஜோடி கண்களும், என் மனவெளியின் ஏதோ ஒரு இடத்தில் திடீரெனத் தோன்றும். அதுவும் கண்களை மூடிக்கொண்டு மனத்திரையை கவனிக்க ஆரம்பித்தால், முதலில் இந்தத் தோற்றம்தான் தென்படும். சில சமயங்களில்

தெளிவாகவும், சில சமயங்களில் கலங்கலாகவும் தோன்றக் கூடிய இந்த பெண்முகம் யாருடையது என்பதை பல ஆண்டுகளாக என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

இதல்லாது வேறுபல விசித்திரத் தோற்றங்களும் எனக்கு ஏற்படுவதுண்டு. அதையெல்லாம் பிற்பாடு விவரிக்க போகிறேன்.

இப்போது கிரியையின் புதிய வெளிப்பாடு பற்றி குறிப்பிட்டேனல்லவா, அதை மேற்கொண்டு பார்க்கலாம்.

ஒரு நாள் நான் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து வழக்கம் போல் தியானம் செய்து கொண்டிருந்தேன். அப்போது திடீரென என் மனத்திரையில் ஒரு தலைகீழ் முக்கோணம் தோன்றியது. அதன் மீது நான் சற்று கவனம் குவித்தபோது, அது செம்பழுப்பு நிறமாக மாறியது. விரைவில் அதுவே உள்ளாடையுடன் கூடிய பெண் ஜனன உறுப்பாக உருக்கொண்டது.

தலைகீழ் முக்கோணமென்பது, இந்திய சக்தி உபாசகர்களின் சாஸ்திர நூல்படி, பெண் ஜனன உறுப்புடன் சம்பந்தப்பட்ட ஓர் அடையாளச் சின்னம் என்பதை, இங்கே வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

எந்த ஒரு சாதகருக்கும், யோக சாதனையின் போது பல இடையூறுகள் நேரக்கூடும். பெரும்பாலும் மண்ணாசை, பெண்ணாசை போன்ற லோகாயதமான பாவங்களுடன் சம்பந்தப்பட்டதாகவே இந்த இடையூறுகள் அமைகின்றன. எந்த விதமான இடையூறுகள் வரக்கூடும் என்பது, சாதகர் இத்தனை பிறவிகளில் எந்த விதமான எண்ணங்களை சுவீகரித்து, எந்த விதமான குணாதிசயங்களை உருவாக்கி இருக்கிறார் என்பதை பொருத்ததாகும். இது இடையூறாகத் தெரியலாம் என்றாலும், இதுவும் ஒரு விதமான கிரியையின் வெளிப்பாடே. காலம்

காலமாக மனதிற்குள் சேர்ந்துள்ள அழுக்கை முற்றிலுமாகத் துடைத்தழிப்பதே, இதற்கும் நோக்கம் என்பதை வாசகர்கள் அறிக.

இன்னனொருநாள் நான் படுக்கையில் சம்மணமிட்டு அமர்ந்தபடி, தியானத்தில் இருந்தேன். சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, என் மனத்திரையில் அதிரூப சுந்தரியான ஒரு தேவதை தோன்றினாள். அவள், என் முகத்தை நோக்கி மேலும் மேலும் நகர்ந்து வருவது போன்ற ஓர் உணர்வும் எனக்கு ஏற்பட்டது. நான் வலுக் கட்டாயமாக இத்தோற்றத்தை மனக் கண்ணிலிருந்து விலக்க முயன்றேன். அப்படிச் செய்வது, சக்திமார்க்க யோகவிதிகளின்படி தவறானது என்பது, உடனடியாக எனக்குப் புரியவில்லை. அதனால் தேவதை வடிவை விலக்க முயன்றதன் மூலம், யோக விதிகளை நான் மீறி விட்டேன்.

இதனால் என்ன விளைவு ஏற்பட்டதென்றால், தேவதை உருவத்தை வலுக் கட்டாயமாக விலக்கிய சிறிது நேரத்தில், என் மனக் கண்ணில் கொடூரமான பல பாம்பு வடிவங்கள் தோன்றி, நெளிந்து, என் மன வெளியை நிறைக்க ஆரம்பித்தன. பாம்புகள் நாக்கைத் துருத்திக் கொண்டு என்னை கொத்த வருவது போல அசௌகரியமான ஒரு உணர்வும் ஏற்பட்டது. ஆனால் என் தவறின் விளைவுதான் இது என இப்போது எனக்குப் புரிந்து விட்டதால், வெறுக்கத் தகுந்த இந்த உணர்வை பொறுத்துக் கொண்டு, அதை விலக்கும் முயற்சியை தவிர்த்தேன். சிறிது நேரத்தில் இந்த உணர்வு தணிந்தவுடன், பழைய தேவதை என் மனக் கண்ணில் தோன்றி மீண்டும் மீண்டும் என்னை முத்தமிட வந்தாள். நடப்பது நடக்கட்டும் என்று நான் வெறும் பார்வையாளனாக, நடப்பதை கவனித்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த முறையும் நான் செய்வது பாவமா புண்ணியமா என்று எனக்கு புரியவில்லை. கிரியை எப்படி வெளிப்பட்டாலும், அதை மறுக்காமல் அனுமதிக்க வேண்டும் என்று என் மனதின் ஒரு பாதி சொல்லிற்று.

இன்னொரு பாதியோ, கடவுளை நினைத்துச் செய்ய வேண்டிய தியானத்தில் இப்படியொரு அபச்சாரமா? இதை அனுமதியாதே என்றது. அந்த நிமிடத்தில், நான் புனிதனா பாவியா என்பதே எனக்குப் புரியவில்லை. புண்ணியத்திற்கும் பாவத்திற்கும் இடையிலான கோடு எது என்பது தெரியாமல், என் மனம் இரண்டு பக்கமும் இழுபட்டுப் பிய்ந்து போயிற்று.

ஆனால் இதுவும், ஆதிபராசக்தியின் அருளால் மனப்பதிவுகள் அழிபடும் அனுபவத்தின் இன்னொரு வெளிப்பாடுதான் என்பதை, நான் பிற்பாடு புரிந்து கொண்டேன்.

ஆம் நடக்கப் பழகுவதற்கு நடைவண்டி குழந்தைக்குத் தேவை. ஆனால் நடக்க வந்துவிட்டால் அதற்கு மேல் நடைவண்டியை உதறிவிட வேண்டும். அவ்வாறு செய்யா விட்டால், ஓடப்பழகுவதில் ஒரு தடையாக நடைவண்டி மாறிவிடும். நடக்கப் பழகிய பின்னரும் நடைவண்டியை விடாவிட்டால், ஓட்டம் பழக முடியாது.

அனைத்து மத நூல்கள், தத்துவங்கள் மற்றும் சாஸ்திரங்களுக்கும் இந்த உதாரணம் பொருந்தும், அதாவது, ஆன்மீக முயற்சியின் ஆரம்பக் கட்டத்தில், குண்டலினி சக்தியை எழுப்பும் வரை, இந்த மத நூல்கள், தத்துவங்கள், சாஸ்திர விதிமுறைகள் எல்லாமே சாதகருக்குத் தேவைதான். ஆனால், குண்டலினி சக்தியை எழுப்புவதில் வெற்றி பெற்றுவிட்டால், அதன் பிறகு இந்த எல்லாவற்றையும் உதறி விடவேண்டும். அப்படி உதறாமல் அதையே பற்றிக் கொண்டிருந்தால், ஆன்மீகப் பாதையில் மேலும் முன்னேற முடியாது. உதறவேண்டிய விஷயங்களாக, கடவுள்கள், கோவில்கள் மற்றும் பாவ-புண்ணியம் பற்றிய பொதுவான கருத்துக்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

வியப்பூட்டும் இந்த விஷயம் பற்றி இன்னும் சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதரின் மனமும், தனிப்பட்ட ஒவ்வொரு விதமான அமைப்புக் கொண்டுள்ளது. இரண்டுபேரின் கைவிரல் ரேகைகள் எப்படி ஒரே மாதிரி இருக்காதோ அதுபோல, தனிப்பட்ட இருவரின் மனங்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை. எனவே, கடவுள் தனிப்பட்ட மனிதர்களின் குணாதிசயங்களுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அருள் புரிகிறார். உதாரணமாக, ஒருவன் பணத்தாசை பிடித்து அலைவதாக எடுத்துக் கொள்வோம். இத்தகைய ஒருவனின் பணத்தாசையை, ஒரு கட்டம் வரை கடவுள் அனுமதிப்பார். அதன் பிறகு அவனைத் திருத்தி நல்வழிப் படுத்த விரும்பினால், கடவுள் முதலில், அவன் பணம் முழுவதையும் வழித்து எடுத்துவிடுவார். பணம் பறிபோன பிறகுதான், பணத்தினால் ஆகப் போவது ஒன்று மில்லை என்பது அவனுக்குப் புரியும். அதனால் ஆன்மீகப் பாதைக்கு அவன் திரும்புவான். எனவே, பணத்தாசை பிடித்தவர்களின் பணத்தை பறித்துக் கொள்வதன் மூலம், கடவுள் அவர்களுக்கு அருள் புரியவே செய்கிறார். இதையே இன்னொரு விதத்தில் சொல்வதானால், பணத்தாசை பிடித்துப் பணத்தைத் தேடி அலைவதுகூட, ஒரு விதத்தில் கடவுளை நெருங்குவதற்கான இன்னொரு அணுகுமுறைதான் என்று சமஸ்கிருத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக, சுவையான ஒரு குட்டிக் கதை சொல்கிறேன்.

ஒரு ஊரில் ரொம்பவும் ஆச்சாரமான ஒரு பண்டிதர் இருந்தார். எல்லா சாஸ்திரங்களையும் படித்திருக்கிறோம் என்று அவருக்கு மிகவும் கர்வம். ஒரு நாள் அவர் கோவிலுக்கு போனபோது, வயதான ஒரு மனிதர், கடவுள் சிலை ஒன்றின் மேல் கால்

படும்படி கோவிலுக்குள்ளேயே படுத்துக் கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். அவசரம் அவசரமாக அவர் அந்த முதியவரை எழுப்பி, என்ன இது அபச்சாரம்? தெய்வத்தின் மீது கால் படுமாறுதான் படுப்பதா? என்று மிகுந்த கோபத்துடன் வினவினர். அதற்கு அந்த முதியவர், “அப்படியா? எனக்கு வயதாகி விட்டது, கண்ணும் தெரியவில்லை. கடவுள் இல்லாத இடத்தில் காலை சற்று நகர்த்தி வைக்க, நீங்கள்தான் கொஞ்சம் உதவுங்களேன்? என்றார். பண்டிதரும் அபச்சாரத்தை எப்படியாவது சரி செய்ய வேண்டுமே என்ற ஆத்திரத்தில், முதியவரின் காலை சற்று நகர்த்தி வேறு இடத்தில் வைத்தார். ஆனால் என்ன ஆச்சிரியம்! முதியவரின் காலை நகர்த்தி வைத்த இடத்தில் புதிதாக ஒரு கடவுள் சிலை முளைத்தது! “என்னடா இது” என்று பண்டிதர், முதியவரின் காலை இன்னும் சற்று நகர்த்தி வைக்க, அங்கேயும் இன்னொரு சிலை வந்துவிட்டது. இப்படியே முதியவரின் காலை எங்கே நகர்த்தினாலும, அங்கெல்லாம் கடவுளின் சிலை புதிது புதிதாக முளைக்கவே, பண்டிதர் செய்வதறியாமல் தலையில் கைவைத்து அமர்ந்து விட்டார். ஆனாலும், கடவுள் இல்லாத இடம் என்று இந்த உலகத்தில் எதுவுமே இல்லை என்பதை தமக்கு புரிய வைக்கவே கடவுள் இந்த நாடகத்தை ஆடியிருப்பதும், வந்திருப்பவர், உன்னத ஆன்மீக நிலையில் உள்ள மகா யோகியே தவிர, சாதாரணக் கிழவர் அல்ல என்பதும், பண்டிதருக்குப் புரிந்து விட்டது! அவருடைய ஞானச் செருக்கும் அகன்றது!

இப்படித்தான், யோக முயற்சியில் ஈடுபடும் எந்த ஒரு சாதகருக்கும், ஏதோ ஒரு சம்பவம் மூலம் அதிரடியான மன மாற்றம் ஏற்படும். சாதகரின் தனிப்பட்ட குணாதிசயங்களைப் பொறுத்து, எவ்விதமான சம்பவமும் நிகழக்கூடும். ஆனால் இத்தகைய சம்பவத்திற்கு பின்னர், சாதகர் இது வரை தாம் வைத்திருந்த நம்பிக்கைகள், வளர்த்து வந்த எண்ணங்கள்

எல்லாமே வீண் என்பதையும், கடவுளை நோக்கி ஆன்மீக ரீதியில் மேலும் மேலும் முன்னேறுவது மட்டுமே மனிதப்பிறவியின் கடமை என்பதையும் உடனடியாகப் புரிந்து கொள்வார். அதன் பிறகு அவரது வாழ்க்கையே தலைகீழாக மாறிப் போகும்!

ஒருவேளை இத்தகைய சம்பவத்திற்கு பிறகும், சாதகர் தன் பழைய நம்பிக்கைகளையும், தேவ - தேவதைகளையும் விடாமல் பிடித்துக் கொண்டிருந்தால், அதற்கு மேல் ஆன்மீக முன்னேற்றம் கிட்டாது. மனம் அடுத்தடுத்த ஆன்மீக தளங்களுக்கு உயராது. அதாவது, ஆன்மீக முயற்சியின் ஆரம்பக் கட்டத்தில் எந்த வேத-தேவதைகளின் ஆராதனை மிகப் பயனுள்ளதாக இருந்ததோ, அதே தேவ-தேவதைகள் தற்போது ஆன்மீக முன்னேற்றத்திற்கு எதிரான தடைக் கற்களாக மாறிப்போகின்றன!

உருவ வழிபாடு கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆரம்பத்தில் உருவ வழிபாடு தேவைதான் என்றாலும், ஒரு கட்டத்தில் அதை விட்டுவிட வேண்டும் என்பதே நான் சொல்ல வரும் கருத்து. உருவ வழிபாட்டை கைவிட்டு, கோவிலின் நான்கு சுவர்களுக்குள் அடக்கமுடியாத, இந்தப் பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியிலும் நீக்கமற நிறைந்திருக்கும் மகாசக்தியாக கடவுளை வழிபடும் போதுதான், ஆன்மீக முன்னேற்றத்தில் உச்சநிலையை எட்ட முடியும்.

என்னைப் பொறுத்தவரை, என் மனதில் அதிரடி மாற்றங்களை ஏற்படுத்திய சம்பவம். எப்போது, எங்கே நிகழ்ந்தது என்பது பற்றிய விவரங்களை நான் சொல்லப் போவதில்லை. ஏனென்றால், இதெல்லாம் தனிப்பட்ட சாதகரின் குணாதிசயங்களைப் பொறுத்தது என்பதால், விபரங்களை நான் சொன்னாலும் வாசகர்களுக்குப் பயன் இராது. இத்தகைய சம்பவங்களுக்குப் பிறகு சாதகரின் மனநிலையில் அதிரடி மனமாற்றம்

கணப்பொழுதில் நிகழும் என்பதும், கடவுளே அருள்புரிந்து, தகுதியுடைய சாதகர்களின் மனநிலையை இவ்வாறு மாற்றுகிறார் என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனக்கு நேர்ந்த இத்தகைய சம்பவத்தையும், என் உடலுக்குள் கிரியை வெளிப்பட்டபோது ஏற்பட்ட அனுபவங்களையும், நான் பிற்பாடு என் குருவிடம் எடுத்துச் சொன்னேன். சில சாதகர்களுக்கு, ஆன்மீக முன்னேற்றம் இதுபோல விரைந்து ஏற்படுவதுண்டு என்றும், முன்னேறிய நிலையிலிருந்து கீழே விழுந்து விடாமல் பார்த்துக் கொள்வதே முக்கியம் என்றும், சுவாமிஜி சுருக்கமாக பதிலளித்தார்.

ஒரே நாள், ஒரே வேளை தியானத்தில் அதிரடியான மனமாற்றங்கள் எனக்கு ஏற்பட்டது குறித்து, நான் எண்ணி எண்ணி வியக்கிறேன்! அந்த ஒரே நாள், ஒரே வேளை தியானத்தில், நான் அதுவரை வைத்திருந்த நம்பிக்கைகள், கருத்துக்கள், எண்ணங்கள் எல்லாமே ஒழிந்து போயின. நான் அதுவரை கற்றிருந்த மத நூல்கள், சாஸ்திரங்கள், தத்துவங்கள் எல்லாமே தேவையின்றிப் போயின. மேற்கொண்டு இதுபோன்ற நூல்களைப் படிக்கும் ஆர்வம் அடியோடு அற்றுப் போயிற்று. கடவுளுக்குச் செய்யும் பூஜைகள், மானசீக ஆராதனைகளைக் கூட அதன்பிறகு நான் நிறுத்திக் கொண்டேன். நானாகவே கோவிலுக்குச் செல்வதையும் தவிர்க்க ஆரம்பித்துவிட்டேன். இது எப்பேர்ப்பட்ட விந்தை! கடவுளை அறிவதற்கான ஆன்மீக முயற்சியில், கடவுளையே இப்படி அடியோடு உதறவேண்டியிருக்கும் என, கனவில் கூட நான் எண்ணிப் பார்த்ததில்லையே!

எல்லாமறிந்த ஆதிபராசக்திக்கு, அடியேனின் நமஸ்காரம்!

எளிய மனிதர்களின் மனக் கண்ணாடியில் படிந்திருக்கும்

அழுக்கை ஒரு நொடியில் துடைத்தழிக்க என்ன வழி என்பது, அந்த ஆதி மகாசக்திக்கே தெரியும்!

அந்த சக்தியின்பால் என் மனதை செலுத்தி, இருதயத்தின் ஆழமான இடுக்குகளில் பொதிந்துள்ள நித்திய ஒளி பிரகாசமாகப் பளிச்சிடும் விதத்தில், என் மன இருட்டை அகற்றியவரும். அதையே தன் இயல்பாகக் கொண்டவருமான என் குருவிற்கு, அடியேனின் தலைவணக்கம்!

இந்த அனுபவத்திற்கு பிறகு, நான் பழைய ஆளாகவே இருக்கவில்லை! என் வாழ்க்கை, பழைய வாழக்கையாகவே இருக்கவில்லை!

# மூளை-தண்டுவட மண்டலத்தில் சக்தியின் ஏற்றம்

மங்களகரமான ஒரு நாள் இரவு, 9 அல்லது 10 மணிக்கு, நான் என் குருவிற்குப் பக்கத்து அறையில், படுக்கையில் அமர்ந்தபடி தியானத்திலிருந்தேன்.

அப்போது திடீரென, என் முதுகுத்தண்டுவடம் நெடுகிலும் விசித்திரமான ஓர் இயக்கத்தை உணர ஆரம்பித்தேன். அந்த இயக்கம், தவளையின் தாவலைப் போல இருந்தது. எழுப்பப்பட்ட குண்டலினி சக்தி, தண்டுவடத்தின் இரண்டு பக்கங்களையும் பிடித்துக் கொண்டு, அடுத்தடுத்த சக்கரங்களுக்கு உயர முயல்வதன் அடையாளம்தான் இது என்பதை, பிற்பாடு என் குருவிடமிருந்து அறிந்து கொண்டேன். முதுகுத் தண்டு வழியான அந்த இயக்கம் அவ்வப்போது நின்று, மறுபடி உணரப்பட்டது. சில சமயங்களில் தாவுதல் போலவும், சில சமயங்களில் ஊர்தல் போலவும் நான் உணர்ந்தேன். இப்படியாக மாறிமாறித் தோன்றிய அந்த இயக்கம், கொஞ்சம் கொஞ்சமாக மேலேறி, இறுதியாக தண்டுவடத்தில் போய் நின்றது. ஆனால் இந்த உணர்வு, கொஞ்சம்கூட உவப்பானதாக இல்லை என்பதை வாசகர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையில், என்ன நடக்கிறது என்பதை உள்ளுக்குள் அவதானிக்கையில், எனக்குக் கொஞ்சம்

பயமாகவே இருந்தது.

ஆனால் இப்போது அந்த அனுபவத்தை எண்ணிப்பார்த்தால், அது அலாதியான ஓர் அற்புத அனுபவம் என்று படுகிறது. குண்டலினி சக்தியில் உடல் ரீதியிலான இயக்கத்தை, நான் அப்போதுதான் முதல் முறையாக உணர்ந்திருக்கிறேன். இது நவீன அறிவியலின் பகுத்தறிவு விளக்கங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட, ஓர் அதிசய அனுபவம். இத்தகைய அனுபவத்தால் என் மனதில் எந்த விதமான தாக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை வாசகர்கள் அனுமானிக்க முடியும். இந்த அனுபவத்திற்குப் பிறகு, யோகாப்பியாசம் குறித்து புத்தகங்களில் நான் படித்திருந்த எல்லாக் கருத்துக்களும், ஐயம் இல்லாமல் நிரூபணமாயின. யோக சாஸ்திரங்களின் மேல் எனக்குள்ள நம்பிக்கை மிகவும் வலுவாயிற்று. கடவுளை அடைவதற்கான வழி இதுவே என்பதில், கொஞ்சமும் சந்தேகம் இருக்கவில்லை.

குண்டலினி சக்தி, என் உடம்பிலுள்ள நாடிநரம்புகளை சுத்திகரிக்கத் துவங்கிவிட்டதாகவும், அதற்கான அறிகுறிதான் உடலுக்குள் நான் உணர்ந்த இயக்கம் என்றும், சுவாமிஜி பிற்பாடு எனக்கு விளக்கினார்.

மறுநாள், ஏதோ சில காரணங்களால், அன்று, நான் என் குருவை சந்திக்க இயலவில்லை.

அன்றைய தினம் காலை, நான் நாற்காலியில் அமர்ந்தபடி, வழக்கம் போல் தியானத்தில் ஈடுபட்டிருந்தேன். நேற்றிரவு ஏற்பட்டதுபோல, தவளை தாவுவது போன்ற உணர்வுதான் இன்றும் ஏற்படும் என நான் நினைத்திருந்த வேளையில், இன்று முற்றிலும் வேறுபட்ட மற்றொரு உணர்வு ஏற்பட்டது. அதாவது இன்று, குண்டலினி சக்தி என் முதுகுத்தண்டை சுற்றிச் சுற்றி, பாம்புபோல் நெளிந்து நெளிந்து மேலே ஏறுவது போல நான் உணர்ந்தேன்.

**பராசக்தி**

குண்டலினி சக்தியின் இயக்கத்தை பாம்பின் இயக்கத்துடன் ஒப்பிட்டு எத்தனையோ புத்தகங்களில் நான் படித்திருக்கிறேன். ஆனாலும் அத்தகைய எந்த இயக்கம் போன்றதாகவும் என்னுடைய உணர்வு இருக்கவில்லை. இதை நினைக்கும்போது எனக்கு கொஞ்சம் பயமாகவே இருந்தது. கிரியை என் உடலுக்குள் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது என்பது பற்றி எனக்கு மகிழ்ச்சிதான் என்றாலும், அந்தக் கணத்தில் நான் அனுபவித்த உணர்வு மகிழத்தக்கதாக இல்லை. இருந்தாலும் நடப்பது நடக்கட்டும் என்று, நான் தியானத்திலேயே இருந்தேன். இறுதியாக குண்டலினி சக்தியின் இயக்கம், என் இருதயத்திற்கு நேர் பின்னால், தண்டுவடத்தில் ஏறி நின்றது. நான் தியானம் கலைந்து எழுந்து பார்த்தபோது, மூன்றரை மணி நேரம் தியானத்தில் இருந்திருக்கிறேன் என்பது புரிந்தது!

அன்று, பகல் உணவு சாப்பிட்ட பிறகு, மீண்டும் தியானம் செய்யவேண்டும் போல் தோன்றியது. இந்த முறை தியானம் இன்னும் 3 மணி நேரம் நீடித்தது. தியானத்தின் போது, காலையில் ஏற்பட்ட அதே உணர்வுகளை மறுபடியும் உணர்ந்தேன்.

அன்று பகல் முழுவதும் ஒரு மாதிரி அரை மயக்க நிலை எனக்குள் நீடித்தது.

அப்படியும், அன்றைய தினம் இரவு உணவுக்குப் பின்னர், நான் மீண்டும் தியானத்தில் அமர்ந்தேன், இந்தத் தடவை ஒண்றரை மணி நேரத்திற்கு தியானம் நீடித்ததால், அன்று ஒரே நாளில் மொத்தம் ஒன்பதரை மணி நேரம் தியானம் செய்திருப்பதாக கணக்கிட்டேன். இது, என் வாழ்நாளில் ஒரு சாதனை. எவ்வளவோ முயன்றும் அன்றைய சாதனையை முறியடிக்க இன்று வரை இயலவில்லை.

மறுநாள் இதுபற்றி என் குருவிடம் பேசிய போது, முன்னேறிய

ஆன்மீக நிலையில் உள்ள யோகிகளுக்கு ஒரே நாளில் ஒன்பதரை மணி நேர தியானம் என்பதெல்லாம் சர்வ சாதாரணம் என்றாலும், என்போன்ற ஒரு சாதகருக்கு அது பெரிய விஷயம்தான் என்றார். இந்த மிக நீண்ட தியானமும் ஒரு விதக் கிரியையின் வெளிப்பாடே என்றும், கடந்த காலத்தில் தீவிர தியானப் பயிற்சி செய்து, மிகவும் பக்குவப்பட்டவர்களுக்கு மட்டுமே இது போன்ற நீடித்த தியானம் சித்திக்கும் என்றும் அவர் தெரிவித்தார். கிரியையின் வெளிப்பாடு என்பது, தியானத்தில் ஒரே அமர்வில் முடிந்துவிட வேண்டுமென எந்தக் கட்டாயமும் இல்லை என்பதையும், எனக்கு ஏற்பட்டது போல, ஒன்றுக்கு மேற்பட்ட அமர்வுகளுக்கு நீடிக்கலாம் என்பதையும், இங்கே வாசகர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

காலம் காலமாக மனிதனுக்குள் உருவான மனப் பதிவுகள், நல்ல பதிவுகளாகவும் இருக்கலாம்; கெட்ட பதிவுகளாகவும் இருக்கலாம் என்பதையும், இந்த நல்ல பதிவுகள்-கெட்ட பதிவுகள், அனைத்தையும் துடைத்து அழித்தால்தான், மனக் கண்ணாடியில் கடவுளைக் காண முடியும் என்பதையும், வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மனப் பதிவுகளை, லோகாயத ரீதியில் நல்ல பதிவுகள், கெட்ட பதிவுகள் என்று நாம் பிரிக்கிறோமே தவிர, யோகாவைப் பொருத்தவரை, மனப் பதிவுகளில் எந்த வித்தியாசமும் கிடையாது. இதை மேலும் சற்று விளக்குகிறேன்.

ஒரு மனிதர், தன் முந்தைய பிறவிகளில் கடவுளை முறையாக வழிபட்டு, மத ஆசாரங்களை முறையாகப் பின்பற்றி, தான தர்மங்கள் மற்றும் சமூக சேவையில் ஈடுபட்டு, நிறைய நல்ல காரியம் செய்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். உலகத்தின் பார்வையில் இதெல்லாம் புண்ணியம்தான் என்றாலும், இதையெல்லாம் செய்திருக்கிறோம் என்ற ஒரு பெருமை, அவர் அறியாமலேயே அவரது அடிமனதில் பதிந்திருக்கும். அந்தப் பெருமித உணர்வையும் அழித்த பிறகுதான், சாதகரின் மனக் கண்ணாடியில் நித்திய ஞானம் ஒளிர முடியும்!

இதே போல, ஒருவர் தன் முற்பிறவிகளில் நிறைய தியானம் செய்து மிகந்த பக்குவப்பட்டிருக்கிறார் என்றே வைத்துக் கொண்டாலும், அதுபற்றிய ஆழ்மன நினைவுகளையும் அகற்றாவிட்டால், இந்த நினைவுகளே, கடவுளுக்கும் சாதகருக்கும் இடையிலான திரையாக அமைந்து, கடவுளை மறைத்துவிடும். எனவே, மனப் பதிவுகள் நல்ல பதிவுகளாகவே இருந்தாலும், ஆன்மீக நிலையில் உச்சக்கட்டத்திற்கு உயர்ந்து, கடவுளை உணர, நல்ல பதிவுகளையும் மனதிலிருந்து அகற்ற வேண்டியது அவசியம். நான் ஏற்கனவே சொன்னது போல, இதுவரை நாம் கற்ற மதக் கோட்பாடுகள், இறைத் தத்துவங்கள், கொள்கைகள் எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு, கடவுளை அறிவது மட்டுமே குறியென இறங்கினால் மட்டுமே, கடவுள் பற்றிய மெய்யறிவைப் பெற முடியும்.

சில பத்திகளுக்கு முன்பு நான் சொன்ன அந்த ஒருநாள் அனுபவத்திற்கு மறுநாள். தியானத்தின் போது மற்றொரு அனுபவம் ஏற்பட்டது. ஒருநாள், மறுநாள் என்கிறேனே தவிர, சரியான தேதியையோ, பயன்படுத்திய மந்திரத்தையோ நான் சொல்லவில்லையே என்பது குறித்து, வாசகர்கள் என்மேல் வருத்தப்பட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த அனுபவங்கள் ஏற்பட்டபோது, பின்னால் அதுபற்றிப் புத்தகம் எழுதும் எண்ணம் கிஞ்சித்தும் எனக்கில்லை. எனவே, என்னுடைய அனுபவங்களைத் தேதி வாரியாகப் பதிவு செய்து டைரி எழுதிவைக்கவில்லை. ஆனால் புத்தகம் எழுத வேண்டிய தருணம் இப்போது வந்து விட்டதால், முடிந்தவரை ஞாபகத்திலிருந்து எடுத்து எழுதுகிறேன். இதனால், சம்பவங்கள் மற்றும் அனுபவங்களின் வரிசை சற்று முன்னுக்குப் பின்னாகவும் இருக்கக்கூடும் என்பதை வாசகர்கள் அறிக.

இந்தத் தடவை, குண்டலினி சக்தி சாதாரணமாக மேலே ஏறுவது போலத்தான் இருந்தது. அதாவது கஷ்டமான உணர்வு இருக்கவில்லை. ஆனாலும் அந்த உணர்வு, இதுவரை இல்லாத விதத்தில் மிகவும் புதுமையாக இருந்தது. அதாவது குண்டலினி சக்தி இந்த முறை என் உடலுக்குள் மேலேறிய போது, எறும்புகள்

கூட்டம் கூட்டமாக என் முதுகின் மேல் ஊர்வது போலக் குறுகுறுப்பாக உணர்ந்தேன். உடனே அந்த இடத்தை சொறிந்து கொள்ள வேண்டும் போல் இருந்தது. கடைசியில் இந்தத் தடவையும், அந்த சக்தியின் எழுச்சி, என் இருதயத்தின் நேர் பின்னால், முதுகுத்தண்டில் போய் நின்று விட்டது.

மறுநாள் இந்த அனுபவத்தை என் குருவிடம் விவரித்தேன். குண்டலினி சக்தி இப்படித்தான் வெவ்வேறு விதங்களில் மேலேறும் என்றும், தற்போது இருதய பாகத்துடன் நின்றுவிடும் இந்த சக்தி, இனி வரவிருக்கும் நாட்களில் இன்னும் இன்னும் மேலேறி, என் காது, கண், மூக்கு, வாய், கன்னம் மற்றும் தலைமுடி வரை, முகத்தில் உள்ள எல்லாத் தசைகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்றும் சுவாமிஜி சொன்னார், உச்சந்தலையைத் தாண்டி, புறவெளிக்குள் குண்டலினி சக்தி பாய்வதைக் கூட ஒரு கட்டத்தில் என்னால் உணரமுடியும் என்று அவர் மேலும் எடுத்துக் கூறினார்.

இந்த அனுபவத்திற்கு பிறகு, நான் என் எஞ்சிய ஆயுளின் விதியை வாழ்ந்து அனுபவிக்க வேண்டுமல்லவா, அதற்காக, என் குருவைப் பிரிய நேர்ந்தது.

இந்த இடத்தில், குண்டலினி சக்தி என் உடலுக்குள் மேலேறிய விதங்கள், இது பற்றி யோக சாஸ்திரங்களில் என்ன சொல்லப்பட்டுள்ளதோ, அதோடு முற்றிலும் ஒத்துப் போயிற்று என்பதை வாசகர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஆனாலும், ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. தவளை தாவுவது போன்ற உணர்வும், இன்னும் யோக சாஸ்திரங்களில் இது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள இன்னபிற உணர்வுகளும் எனக்கு முழுமையாக ஏற்பட்டன. ஆனால் பறவை பறப்பது போன்ற ஒரு உணர்வும் ஏற்படும் என சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட உணர்வு மட்டும் எனக்கு ஏற்பட்டதா என்று தெளிவாக ஞாபகமில்லை. அந்த உணர்வும் ஏற்பட்டது போல

கலங்கலான ஒரு நினைவு எனக்கு இருக்கவே செய்கிறது என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதுவும்தான் ஏற்பட்டது என்று நான் உறுதியாக சொல்லிக் கொள்ள மாட்டேன்.

குருவிடமிருந்து பிரிந்த பிறகும், நான் தொடர்ச்சியாக தியானத்தில் ஈடுபட்டு வந்தேன். இதனால் குண்டலினி சக்தி மேலேறும் போக்கும் நடந்து கொண்டுதான் இருந்தது. இந்தக் காலகட்டத்தில், குண்டலினி சக்தி மேலேற மேலேற, நான் சிக்கலான எந்தெந்த உணர்வுகளையெல்லாம் உணர்ந்தேன் என்பதை மேற்கொண்டு சொல்லத்தான் போகிறேன். ஆனால் நான் ஏற்கனவே சொன்னது போல, இது பற்றி டைரிக்குறிப்பு எதையும் பராமரிக்கவில்லை என்பதால், இந்த அனுபவங்களை முழுமையாக விவரிப்பது மிகவும் கடினமாகவே இருக்குமெனத் தோன்றுகிறது.

இத்தகைய தியான அமர்வுகளின் போது ஒருமுறை, மூலாதார சக்கரத்தில் இருந்து குண்டலினி சக்தி மேலேறி, நாபியில் உள்ள மணிப்பூர சக்கரத்துடன் நின்றுவிட்டது. நின்றுவிட்டது என்றால், சும்மா நிற்கவில்லை. முதுகுத் தண்டைச் சுற்றி, விசித்திரமான ஒரு விதத்தில், விறுவிறுவெனப் படுவேகமாகச் சுழல ஆரம்பித்த, மிகவும் சிக்கலான அந்த இயக்கம், இதுவரை நானறிந்த இயக்கங்களில் எது போலவும் இருக்கவில்லை. ஆனால் அந்த இயக்கம், எங்கே தோன்றியதோ அங்கு மட்டும்தான் இருந்ததே தவிர, வேறு இடங்களுக்குப் பரவவில்லை.

இதுபோலவே, இன்னும் பல தியான அமர்வுகளில் குண்டலினி சக்தியின் சிக்கலான, விசித்திரமான இன்னும் பல இயக்கங்களை நான் உணர நேர்ந்தது. முதுகுத் தண்டின் மையக் கோடு வழியாக, கூரான, மிக மெல்லிய ஊசி ஒன்றை கீழிருந்து மேல்நோக்கிக் குத்திக் கொண்டே செல்வது போன்ற ஒரு உணர்வும் இதில் அடங்கும்.

நீண்டநேரம் தியானம் செய்து முடித்தால், நான் மிகவும்

சோர்வடைந்து, ரொம்பவும் அமைதியாகி விடுவேன். அது மட்டுமின்றி, என் தலைக்குள் கிரியையின் இன்னொரு விதமான வெளிப்பாடும் ஏற்படும். அதாவது, தலைக்கு உள்ளிருந்து யாரோ அழுத்துவது போன்ற உணர்வு, தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்கு எனக்கிருந்தது. தொடர்ச்சியாக என்றால், இரவும் பகலும் தொடர்ச்சியாக என்று பொருள். அதாவது, அன்றாடம் காலை உறங்கி எழுந்த சிறிது நேரத்திற்கு மட்டும்தான், தலை சற்று லேசானது மாதிரி இருக்கும். அதன் பிறகு கனமான உணர்வு ஆரம்பித்து, நாள் முழுவதும் நீடிக்கும். அது மட்டுமின்றி, எப்போதும் ஏதோ மது அருந்தியது போன்ற கிறக்கமான ஒரு உணர்வும் தொடர்ச்சியாக இருந்து வந்தது. அதுவும் தியானத்தின் போது குண்டலினி சக்தி மூளை வரை ஏறிவிட்டதென்றால், தலைக்குள் ஏதோ குடைவது மாதிரி இருக்கும். நெற்றிப் பொட்டில், குறுகுறுப்பான ஒரு உணர்வு தொடர்ந்து நீடிக்கும், மூளைக்குள் என்னதான் இரசாயன மாற்றங்கள் நிகழ்கிறதோ என்று எனக்குத் தோன்றும்.

ஆனால், இத்தனை குழப்பமான பக்க விளைவுகள் ஏற்பட்டதே தவிர, இதனால் என் அன்றாட வாழ்க்கையில் ஒருநாளும், உடல் அளவிலோ, மனதளவிலோ எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

# சக்தியின் இயக்கம்

குண்டலினி சக்தி, மூளை-தண்டுவட மண்டலத்தின் மேலேறும் போது, எத்தகைய உணர்வுகள் ஏற்படும் என்பதை, சென்ற அத்தியாயத்தில் விவரித்தேன். பின்வரும் அத்தியாயங்களில், இதுபற்றி மேலும் விவரிக்கப்படும். இந்த விவரங்கள், இதுவரை நாம் பார்த்த உணர்வுகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாய் இருக்குமென்பதால்தான், அவற்றை முந்தைய அத்தியாயத்தில் சேர்க்கவில்லை.

இனி, கிரியையின் வெளிப்பாடு ஒருநாளின் 24 மணி நேரமும், எந்த சமயத்திலும் ஏற்படலாம் என்பதை, வாசகர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். கிரியையின் வெளிப்பாடு எப்போது ஆரம்பிக்கும் என்பதற்கு, எந்தக் கணக்கும் இல்லை. உடலின் எந்தப் பகுதியில் கிரியை துவங்கும் என்பதையும், நாம் முன்கூட்டியே கணிக்க முடியாது. அதாவது, மனித உடலின் அன்னமய கோசம் முதலான ஐந்து அடுக்குகளில் எந்த அடுக்கில் வேண்டுமானாலும், கிரியை வெளிப்படலாம். அல்லது, ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குகளில் ஒரே சமயத்திலும் கிரியை வெளிப்படும். உடலின் ஓரிடத்தில் கிரியை வெளிப்படும் போதே, திடீரென இன்னொரு இடத்திலும் வெளிப்படுவதை, சில சமயங்களில் உணரமுடியும். இதற்கும் மேல், உடல், மனம் மட்டுமின்றி, அன்றாட வாழ்க்கையில் விசித்திர சம்பவங்களாகவும் கிரியை வெளிப்படலாம் என்பதால், இந்த வெளிப்பாட்டை குறிப்பிட்ட எந்த

விதத்திலும் வகைப் படுத்திவிட முடியாது. ஆனாலும், என்னால் முடிந்தவரை, என்னுடைய அனுபவங்களை விவரிக்க, இந்த அத்தியாயத்தில் நான் முயல்கிறேன்.

குண்டலினி சக்தி, மூளை-தண்டுவட மண்டலத்தில் ஏற ஏற, என் உடலின் சிக்கலான நாடி நரம்புகளை கன்னாபின்னாவென்று பிரித்துப் போட்டது மாதிரி இருந்தது. இந்த நாடி நரம்புகள் மூலம், என் உடலின் மூலை முடுக்களில்கூட, குண்டலினி சக்தியின் இயக்கத்தை, தொடர்ச்சியாக நான் உணர்ந்தேன், ஆழ்ந்த நித்திரையின் போது தவிர.

இந்த இடத்தில், நான் ஒரு விஷயத்தைச் சொன்னால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆழ்ந்த உறக்கத்தில் கூட, குண்டலினி சக்தியின் இயக்கம் அடங்கிவிட்டதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இது எப்படி என்பதற்கு, நான் சில உதாரணங்களைச் சொன்னால், மீதியுள்ள விஷயங்களை வாசகர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். உதாரணங்களைப் பார்க்கும் முன், இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகிறேன். கிரியையின் வெளிப்பாட்டை நாமாகப் பார்த்து, நம்மிஷ்டப்படிக் கட்டுப்படுத்த முடியாது. இதை நாம், புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே, ஆழ்ந்த நித்திரையின் போது கிரியை அடங்கியிருப்பது போல், ஒரு தோற்றம் ஏற்படுகிறதோ என்று எனக்குப்படுகிறது. இது தொடர்பாக நான் குறிப்பிடும் உதாரணங்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாக இருக்கலாம். ஆனால் கிரியையின் வெளிப்பாடு என்பதே, அடிப்படையில் சாதாரணப் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட, ஓர் அற்புதம்தானே? இனி உதாரணங்களுக்கு வருவோம்.

ஒரு நாள் பிற்பகலில் நான் தூங்கிக் கொண்டிருந்த போது, திடீரென தொலைபேசி மணி ஒலித்தது. எனக்கு சட்டெனத் தூக்கம் கலைந்து, தொலைபேசியை எடுத்தேன். ஆனால் அது ராங்கால். என்னடா இது, தூக்கம் கெட்டுவிட்டதே என்று

நினைத்துக் கொண்டே மீண்டும் தூங்க முயன்றபோது, திடீரென என் முதுகுத்தண்டில் தீவிரமான ஒருவித அதிர்வு ஏற்பட, ஆம், கிரியையின் வெளிப்பாடு தொடங்கிவிட்டது! இருந்து இருந்தாற் போல், கிரியை இப்போது ஏன் வெளிப்பட வேண்டும் என நான் யோசித்தேன். ஒரு வேளை, கிரியை தொடங்க வேண்டிய நேரம் வந்துவிட்டதால்தான் டெலிபோன் மணி ஒலித்து, என்னை எழுப்பியதோ? என்று எனக்குத் தோன்றியது. சாதகரின் உடல், மனம் மற்றும் அன்றாட வாழ்க்கையில், கிரியை, எப்படி, எப்போது வெளிப்பட வேண்டும் என்பதும், அப்படி வெளிப்பட ஏதுவாக, சாதகர் எப்போது விழித்திருக்க வேண்டும், எப்போது நித்திரையில் இருக்கவேண்டும் என்பதும், எல்லாம் வல்ல அந்த இறைவனுக்குத் தானே தெரியும்!

இன்னொரு முறை, ஒருநாள் நான் தூங்கிக் கொண்டிருந்த போது, ஒரு கனவு வந்தது. அந்தக் கனவு ஓடிக் கொண்டிருந்த போதே, திடீரெனக் காட்சி மாறி, இன்னொரு அதி பயங்கரக் கனவு ஏற்பட்டது. நான் பதறியடித்துக் கொண்டு, தூக்கத்திலிருந்து கண் விழித்தேன். விழிப்பு ஏற்பட்ட கணத்திலேயே, என் மூளை-தண்டுவட மண்டலம் முழுவதிலும், தீவிர அதிர்வுடன் கிரியையின் வெளிப்பாடு தொடங்கிவிட்டது. இது போலப் பல முறை, பாதித் தூக்கத்தில் கண் விழித்தவுடன் கிரியை தொடங்குவதை, நான் மீண்டும் மீண்டும் உணர்ந்திருக்கிறேன். எனவேதான், தூக்கத்திலும் கூட கிரியையின் வெளிப்பாடு அடங்கிய நிலையில் இருப்பதாகக் கருதமுடியாது என்றேன்.

இது அல்லாது, கனவு நிலைக்கும், விழிப்பு நிலைக்கும் இடையில், தந்த்ரநிலை என்று ஒரு நிலை இருக்கிறது. ஆனால் உலகில் மிகச் சிலர் மட்டுமே இந்த நிலையை உணர்கிறார்கள். நித்திரையின் பல்வேறு நிலைகள் பற்றிய பெரும்பாலான சமஸ்கிருத நூல்களில்கூட, நித்திரை, பரம நித்திரை ஸ்வப்னம், ஜாக்ருதம் எனப் பலரும் அறியக்கூடிய நான்கு நிலைகள் பற்றிதான் பேசப்பட்டுள்ளதே தவிர, தந்த்ர நிலை பற்றி அதிகக்

குறிப்புகள் இல்லை. எனவே, கனவு நிலைக்கும் விழிப்பு நிலைக்கும் இடைப்பட்ட இந்த தந்த்ர நிலை பற்றிப் பலருக்குத் தெரியாது.

ஆனால், நான் அடிக்கடி, அதாவது அநேகமாக தினமும், தந்த்ர நிலைக்கு செல்கிறேன். இந்த நிலை வரும் போது, விசித்திரமான பல நகரங்கள், கிராமங்கள் இன்னும் பல இடங்களின் தோற்றம் எனக்கு ஏற்படும். ஆனால் நான் பார்த்துள்ள இடங்களாக அவை இராது என்பதால், அது என்ன ஊர், எந்த இடம் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. சில சமயம், காட்சிகள் தோன்றும் போதே, அதிலுள்ள கட்டிடங்கள் அல்லது கடைகளின் பெயர்ப் பலகையில் என்ன எழுதியிருக்கிறது என்பதைப் பார்த்து, அது என்ன ஊர் என்பதைத் தெரிந்து கொள்ள முயல்வேன். ஆனால் அப்படிப் படிப்பதற்கு முன்பாகவே, அந்தக் காட்சி மறைந்துவிடும். ஒருவேளை காட்சிகள் மறைவதற்கு முன்னர் ஒரு சில எழுத்துக்கள் தென்பட்டாலும், அது எனக்குப் புரியாத பாஷையாக இருக்கும். இப்படியாக தந்த்ர நிலையில் நான் காணும் இடங்களின் பெயரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில், இன்றுவரை எனக்கு வெற்றி கிடைக்கவில்லை. இடங்கள் மட்டுமல்ல, விசித்திரமான பல ஆயுதங்கள், வாகனங்கள், செடி-கொடிகள், மனித முகங்கள், உடையலங்கார சாதனங்கள் இப்படிப் பல விதமான தோற்றங்களையும், தந்த்ர நிலையில் நான் காண்கிறேன். (இந்தப் பட்டியலில் இன்னும் எத்தனையோ விஷயங்களையும் சேர்க்க முடியும்). நான் காணும் காட்சிகள், ஸ்படிகம் போல் தெள்ளத் தெளிவாக இருப்பது, இன்னுமொரு ஆச்சரியம்.

இதுபோன்ற அனுபவங்களுக்கு என்ன காரணம் என்பதை ஆராய்கையில், நாம் ஒவ்வொருவரும், இதற்கு முன்னர் பல கோடிப் பிறவிகளை எடுத்து வந்துள்ளோம் என்ற கருத்தில் நம்பிக்கை வலுவடைகிறது. அதாவது, பலப்பல பிறவிகளாக நாம் கண்ட மனிதர்கள், இடங்கள் இன்னபிற பொருட்களின் காட்சிகள்,

நம் அடிமனத்தில் ஏற்கனவே பதிவாகியுள்ளன. அந்தப் பதிவுகள்தான் தந்த்ர நிலையில் காட்சிகளாக வெளிப்பட்டு, ஒவ்வொன்றாக அழிக்கப்படுகின்றன. இது கிரியையின் ஒருவித வெளிப்பாடே என்று, நான் கருதுகிறேன்.

பலப்பல பிறவிகளாக நம் மனதில் உருவான பதிவுகள் ஒவ்வொன்றாக அழிக்கப்படும் போது, அந்தந்தப் பிறவிகளில் நமக்கிருந்த உறவுகளோடு நாம் வைத்திருந்த பந்தபாசமும் அழிக்கப்படுகிறது. யோசித்துப் பாருங்கள். இத்தனை பிறவிகளில், நாம் எத்தனை தந்தைகளுக்கு மகனாக, எத்தனை பிள்ளைகளுக்குத் தந்தையாக, எத்தனை மனைவிகளுக்குக் கணவனாக, இன்னும் எத்தனை எத்தனை உறவுகளுடன் பிறந்திருப்போம்? அத்தனை உறவுகளுடன் நாம் வைத்திருந்த பந்த பாசம், இந்தப் பிறவி வரை அப்படியேதான் நீடிக்கிறது! இத்தகைய பந்த பாசம் முழுவதையும் அறுத்தெரியாவிட்டால், கடவுளை உணர்வது சாத்தியமில்லை என்பதால்தான், கிரியையின் போது, பந்த பாசமும் அழிக்கப்படுகிறது. பலப்பல பிறவிகளின் பந்த பாசம் அற்றுப்போகும் போது, இந்தப் பிறவியில் குடும்ப வாழ்க்கை மற்றும் சமுதாய வாழ்க்கையின் மேல் நமக்குள்ள ஆர்வமும் அற்றுப் போகிறது. இதனால் நமக்குள் நாமே, சுகமான அக வாழ்வு ஒன்றை வாழ ஆரம்பிக்கிறோம். நிஜமான நிம்மதி, நிஜமான ஆனந்தம் என்பது இதுதான்! அதாவது, நம்மை நாமே அறிவதற்கான முயற்சி படிப்படியாக முன்னேறும் போது, தேவையான மாற்றங்களை மனதிற்குள் ஏற்படுத்தி, நிரந்திர நிம்மதி மற்றும் நிரந்திர மகிழ்ச்சியைக் கொண்டுவந்து சேர்க்கிறது. உணர்வுப் பூர்வமான பந்த பாசங்களை அகற்றுவதன் மூலம், கடவுள் இந்த மகிழ்ச்சியை, இந்த நிம்மதியை நமக்கு அருள்கிறார். இந்த நிலை வந்துவிட்டால், அதற்குமேல் உலக வாழ்வின் சுக துக்கங்கள் நம்மை ஒரு போதும் பாதிக்காது. சுக துக்கங்கள் மட்டுமல்ல, இரவு-பகல், இருட்டு-வெளிச்சம், நன்மை-தீமை, வெயில்-மழை

இப்படி இரட்டை இரட்டையாக அமைந்துள்ள இயற்கையின் எல்லாக் கூறுகளுக்கும் அப்பாற்படட மிக உயர்ந்த மனநிலை ஒன்றில், நாம் கடவுளை மட்டுமே நினைத்தபடி சுகமான அகவாழ்வில் திழைத்திருப்போம்! இந்த நிலையில் நம்முடைய உடலுக்கே மரணம் நேர்ந்தாலும், நமது ஆன்மாவிற்குள் பேரானந்த நிலை நீடிக்கவே செய்யும் என்பதால், இதையே மரணமில்லாப் பெருவாழ்வு என்கிறார்கள். சித்தமகா யோகமென்னும் அதிசய ஆன்மீக மார்க்கத்தின் இறுதி நோக்கம் இதுவே!

ஆனால் மகத்தான இந்த மாற்றம், ஒரே நாளில் ஏற்பட்டுவிட முடியாது என்பதை, வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுகிறேன். இதற்கு, பல்லாண்டு காலக் கடும் முயற்சிகள், யோகப் பயிற்சிகள் தேவை. இத்தகைய பயிற்சியின் போது சில சமயங்களில் மனம் கிடுகிடுவென பேரானந்த நிலைக்கு உயர்வதை உணர்ந்து, நாம் மகிழ்ச்சிக் கூத்தாடுவோம். ஆனால் அடுத்த விநாடியே, மேலே போன மனம் மீண்டும் 'பொத்' தெனக் கீழே விழுந்து விடும். மறுபடியும் மனதை மேலே கொண்டு செல்ல முயன்றால், அது மிகவும் கடினம்போல் தோன்றும். இதனால் சோர்ந்து விடாமல் தொடர்ந்து முயலவேண்டும். எனவே ஆன்மீக யோகப் பயிற்சியில் அளப்பரிய பொறுமை அவசியம் என்பதை வாசகர்கள் அறிவார்களாக.

இனி உடலின் நாடி நரம்புகள் வழியாக குண்டலினி சக்தி எப்படியெல்லாம் இயங்கும் என்பதைப் பார்க்கலாம்.

என்னைப் பொருத்தவரை, நான் இந்த சக்தியின் இயக்கத்தை ஜனன உறுப்பு மற்றும் ஆசனவாய்ப் பகுதியில்தான் அதிகம் உணர்ந்திருக்கிறேன். சில சமயங்களில் ஜனன உறுப்பு வழியாகவும், அதை ஒட்டிய பகுதிகளிலும் இந்த இயக்கம் தீவிர அதிர்வுகளை ஏற்படுத்தும். எப்போதாவது உடலின் மற்ற பகுதிகளிலும் சக்தியின் இயக்கத்தை உணர முடியுமென்றாலும், பெரும்பாலும் ஆசன வாயை சுற்றியுள்ள பகுதியில் தோன்றி,

பிருஷ்டத்திற்கு இந்த அதிர்வு பரவுவதையே நான் பலமுறை உணர்ந்திருக்கிறேன். குண்டலினி சக்தி, முதுகுத் தண்டின் அடிப்பகுதியிலுள்ள மூலாதார சக்கரத்தில் உறைந்திருப்பது, இதற்குக் காரணமாக இருக்கலாம்.

தியானத்தின் போது பல சமயங்களில், தீவிரமான பாலியல் உணர்வு எனக்கு ஏற்படுவதுண்டு. அந்த உணர்வு அதிகமாகும் போது, நான் எழுந்து கழிவறைக்கு போய் வந்தபிறகு, மீண்டும் தியானத்தை தொடர்வேன். அப்படிச் செய்யாவிட்டால் விந்து வடிந்து என் உள்ளாடையை நனைத்துவிடும்.

உள்ளாடையின் உரசல் காரணமாகத்தான் பாலியல் உணர்வு ஏற்படுகிறதோ என்ற சந்தேகத்தில், நான் பின்னாட்களில் ஆடையின்றியே தியானத்தில் அமர ஆரம்பித்தேன். ஆனால் அப்படியும் தியானம் கலைந்து எழுந்து பார்த்தால், தியானப் பலகையில் ஓரிரு துளிகள் விந்து சிந்தியிருக்கும்.

பாலியல் உணர்வு யாரைக் குறித்து உருவாகும் என்பதற்கும் ஒரு கணக்கேயில்லை. தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், அறிந்தவர்கள், அறியாதவர்கள் இப்படி எல்லோரைக் குறித்தும் பாலியல் ஆசை பெருக்கெடுப்பதுண்டு. அது மட்டுமல்ல. மிகமிக மரியாதைக்குரியவர்களுடனும், நிஜவாழ்வில் யாரை நினைத்தால் முகம் சுழிப்போமோ அவர்களுடனும் கூடுவது போல கற்பனை விரியும். காட்சிகள் மலரும்! சே! இவ்வளவு கேவலமாக நினைக்கிறோமே என்று சில சமயம் நம் மீதே நமக்கு வெறுப்பு வரும். நிஜவாழ்வில் இப்படிமட்டும் நடந்துவிட்டால், அதற்கு மேல் வாழவே முடியாது என்று தோன்றும். ஆனால் இது எல்லாமே கிரியையின் வெளிப்பாடுதான் என்பதால், நான் ஒன்றும் செய்யாமல், நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பேன்!

ஆம், பாலியல் எண்ணங்களும், கிரியையின் பல வித வெளிப்பாடுகளில் அடக்கமே. சற்று அதிர்ச்சியளிக்கும் கருத்தாகத் தோன்றினாலும், இதுதான் உண்மை. பாலியல் ஆசைகள் உட்பட

நம்முடைய உள் மனதில் என்னவெல்லாம் ஆசையிருக்கிறதோ அதையும், என்னவெல்லாம் வெறுப்பு இருக்கிறதோ அதையும், இப்படி நல்லது-கெட்டது எல்லாவற்றையும் மனதிற்குள் ஒரு தடவையாவது அனுபவித்து முடித்தால்தான், மன அழுக்குகள் தீரும். கடவுளின் தோற்றம் பளிச்சிடும். அதனால்தான் கிரியை வெளிப்படும் போது ஏற்படக்கூடிய பாலியல் எண்ணங்களைத் தவிர்க்க வேண்டாம் என்கிறேன். சில சமயங்களில், நான் ஆராதிக்கும் பெண் தெய்வம் ஒன்றுடன் புணர்வது போன்ற காட்சிகள்கூட என் மனதிற்குள் உருவாவதுண்டு. ஒருபக்கம் இது மிகவும் வெறுப்பாகத் தானிருக்கும். ஆனால் வேறுவழியில்லை யென்பதால் பொறுத்திருப்பேன். கடவுளை அடைவதற்காக, கடவுளே காட்டிக் கொடுத்த ஒரு பாதையில், கடவுளையே இப்படி அவமதிக்க நேரும் என நான் ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனால் என்ன செய்வது? அதுதான் கடவுள் தன்மையின் விசித்திரம்!

குண்டலினி சக்தியின் இயக்கத்தை உடலின் ஒவ்வொரு அணுவிலும் நான் உணர்ந்தேன். என்னுடைய முன்நெற்றி, மூக்கு, நாசித் துவாரங்கள், காது, வாய், நாக்கு, கன்னங்கள், கண்கள், தொண்டை, கைகள், தோள்கள், உள்ளங்கைகள், விரல்கள், வயிறு, தொடைகள், இறுதியில் என் பாதம் வரை இந்த இயக்கத்தை உணர முடிந்தது. இந்த இயக்கம், சில சமயங்களில் அதிர்வுகள் போலவும், வேறு சில சமயங்கள் அரிப்புணர்வு போலவும் வெளிப்படும். பல சமயங்களில் அது என்னதான் உணர்வு என்பதைச் சொல்லவே முடியாது. சக்தியின் இயக்கத்தை ஓரிடத்தில் ஒரு விதமாக உணர்ந்து கொண்டிருக்கும் போதே, இன்னொரு இடத்தில் இன்னொரு விதமான உணர்வு ஏற்படும். இப்போது பழைய இடத்தில் என்னவாகிறது என்று கவனித்தால், பழைய உணர்வு காணாமற் போய், வேறுவிதமான உணர்வு தோன்றியிருக்கும். எப்போது, எங்கே இந்த விதமான இயக்கத்தை உணர்வோம் என்பதற்கு, ஒரு கணக்கே இராது. இந்த மகா குழப்பம், என் உடலில் பல ஆண்டுகளுக்கு நீடித்தது. ஆனால்

நான் இதைப் பற்றி, என் குரு மற்றும் சக சாதகர்கள் சிலரைத் தவிர, வேறு யாரிடமும் சொன்னதில்லை; சொல்ல முடிந்ததும் இல்லை.

இந்த உணர்வுகள் முற்றிலும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை. அறிவியல் ரீதியில் இதற்கு விளக்கம் தேட நான் முயன்றதில்லை: அது சாத்தியமும் அல்ல.

# மூளை-தண்டுவட மண்டலத்தின் விசேஷ எதிர் வினைகள்

சுவாசம் என்பது, மனதின் நிலைக்கேற்ப மாறுபடக் கூடியது. நம்மையறியாமல் நாம் விடக்கூடிய மூச்சின் வேகமும்-ஆழமும், நம்மனதின் அவ்வப்போதைய நிலைக்கு ஏற்ப மாறிக்கொண்டுதான் இருக்கிறது. என்றாலும், நாம் அதை கவனிப்பதில்லை. ஆனால் இதில் சற்று கவனம் செலுத்த ஆரம்பித்தால், எல்லோருமே இதைப் புரிந்து கொள்ளமுடியும். அதாவது ஒருவர் கோபத்தின் உச்சியில் இருக்கும் போது, மூச்சு ஒரே சீராக இல்லாமல், தாறுமாறாகிறது. அதே போல, பதற்றத்திலோ பயத்திலோ இருக்கும் போது, மூச்சின் வேகம் அதிகரிக்கிறது. ஆனால் கோபமோ, ஆத்திரமோ, பதற்றமோ இன்றி இயல்பாக இருக்கையில், மூச்சு நிதானமாக ஓடுகிறது. இதை இன்னும் சற்று நீட்டித்துப் பார்த்தால், யோகப் பயிற்சி மற்றும் தியானத்தின் போது மனதின் அமைதி மேலும் மேலும் அதிகரிப்பதால், சுவாசத்தின் வேகம் இன்னும் இன்னும் குறைகிறது. சுவாசம் மொத்தமாக நின்றுவிடுவதில்லை என்றாலும், ஆழ்ந்த தியானத்தில் உள்ள யோகியை வெளியில் இருந்து பார்கக, அவர் மூச்சு விடுவது போலவே தெரியாது. முன்னேறிய நிலையில் உள்ள சில யோகிகளால், பல மணி நேரம் மூச்சை அடக்கவும் முடியும். இன்னும் இன்னும்

## பராசக்தி

யோகத்தில் முன்னேறுவதற்காக தவமியற்றும் யோகிகள், காற்றோ அல்ல உணவோ இன்றிப் பல்லாண்டு காலம் தவத்தில் அமர்ந்திருக்க முடிவதற்குக் காரணமும் இதுவே. விஞ்ஞானம் இந்த சாத்தியத்தை ஒப்புக் கொள்கிறதா என்பது எனக்கு தெரியாது. ஆனால், மனம் மற்றும் சுவாசம் மூலமாக என் உடலுக்குள் கிரியை வெளிப்படும் போதெல்லாம், மூச்சற்ற தன்மை ஏற்படுவதை நான் உணர்வேன். அதுவும், முதுகுத் தண்டின் குறிப்பிட்ட ஓரிடத்தில் சுவாசம் நிற்பது போன்ற உணர்வும் எனக்கு ஏற்படும்.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தின் போது, நான் படுக்கையில் படுத்தபடி தந்திராவஸ்தையில் இருந்தேன். அப்போது திடீரென, குண்டலினி சக்தி என் முதுகுத் தண்டில் பாயத் தொடங்கி, நாபிக்கு நேர் பின்னால், முதுகுத் தண்டின் ஓரிடத்தில் குவிய ஆரம்பித்தது. அதிர்வு ஏற்பட்ட பகுதியின் பரப்பு படிப்படியாகக் குறைந்து, அப்புறம் ‘டப்’ பெனக் காணாமல் போய்விட்டது. ஸ்விட்ச்சை ஆஃப் செய்ததுபோல் என் நுரையீரல் காலியாகி, சுவாசமும் சில வினாடிகளுக்கு நின்று விட்டது.

பிற்பாடு நான் இந்த அனுபவத்தை என் குருவிடம் எடுத்துச் சொன்னபோது, இப்போது நாபிக்கு நேர் பின்னால் தோன்றிக் காணாமல் போன சக்தி, அடுத்த கட்டத்தில் இருதயத்திற்கு நேர் பின்னால், தண்டுவடத்தில் இதே போல இயக்கம் காட்டும் என்றார். இருதயத்திற்கு நேர் பின்னால் மூச்சு இது போல நிற்கும் நிலை வந்துவிட்டால், அதன் பிறகு, ஆன்மீக முன்னேற்றத்திலிருந்து கீழே விழுந்து விடுவோமா என்ற அச்சம் தேவையில்லை என்றும், அவர் உற்சாக மூட்டினார். ஆன்மீகப் பாதையில் மேலும் மேலும் முன்னேறும் போது, மேல் நிலையில் இருந்து கீழே இறங்கிவிடுவோமா என்ற அச்சம்தான், சாதகருக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய அச்சமென்பதை, இங்கே வாசகர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். யோகப் பயிற்சியில் ஒரு கட்டம் வரை, இத்தகைய வழுக்கல் எல்லோருக்கும்

ஏற்படவே செய்யும். சாண் ஏற, முழும் சறுக்கிறது என்பார்களே, அதுபோல. ஆனால் இதையெல்லாம் வாசகர்களை அச்சமூட்டுவதற்காக நான் சொல்லவில்லை. ஆன்மீகப் பயிற்சியில் குறிப்பிட்ட சில உயரங்களை மனம் எட்டிவிட்டால், சறுக்கிவிடுவோம் என்ற அச்சம் தேவைப்படாது. அதன் பிறகு சாதகர் சற்று சறுக்கினாலும், வீழ்ச்சி அத்தனை மோசமானதாக இருக்காது. இந்தக் கட்டத்தையே நான் எட்டி வருவதாக, சுவாமிஜி சொன்னார்.

இதற்கு சில வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள், நான் படுக்கையில் படுத்தபடி தந்திராவஸ்தையில் இருந்த போது இன்னொரு அனுபவம் ஏற்பட்டது. திடீரெனக் குண்டலினி சக்தி நாபிக்கு நேர்பின்னாலிருந்து, முதுகுத் தண்டின் மேல் ஏற ஆரம்பித்து, ஒரே பாய்ச்சலாக, இருதயத்திற்கு நேர் பின்னால் ஓரிடத்திற்கு வந்து நின்றது. அதன் பிறகு, நின்ற இடத்திலேயே விசித்திரமான ஒரு விதத்தில் சக்தி இயங்க ஆரம்பித்த போது, அதன் வலுவும் அதிர்வும் மேலும் மேலும் தீவிரமாயிற்று. நான் யாரோ என் முதுகை பலமாகப் பிடித்து அழுத்துவது போல உணர்ந்தேன். அத்துடன், இனம் புரியாத ஒரு வித அழுத்தம், என் முதுகுத் தண்டின் குறிப்பிட்ட ஒரு புள்ளியில் குவிவது போலவும் இருந்தது. கிட்டத்தட்ட இதேபோன்ற உணர்வு. சில வாரங்களுக்கு முன், நாபிக்கு நேர் பின்னாலிருந்து முதுகுத் தண்டில் ஏற்பட்டதை நினைவுப்படுத்திக் கொண்டேன். சென்ற முறையை விட இந்தத் தடவை சக்தியின் இயக்கம் மிக வலுவாக இருப்பதும் எனக்குப் புரிந்தது. படு பலசாலியான ஒரு மல்யுத்த வீரன் என்னை முட்டிக் கீழே தள்ளுவது போல நான் உணர்ந்தேன். இதெல்லாம் ஸ்வப்னாவஸ்தையிலேயே நடந்து கொண்டிருந்ததால், சக்தி பாய்வது கொஞ்சமாவது சுலபமாகட்டுமே என்று, உடலைத் திருப்பி, குப்புறப் படுத்துக் கொண்டேன். இந்த முறை மூச்சடைக்கும் நிலை ஏற்படவில்லையே தவிர, குருநாதர் சொன்ன முக்கியமான அடுத்த கட்டம் இது தான் என்று தோன்றியது. குருநாதரின் உருவத்தை மனக் கண்ணில் கொண்டு வந்து, பய பக்தியோடு வணங்கினேன். இதற்குள் என்னையறியாமல் கொஞ்சம் தூக்கம்

வந்துவிட்டது. தூக்கத்தின் போது, சக்தியின் இயக்கம் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு தூக்கம் கலைந்து ஸ்வப்னாவஸ்தைக்கு வந்த போது, இயக்கம் 'டக்' கென நின்றதை வைத்து, இதைப் புரிந்துகொண்டேன். இப்போது உடலுக்குள் ஏற்பட்ட களேபரம் முடிந்து, மனதிற்குள் விவரிக்க முடியாத ஒருவிதப் பேரானந்த அமைதி குடியேறியிருந்தது. அந்த நிம்மதியை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றியதால், உறக்கம் கலைந்த பிறகு உடனடியாகக் கண்களைத் திறக்க முடியாமல், சிறிது நேரம் அப்படியே படுத்திருந்தேன். பிறகு ஒரு வழியாகக் கண் விழித்தவுடன், குருநாதரை உடனடியாக தொலைபேசியில் அழைத்து, நடந்ததை எடுத்துக் கூறினேன். முழுமையான விவரங்களை விளக்கினேன்.

சுவாமிஜி மிகவும் மகிழ்ச்சி வெளியிட்டு, 'ரொம்ப நல்லது' என்றார். ஆனாலும், இதெல்லாம் கிரியையின் உடல் சார்ந்த வெளிப்பாடு மட்டுமே என்றும், மனம் மற்றும் அன்றாட வாழ்வின் சம்பவங்கள் தொடர்பான வெளிப்பாடு இன்னும் பாக்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த சில வாரங்களில், சுவாசத்துடன் சம்பந்தப்படாத இன்னொரு தீவிர அனுபவம் எனக்கு ஏற்பட்டது. இம்முறையும் நான் படுக்கையில் படுத்தபடி தந்திராவஸ்தையில் இருந்த போது, முதுகுத் தண்டின் அடிப்பகுதியில் இருந்து சக்தி கிளம்பி, கிடுகிடுவென மேல் நோக்கி எழும்பியது. ஆனால் இம்முறை, வெள்ளம் பாய்வது போல சக்தி பாயவில்லை. அதற்கு மாறாக, ஒரு முடிச்சு போல, தசைகளை ஊடுறுவிக் கொண்டு சக்தி மேல்நோக்கி நகர்வதை என்னால் உணர முடிந்தது. முதுகு முழுவதும் பரவாமல் ஒரே முடிச்சாக இருந்ததால், சக்தியின் தீவிரம் இம்முறை இன்னும் அதிகமாக இருந்தது. கடைசியில் சக்தி மூளைப் பகுதியை எட்டியவுடன், மூளைக்குள்ளேயே படாரென வெடித்துச் சிதறியதுபோல் இருந்தது. மூடியிருந்த

கண்களுக்குள் வாணவேடிக்கை போல் பல வண்ணச் சிதறல்கள் வெடித்துப் பரவின. அதைத் தொடர்ந்து மனதிற்குள் பேரானந்த அமைதி குடியேறியது. நீண்ட நேரம் இந்த நிம்மதியை அனுபவித்தபடி நான் அப்படியே படுத்துக் கிடந்தேன்.

அடுத்த கட்டத்தில், ஓம் என்னும் மந்திரத்தை நான் சில முறை உச்சரித்தாலே உள்ளுக்குள் கிரியை தொடங்கி, மூளை-தண்டுவட மண்டலத்தின் மீது, சக்தி மேலேறத் தொடங்கும் நிலைக்கு நான் வந்துவிட்டேன். இந்தக் கட்டத்தில், இந்தச் சக்கரத்தில் இருந்துதான் சக்தி மேலேறத் தொடங்கும், இந்தச் சக்கரம் வரை மேலேறித் தீவிர மடைந்து வெடித்துச் சிதறும்; அல்லது ஊசி முனை அளவுக்கு சுருங்கிக் காணாமற் போகும் என்பதற்கு எந்தக் கணக்கும் இருக்கவில்லை. அதாவது யோகப் பயிற்சியின் முன்னேறிய கட்டத்தில், குண்டலினி சக்தி எந்தச் சக்கரத்திலிருந்தும் தொடங்கி எந்தச் சக்கரம் வரையிலும் உயரலாம் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டுகிறேன்.
என் அனுபவத்தைப் பொருத்த வரை, சக்தியின் இயக்கம் எங்கிருந்து தொடங்கினாலும், பெரும்பாலும், இரண்டு புருவங்களுக்கு இடைப்பட்ட ஆக்ஞா சக்கரத்திற்கு உயர்ந்து, அங்கேயே வலுவடைந்து, அங்கேயே சுருங்குவதை நான் பல முறை உணர்ந்திருக்கிறேன். அப்படி நிகழும் போது எனக்கு ஏற்படும் உணர்வுகளை விவரித்துச் சொல்வது மிகவும் கடினம். இருந்தாலும் விவரிக்க முயல்கிறேன். அதாவது, குண்டலினி சக்தி ஆக்ஞா சக்கரத்திற்கு உயரும் போது, சில சமயம், புருவங்களுக்கு இடையில் அரிப்பது போன்ற ஒரு உணர்வும், வேறுசில சமயங்களில், அதிர்வது போன்ற உணர்வும் எனக்கு ஏற்பட்டது. அதே சமயம், புருவ மத்திக்கு நேர் பின்னால், தலையின் பின் பகுதியிலும் இதே போன்ற அதிர்வலைகளை உணரமுடியும்.

பல சந்தர்ப்பங்களில் நான் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழிக்கும்

போதெல்லாம், உறக்கத்திலும்கூட என்னுடைய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்திருக்கிறேன் என்பதை உணர்வேன். இதன் தொடர்ச்சியாக, உறக்கத்திலிருந்து விழித்த பின்னரும், என் உதடுகள், தானாகவே மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டிருக்கும்! இதை எத்தனையோ முறை உணர்ந்திருக்கிறேன்.

எரியும் மெழுகுவர்த்தி, அரிக்கேன் விளக்கு, முழு நிலவு, நட்சத்திரங்கள், சூரியன் மற்றும் மின்னல் போன்ற பளிச்சிடும் காட்சிகளையும், தியானத்தின் போது, நான் அடிக்கடி உணர்வதுண்டு. தியானத்தில் மட்டுமின்றி, தந்திரா வஸ்தையிலும் இதுபோன்ற காட்சிகள் எனக்கு ஏற்படும். பொதுவாக சில விநாடிகளுக்கு மட்டுமே இக்காட்சிகள் நீடிக்கும். குறிப்பாக பௌர்ணமி நிலா, எரியும் அரிக்கேன் விளக்கு-இந்த இரண்டையும்தான் பெரும்பாலும் நான் காண்பேன். சில சமயங்களில், ஒளிப் பிழம்பாய் ஏதோ ஒன்று, என் மனப் பரப்பின் குறுக்கே கடந்து செல்வதையும் நான் உணர்வேன். பிரகாசமான இக்காட்சிகளுக்கு விஷோக வெளிச்சம் என்று பெயர் என்பதாக, என் குருநாதர் சொன்னார்.

விஷோகம்' என்றால் சமஸ்கிருதத்தில், சோகங்களை விரட்டக் கூடிய என்று அர்த்தம். அதாவது, யோகப் பயிற்சியில் முன்னேறிய நிலையில் உள்ள ஒரு சாதகருக்கு கிரியையின் போது, அவரது அடிமனத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் சோகங்களும், ஒவ்வொன்றாக விலகத் தொடங்கும். அப்படி விலகுவதன் அறிகுறியே, ஒளிப்பிழம்பான இக்காட்சிகள்! எனவே இத்தகைய காட்சிகள் வெளிப்படத் தொடங்கி விட்டால், சாதகர் முன்னேறிய நிலையை எட்டிவிட்டார் என்று பொருள்!

ஆழ்ந்த தியானம் வாய்க்கும் நாட்களில் எல்லாம், தியானம் கலைந்து பிறகும்கூடி கண்ணைத் திறக்க என்னால் முடியாது!

தியானத்தால் ஏற்படும் பேரானந்த அமைதியை அனுபவித்தவாறு கண்ணை மூடிக் கொண்டே இருந்து விடலாம் என்று தோன்றும். கண்ணைத் திறந்தால் ஆனந்தப் பரவசம் அகன்றுவிடுமோ என்ற அச்சத்தில், கண்ணைத் திறக்கவே மனம் வராது. அப்புறம், இதற்கு மேலும் இப்படியே அமர்ந்திருந்தால் கால் வலி பொறுக்காது என்றுதான், கண்ணைத் திறந்து எழுந்திருப்பேன்!

எனக்கு 23 வயதாக இருக்கும் போது, நான் முதல் முறையக என் மனதில், ‘அனாஹத’ ஒலியை கேட்க ஆரம்பித்தேன்.

முதலில் ஆனாஹத ஒலி என்றால் என்ன என்பதை சொல்லி விடுகிறேன்.

உடலுக்கு உள்ளேயோ, வெளியிலோ எந்தப் பொருளும் உருளாமல் அல்லது நகராமல், மனதிற்குள் தானாகவே உருவாகக் கூடிய ஒலி அது. சாதகர் மனதில் எழக்கூடிய இவ்வொலியை சாதகர் மட்டும்தான் கேட்க முடியுமே தவிர, வெளியில் இருந்து யாரும் கேட்க முடியாது. நவீன அறிவியலின் உயர் திறன் கருவிகளால் கூட இந்த ஒலியை உணர முடியாது. இவ்வளவு அதிசயமான ஒலி எங்கிருந்து உருவாகிறது? அதையும் யோகிகள் ஆராய்ந்திருக்கிறார்கள். அதாவது, மூலாதாரசக்கரத்தில் உறைந்துள்ள குண்டலினி சக்தி அங்கிருந்து மேலெழும்பி, அடுத்தடுத்த சக்கரங்கள் வழியாகப் பாய்ந்து, இருதயப் பகுதிக்கு நேராக உள்ள அனாகத சக்கரத்தை அடையும்போது இந்த ஒலி உருவாகி மனதிற்குள் கேட்கிறது! அதனால்தான் அதற்கு அனாகத ஒலி என்று பெயர். ஒரு விதத்தில் சக்தி அனாகத சக்கரத்தை எட்டும்போதுதான் இந்த ஒலி உண்டாகிறது என்பது கூடத் தவறுதான்.

உண்மையில் குண்டலினி சக்தி ஒலி வடிவத்திலேயே அமைகிறது. ஒலி வடிவ குண்டலினி சக்தி, அனாகத சக்கரத்திற்கு உயரும்போது மட்டுமே அந்த ஒலியை நாம் கேட்கிறோம்

என்பதே சரியான விளக்கமாகும். கடவுள் நாத வடிவானவர் என்றும், நாதப் பிரம்மம் என்று கடவுள் வர்ணிக்கப்படுவதையும், எத்தனையோ புத்தகங்களில் நாம் படிக்கிறோமல்லவா, அதன் பொருள் இதுவே. அதாவது, ஆதிசக்தியின் மூல வடிவமே நாதம்தான். அந்த நாதத்தில் இருந்தே இந்தப் பிரபஞ்சம் பிறந்திருக்கிறது. இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், நவீன அறிவியலும் கூட இதே கருத்தைத்தான் வலியுறுத்துகிறது. அதாவது, பிரபஞ்சம் எப்படிப் பிறந்தது என்பதை ஆராயும் அதிநவீன கோட்பாட்டு இயற்பியல் அறிஞர்கள், “ஸ்டிரிங் தியரி” என்னும் கோட்பாடு ஒன்றை முன் வைக்கிறார்கள். இக்கோட்பாட்டின்படி, பருப்பொருளை மூலக்கூறுகளாகவும், மூலக்கூறுகளை அணுக்களாகவும், அணுக்களை அணுத்துகள்களாகவும் இன்னும் இன்னும் பகுத்துக் கொண்டே சென்றால், இறுதியில் எஞ்சியிருப்பது, வீணையின் தந்தியை மீட்டினால் உருவாகக் கூடிய அதிர்வலைகள் போன்ற, அதிர்வு வளையங்கள் மட்டுமே என்கிறது இக்கோட்பாடு. இந்த அதிர்வு வளையங்களையே ஸ்டிரிங் என்று அழைக்கிறார்கள். அதிசூட்சுமமான இந்த அதிர்வு வளையங்கள்தான், அதன் அதிர்வு எண்ணுக்கு ஏற்றபடி, பற்பல அணுத்துகள்களாக உருவெடுக்கின்றன. இந்த அணுத்துகள்கள் வெவ்வேறு விதங்களில் ஒன்று சேர்ந்து பலவித அணுக்களை உருவாக்குவதாகவும், அணுக்களின் தொகுப்பே பருப்பொருள் என்றும் நவீன அறிவியல் சொல்கிறது. ஒவ்வொரு அதிர்வு வளையத்திற்கும் ஒரு அதிர்வெண் இருப்பதாக அறிவியல் சொல்வதை, ஒவ்வொரு சக்கரத்தையும் ஒரு சமஸ்கிருத எழுத்தால் குறிப்பிடும் யோக மரபுடன் ஒப்பிடலாம்! ஆக, பிரபஞ்சத்திற்கு அடிப்படையான ஓம் என்னும் பிரபஞ்ச மந்திரத்தின் தொனியை மனதிற்குள் கேட்பதையே அனாகத ஒலி என்கிறோம்!

என்னைப் பொறுத்தவரை இந்த ஒலி, பாம்பு சீறும் சத்தம் போல

தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டேயிருக்கும். கர்நாடக இசைக் கலைஞர் பாடும் போது பின்புலத்தில் ம்புரா ஸ்ருதி ஒலித்துக் கொண்டேயிருக்குமல்லவா, அதைப் போல, கடந்த 20 ஆண்டுகளாக இதை நான் தொடர்ச்சியாக உணர்கிறேன். இந்தப் புத்தகத்தை எழுதும் இந்த நொடியில் கூட, ஆனாஹத ஒலி என் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் பாம்பின் சீற்றம் போல் கேட்ட இந்த ஒலி, பிற்பட்ட காலத்தில், தேனீக்களின் ரீங்காரம் போல் கொஞ்சம் மாறியுள்ளது. சில சமயங்களில் இனிமையான குழலொலி அல்லது மணியோசை போலவும் கேட்கிறது!

சில சமயங்களில் மணியோசை போலவும், வேறு சில சமயங்களில் மழையோசை போலவும் அனாகத ஒலி ஒலிக்கிறது. இன்னும் சில சமயங்களில், இனிய குழலோசை போல் இசைக்கிறது. இன்னும் சொல்லப் போனால், அனாகத ஒலி மழையோசை போல் ஒலித்த பல சந்தர்ப்பங்களில், நான் வீட்டிற்கு வெளியே வந்து, நிஜமாகவே மழை பெய்கிறதோ என்று பார்த்திருக்கிறேன். மணியோசை கேட்கும் பல சந்தர்ப்பங்களில் நான் எழுந்துபோய் கதவைத் திறந்து பார்த்து, யாரையும் காணாமல் திரும்பியிருக்கிறேன்! அல்லது, தொலைபேசி ஒலிக்கிறதோ என்று நினைத்தும் ஏமாந்து போயிருக்கிறேன். இதுபோன்ற ஓசைகளால், பலமுறை தூக்கம் கெட்ட அனுபவமும் எனக்குண்டு. அது மட்டுமின்றி. காரணமேயின்றி இனிமையான நறுமணத்தை மூக்கிலும், மெலிதான இனிப்புச் சுவையினை நாவிலும் அவ்வப்போது நான் உணர்ந்திருக்கிறேன்.

ஆனாஹத ஓசையை நான் எப்போது உணர ஆரம்பித்தேனோ, கிட்டதட்ட அதே 23-ஆவது வயதில்தான். என் முதுகுத் தண்டில் இனம் புரியாத அதிர்வுகளும் ஏற்படத் தொடங்கின. அதற்கு பிந்தைய ஆண்டுகளில் இந்த உணர்வு மேலும் அதிகரித்து, இந்த முதுகுத் தண்டு அதிர்வையும் அனாகத ஓசையையும் கடந்த 20

ஆண்டுகளாக நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும், உடலுக்குள் இப்படி ஏகக் களேபரம் நடந்து கொண்டேயிருந்தாலும், அதனால் என் ஆரோக்கியத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

இதுவரை சொன்னதையும், 2007 ஆம் ஆண்டில்தான் சித்தமகா யோகத்தில் தீட்சை பெற்றதாக நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேனல்லவா அதையும், நேயர்கள் ஒப்பிட்டுப் பார்த்து, அதெப்படி, தீட்சை பெறுவதற்கு முன்பாக 23ஆவது வயதிலேயே அனாகத ஓசையையும், முதுகுத் தண்டில் அதிர்வுகளையும் உணரமுடியும் என்று கேட்கலாம். முந்தைய பிறவியிலேயே நான் இந்த யோக முறைக்கு வந்திருக்கக்கூடும் என்பதே, இதற்கு என் பதில். ஆனால் அதை உறுதியாகச் சொல்லுமளவிற்கு நான் தகுதி வாய்ந்தவனல்ல என்பதால் இதுபற்றிய முடிவை மிகப் பணிவுடன் என் குருநாதரிடமே விட்டுவிடுகிறேன்.

நான் முன்பே சொன்னபடி, என்னுடைய 30 அல்லது 31 ஆவது வயதில், முந்தைய பிறவி தொடர்பான காட்சிகள் எனக்கு ஏற்பட ஆரம்பித்தன. இத்தகைய பலவிதக் காட்சிகளை மனக் கண்ணிற்குள் நான் பார்ப்பதுண்டு என்றாலும், இக்காட்சிகள் பற்றிய விவரங்களை நான் ஒரு போதும் அறிய முடியவில்லை என்பதால், முற்பிறவி ஞாபகங்கள் என்று எதுவும் எனக்கு இல்லை.

# சக்திக்கும் சாதகருக்கும் நடுவிலுள்ள இடைமுகம்

யோக சாஸ்திரங்களின்படி, மனித மனம் நவவித மலங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. பயம், கோபம், பேராசை, பெருமிதம், காமம் முதலியன இவ்வொன்பது மலங்களில் அடங்கும்.

இந்த ஒன்பது மலங்களால் பல பிறவிகளாக ஏற்பட்ட மனப்பதிவுகளை முற்றிலுமாக அழிக்கவே, எல்லாமறிந்த ஆதி பராசக்தி பலவிதக் கிரியைகளாக, தானே வெளிப்படுகிறது. இந்த சக்தி, ஒன்பது மலங்களின் விதைகளையே பொசுக்கி விடுவதால், அதன் பிறகு ஒரு நாளும் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த விதைகள் மறுபடியும் முளைக்க முடியாது. இதனால் சாதகர் எல்லாவிதமான உணர்ச்சிகளிலிருந்தும் நிரந்தரமாக விடுதலை பெறுகிறார். தேவையற்ற இந்த உணர்ச்சிகளை வெறுமனே அடக்குவது அல்லது கட்டுப்படுத்துவதால் பெரிய பிரயோஜனம் எதுவும் இல்லை என்பதையும், உணர்ச்சிகளை முற்றிலுமாக அழித்தொழிக்கும் காரியத்தை தெய்வசக்தி மட்டுமே செய்து முடிக்க இயலும் என்பதையும், வாசகர்கள் இதற்குள் புரிந்து கொண்டிருக்கலாம்.

ஒன்பது வித உணர்ச்சி என்னும் மலங்களால் மனதில் ஏற்பட்ட

பலவிதப் பதிவுகள் ஒவ்வொன்றாக அழியும் போது, நம்முடைய மனதில் இத்தனை பதிவுகளா பொதிந்து கிடந்திருக்கிறது என்று சாதகருக்குப் பேராச்சரியம் ஏற்படும். அந்த அளவிற்கு, எண்ணிப்பார்க்க முடியாத பலவிதக் காட்சிகள், தோற்றங்கள் மற்றும் எண்ணங்கள் மனத் திரையில் தோன்றி மறைவதை, கிரியையின் போது சாதகர் உணரமுடியும். அந்த அளவிற்கு மனதின் ஒவ்வொரு அடுக்கையும் இடுக்கையும் ஆதிபராசக்தி குடைந்து, அதிலுள்ள அழுக்குகளை யெல்லாம் எடுத்துவிடும்.

இப்படி மன அழுக்குகளை அகற்றும்போது, மனம் கொஞ்சம் கொஞ்சமாக பாரம் குறைந்து, மேலும் மேலும் நிம்மதி மற்றும் அமைதியில் ஆழ்கிறது. இந்த அமைதியே மனித மனத்தின் இயற்கை என்பதால், அழுக்குகள் அகன்று, கொஞ்சம் கொஞ்சமாக அமைதி குடியேறும் போது, மனதின் நிஜமான இயற்கையை நாம் அவ்வப்போது எட்டிப் பார்க்கிறோம்.

என்னைப் பொறுத்தவரை இந்த நிலையை, மிகப் பிரகாசமான சூரிய வெளிச்சமாக நான் உணர்கிறேன். சில சமயங்களில் புகை மூட்டத்தினால் மறைக்கப்பட்டது போல சற்று மங்கலாகவும் இந்த வெளிச்சம் தோன்றும்.

ஆனால் வெளிச்சம் பிரகாசமா, மங்கலா என்பது முக்கியமல்ல. வெளிச்சம் தோன்றக் கூடிய நேரங்களில் மனதிற்குள் எத்தனை அமைதியாக உணர்கிறோம் என்பதே முக்கியம். இந்த அமைதி எவ்வளவு நீடிக்கிறது என்பதும் முக்கியமே. பொதுவாக நல்லதொரு தியான அமர்வுக்குப் பிறகு ஏற்படக்கூடிய மன அமைதி குறைந்தது 2-3 நாட்களுக்கு நீடிக்கும் என்றாலும், குறிப்பிட்ட காலம் என்று எதையும் நிர்ணயிக்க இயலவில்லை.

நான் ஏற்கனவே சொன்னபடி, காலம் காலமாக மனதிற்குள் ஏற்பட்ட பதிவுகளை ஒரே நாளில் அழித்து விட முடியாது. இதற்கான கிரியை, கொஞ்சம் கொஞ்சமாக நீண்ட நாள்

தொடரக்கூடும்.

புலன் நுகர்ச்சியால் ஏற்படும் மனப் பதிவுகள், அதாவது நவ மலங்கள் தொடர்பான மனப்பதிவுகள் எப்படி அழிக்கப்படுகின்றன என்பதை, எடுத்துக்காட்டான சில சம்பவங்கள் மூலம் விளக்குகிறேன். குறிப்பிட்ட ஒரு மனப் பதிவை, அதாவது குறிப்பிட்ட ஓர் உணர்ச்சி சார்ந்த மனப்பதிவை நீக்க வேண்டுமானால், சாதகருக்கு அந்த உணர்ச்சி லேசாக ஏற்படும்படியான ஓர் சம்பவம் நிகழ்வதை, பரம்பொருளான கடவுள் உறுதிப்படுத்துகிறார். சில சமயங்களில் மனப்பதிவு ஆழமாக இருந்தால், அதை அழிப்பதற்கான சம்பவங்கள் அல்லது அனுபவங்கள் பல நாள் நீடிக்கலாம் அல்லது மீண்டும் மீண்டும் ஏற்படலாம். இதன்மூலம் கடினமான மனப் பதிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக (ஆனால் வேகமாக) வெட்டி எடுத்து அகற்றப்படுகின்றன என்று பொருள். மனப் பதிவுகள் கடினமாகவே இருந்தாலும், அதை அழிப்பதற்கான சம்பவங்களின் தீவிரம் அதிகமாக இருப்பதில்லை என்பதையும், லேசான உணர்ச்சிகளை ஏற்படுத்தும் விதமான சம்பவங்கள் மூலம், மிக வேகமாக மனப் பதிவுகள் அழிக்கப்படும் என்பதையும் வாசகர்கள் உணர வேண்டும். அதாவது, சாதாரணமாக இத்தகைய மனப் பதிவுகள் நீங்க வேண்டுமானால் மிக நீண்ட காலமாகும். மிகத் தீவிரமான உணர்ச்சிகளை அனுபவிக்க நேரும். ஆனால் யோக சாதனையில் ஈடுபட்டு, கிரியை வெளிப்பட ஆரம்பித்துவிட்டால், சாதகர் கர்ம வினைகளின் பலனை மிக லேசாகவும் விரைவாகவும் அனுபவித்து முடித்துவிடுவார். இதை மற்றொரு அத்தியாயத்தில் இன்னும் விளக்கியிருக்கிறேன். கர்ம வினை தீரும்போது ஏற்படும் அனுபவங்களால் சாதகரின் மனச் சமநிலை பாதிக்கப்படாமல் இருப்பதையும் கடவுள் பார்த்துக் கொள்கிறார்.

நான் ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் இருந்தபோது முதல் முறையாக கிரியை வெளிப்பட ஆரம்பித்தது. இதன் காரணமாக நான் என்னையறியாமலேயே ஒருவிதப் பெருமித உணர்வில்

மிதக்கலானேன். ஏதோ பெரிய ரிஷி போல நடந்து கொள்ளத் தொடங்கினேன். அல்லது ஒரு வேளை சென்ற பிறவியிலேயே நான் இது போல உணர ஆரம்பித்து, அதன் தொடர்ச்சியாகவே அப்படி நடந்து கொண்டேனோ, என்னவோ?

இந்தக் கால கட்டத்தில், ஸ்ரீநகரின் மத்தியிலுள்ள ஒரு மலையின் உச்சியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்கராச்சாரியர் தவம் செய்த குகை இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அங்கே போக வேண்டும் என ஆர்வம் உந்தித் தள்ளியது. குகைக்குப் போய் தியானம் செய்து பேரமைதியின் அதிர்வலைகளை உணர வேண்டும் என்று தீர்மானித்தேன்.

மலை உச்சியின் ஒரு குறிப்பிட்ட இடம் வரை காரில் செல்ல முடிந்தது. அதற்கு அப்பால் செங்குத்தான படிகளில் ஏறி குகையை அடைந்தேன. குகை ரொம்பச் சின்னதாக இருந்தது. அதிகபட்சம் 6 முதல் 8 பேர் வரை அமர முடியும், அவ்வளவே.

குகைக்குள் சென்று, அதன் ஒரு ஓரத்தில் பத்மாசனமிட்டு தியானத்தில் அமர்ந்தேன். ஆனால் அந்த மலைப்பகுதி ஸ்ரீநகரின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகவும் இருப்பதால், சுற்றுலாப் பயணிகள் அவ்வப்போது குகைக்கு வந்து சென்ற வண்ணமிருந்தனர். இதனால் ஆரம்பத்தில் தியானத்தில் சரியாக கவனம் செலுத்த என்னால் முடியவில்லை. ஆனால் குகைக்குள் பரவியிருந்த வலுவான உணர்வுகளை தெளிவாகவே உணர முடிந்தது. இந்த நிலையிலேயே சிறிது நேரம் இருந்த போது, இரைச்சலின் தாக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, ஆழ்ந்த தியானத்தில் லயிக்க ஆரம்பித்தேன். சுமார் 2 மணி நேரம் கற்சிலை போல அங்கேயே அமர்ந்திருந்தேன். ஆனால் இந்த நிலையிலும் சுற்றுலாப் பயணிகளின் பேச்சை அவ்வப்போது கேட்க முடிந்தது. என்னுடைய தியானத்தை சிலாகித்தே அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் கேட்கக் கேட்க, என்

மனதிற்குளிருந்த பெருமிதம் பூதாகாரமாகப் பெருக்கெடுக்க ஆரம்பித்தது. நானே மகரிஷி என்பது போன்ற எண்ணத்தால் என் இதயம் பொங்கியது. என்னைவிடப் பெரிய தவஞானி யாரும் இல்லையென்பது போன்ற பெருமிதத்தில் மேகம்போல் மிதக்கலானேன். ஆனால் சிறிது நேரத்திலேயே மீண்டும் இயல்பான தியான நிலைக்குத் திரும்பிவிட முடிந்தது.

அவ்வளவுதான், தியானம் வெற்றிகரமாகக் கூடுவதால் ஏற்படும் பெருமித உணர்வு அதன் பிறகு எனக்கு ஏற்படவேயில்லை. கிரியை மூலமாக இந்த உணர்வு வெளிப்பட்டுத் தீர்ந்துவிட்டது. அப்படியல்லாமல் இயல்பான வாழ்க்கையில் இந்த உணர்வை அனுபவித்துத் தீர்க்க வேண்டுமானால், இன்னும் எத்தனையோ காலமாகி இருக்கலாம். ஆனால் தியானத்தின் பெருமிதம் என்கிற என்னுடைய மனப் பதிவு மிகச் சுலபமாக ஒரே நாளில் அழிந்துவிட்டது. நவ மலங்களின் வடிவில் மனதில் ஏற்படும் பதிவுகள், யோக சாதனையின் போது இப்படித்தான் அழிகின்றன. அவ்வாறு அழிவதற்கான உகந்த சூழ்நிலை ஒன்றை கடவுளே ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறார். அதனால்தான், பெருமித உணர்வு தோன்ற ஆரம்பித்த சில நாட்களிலேயே, சங்கராச்சாரியர் தவம் செய்த குகை பற்றி கேள்விப்பட்டு, நான் அங்கே செல்ல நேர்ந்தது.

ஆனால் இதுபோன்ற சம்பவங்கள் அல்லது அனுபவங்கள் மூலம்தான் மனப் பதிவுகள் அழியவேண்டுமென எந்தக் கட்டாயமுமில்லை என்பதையும், சில சமயங்களில் இத்தகைய அனுபவங்கள் ஏற்படாமலேயே மனப் பதிவுகள் தீரக்கூடும் என்பதையும் வாசகர்கள் அறிய வேண்டும். இதெல்லாம் பரம்பொருளின் லீலா வினோதங்கள். அதை முழுமையாகப் புரிந்து கொள்ள நம்மால் இயலாது.

இன்னொரு சம்பவம் :

# பராசக்தி

2011 ஆகஸ்ட் 29 ஆம் தேதி, நான் ஸ்ரீநகரிலிருந்து புகழ் பெற்ற வைஷ்ணோதேவி கோவிலுக்கு காரில் சென்று கொண்டிருந்தேன். வழியில் அருகாமை நகரமான உதம்பூரில் ஒரு நாள் தங்க நேர்ந்தது. ஒரு நண்பரின் வீட்டில் இரவு தங்கினேன். மறுநாள் நானும் அந்த நண்பரும் சேர்ந்து வைஷ்ணோதேவி செல்வதாக ஏற்பாடு.

அதன்படி மறுநாள் காலை நாங்கள் இருவரும் புறப்பட்டு, இமயமலைத் தொடரின் ஓர் அங்கமான திரிகூடமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள கத்ரா நகருக்குச் சென்றோம். இந்த மலையின் உச்சியில் உள்ள குகை ஒன்றில்தான் வைஷ்ணோதேவி ஆலயம் அமைந்துள்ளது. பாரத தேசத்தின் சக்தி உபாசகர்களால் பெரிதும் போற்றப்படக் கூடிய மிக முக்கிய வழிபாட்டுத் தலம் இது.

உதம்பூரிலிருந்து நாங்கள் கத்ரா சென்றது ஜீப்பில்.ஆனால் கத்ராவிற்கு மேல் ஜீப் போகாது. நான் குதிரை சவாரியாக மலைமேல் ஏறத் தீர்மானித்திருந்தேன். ஆனால் என் நண்பரோ நடந்து மலையேறி கோவிலுக்குச் செல்வதே சிரேஷ்டம் என்று கூறி, நடக்கலாம் என்றார். எனக்கோ அதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. குதிரையிலேயே போகலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். இதுவெல்லாம் கத்ரா செல்லும் வழியில். ஆனால் கத்ரா சென்றடைந்த பிறகு என் மனம் வேறு விதமாக மாறிவிட்டது. குதிரை எதற்கு? அதைவிட சுலபமாக ஹெலிகாப்டர் இருக்கிறதாம். அதில் போகலாமே என்றேன். நண்பர் அரைகுறை மனதுடன் சரியென்றார். இருவருக்கும் ஹெலிகாப்டர் டிக்கெட் வாங்கப் போனோம். ஆனால் ஹெலிபேடில் டிக்கெட் கவுண்டரிலிருந்த ஊழியர், வானத்தை நோக்கி விரலை உயர்த்திக் காட்டினார். அதாவது, வானிலை மேக மூட்டமாக இருந்ததால் மலையுச்சிக்கு செல்வதற்கான ஹெலிகாப்டர் சேவை தற்காலிகமாக நிறுத்தி

வைக்கப்பட்டிருந்தது. மேக மூட்டம் விலகி ஹெலிகாப்டர் செயல்பட ஆரம்பித்தாலும், ஏற்கனவே டிக்கெட் வாங்கிய பலர் பயணத்திற்கு காத்திருப்பதால் எங்களுக்கு நேரமாகலாம் என்றும் சொல்லப்பட்டது. வேறு வழியின்றி நாங்கள் குதிரைத் துறைக்கே சென்றோம். ஆனால் அங்கேயும் பாருங்கள், குதிரைக்காரர்கள் உள்ளூர் நகராட்சி நிர்வாகத்திற்கு எதிரான ஏதோ ஒரு பிரச்சனைக்காக வேலை நிறுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். என்னடா இதுவென்று, டோலி என்றும் பல்லக்கு கிடைக்குமா என்று பார்த்தால், அதற்கும் ஏகக் கூட்டம், உடனே கிடைக்காத நிலை. இனி நடந்து மலையேறலாம் அல்லது கோவிலே வேண்டாமென்று ஊர் திரும்பலாம். இந்த இரண்டில் ஒன்றுதான் சாத்தியமென்ற நிலையில், இவ்வளவு தூரம் வந்து விட்டோமே என்று கால்நடையாகவே மலையேற முடிவு செய்தோம். சின்ன வயதிலிருந்தே எனக்குத் தெரிந்தவரான நண்பர், என் நிலைமையை பார்த்து கைகொட்டிச் சிரித்தார். நான் சொல்ல வில்லையா? நடக்க வேண்டுமென்பதே விதி, வா போகலாம் என்றார். நானும் வேறு வழியின்றி மனதைத் தேற்றிக் கொண்டு மலையேற ஆரம்பித்தேன்.

மொத்தம் 14 கி மீ ஏற வேண்டியிருந்தது. சாதாரணமாக இதற்கு 4 முதல் 5 மணி நேரம் ஆகும். ரொம்பக் கஷ்டம்தான் என்று நினைத்துக் கொண்டு நாங்கள் மலை மீது ஏறி கொண்டிருந்தபோது, பாதியிலேயே திடீரென பரபரப்பான ஒரு சூழல் ஏற்பட ஆரம்பித்தது. அதாவது, நிறுத்தப்பட்டிருந்த ஹெலிகாப்டர்கள் மீண்டும் பறக்க ஆரம்பித்தன. கோரிக்கைகளை உள்ளூர் நிர்வாகம் ஒப்புக்கொண்டு விட்டதால் ஸ்டிரைக் முடிந்து விட்டதாகச் சொல்லி குதிரைக்காரர்கள் மீண்டும் சவாரியேற்ற ஆரம்பித்தார்கள். இவ்வளவு தூரம் நடந்த பிறகுதானா நிலைமை இப்படி மாற வேண்டுமென நான் நொந்து கொண்டிருந்தபோதே, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல, குதிரைக்காரன் ஒருவன் எங்கள் முன் தோன்றி, குதிரை வேண்டுமா? என்றான்.

நான் கடுப்பாகிப் போனேன். எந்த வைஷ்ணோதேவியை தரிசிக்க வந்தோமோ, அந்த வைஷ்ணோதேவி மேலேயே எனக்குக் கோபம் கோபமாக வந்தது. இவ்வளவு நடந்த பிறகு இனியென்ன குதிரை?

மீதியுள்ள தூரத்தையும் நடந்தே கடந்து விடுவோம் என்று முடிவு செய்து, குதிரைக்காரனை கடிந்து அனுப்பினேன். ஆனால் ஆச்சர்யம்! அதற்கு மேல் நடப்பது மிகவும் சுலபமாகவே இருந்தது. இதுவரை நடந்தபோது இருந்த கஷ்டத்தை அதன் பிறகு நாங்கள் உணரவேயில்லை.

நினைப்பது நடக்க வேண்டுமென்பது அகந்தை. நாம் என்ன நினைத்தாலும் கடவுள் நினைத்தபடி மட்டும்தான் காரியங்கள் நடக்குமென்பதை உணர வைத்து, என் அகந்தையை அகற்றியது இந்த சம்பவம். கிரியையின் வெளிப்பாடு ஏற்கனவே தொடங்கியிருந்ததால் இந்த சிறு சம்பவம் மூலம் என் அகந்தை அழிந்ததே தவிர, இயல்பான வாழ்க்கை மூலம் அகந்தை அழிய வேண்டுமானால் எத்தனை எத்தனை காலமாகும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

அதன்பிறகு 2011 செப்டம்பர் 3 ஆம் தேதி, தேவாஸ் நகரில் உள்ள நாராயண்குடி சன்னியாச ஆசிரமத்திற்கு சென்றிருந்தேன். இந்த ஆசிரமம் பற்றி நாம் ஏற்கனவே முந்தைய அத்தியாயம் ஒன்றில் பார்த்திருக்கிறோம்.

இந்த ஆசிரமத்திற்கு உள்ளேயே ஒரு குகை இருப்பதாகவும், பல சந்நியாசிகள் தீவிர தியானத்தில் ஈடுபட்ட இடம் இந்த குகை என்றும், நான் பிற்பாடு கேள்விப்பட்டேன். இந்த குகைக்குப் போக வேண்டும் என்ற ஆசை இயற்கையாகவே ஏற்பட, ஆசிரமத்திற்குச் சென்று குகைக்குள் அமர்ந்து கண்ணை மூடிக் கொண்டு என் மந்திரத்தை மனனம் செய்ய ஆரம்பித்தேன்.

ஆனால் என்ன நடக்கிறது என்பதே புரியாமல், மந்திரத்தின் ஒரு

வரி திடீரென மறந்து போயிற்று ! எவ்வளவோ முயன்றும் அந்த வரியை ஞாபகத்தில் கொண்டு வர முடியவில்லை. எனக்கு மிகக் பெரிய அதிர்ச்சி! தினசரி ஜபிக்கும் மந்திரம் திடீரென எப்படி மறந்து போகும்? ஆனாலும் அந்த ஒரு வரி ஞாபகத்திற்கு வரவேயில்லை. நொந்து போய் தியானத்தில் இருந்து எழுந்து, மிகுந்த ஏமாற்றத்துடன் ஹோட்டல் அறைக்குத் திரும்பினேன். என்ன ஆச்சரியம்! அறைக்குள் காலடி எடுத்து வைத்தேனோ, இல்லையோ, மறந்து போன மந்திரம் மறுபடியும் ஞாபகத்திற்கு வந்துவிட்டது!

மறுநாள் மந்திரத்தை ஞாபகப் படுத்திக்கொண்டே குகைக்கு சென்றமர்ந்து, ஜபம் செய்ய ஆரம்பித்தேன். சுமார் ஒரு மணி நேரம் தியானம் நீடித்த நிலையில், குகைக்கு வெளியே திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. இடியும் மின்னலுமாய் மழை வலுத்தபோது, நான் சற்றே தியானம் கலைந்து கண்களைத் திறந்து பார்த்தேன், மழையினால் மின்சாரம் நின்றுபோனதால் குகைக்குள் ஒரே இருட்டாக இருந்தது. இப்போது எழுந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது என்பதால், தியானத்தை தொடர்வதே சரியென்று பட்டது. மீண்டும் கண்ணை மூடிக்கொண்டு தியானத்தை தொடர ஆரம்பித்த போது, இது போன்ற குகைகளில் ஆவிகள் சுற்றித் திரியும் என எப்போதோ படித்த ஞாபகம் வந்தது. ஆவியென்றால் கெட்ட ஆவியாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்பது எனக்குத் தெரியும். ஆவி என்பது சரீரமற்ற ஆன்மா. அது மனித ஆன்மாவாகவும் இருக்கலாம். மற்ற மிருகங்களின் ஆன்மாவாகவும் இருக்கலாம். மனித ஆவியாகவே இருந்தாலும், அது மீண்டும் பிறவியெடுக்கும் போது மனிதனாகத்தான் பிறக்க வேண்டுமென்பதில்லை. மனித ஆவி மீண்டும் பிறவியெடுக்கையில் மிருகமாகவும் பிறக்கலாம். பிறகு மீண்டும் மனிதனாகலாம். அதுபோலவே, மிருகங்களின் ஆவிகளும், மனிதனாகவோ மிருகமாகவோ பிறக்க முடியும். எனவே ஆவிகளுக்குள், மனித ஆவி-மிருக ஆவி என்றெல்லாம்

பேதமில்லை. நல்ல ஆவி-கெட்ட ஆவி என்ற வித்தியாசமும் இல்லை. கடவுள் ஒவ்வொரு ஜீவராசியிலும் குடியிருக்கிறார் என்று சொல்வதே இதனால்தான். இந்த எல்லா விஷயங்களையும் நான் ஏற்கனவே படித்திருக்கிறேன், புரிந்து கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும், கும்மிருட்டான குகைக்குள் தன்னந்தனியாக அமர்ந்திருக்கையில், ஆவிகள் பற்றிய ஞாபகம் வந்தவுடன், மனத்திற்குள் என்னையறியாமலேயே பயம் துளிர்விட ஆரம்பித்தது. குகை, ஆசிரமத்தின் இதர பகுதிகளிலிருந்து ஒதுங்கித் தனியே அமைந்திருப்பது ஞாபகம் வந்தவுடன், பயம் இன்னும் அதிகமாயிற்று. வெளியே இடி-மின்னலுடன் கொட்டும் மழையும், மழைநீர் தரையில் விழுந்து நாலாபுறமும் சிதறியடிக்கும் ஓசையும் பயத்திற்கு தூபம் போட, நான் பயத்தின் உச்சத்திற்கே சென்றுவிட்டேன். உண்மையில் பயம் என்றால் என்னவென்பதை உள்ளபடியே அன்றுதான் உணர்ந்தேன் என்று சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு பேய்கள் பற்றிய பயம் சில நிமிடங்களுக்கு என்னை ஆட்டிப் படைத்தது. நான் வியர்த்து விறுவிறுத்துப் போனேன். அதற்கு மேல் தியானத்தை தொடர முடியாமல், கண்களைத் திறக்க நேர்ந்தது. ஆனால் மனதிற்குள் படிந்துள்ள பய உணர்வுதான் இப்படிக் கிரியையாக வெளிப்பட்டு அழிகிறது என்பதும், கிரியையின் வெளிப்பாட்டை பாதியிலேயே நிறுத்துவது சக்தி மார்க்க விதிகளின் படித் தவறு என்பதும் எனக்குப் புரிந்ததால், தியானத்தை கலைக்கவும் எனக்கு விருப்பமில்லை. இப்படி இருதலைக் கொள்ளி எறும்பாக சிறிது நேரம் தவித்த பின்னர், பய உணர்வு தானாகவே அடங்கத் துவங்கவே, நான் செத்தேன் பிழைத்தேன் என்று தியானத்திலிருந்து எழுந்து, என் தொலைபேசியில் உள்ள டார்ச்லைட் வெளிச்சத்தின் மூலம் குகையிலிருந்து வெளியேறினேன்.

நமக்கு எவ்வளவுதான் படிப்பறிவு இருந்தாலும், பேய்கள், ஆவிகள் போன்ற அமானுஷ்ய சக்திகள் பற்றிய ஒரு பயம்

அடிப்படையிலேயே நம் மனதில் குடிகொண்டுள்ளது. இதுபோன்ற காரணமற்ற பயங்களும் மனப் பதிவிலிருந்து அழிய வேண்டுமல்லவா, அதற்காகவே எனக்கு இத்தகைய ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

தேவாஸ் நகரில் இருந்த போது மற்றொரு முக்கியமான இடத்திற்குச் செல்ல முடிவு செய்தேன். பாரதத்தின் பன்னெடுங் காலமாகப் பின்பற்றப்படும் நாத் யோகா மார்க்கத்தைச் சேர்ந்த யோகி ஒருவர், சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பாக இந்நகரில் வாழ்ந்திருந்தார் என்பதை நான் ஒருமுறை படித்திருந்தேன்.

பாபா ஷீலாநாத் என்ற அந்த யோகி, எரியும் கொள்ளிக்கட்டை ஒன்றை எப்போதும் தன்னுடன் வைத்திருப்பார். புலன் நுகர்வால் மனதில் ஏற்படும் பதிவுகள் தொடர்ச்சியாக எரிந்து பொசுங்குவதைக் குறிக்கும் அடையாளச் சின்னமே கொள்ளிக்கட்டை. பிற்காலத்தில் அந்த யோகி தேவாஸ் நகரிலிருந்து வேறெங்கோ சென்று விட்ட போதிலும், அவருடைய சீடர்கள் கொள்ளிக்கட்டை ஒன்றை எரியவிடும் பாரம்பரியத்தை தொடர்ந்து செயல்படுத்தினார்கள். இன்றும்கூட, பாபா ஷீலாநாத் தவம் செய்த இடத்தில் கொள்ளிக்கட்டை எரிந்து கொண்டிருப்பதை நாம் காணலாம். நகருக்கு வெளியே அமைந்துள்ள இந்த இடத்திற்கு பாபா ஷீலாநாத் துனி சமஸ்தானம் என்று பெயர்.

அந்த இடத்திற்குப் போய் வழிபடவேண்டும் என்ற ஆசை இயற்கையாகவே எனக்கு ஏற்பட்டது. நான் அங்கே சென்று, எரியும் கொள்ளிக்கட்டையைப் பார்த்தவுடன், சிறிது நேரம் தியானம் செய்துவிட்டுப் போகலாம் என அமர்ந்தேன். எனக்கு அன்றைய தினமே தேவாஸ் நகரை விட்டுப் புறப்பட வேண்டியிருந்ததாலும், நான் செல்ல வேண்டிய இடத்திற்கு பல மணி நேரம் காரில் பயணிக்க வேண்டியிருந்ததாலும், அதிக

நேரம் தியானம் செய்யும் எண்ணம் எனக்கு இருக்கவில்லை. ஆனாலும் தியானத்தில் அமர்ந்த சில நிமிடங்களிலேயே என்னையறியாமல் ஆழ்ந்த தியான நிலைக்கு எப்படியோ சென்று விட்டேன். தியானம் கலைந்து கண்ணைத் திறந்து பார்த்த போதுதான், இரண்டு மணி நேரத்திற்கும் மேல் தியானத்தில் கழிந்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

பொதுவாக இத்தகைய கிரியைகள், ஏற்கனவே முந்தைய பிறவிகளில் நிறைய தியானம் செய்து பழக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே ஏற்படும். நான் நிறைய தியானம் செய்து பழக்கப்பட்டிருக்கிறோம், நினைத்தபோது நினைத்தபடி தியானம் செய்ய நம்மால் இயலும் என்ற எண்ணம் இத்தகைய சாதகர்களின் மனதில் படிந்திருக்கும். நான் என்ற உணர்வுடன் சம்பந்தப்பட்ட இதுபோன்ற மனப் பதிவுகளும் அகன்றால் தான், நாமும் கடவுளும் வேறல்ல என்ற உணர்வை நோக்கி முன்னேற முடியும் என்பதன் காரணமாகவே, இத்தகைய மனப் பதிவுகளும் அழிய ஏதுவாக, மேற்சொன்னது போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன. தியானம் செய்வதில் நன்கு பழக்கப்பட்டவராகவே இருந்தாலும், குறிப்பிட்ட ஓர் அமர்வில் தியானம் கூடுவதும் கூடாததும் கடவுளின் சித்தமே தவிர, நம் கையில் இல்லை என்பது, இந்த சம்பவத்தால் தெள்ளத் தெளிவாக எனக்குப் புலனாயிற்று.

தேவாஸிலிருந்து புறப்பட்ட பின்னர், இந்தியாவின் இன்றைய தெலுங்கானா மாநிலத்தில் கோதாவரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள பசரா என்ற இடத்திற்கு நான் சென்றேன். புராண காலத்தில் வேதங்களையும் மகாபாரதத்தையும் தொகுத்து எழுதியவராகக் கருதப்படும் வியாச முனிவர் இந்த இடத்தில்தான் தங்கியிருந்து தியான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இந்த சிறு நகரமான பசராவில் வியாசர் தியானம் செய்த இடம் என ஒரு குகை இன்றும் இருக்கிறது.

அந்த இடத்தை சென்று பார்த்து, அங்கே அமர்ந்து தியானம் செய்ய வேண்டுமென்ற ஆசை உந்தித் தள்ள, நான் அங்கு சென்றேன். அந்த குகை மிகச் சிறியதாகவும், குறுகலாகவும் இருந்தது. குகையின் வாசல் வழியாக தவழ்ந்து சென்றுதான் உள்ளே போக முடிந்தது. ஆனாலும், உள்ளுக்குள் நான்கைந்து பேர் அமர்ந்து தியானம் செய்யுமளவிற்கு இடமிருந்ததால், நான் ஒரு ஓரத்தில் பத்மாசனமிட்டு அமர்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தேன். நான்கு மணிக்கு குகை மூடப்படும் என்று, உள்ளே செல்லும் முன்பாகவே என்னிடம் தெரிவிக்கப்பட்டது. குகைக்குள் மின்சாரம் மூலம் வெளிச்சம் உண்டாக்கியிருந்தார்கள். சுற்றுலாப் பயணிகள் அவ்வப்போது குகைக்குள் வந்து சென்ற வண்ணமிருந்த போதிலும், இதனால் தியானம் பாதிக்கப்படாத விதத்தில், வெளிச்சம் குறைவான ஓரிடத்தில்தான் நான் அமர்ந்திருந்தேன். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மகா முனிவர் ஒருவர் அமர்ந்து தியானம் செய்த இடமல்லவா, அதன் அதிர்வுகள் குகைக்குள் முழுமையாக நிரம்பியிருந்தன. அதிர்வலைகளை என் மனதிற்குள் தெளிவாகவே உணர முடிந்தது. இதனால் என்னுடைய தியானம் சிறப்பாகவே அமைந்தது. சுமார் ஒரு மணி நேரம் ஆழமான தியானம் நீடித்த நிலையில், திடீரென ஏதோ புரியாத காரணத்தால் நான் தியானம் கலைந்தேன். கண் விழித்துப் பார்த்தபோது குகைக்குள் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. ஒரு ஓரத்தில் இருந்து சூரிய வெளிச்சம் மட்டுமே கொஞ்சமாக வந்து கொண்டிருந்தது. சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டம் சுத்தமாகவே இல்லை. மொத்தத்தில் அந்த இடமே வெறிச்சோடிக் கிடந்தது. குகைக்கு வெளியே நான் வரும்போது இருந்த சுற்றுலாத்துறை ஊழியர் இன்னும் இருக்கிறாரா என்று தெரியவில்லை. ஒரு வேளை நான் உள்ளே இருப்பதைக் கவனிக்காமல் அவர் குகையை பூட்டி விட்டுப் போய்விட்டாரோ என்று தோன்றியது. அப்படி நடந்திருந்தால் நாளை காலை குகை மீண்டும் திறக்கப்படும்

வரை, இரவு முழுவதும் இங்கேதான் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்பது புரிந்தவுடன், மனம் திடுக்கிட்டது, அதுவும் அடர்ந்த மலைக் காட்டிற்குள் தன்னந்தனியான ஒரு இடத்தில் குகை அமைந்திருப்பதை நினைத்துப் பார்க்கையில் அச்சம் இன்னும் அதிகரித்தது. கிட்டத்தட்ட தேவாஸ் நகரில் ஏற்பட்ட அதே பய உணர்வை நான் மீண்டும் அனுபவிக்க ஆரம்பித்தேன். ஆனால் இந்த முறை பயத்தினால் தியானத்தை விட்டு விடக் கூடாது என்ற எண்ணத்துடன் மீண்டும் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தை தொடரலானேன். குகை மூடப்பட்டிருந்தாலும் அதிகபட்சம் என்ன நடத்துவிடப் போகிறது? இன்று இரவு பூராவும் சோறு-தண்ணீர் இல்லாமல் குகைக்குள் கிடக்க நேரிடும். ஆனாலும் நாளைக் காலை குகையை மீண்டும் திறந்து விடுவார்கள்.

தானே? இப்படியாக மனதைத் தேற்றிக்கொண்டதால் தொடர்ந்து தியானத்தில் ஈடுபட முடிந்தது. ஆனாலும் கூட, மனதின் ஒரு ஓரத்தில் பயம் எட்டிப்பார்த்துக் கொண்டே இருப்பதை தவிர்க்க முடியவில்லை. இப்படியே இன்னும் 5 நிமிடங்கள் கழிந்தன. இதற்குள் மனதின் ஓரத்தில் ஒளிந்திருந்த பயம் மீண்டும் பூதாகாரமாகத் தலையெடுக்கத் தொடங்கிவிட்டதால், இனியும் முடியாது என்று, நான் தியானத்தைக் கைவிட்டுக் கண் விழித்தேன். குகை வாசல் வழியாகத் தவழ்ந்து வெளியே வந்து பார்த்தால், குகை ஊழியர் எனக்காக இன்னும் அங்கேயே காத்திருந்தார். தியானத்தைக் கலைக்க வேண்டாமே என்பதற்காகத்தான் தாம் காத்திருப்பதாக மிகப் பணிவுடன் அவர் கூறிய போது, நான் நெகிழ்ந்து போனேன். ஆனால இதற்குள் என் மனம் என்னபாடு படுத்திவிட்டது.

ஆதிபராசக்திக்கும் சாதகருக்கும் நடுவிலுள்ள இடைமுகமாக சாதகரின் அன்றாட வாழ்வில் எத்தகைய சம்பவங்களெல்லாம் நிகழும் என்பதற்கான உதாரணமாகவே மேற்கண்ட சம்பவங்களை

வாசகர்களுக்கு எடுத்துக் கூறினேன். இந்த நிலை வரை, சாதகர் தன் வாழ்வோடு விளையாடும் தனிப்பட்ட சக்தியாகவே பரம்பொருளை உணர்கிறார். ஆனால் பரம்பொருளும் நாமும் வேறல்ல என்பதை இறுதியில் உணர்வதற்கான படிக்கட்டுகளாகவே இதுபோன்ற சம்பவங்கள் அமைகின்றன. இங்கே நான் விவரித்துள்ள சம்பவங்கள் அல்லாது, இத்தகைய வேறு பல சம்பவங்களும் எனக்கு நேர்ந்துள்ளன என்பதை இந்த இடத்தில் வாசகர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒவ்வொரு சம்பவமும் ஒவ்வொரு மனப்பதிவை அழிப்பதற்கான கிரியைதான் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இது போன்ற சம்பவங்கள் யோக மார்க்கத்தில் ஈடுபாடு இல்லாத சாதாரண மனிதர்களின் வாழ்விலும் ஏற்படக் கூடுமல்லவா என்று நீங்கள் கேட்கலாம்.

ஆனால் வித்தியாசம் சம்பவங்களால் ஏற்படும் மனமாற்றத்தில் இருக்கிறதே தவிர, சம்பவங்களில் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். யோக சாதனையில் ஈடுபட்டுள்ள ஒருவரின் வாழ்வில் கிரியையின் வெளிப்பாடாக இத்தகைய சம்பவங்கள் நிகழும்போது, சம்பந்தப்பட்ட உணர்வு தொடர்பான மனப்பதிவுகள் படிப்படியாக அழிக்கப்படும். அதிரடியாக ஒரே சம்பவத்தில் ஒரு மனப்பதிவு அழிக்கப்பட்டு, சாதகர் புது ஆளாகவே மாறிப்போகவும் வாய்ப்புண்டு. ஆனால் சாதாரண மனிதர்களின் வாழ்வில் நிகழும் இது போன்ற சம்பவங்கள், சம்பந்தப்பட்ட உணர்வு தொடர்பான மனப்பதிவை இன்னும் வலுவாக்கவே உதவும். உதாரணமாக, பய உணர்வு தொடர்பான ஒரு சம்பவம் சாதாரண மனிதனின் வாழ்வில் நிகழும்போது, மனதிற்குள் படிந்துள்ள பய உணர்வு இன்னும் அழுத்தமாகப் படியும். ஆனால், அதே சம்பவம் யோக சாதகர் ஒருவரின் வாழ்வில், கிரியையின் வெளிப்பாடாக நிகழ்ந்தால், மனதிற்குள் படிந்துள்ள கொஞ்சநஞ்ச பய உணர்வும்

அகன்று,
அதற்கு மேல் பய உணர்ச்சியிலிருந்து முற்றிலும் விடுபட்டவராகவே அவர் வாழ்வார். இதுதான் வேறுபாடு.

மேலும் ஆதிபராசக்தியின் நிஜமான தன்மை என்ன என்பதை, சாதகருக்குள் தேவையான மனமாற்றத்தைக் கொண்டுவருவதன் மூலம், ஆதிபராசக்திதான் உணர்த்த வேண்டும். இந்த மன மாற்றத்தைக் கொண்டுவரவே, ஆதிபராசக்திக்கும் சாதகருக்கும் நடுவில் ஓர் இடைமுகமாக, சாதகரின் வாழ்வில் பல சம்பவங்கள் நிகழ்கின்றன. இதன் மூலம், ஆதிபராசக்தி எப்படி இயங்குகிறது என்பதை சாதகர் புரிந்து கொள்கிறார். சில சமயங்களில் குறிப்பிட்ட ஒரே சம்பவம் மூலம் அதிரடியாக மனமாற்றம் நிகழ்வதுண்டு. ஆனால் பெரும்பாலும் ஒவ்வொரு சம்பவமாக நிகழ நிகழ, ஆதிபராசக்தியின் இயல்பைப் புரிந்து கொள்வதற்கான ஆன்மீக நிலையை நோக்கி சாதகர் கொஞ்சம் கொஞ்சமாக உயர்வதே வழக்கமாகும்.

இதைப் பற்றி இன்னும் சற்று விளக்குகிறேன்.

சாதாரண மனிதனின் மனதில், நான் என்ற எண்ணம் முழுமையாக நிரம்பியிருக்கிறது. அவன் எந்த காரியம் செய்தாலும் நான் செய்கிறேன் என்ற நினைப்புடன் செய்கிறான். காரியம், காரணம், கர்த்தா எல்லாமே பரம்பொருளின் வெவ்வேறு வடிவங்கள்தான் என்பதை அவன் உணர்வதில்லை. நடப்பது எதுவுமே நம் கட்டுப் பாட்டில் இல்லை என்பதையும் அவன் புரிந்து கொள்ளாமல், சர்வ அதிகாரமும் தனக்கே இருப்பது போல் நடந்து கொள்கிறான். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மாயத் திரை அவனை அப்படி நினைக்க வைக்கிறது. ஆனால் அதே சமயம், கடவுளின் ஒரு வடிவம்தான் மனிதன் என்பதால், மனம் பொய் சொல்வதாகவும் கருதிவிட முடியாது. சிக்கல் எங்கே இருக்கிறதென்றால், சர்வ வல்லமை படைத்தவர்

கடவுளே என்பதையும், கடவுளின் ஓர் வடிவமாக நாமிருப்பதால்தான, சர்வ வல்லமை படைத்தவன் போல் நம்மால் நடந்து கொள்ள முடிகிறது என்பதையும், மனிதன் புரிந்து கொள்ளத் தவறுவதில்தான் சிக்கல் இருக்கிறது.

அப்படியானால், மனிதன் இந்த உண்மையைப் புரிந்து கொள்வது எப்படி?

யோக சாதனைகள் மூலம், உடலுக்குள் உறங்கிக் கிடக்கும் ஆன்மிக சக்தியை தூண்டுவதே இதற்குவழி. உடலுக்குள் உறங்கிக் கிடக்கும் சக்தி இதுபோல எழுப்பப்பட்டு செயல்படத் துவங்கும் போது, அதனால் உடலிலும் வாழ்விலும் ஏற்படக்கூடிய மாற்றங்களை வைத்து மனிதன், நம்மைவிடப் பெரிய சக்தி ஒன்று இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறான். இதுவரை நான் நான் என்று என்னையே மையமாக வைத்து நான் நினைத்திருந்த எண்ணங்கள் தவறு என உணர்கிறான். நம்முடைய உடலையும், மனதையும், வாழ்வையும் கட்டுப்படுத்தும் சக்திகடவுளிடம் இருக்கிறதே தவிர, நம்மிடம் இல்லை என்பது அவனுக்குப் புலனாகிறது. இதனால் அவன் பணிந்து போய், பரம்பொருளிடம் சரணாகதி அடைகிறான். என் கையில் எதுவுமே இல்லை. இனி எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள் என்று அவன் கடவுளிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ளும் போது, அற்புத மாற்றங்கள் நிகழ ஆரம்பிக்கின்றன.

அதாவது, முழு சரணாகதி நிலையில் மனிதனின் அகந்தை முற்றிலுமாக அகல்கிறது. நானென்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லாமற் போகிறது. புலன் நுகர்ச்சியால் காலம் காலமாக மனதிற்குள் உருவாகியிருந்த பதிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு, மனம் கண்ணாடி போல் துலங்க ஆரம்பிக்கிறது. தெள்ளத் தெளிவான இந்த மனப் பரப்பில் கடவுளின் வடிவம்

பளிச்சிடக் காணலாம். இது போல நிஜமாகவே கடவுளைக் காணும் ஒருவருக்கு, நாமும் கடவுளும் வேறல்ல என்பது பளிச்செனப் புரியும். நாமே கடவுள், கடவுளே நாம் என்பதை, யோக சாதனையின் இறுதிக்கட்டத்தில் புரிந்து கொள்வதே, மெய்யறிவு, மோட்சம், வீடுபேறு எனப் படுகிறது. இந்த இறுதிக் கட்டத்தில், கடவுளின் நிஜமான தன்மையை சாதகர் முழுமையாக உணர்கிறார். கடவுளின் இயல்பும், நம்முடைய இயல்பும் வேறுவேறல்ல என்பதை சந்தேகத்திற்கு இடமின்றிப் புரிந்துகொள்கிறார். கடவுளுக்கும் நமக்கும் இடையில் உள்ள மாயத் திரைதான் இந்த உண்மையை இதுவரை மறைத்து வைத்திருந்தது என்பதையும், நாமே கடவுள் என ஒருவர் உணர்வதற்கும், சாதாரண மனிதர்கள் தாமே கடவுள் போல் பேசித் திரிவதற்கும், மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசம் இருப்பதை, வாசகர்கள் உணர வேண்டும். மோட்ச நிலையில் ஒருவர் தம்மையே கடவுளாக உணர்கிறார் என்றால், அவரிடம் கடவுள் தாமே தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால் சாதாரண மனிதர்கள், சர்வ வல்லமை படைத்தவர்கள் போல் நடந்து கொள்வதற்கு, கடவுளைப் புரிந்து கொள்ளாததே காரணம். அதாவது, சாதாரண மனிதர்கள் அறியாமை காரணமாக அகந்தையில் உழல்கிறார்கள். ஆனால் மெய்யறிவு பெற்ற ஒரு ஞானி, கடவுள் பற்றிய நேரடி அனுபவத்தின் அடிப்படையில், தன்னையும் கடவுளாகக் காண்கிறார். இருவருக்கும் இடையில் இத்தனை பெரிய வித்தியாசம் உள்ள போதிலும், மெய்யறிவு பெற்ற ஞானிகள் புற வாழ்வில் சாதாரண மனிதர்கள் போலவே நடந்து கொள்கிறார்கள். சாதாரண மனிதர்களுக்கும் அவர்களுக்கும் இடையில், பார்ப்பதற்குப் பெரிய வித்தியாசமிருப்பதில்லை என்பதே, இன்னும் ஆச்சரியமான விஷயம்.

இனி, மனித உடலுக்குள் உறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தி, மனதுடன் வினைபுரிந்து தன்னைத் தானே வெளிப்படுத்திக்

கொள்வதில் நான்கு படிநிலைகள் இருப்பதாக யோக சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருப்பது பற்றி கொஞ்சம் எடுத்துக் கூறுகிறேன். ஆதிபராசக்தி மனித மனதுடன் வினைபுரியும் விதம், லீலா வினோதமானது. புலன் நுகர்ச்சியால் ஏற்பட்ட மனப் பதிவுகள் நீங்க வேண்டும். அதே சமயம் அவ்வாறு நீங்கும் செயலின் தாக்கமும் மிகக் குறைவாக இருக்க வேண்டும். இந்த இரண்டு நோக்கங்களையும் ஒரு சேர உறுதிப் படுத்தும் வகையில், ஆதிபராசக்தி மனித மனத்துடன் அதி சூட்சுமமான ஒரு விதத்தில் வினை புரிகிறது. இதை விஞ்ஞானம் அல்லது பகுத்தறிவு மூலமாக விளக்க முடியாது. ஒவ்வொரு சாதகமும அனுபவப் பூர்வமாகத்தான் இதை உணர வேண்டும். ஆனாலும், மனித மனம் நான் என்ற அகந்தையிலிருந்து விடுபட்டு, நாமே கடவுள் என்பதை உணரும் வரை நிகழக் கூடிய மாற்றங்களை, நான்கு படிநிலைகளாக வகைப்படுத்தலாம் என்று யோக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்நான்கு படி நிலைகளை, என்னுடைய சக்தி மற்றும் மொழித் திறனுக்கு உட்பட்டு, சற்றே விளக்க முயல்கிறேன்.

ஆரம்பத்தில் மனிதன், எல்லாமே நான்தான் என்பது போல் உணர்கிறான். எல்லாமே என்பதில் கடவுளும் அடக்கம். அதாவது, இந்தப் பிரபஞ்சத்தில் எனக்கு மேல் எதுவுமே இல்லை-கடவுள் உட்பட என்று இதற்கு அர்த்தம். அதாவது, நமக்கு மேல் கடவுள் ஒருவர் இருப்பதையே மனம் உணர மறுத்து, நான்தான் எல்லாம் என்கிறது. இந்தக் கட்டத்தில் மாயையினால் மனதில் ஏற்படும் அறியாமையே இதற்குக் காரணம்.

பின்னர் அதே மனிதன், அவனுக்குள் உறைந்து கிடக்கும் ஆன்மீக சக்தியை குழு ஒருவரின் மூலம் தூண்டும்போது, அந்த சக்தியின் செயல்பாடுகள், நாமே எல்லாமென நினைத்தது தவறு போலிருக்கிறதே, நமக்கு மேல் ஒரு சக்தி இருப்பது போல் தெரிகிறதே என்று உணரத் தொடங்குகிறான். மனிதன் தன்னைத்

தாமே உணர்வதில், இது முதலாவது படிநிலை. தன்னைத் தவிர, இரண்டாவதாக வேறெங்கும் இல்லை என்ற மனிதனின் எண்ணம், இந்தக் கட்டத்தில் சற்று மாறி, தன்னிலிருந்து வேறுபட்ட சக்தியாக கடவுளை உணர வைக்கிறது.

அடுத்த இரண்டாவது கட்டத்தில், கடவுள் நமக்கு மேல் உள்ள ஒரு சக்தி என்ற எண்ணம் மேலும் மேலும் அதிகரித்து மனிதனின் மனம் முழுவதும் பரவி நிற்கிறது. அதைத் தவிர இந்த இடைப்பட்ட கட்டத்தில் வேறொன்றும் நிகழ்வதில்லை. ஆனால், கடவுள் சக்தியென்பது நம்மைவிடப் பெரிய சக்தி, நம்மை ஆட்டுவிக்கும் சக்தியென்பது, இப்போது மனிதனுக்குப் புரிவதால், மனிதனின் அகந்தை முதல் முறையாக சற்று அடங்குகிறது. தன்னையே பெரிதென நினைத்துப் புறவயமான இந்த உலகைக் கட்டிக்கொண்டு அழுதேனே, அது தவறு என்று உணர்ந்து, மனிதன் அகவயமாக, உள்நோக்கிப் பார்க்கத் தொடங்குகிறான். இந்த உள்நோக்கிய பார்வை வராவிட்டால், அதற்கு மேல், கடவுளைப் பற்றிய ஆராய்ச்சி சாத்தியமாகாது. இப்போது மனம் அகந்தை ஒடுங்கி, வெறும் பார்வையாளராக நின்று, கடவுள் சக்தியின் இயக்கத்தை அவதானிக்க ஆரம்பிக்கிறது. கடவுள் சக்தி எப்படியெல்லாம் விந்தை புரிய முடியும் என்பதை பரிசோதித்துப் பார்க்கும் சோதனைக் களமாகவும், மனமானது மாறிப் போகிறது. இது போன்ற செயல்பாடுகள் தொடர்ச்சியாக நிகழும்போது, மனிதன் தன் மனதின் சக்தி ஒன்றுமேயில்லை என்பதைப் பூரணமாக உணர்ந்து, கடவுள் சக்தியிடம் முழுமையாக சரணாகதி அடைவதே, மூன்றாம் படிநிலை.

கடவுள் யார் என்பதை மனிதன் தெரிந்து கொள்ள முடியாத விதத்தில் இதுவரை மனதில் விரிந்திருந்த மாயத் திரை, இப்போது விலக ஆரம்பிக்கிறது. திரை விலக விலக, மனதில் சலனங்கள் ஒடுங்கி, பேரமைதி குடிகொள்கிறது. நிஷ்சலனமான

இந்த மகாசாந்தி நிலையில், மனமென்னும் தெளிவான கண்ணாடியில் கடவுளின் உருவம் பளிச்செனத் தெரியும். கடவுளின் தன்மை நீக்கமறப் புரியும். இந்தக் கடவுள்தான் நாம் என்பதையும், நாமும் கடவுளும் வேறல்ல என்பதையும், சாதகர் இந்த நான்காவது உச்சகட்டத்தில் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்கிறார். கடவுளின் சக்தியும், மனித உடலையும், மனதையும், வாழ்வின் சம்பவங்களையும் கட்டுப்படுத்துவதற்கான கடவுளின் சக்தி, சாதகருக்கும் கிடைத்துவிடும்.

இந்தக் கட்டத்தில், பிரபஞ்சத்தின் பௌதீக விதிகளும், அதற்கு மேற்பட்ட யோக விதிகளும், முற்றிலுமாக முறிந்து போகின்றன. இந்த விதிகள் கடவுளை எப்படிக் கட்டுப்படுத்த முடியாதோ அதுபோல, கடவுளை உணர்ந்த ஞானியையும் கட்டுப்படுத்த முடியாது. இந்தக் கட்டத்தில் யோக சாதனையின் இறுதி நோக்கம் எட்டப்பட்டுவிட்டது. கடவுள் சக்தியும், மனித மனதின் சக்தியும் ஒன்றாகிவிட்டன. கடவுளை உணர்ந்த ஞானிகள் பல வித அற்புதங்களை செய்து காட்ட முடிவதற்கு, இதுவே காரணம்!

அதே சமயம், மெய்யறிவை எட்டுவதென்பது, முழுக்க முழுக்க கடவுளின் சித்தப்படி நடக்க வேண்டிய ஒரு காரியம் என்பதையும் யோக சாத்திரங்கள் பறை சாற்றுகின்றன. அதாவது, சாதகர் எவ்வளவுதான் முயன்றாலும், இவருக்கு மெய்யறிவு அளிக்கலாம் என்று கடவுள் திருவுள்ளம் கொண்டால் மட்டுமே, மெய்யறிவை அடைய முடியும்.

அது சரி, மெய்யறிவு பெற்ற பிறகு என்னவாகிறது என்று நீங்கள் கேட்கலாம். மெய்யறிவு பெற்ற ஒரு மனிதன், கடவுளுடன் ஐக்கியமாகி கடவுள் தன்மையை அனுபவித்தபடி நிரந்தர ஆனந்தத்தில் மூழ்கியிருப்பான் என்பதற்கு மேல் வேறெந்த பதிலும் சொல்ல எனக்குத் தெரியவில்லை. அதாவது, எந்த பதிலும் சொல்லும் தகுதி எனக்கில்லை. இன்னும் சொல்லப்

போனால், நிஜமாகவே கடவுளை உணர்ந்தவர்கள் உட்பட யாருக்கும் அந்தத் தகுதியில்லை. அதுதான் கடவுளின் நிஜமான தன்மை. கடும் யோக முயற்சிகளால் மெய்யறிவு பெற்றவர்கள் கூட, அதை உணர முடியுமே தவிர, மற்றவர்களுக்கு விளக்க முடியாது. அதாவது, பௌதீக விதிகளையும், யோக விதிகளையும் கடந்து நிற்கும் ஒருவர், பௌதீக விதிகளுக்கும், யோக விதிகளுக்கும் அப்பாற்பட்டவரான கடவுளின் இயல்புகளை, பௌதீக விதிகளுக்கும், யோக விதிகளுக்கும் உட்பட்ட உலகிற்கு எடுத்துக் கூறுவது சாத்தியமல்ல. இத்தகைய ஞானிகள் பௌதீக உலகில் தொடர்ந்து வாழ்வது சாத்தியமே என்றாலும், உணர்வு ரீதியில் பௌதீக உலகிலிருந்து விலகியே நிற்கிறார்கள். இவர்களைத்தான் கடவுளின் அவதாரங்களாக நாம் வணங்குகிறோம். ராமர், கிருஷ்ணர், இயேசு, அல்லா, புத்தர் போன்றவர்களே இதற்கு உதாரணம்.

# வாழ்வே கிரியையாக

கிரியை என்றால் என்ன என்பதை முந்தைய ஒரு அத்தியாயத்தில் விளக்கியபோது, அது சாதகரின் உடல், மனம் மற்றும் வாழ்க்கை சம்பவங்களில் வெளிப்படக் கூடிய வினை என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இங்கே, மனமும்புற வாழ்வின் சம்பவங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதை புரிந்து கொள்வது அவசியமாகும்.

மனிதன் புற உலகம் என்று எதை நினைக்கிறானோ, அது அவனது மனம் திரையிட்டுக் காட்டும் பிம்பம் மட்டுமே. ஒவ்வொரு மனிதனின் மனமும் இத்தகைய ஒரு உலகை அந்தந்த மனிதனுக்குத் திரையிட்டுக் காட்டுவதால், ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி உலகமுண்டு. அதே சமயம், எல்லா மனிதர்களின் மனங்களும் சேர்ந்து, எல்லா மனிதர்களுக்காகவும் திரையிட்டுக் காட்டக்கூடிய ஒட்டு மொத்தப் புற உலகம் என்றும் ஒரு உலகம் இருக்கிறது. இப்படி தனிப்பட்ட மனிதர்களின் நிலை, ஒட்டுமொத்த மனிதர்களின் நிலை என்ற இரு நிலைகளாகப் புற உலகம் திகழ்கிறது.

இதில் தனிப்பட்ட மனிதர்களின் உலகம் அந்த மனிதர் ஆழ்ந்து உறங்கும்போது, காணாமற் போகிறது. அதே மனிதர் சொப்பன நிலைக்கு செல்லும்போது, புதிய உலகம் படைக்கப்படுகிறது. உறக்கம் கலைந்து விழிக்கும் போது, அவருடைய பழைய உலகம் மீண்டும் படைக்கப்படுகிறது. தன் பழைய உலகம் பற்றிய அவருடைய ஞாபகப் பதிவுகள் அப்படியே இருப்பதால், பழைய உலகம் ஒரு முறை அழிந்து மறுபடியும் படைக்கப்பட்டுள்ளதை அவர் உணர்வதில்லை. எனவே, புற உலகம் என்பது கானல் நீர் போன்றதே தவிர, நிஜமான நிஜமல்ல.

தனிப்பட்ட மனிதர்களுக்கு தனிப்பட்ட ஒரு உலகம் உள்ள போதிலும், இந்த உலகங்கள் ஒன்றுக் கொன்று பின்னிக் கிடக்கின்றன. ஆனாலும், தனிப்பட்ட மனிதர், தனிப்பட்ட மனிதராக, அலாதியாகவே நீடிக்கிறார். இதனால், தனிப்பட்ட ஒரு மனிதர் புற உலகை எப்படிப் பார்க்கிறார் என்பது, மற்றவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதிலிருந்து முற்றிலுமாக வேறுபடுகிறது. அதாவது, உலகைப் பற்றிய ஒருவரின் பார்வை, மற்றொருவரின் பார்வை போல் இருப்பதில்லை. புற உலகை நான் எப்படிப் பார்க்கிறேன் என்பது, காலம் காலமாக என் மனதில் எந்த விதமான பதிவுகள் உருவாகி இருக்கின்றன என்பதைப் பொருத்தது. மற்றொருவரின் மனப் பதிவுகள் வேறு விதமாக இருக்கலாம் என்பதால்தான், உலகைப் பற்றிய மற்றவர்களின் பார்வை என்னுடைய பார்வையிலிருந்து வேறுபடுகிறது. இதனால், மகிழ்ச்சிகரமானதாக உங்களுக்குத் தெரியக்கூடிய ஒரு சூழ்நிலை, எனக்கு அப்படித் தெரிவதில்லை. ஒரே சூழ்நிலை ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவத்தைத் தருகிறது.

புலன் நுகர்ச்சி மூலம் பற்பல பிறவிகளாக மனதில் உருவாகும் பதிவுகள் முற்றிலுமாக அழியும் வரை, தனி மனிதர்களின் புற உலகம் என்கிற பிம்பம் தொடர்ந்து நீடிக்கும். எல்லா

மனப்பதிவுகளும் அழிந்துவிட்டால், மனிதனுக்குள் குடி கொண்டுள்ள ஆன்மா, மனித வடிவில் இருக்கவே தேவையில்லை. ஏனென்றால், முந்தைய வினைகளின் கர்ம பலன்களை அனுபவித்துத் தீர்க்கவே ஆன்மா பிறவியெடுக்கிறது.

யோக சாதனைகள் மூலம் சாதகர் மேலும் மேலும் ஆன்மீக நிலையில் உயர்கையில், ஆரம்பத்தில் எந்த ஆதிசக்தி மனிதனைப் படைத்ததோ, மனிதனாக உருவெடுத்ததோ, அதே சக்தி, மனித மனத்தில் உருவாகியுள்ள பதிவுகளை கொஞ்சம் கொஞ்சமாக, ஆனால் நிரந்தரமாக, அழித்துக் கொண்டே வருகிறது. உண்மையில் ஆன்மீக நிலையில் உயர்வதென்பதே, மனப் பதிவுதகளை மேலும் மேலும் அழித்துக் கொண்டுவருவதுதான். அதாவது, ஆன்மீக நிலையில் உயர்தல் என்பதும், மனப் பதிவுகளை அழித்துக் கொண்டே வருதல் என்பதும், இரண்டும் ஒன்றே. இவ்வாறாக பதிவுகள் அழிய அழிய, மனதிற்குள் பேரமைதி குடிகொள்ளத் துவங்குகிறது. இந்த பேரமைதி நிலையில்தான், கடவுளின் நிஜமான தோற்றம் வெளிப்படும்.

இப்படியாக கடவுளின் தோற்றம் புலப்பட்ட பின்னர் மனிதனுக்கு என்ன நேர்கிறது என்பதை சொல்லும் தகுதிதான் எனக்கில்லை என்று, முந்தைய அத்தியாயத்தின் இறுதியில் குறிப்பிட்டேன். ஆனாலும், மனதால் பிரதிபலிக்கப்படும் மாய பிம்பமான புற உலகம், சாதகர் மெய்யறிவை எட்டியவுடன் மறைந்து போகிறது என்பதையும், தனிப்பட்ட மனிதனின் புற உலகும் ஒட்டுமொத்த மனிதர்களின் புற உலகும் மெய்யறிவு கிட்டும் வரை மட்டுமே பின்னிப் பிணைந்து கிடக்குமே தவிர, மெய்யறிவு கிடைத்தவுடன் இந்தப் பிணைப்பு அற்றுப் போகிறது என்பதையும், நான் தெளிவு படுத்த முடியும்.

முந்தைய ஒரு அத்தியாயத்தில் நான் ஏற்கனவே சொன்னபடி, குருவானவர் சாதகரின் தண்டுவட வேரில் உறைந்துள்ள

குண்டலினி சக்தியை தூண்டி விடும் போது, அது உள்நோக்கித் திரும்பி, காலம் காலமாக உருவாகியுள்ள மனப் பதிவுகளை (குண இயல்புகளை) அழிக்க ஆரம்பிக்கிறது. இதன் காரணமாக, சாதகரின் உடல், மனம் மற்றும் அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களில் வெளிப்படும் மாற்றங்களையே, கிரியை என்கிறோம். இங்கே, சாதகரின் உடல் மற்றும் மனதில் ஏற்படும் மாற்றங்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால், சாதகரின் தனிப்பட்ட புற உலகம் என்பது, ஒட்டு மொத்த மனிதர்களின் புற உலகுடன் பின்னிப் பிணைந்தேயிருப்பதால், தனிப்பட்ட சாதகரின் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் கிரியைதானா அல்லது இயல்பான சம்பவங்களா என்பதை, சாதகர் எப்படித் தெரிந்து கொள்ள முடியும் என சந்தேகம் எழலாம்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். குண்டலினி சக்தி தூண்டப்பட்டவுடன், ஆதியில் அது எங்கிருந்து வந்ததோ, அதே ஆதார சக்தியை நோக்கிப் பயணிக்கத் தொடங்குகிறது.

நான் என்ற அகந்தையுடன் நாம் செய்த காரியங்களால் மனதில் உருவான மனப் பதிவுகள்தான் (கர்ம வினைகள்தான்) நம்முடைய எதிர்கால விதியாகின்றன. இந்த விதி சம்பவங்களாக வெளிப்படத் தொடங்கும் போதாவது, நான் என்ற அகந்தையின்றி, உணர்ச்சி வசப்படுவதை தவிர்த்து, வெறும் பார்வையாளராக இருந்தபடி அந்த சம்பவங்களை அணுக நம்மால் முடிந்தால், கர்ம வினைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தீரும் (மனப் பதிவுகள் அழியும்). அவ்வாறின்றி, கர்ம வினைகளால் ஏற்படும் சம்பவங்களையும் நான் என்ற அகந்தையுடனேயே அணுகினால், அல்லது உணர்ச்சி வசப்பட்டால், அந்த சம்பவங்களே மேற்கொண்டு மனப் பதிவுகளாக மாறி, கர்ம வினையை அதிகரித்து விடும். இதுதான் பலருடைய வாழ்க்கையிலும் சாதாரணமாக நிகழ்கிறது. நான்

என்ற அகந்தையுடன் பற்பல காரியங்களில் ஈடுபடுதல், இதனால் கர்ம வினை ஏற்படுதல், கர்ம வினைகள் விதியாக வெளிப்படும் போது அதையும் நான் என்ற அகந்தையுடனேயே அணுகுதல், இதனால் கர்ம வினைகள் இன்னும் அதிகரித்தல்-இத்தகைய மாயச்சூழலில்தான், நாம் எப்போதும் சிக்கியிருக்கிறோம்.

ஆனால், கடவுளின் கருணையுடன், குருவின் மூலம் குண்டலினி சக்தியைத் தூண்டியவுடன் கிரியை வெளிப்படும்போது, சாதகரின் வாழ்வில் நிகழக்கூடிய சம்பவங்கள், கர்ம வினைகளை (மனப் பதிவுகளை) அழிப்பதற்காகவே நிகழ்வதால், இவை சாதாரண சம்பவங்கள் அல்ல, கிரியை என்பதைப் புரிந்து கொள்ளும் சக்தியையும், கடவுளே நமக்கு வழங்கி விடுகிறார். இந்தப் புரிதல் இருந்தால்தான், நான் என்ற அகந்தையின்றி, உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் சம்பவங்களை அணுக முடியும் என்பதே, இதற்குக் காரணம். யோக சாதனையில் தொடர்ச்சியாக ஈடுபடும் சாதகருக்கு கடவுள் தரும் வரங்களில் இதுவும் ஒன்று. எனவே, அன்றாட வாழ்வின் ஒரு சம்பவம் கிரியையா அல்லது இயல்பான சம்பவமா என்பதை சாதகர் மிக எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும்.

ஒருவேளை ஏதோ காரணத்தால் சில கிரியைகளைப் புரிந்து கொள்ள சாதகர் தவறிவிட்டாலும், சாதாரண சம்பவங்களாக அதை எடுத்துக் கொண்டதால் புதிய மனப் பதிவுகள் ஏற்பட்டாலும்கூட, இப்புதிய மனப் பதிவுகளைப் பிற்பாடு அகற்றுவது, மற்ற மனப் பதிவுகளை அகற்றுவதைக் காட்டிலும் மிகவும் சுலபமாகவே இருக்கும். இதுவும் கடவுளின் கருணையே.

சரி, மனப் பதிவு அழிந்துவிட்டது என்பதற்கு என்ன அத்தாட்சி? இது முக்கியமான கேள்விதான். ஆனால், சாதகர், தமக்குள் தாமாக மட்டுமே இதை உணர முடியும் என்பதே பதில்.

கிரியை நிகழும் போது சாதகர் எப்படி உணர்கிறார் என்பதே, ஒரு

விதத்தில் விநோதமானது. உணர்ச்சிகளால் (புலன் நுகர்வால்) ஏற்படும் மனப் பதிவுகளை, அதே உணர்ச்சிகளை அனுபவிப்பதன் மூலமாகவே அழிக்க முடியும். அதே சமயம், கிரியையின் போது நிகழும் சம்பவங்களால் ஏற்படும் உணர்ச்சிகளை சாதகர் மிக லேசாகவே உணர்வார். அதாவது, மிகவும் துயரமான ஒரு விபத்து நிகழ்ந்தால் மட்டுமே குறிப்பிட்ட ஒரு மனப் பதிவை அழிக்க முடியும் என்ற நிலையிருந்தாலும், கிரியையின் மூலம் அதே மனப் பதிவை அழிப்பதாக இருந்தால், பெரிய விபத்துக்கு பதிலாக, மிகச் சிறிய விபத்துடன் வேலை முடிந்து விடும். இதனால், மிகப் பெரிய துயரத்தை உணர வேண்டிய இடத்தில், சாதகர் லேசான கஷ்டத்தை மட்டுமே உணர்வார். மிகப் பெரிய கண்டத்திலிருந்து தப்பியிருக்கிறோம். கிரியைதான் இதற்குக் காரணம் என்பதையும், சாதகர் புரிந்து கொள்வார். இந்தப் புரிதலை கடவுளே அவருக்கு கொடுத்து விடுவார். இதற்கெனத் தனியான முயற்சி எதையும் சாதகர் மேற்கொள்ளத் தேவையில்லை. எனவே, கிரியையின் போது மனப் பதிவுகள் அழிவதை, சாதகர் தானாகவே அறிந்து கொள்ள முடியும். ஆனால் இது சாதகருக்குத் தான் தெரியுமே தவிர, வெளியிலிருந்து பார்க்கும் மற்றவர்களுக்குப் புரியாது. கிட்டதட்ட சாதகரைப் போன்ற அல்லது அதற்கு மேற்பட்ட ஆன்மீக நிலையில் உள்ளவர்களுக்கு வேண்டுமானால், சாதகரின் மனப் பதிவுகள் அழிவது புரியலாம். மற்றவர்களுக்குப் புரிவது கடினம்.

அது மட்டுமின்றி, கிரியை வெளிப்பட ஆரம்பித்து விட்டால், சாதகரின் வாழ்வில் நிகழக்கூடிய எல்லா சம்பவங்களுமே கிரியைகளாகத்தான் அமைகின்றன. இதற்கு ஏற்ற எல்லா சூழ்நிலைகளும் தானாகவே ஏற்பட்டு விடுவதை, கடவுளே உறுதிப்படுத்தி விடுகிறார். எனவே, இது கிரியை-இது சாதாரண சம்பவம் என்றெல்லாம் தனித்தனியே பிரித்தறியத் தேவையேயிராது. இன்னும் சொல்லப் போனால், கிரியை தொடங்கி விட்டால், சாதகர் நினைத்தாலும் அதை நிறுத்த

முடியாது. கிரியை தொடங்கிய பின்னர் சிருஷ்டிக்குக் காரணமான ஆதிசக்தியை நோக்கி சாதகர் மேற்கொள்ளும் உள்நோக்கிய பயணம். ரிட்டர்ன் டிக்கெட்டே இல்லாத, முடிவற்ற ரயில் பயணம் என்று என் குரு சொல்வார்.

பிறப்பு-இறப்பு என்னும் சுழலுக்கு அப்பாற்பட்டு, வீடுபேறு என்னும் இலக்கை நோக்கிய சாதகரின் இப்பயணத்தில், சாதகருக்குத் தேவையான அனைத்தையும் கடவுள் பார்த்துக் கொள்வார். இதில் சாதகர் செய்வதற்கு எதுவுமே இல்லை.

அப்படியானால், கிரியை தொடங்கிவிட்டால் சாதகர் தன்னிஷ்டப்படி எதுவுமே செய்ய முடியாதா, இயல்பான வாழ்க்கைக்குத் திரும்ப அவர் விரும்பினால், அது சாத்தியமில்லயா என்ற சந்தேகம் வாசகர்களுக்கு ஏற்படலாம். இதே சந்தேகத்தை நான் என் குருவிடம் கேட்டேன்.

கிரியையின் போது என்ன நடக்கிறது என்பதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளனாக இல்லாமல், எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்புக் கொடுத்துவிட்டு, முழு சரணாகதியடைந்த சாதகராக ஒருவர் இருந்தால், கிரியை தொடங்கிய பின்னர் தன்னிஷ்டப்படி எதையும் செய்ய முடியாதுதான் என்று என் குரு பதிலளித்தார். ஆனால் அத்தகைய ஒரு நிலையில், சாதகர் தன் இஷ்டப்படி செய்ய வேண்டிய காரியம் என்று எதுவுமே இராது என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே சமயம், கிரியை தொடங்கிய பின்னரும், என்ன நடக்கிறது என்பதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளனாகவும் சாதகர் இருக்க முடியும். இந்த நிலையில், முழு சரணாகதி இன்னும் நிகழவில்லை என்பதால், அதிகபட்சமாக என்ன பாதிப்பு ஏற்படக்கூடும் என்றால், கிரியையின் வேகம் சற்று குறையக்கூடும். இந்த நிலையில்,

சாதகர் தன் விருப்பப்படி செயல்பட கொஞ்சம் இடமிருக்கலாம். ஆனால் இதுவும்கூட, ரிட்டர்ன் டிக்கட் இல்லாத, முடிவற்ற ரயில் பயணத்தின் போது, ஓடும் ரயிலுக்குள் பயணி தன் இருக்கையை மாற்றிக் கொள்ளும் சுதந்திரம் போன்றதே தவிர, பயணத்தை நிறுத்தவோ அல்லது பயணத்திலிருந்து திரும்பவோ அவருக்கு சுதந்திரமில்லை.

ஆனால் இப்படிச் சொல்கிறேனே என்பதற்காக வாசகர்கள் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், மெய்யறிவை நோக்கிய இந்தப் பயணம் மிகவும் சுமுகமாக, பாதுகாப்பாகவே நிகழ்கிறது.

குறிப்பிட்ட ஓர் மனப் பதிவை அழிக்க, அதாவது குறிப்பிட்ட ஓர் உணர்ச்சியின்பாற்பட்ட சாதகரின் மனப் பற்றை அகற்ற, அவரைப் பலகோடி ரூபாய் கடனாளியாகக் கடவுள் மாற்றிவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். வாஸ்தவத்தில் அவர் பரம ஏழையாக இருந்தால், இந்தப் பெருங்கடனை தீர்ப்பதற்கான வழிகளையும் கடவுளே ஏற்படுத்திக் கொடுத்து விடுவார்.

அதுபோல, சாதகரின் மற்றொரு மனப் பதிவை அழிப்பதற்காக, பலர் சேர்ந்து அவரைக் கொல்ல முயல்வது போன்ற ஒரு சூழ்நிலையைக் கடவுள் உருவாக்குகிறார் என்றால், வாஸ்தவத்தில் அவர் மிகச் சாதாரண ஆளாகவே இருந்தாலும், ஆபத்தை சமாளிக்கத் தேவையான ஆள்பலம் மற்றும் பண பலத்தை கடவுள் தந்துவிடுவார்.

அதுமட்டுமின்றி, கிரியை தொடங்கிவிட்டாலும்கூட, காலம் காலமாக சாதகரின் மனதில் உருவாகியுள்ள எல்லாப் பதிவுகளும் ஒரே நாளில் அழிந்து, ஒரே நாளில் மெய்யறிவு கிடைத்து விடப் போவதில்லை. எல்லா மனப் பதிவுகளும் முற்றிலுமாக அழிந்து, மெய்யறிவு கிடைக்கப் பல ஆண்டுகள் ஆகலாம். இந்தக் கால கட்டத்தில், கொஞ்ச நஞ்ச மனப் பதிவு மிச்சமிருக்கும் வரை, சாதாரண மனிதராகவும் சாதகர் நீடிப்பார். இதனால் எப்படிப்

பார்த்தாலும், கிரியையின் போது ஏற்படக் கூடிய அனுபவங்கள் பற்றி பயப்படத் தேவையில்லை. எந்த விதமான அனுபவங்கள் ஏற்பட்டாலும் அதை எதிர்கொள்ளத் தேவையான மன பலமும் தானாகவே கிடைத்துவிடும். இந்த அனுபவங்களில் இருந்து சாதகர் பத்திரமாக மீண்டு வரத் தேவையான எல்லாப் பாதுகாப்பையும், எல்லாமறிந்த ஆதிபராசக்தியே உறுதிப்படுத்திவிடும். எளிதான வார்த்தைகளில் சொல்வதானால், எல்லாவற்றையும் சரிக்கட்டுவது எப்படி என்பது, கடவுளுக்கு நன்றாகவே தெரியும்.

கிரியை என்பது அக்னிப் பரிட்சைதான். அதுவும் குறிப்பாக, நான் என்ற அகந்தையை அகற்றுவதற்கான கிரியை, ஞான மய கோசத்தில் நிகழும் போது, மிகவும் கடினமான அனுபவங்கள் ஏற்படவே செய்யும். இத்தகைய அனுபவங்கள், அன்றாட வாடிக்கையாக மாறிப்போகவும் வாய்ப்புண்டு. ஆனால் இந்தக் கஷ்டங்களால் துவண்டு போகாமல், மன உறுதியில் நீடிக்க வேண்டும் என்பதே என் அறிவுரை. இன்னும் சில மணி, சில நாள், சில மாதங்கள்தான், அதற்குள் கஷ்டங்கள் தீர்ந்து விடும். தசைக்குள் தைத்த முள் நிரந்தரமாக நீங்கிவிடும். அதற்கு மேல் எப்போதும் ஆனந்தமே தவிர, எந்தக் கஷ்டமுமில்லை. எந்தத் துயரமுமில்லை !

# கிரியையினால் ஏற்படும் மனமாற்றம்

குருவினால் குண்டலினி சக்தியைத் தூண்டிய பின்னர் சாதகரின் உடல் மனம் மற்றும் அன்றாட வாழ்வில் நிகழக்கூடிய பல விதமான கிரியைகள் பற்றி இதுவரை பேசினோம்.

ஆனால் விதவிதமான கிரியைகளை விட, இந்தக் கிரியைகளால் சாதகரின் மனதில் எத்தகைய மாற்றம் ஏற்படுகிறது என்பதே முக்கியம். கிரியையின் போது, எல்லாமறிந்த ஆதிபராசக்தி மனித உடலுக்குள் வெளிப்படுகையில், காலம் காலமாக ஏற்பட்ட மனப் பதிவுகள் நீங்கத் தொடங்குகின்றன. இதன் காரணமாக மனம் மேலும் மேலும் முன்னேறிய ஆன்மீக நிலைக்கு உயர்வதால், புத்தியின் எல்லையும் இன்னும் இன்னும் விரிவடைகிறது.

கிரியையின் போது, எனக்குள் எத்தகைய மனமாற்றம் ஏற்பட்டது என்பது பற்றிய என் சொந்த அனுபவங்களை இப்போது சொல்லப் போகிறேன். அல்லது, மனம் மாற மாற, என் சொந்த வாழ்க்கையில் என்னென்ன தாக்கங்கள் ஏற்பட்டன என்பதற்கான விளக்கமாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம்.

கிரியையின் விளைவான மனமாற்றம் காரணமாக முதல் அடி, மதம், தத்துவங்கள் மற்றும் நன்னெறிகள் பற்றிய என் நம்பிக்கைகள் மீது விழுந்தது. இதை அடி என்று சொல்லி விட்டேனே தவிர, அது நியாயமான அடிதான்.

குழந்தைகள் நடை பழகப் பயன்படும் நடைவண்டி பற்றிய முந்தைய அத்தியாயம் ஒன்றில் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதை இந்த இடத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். மதங்கள், தத்துவங்கள் மீதான நமது நம்பிக்கையின் முக்கியமான ஒரு அம்சத்தை வாசகர்கள் நினைவு கூர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது, மதங்கள், தத்துவங்கள் மற்றும் நன்னெறிகள் மீதான நமது நம்பிக்கை அல்லது விசுவாசமெல்லாம், குழந்தைகள் நடை பழகப் பயன்படும் நடைவண்டி போல, ஆன்மீகத்தில் முன்னேற நமக்கு உதவக் கூடிய கருவிகள் மட்டுமே.

குழந்தை நடக்கப் பழகிவிட்டால் அதன் பிறகு நடைவண்டி எப்படித் தேவையில்லையோ, அது போல, குறிப்பிட்ட ஆன்மீக நிலைக்கு நாம் வளர்ந்து விட்டால். அதன் பிறகு இந்த நம்பிக்கைகளுக்குத் தேவையில்லை. குழந்தை நடக்கப் பழகிய பின்னரும் நடைவண்டியை விடாவிட்டால், ஓடுவதற்கு பழக முடியாது அல்லவா? அதுபோல, ஆன்மீக ரீதியில் குறிப்பிட்ட அளவில் வளர்ந்த பின்னரும், இந்த நம்பிக்கைகளை நாம் உதறாவிட்டால், அது மேற்கொண்டு வளரத் தடையாகவே அமையும்.

இப்படிச் சொல்கிறேன் என்பதால், மத நம்பிக்கைகளை நான் அவமதிப்பதாகப் பொருளல்ல. எந்த ஒரு துறையிலும் நாம் என்னதான் படித்துப் பண்டிதரானாலும், ஆரம்பத்தில் அரிச்சுவடி படித்த பள்ளியை மறந்துவிட முடியாது. இன்றைய நமது பாண்டித்யம், இதுவரை நாம் பயின்ற எல்லாவற்றின் தொகுப்பே என்பதால், அரிச்சுவடியையும் மறக்க முடியாது. லோகாயத ரீதியிலான எல்லாக் கல்விக்கும் இது பொருந்தும்.

ஆனால் ஆன்மீகத் துறையை பொருத்தவரை, இதில் கொஞ்சம் வித்தியாசமிருக்கிறது. ஆன்மீகத் துறையில் ஒரு குறிப்பிட்ட

அளவிற்கு வளர்ந்துவிட்டால், அதற்கு மேல் வளர, இதுவரை நாம் கொண்டிருந்த நம்பிக்கைகளை கைவிடுதல் அவசியம். ஆனாலும் அப்படி மறந்துவிட்டதால், இதுவரை நாம் வைத்திருந்த நம்பிக்கைகளை அவமதிப்பதாக அர்த்தமல்ல. நமக்கு வளர்ச்சி முக்கியம். அதற்காக பழைய நம்பிக்கைகளைக் கைவிடுகிறோம். அவ்வளவே.

இதை விளக்க இன்னொரு உதாரணம் சொல்கிறேன். ஒருவர் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் கடவுளை வழிபட்டு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். தொடர்ச்சியான இத்தகைய வழிபாட்டினால், ஒரு கட்டத்தில் குறிப்பிட்ட ஒரு ஆன்மீக நிலைக்கு அவர் உயர்வார். இவ்வாறு ஆன்மீக நிலையில் உயர்ந்தவுடன், கடவுளுக்கு உருவமில்லையென்பது அவருக்குத் தெளிவாகப் புரியும். அதனால் உருவ வழிபாட்டை அவர் விட்டு விடுவார். உண்மையில் கடவுளுக்கு உருவமில்லை என்பது புரிந்த பிறகும் உருவ வழிபாட்டை தொடர்வது சாத்தியமல்ல என்பதால், இது சாதகரின் தவறோ அல்லது உருவ வழிபாட்டிற்கு எதிரான அவமதிப்போ அல்ல என்பதை, நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சரி, பழைய நம்பிக்கைகளை சாதகர் கைவிட்டு, ஆன்மீக நிலையில் மேலும் உயர ஆரம்பிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இறுதியாக என்ன நடக்கும்?

இந்தக் கேள்விக்கு பதில் சொல்லும் தகுதி எனக்கில்லை. ஆன்மீக நிலையில் மேலும் மேலும் உயர்ந்தால், இறுதிக் கட்டத்தில் என்ன நடக்கும்? மெய்யறிவு என்றால் என்ன ? கடவுளை நேருக்கு நேர் காணும் போது நமக்கு எப்படி இருக்கும் என்பதை யெல்லாம் ஒவ்வொரு சாதகரும் தாமாகவே தனக்குள்தான் உணர முடியும்.

குண்டலினி சக்தியைத் தூண்டிய பிறகு, இடைப்பட்ட காலத்தில்

என்ன நடக்கும் என்பதை மட்டும்தான் நான் சொல்ல முயல்கிறேனே தவிர, இறுதிக் கட்டத்தைப் பற்றி பேச என்னால் இயலாது. ஆன்மீக நிலையில் மேலும் மேலும் உயர்ந்தால், இறுதிக் கட்டத்தில் என்ன நடக்கும் ? மெய்யறிவு என்றால் என்ன? கடவுளை நேருக்கு நேர் காணும்போது நமக்கு எப்படி இருக்கும் என்பதையெல்லாம், ஒவ்வொரு சாதகரும், யாருடைய உதவியுமின்றி, தமக்குள் தாமாகவே உணர முடியும். குருவானவர் கூட இந்த இறுதிக் கட்டத்தை சாதகர் எட்டுவதற்கான ஓர் ஊடகமாகவே செயல்படுகிறார். அதற்கும் கூட கடவுளின் அருள்தான் காரணமே தவிர, குருவானவர் தாமாகப் பார்த்து எந்த உதவியும் செய்துவிட முடியாது.

குண்டலினி சக்தியை தூண்டிய பிறகு, மத நம்பிக்கைகள் அற்றுப் போனதை இதுவரை விளக்கினேன். இரண்டாவது, சமுதாய வாழ்க்கையை கைவிட்டு நான் வனவாசம் போய்விடவில்லை. என் கர்ம வினைகள் முற்றிலுமாகத் தீரும் வரை அப்படிச் செய்யவும் முடியாது. ஆனால், மற்றவர்களோடு கலந்து உறவாடுவதில் எனக்கிருந்த ஆர்வம் குறைந்து போயிற்று. நானே வலியச் சென்று மற்றவர்களுடன் உறவாடுவதைக் குறைத்துக் கொண்டேன். அவசியமாகத் தேவைப்பட்டாலன்றி மற்றவர்களுடன் உறவாடுவதைக் குறைத்துக் கொண்டேன்.

மனப் பதிவுகளின் பெரும் பகுதி அழிக்கப்படும் போது, இத்தகைய மாற்றம் நிகழ்வது இயல்பானதே. ஆனால் மனப் பதிவுகளின் பெரும்பகுதியை அழித்தல் என்று நான் சொல்லும் போது, மனப் பதிவுகள் ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டு வந்திருப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கிரியையின் போது மனப் பதிவுகள் வரிசைக் கிரமத்தில் அழிவதில்லை என்பதையும், ஒரு பதிவு முழுமையாக அழிந்த பிறகுதான் அடுத்த பதிவு அழிய வேண்டுமெனக் கட்டாயமில்லை என்பதையும், நான் ஏற்கனவே முந்தைய அத்தியாயம் ஒன்றில் விளக்கியிருப்பதை வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும். எனக்குள்ளும், இன்னும் பல மனப் பதிவுகள்

அரைகுறையாக அழிந்த நிலையிலும் - அழியாத நிலையிலும் இருக்கலாம் என்பதால்தான், எல்லாப் பதிவுகளும் முழுமையாக அழிந்த இறுதி நிலை பற்றித் தோராயமாகப் பேசவும் என்னால் இயலவில்லை.

மூன்றாவதாக, இசை, கலை-இலக்கியம், திரைப்படம், தொலைக்காட்சி, புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் செய்தித்தாள்களில் எனக்கிருந்த ஈடுபாடு இப்போது குறைந்துவிட்டது. இதையெல்லாம் எப்போதோ ஒரு முறை சற்றுப் பார்க்கிறேனே தவிர, லயித்துப் போய்ப் பார்ப்பதில்லை.

முன்பெல்லாம் என்னுடைய காரை நானே ஓட்டிக் கொண்டு நீண்ட தூரம் பயணித்து, மற்றவர்கள் அதிகம் செல்லாத இடங்களுக்கு சென்று பார்ப்பதில் எனக்கு அளப்பரிய ஆர்வ மிருந்தது. இப்போது அந்த ஆர்வம் சுத்தமாக மறைந்துவிட்டது. இப்போதும்கூட, தேவையான இடங்களுக்குக் காரில்தான் செல்கிறேனே தவிர, இதில் முன்பிருந்த கிளர்ச்சி இப்போது இல்லை.

இதுபோல் இன்னும் பல மனப் பற்றுகளை மனிதனின் மனதிலிருந்து ஆதிபராசக்தியே நீக்கியதற்கு, வேறு சில உதாரணங்களைத் தருகிறேன்.

பஞ்சாப் மாநிலம் ஜலந்தலரில் நான் வசித்த போது, திடீரென ஒரு நாள், சமைக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. அதுவரை என் வாழ்நாளில் நான் ஒரு போதும் சமைத்தவனல்ல. ஆனால் அன்று ஏனோ சமையல் ஆசை திடீரெனப் பீறிட்டுக் கிளம்பி, மேலும் மேலும் தீவிரமாயிற்று. நான் பஜாருக்குப் போய் சமையலுக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்கி வந்தேன். இதுவரை சமையல் என்றால் என்னவென்றே தெரியாதவன் சமைப்பதென்றால் சும்மாவா? எல்லாப் பொருட்களையும் வாங்க பெருந்தொகை செலவாயிற்று. ஆனால்

அதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. பாத்திர பண்டங்கள், கேஸ் அடுப்பு உட்பட எல்லாப் பொருட்களையும் வாங்கி வந்து, காய்கறிகளை கடகடவென வெட்டி, சமைக்க ஆரம்பித்தேன். சமைக்க சமைக்க, சமையல் ஆர்வம் இன்னும் கூடியது. அன்றும், அப்புறம் ஒவ்வொரு நாளும் கிடைக்கிற நேரத்திலெல்லாம் பல பதார்த்தங்களை சமைக்க ஆரம்பித்தேன். இந்த நேரம், அந்த நேரம் என்றெல்லாம் பாராமல், எந்த நேரத்திலும் சமைப்பேன். பாதி ராத்திரியில் திடீரென எழுந்து சமைக்கத் தொடங்கிய நாட்களுமுண்டு. இப்படி பைத்தியக்காரனைப் போல் நான் சமைப்பதைப் பார்த்து, தெரிந்தவர்கள் சிரிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் சமையல் ஆசையை நான் கட்டுப்படுத்தவில்லை. இதே நிலை சில வாரங்களுக்கு நீடித்தது. அப்புறம் என்னவாயிற்று என்றால், திடீரென ஒரு நாள் சமைக்க வேண்டுமென்ற ஆசை காணாமல் போய்விட்டது. பாத்திரங்கள், சமையல் பொருட்கள் எல்லாவற்றையும் மூட்டை கட்டிப் பரணில் போட்டுவிட்டேன். அதன் பிறகு என்றைக்காவது ஒரு நாள் சமைக்கலாமா என்ற எண்ணம் வரும். கடைக்குப் போய் காய்கறியெல்லாம் வாங்கிவந்து ஃபிரிட்ஜில் அடுக்குவேன். ஆனாலும் அதோடு சரி, சமைக்க மாட்டேன். கொஞ்ச நாள் கழித்து காய்கறிகளைத் தூக்கி எறிந்து விடுவேன். இதுபோலப் பலமுறை நடந்துவிட்டது.

இப்படி நடப்பதன் பொருள் என்னவென்றால், நான் முந்தைய பிறவியில் பலருக்கு சமைத்து சாப்பாடு போட்டவனாக (அல்லது போட்டவளாக) இருந்திருக்கலாம். அல்லது, சமைக்க வேண்டுமென்கிற ஆசையிருந்தும், அதற்கான வாய்ப்புக் கிடைக்காமல் போயிருக்கலாம். இதனால் சமையல் பற்றிய ஆர்வம் என் அடி மனதின் ஆழத்தில் எங்கேயோ நன்றாகப் பதிவாகியிருந்திருக்கிறது. அதுதான் இந்தப் பிறவியில் சமைத்து, இந்த மனப்பதிவு தீர்வதாக இருந்தால் பலகாலம் ஆகும். ஆனால் கிரியையாக இந்த ஆசை வெளிப்படும் போது, சம்பவங்கள் படு

வேகமாக நடந்தேறிவிடுகின்றன. சமையல் பற்றிய ஆர்வம் மட்டுமல்ல. இது போன்ற வேறு பல ஆர்வங்கள், ஈடுபாடுகள் தொடர்பாகவும் பல சம்பவங்கள் என் வாழ்வில் நடந்துள்ளன. ஏனென்றால், ஒவ்வொரு மனிதனின் மனதிலும் பல விதமான ஆர்வங்கள், ஈடுபாடுகள், பற்றுக்கள் இருப்பதுண்டு. இதெல்லாம் தீர்ந்தால் தான் மனம் சுத்தமாகும். கிரியையின் போது மனம் இப்படி சுத்தமாவதை கடவுளே உறுதிப்படுத்துகிறார். அதற்கேற்ற சம்பவங்கள் அந்தந்த நேரத்தில் சரியாக நடப்பதையும், அவரே பார்த்துக் கொள்கிறார். கடினமான சில மனப் பதிவுகளை தீர்க்க வேண்டிய தருணத்தில், சாதகர் அனுபவிக்கும் உணர்வுகள் அவ்வளவு கடினமாக இன்றி, லேசாக இருப்பதையும் கடவுள் உறுதிப்படுத்தி, உலக வாழ்க்கையில் பற்றில்லாத நிலையை உருவாக்குகிறார். பயம், கவலை இப்படி எல்லா விதமான உணர்வுகள் பற்றிய மனப் பதிவுகள் இவ்வாறே முற்றிலுமாக நீக்கப்படுவதால், அதன் பிறகு சாதகரின் வாழ்வில் பயமோ கவலையோ இல்லை.

மனித மனத்தை சுத்தப்படுத்துவது பற்றிய இந்தக் கிரியை நீண்ட காலம் நீடிக்கையில், மனம் தனக்குள் தானாகவே இடிந்து உள்வாங்குவது போன்ற உணர்வு சாதகருக்கு ஏற்படும். என்னைப் பொருத்தவரை, என் மூளைப் பகுதியில், அல்லது பகலும் இதை நான் உணர்கிறேன். ஆழ்ந்த உறக்கம், இந்த மாற்றத்தின் மற்றொரு நேரடி விளைவாகும்.

ஆயினும், மனம் சுத்தமாகத் தொடங்கும் போது, ஆரம்ப கட்டங்களில் ஏற்படக் கூடிய விசித்திரமான ஒரு பக்க விளைவு குறித்து சக சாதகர்களுக்கு எச்சரிக்க விரும்புகிறேன்.

ஆதி பராசக்தியின் இயக்கத்தால், பெரும்பாலான மனப் பதிவுகள் நீங்க ஆரம்பிக்கையில், மனம் புத்தம் புதிதாய்த் துலங்குவதால்,

எந்த உணர்ச்சியும் எளிதில் பற்றிக் கொண்டுவிடுகிறது. இதனால் சாதகர் சற்று உணர்ச்சி வசப்பட்டவராக மாறிவிடுகிறார்.

உணர்ச்சிகளால் ஏற்பட்ட மனப் பதிவுகளை நீக்கவே கிரியை என்கையில், கிரியையால் சுத்தமான மனம், எளிதில் உணர்ச்சிகளை பற்றிக் கொள்வதால் மாறி விடுகிறதே, இதென்ன முரண்பாடு என்று, நான் என் குருவிடம் கேட்டிருக்கிறேன். இல்லை, ஒரு முறை ஏதோ பேசிக் கொண்டிருந்த போது என் குருதான் இது பற்றிக் குறிப்பிட்டு விளக்க மளித்தார். மனப் பதிவுகள் நீங்கும்போது, ஆரம்பத்தில் மனம் உணர்ச்சிகரமாக மாறுவது இயல்பே என்றும், மனப் பதிவுகள் முற்றிலுமாக நீங்கிய பிறகு இறுதிக் கட்டத்தில்தான், எதற்கும் அசையாத உறுதி மனதிற்கு ஏற்படுவதாகவும் சுவாமிஜி சொன்னார்.

சாதகர் ஒவ்வொருவரும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். கிரியையின் போது ஆரம்பத்தில் எதற்கெடுத்தாலும் உணர்ச்சி வசப்படுபவராகவே நீங்கள் இருப்பீர்கள். நாம் ஏன் இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறோம் என்று உங்களுக்கே புரியாது. ஆனால் இது தற்காலிகமானதே என்பதால், இது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. உண்மையில், யோக சாதனையில் நீங்கள் முன்னேறி வருகிறீர்கள் என்பதற்கான அடையாளமே இந்த நிலை என்று என் குரு சொல்லியிருக்கிறார். யோக சாதனையின் பாதையில் இதை ஒரு தடையாகவே எடுத்துக் கொண்டாலும், யோக சாதனையில் இதுபோலப் பல தடைகள் ஏற்படுவது இயல்புதான் என்பதையும், அதைப் பற்றிக் கவலைப்படாமல் பயணித்தால், தடைகள் விரைவிலேயே நீங்கிவிடும் என்பதையும், நான் ஏற்கனவே முந்தைய அத்தியாயம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளேன்.

யோக சாதனையின் பாதையில் வரக்கூடிய தடைகள் பற்றிப் பேசுகையில், எனக்கு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது.

அதாவது, நான் தியானத்தில் அமரும் போதெல்லாம், தியானத்தைக் கலைத்துவிடக் கூடிய காரணங்கள் எதுவெல்லாம் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, அதையெல்லாம் சரிப்படுத்திய பின்னரே, தியானத்தை தொடங்குவேன். இதில் நான் எப்போதும் மிகவும் முன் ஜாக்கிரதையாக இருப்பதுண்டு. அதாவது டெலிபோன் மணி அடிக்காமல் சுவிட்ச் ஆஃப் செய்தல், கதவுகளை யாரும் திறந்து விடாமல் தாழ்ப்பாள் போடுதல், வெளிச்சத்தினால் தடை ஏற்படாமல் விளக்குகளை அணைத்து வைத்தல் - இப்படி எல்லா முன்னெச்சரிக்கையுடன் நான் தியானத்தில் அமர்ந்தாலும், தியானத்திற்கு தடை வரவேண்டுமென்றிருந்தால், எப்படியாவது தடை வந்து விடும்.

இங்கே நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், தியானத்திற்கு தடை வரவேண்டுமென்பது, நம்முடைய கர்ம வினை. இத்தகைய தடைகளையும் அனுபவித்துத் தீர்த்த பிறகுதான், தடையற்ற நிலை உருவாகும். அதுவரை அவ்வப்போது தடைகள் தோன்றி பிரச்சனை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கும். அதற்காக நாம் முயற்சியை விட்டுவிடக் கூடாது.

அதே போல இன்னொரு விஷயத்தையும் சக சாதகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். அதாவது, நான் என்ற அகந்தை முழுமையாக அகன்ற பின்னரே பூரண சரணாகதி சாத்தியமாகும். நான் என்ற எண்ணம் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்தாலும் பூரண சரணாகதி சாத்தியமில்லை. அகந்தை அகலாத நிலையிலேயே, நான் கடவுளிடம் பூரண சரணாகதி அடைந்து விட்டேன் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். இதை நீங்கள் தெரிந்து செய்தாலும் தெரியாமல் செய்தாலும், உண்மையில் அகந்தை அகன்றுவிட்டதா, இல்லையா என்பது எல்லாமறிந்த கடவுளுக்குத் தெரியும். சர்வக்ஞான கடவுளை

ஒருபோதும் ஏமாற்ற முடியாது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

பூரண சரணாகதி என்பது, நான் என்ற அகந்தை முழுமையாக நீங்கிய பின்னர், இயல்பாக தானாகவே வர வேண்டிய ஒரு நிலையாகும். எனவே நான் என்ற அகந்தை நீங்கட்டும் என்றுதான் குருவிடம் வேண்ட வேண்டுமே தவிர, பூரண சரணாகதி அடைந்துவிட்டது போல் நடிப்பதால் எந்தப் பலனும் இல்லை.

சரணாகதி உட்பட ஆன்மீகப் பயணத்தில் ஒவ்வொரு நிலையிலும், எத்தனையோ தடைகள் எல்லாருக்கும் வருவது இயற்கையென்பதே, இங்கே நான் வலியுறுத்த விரும்புகின்ற அம்சமாகும். ஆனால் தடைகளை எதிர்க்கத் தேவையில்லை. அப்படி எதிர்ப்பது யோக சாதனையின் விதிகளுக்குப் புறம்பானது.

அடுத்தபடியாக நான் வலியுறுத்த விரும்பும் இன்னொரு விஷயம் : மனதில் படிந்துள்ள அழுக்குகள் நீங்கும் போது, மனதின் நிலை அவ்வப்போது சற்று வழுக்கக்கூடும். ஆனால் இதுவும் எல்லோருக்கும் இயற்கையாக ஏற்படக் கூடியதே, இதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. இது முற்றிலும் தற்காலிகமானதே. யோக சாதனையின் போது, முழம் ஏறினால் சாண் சறுக்குவது, ஒவ்வொரு சாதகரும் சந்திக்கக்கூடிய பிரச்னைதான் என்பதை எல்லா யோக நூல்களுமே ஒப்புக் கொள்கின்றன. இந்த சறுக்குதலில் இருந்து யாரும் தப்ப முடியாது என்பதை, என் குரு எனக்குத் தெளிவாக விளக்கியிருக்கிறார். என்னுடைய ஆன்மீகப் பயணத்தில் நான் இப்படி பல முறை சற்று சறுக்கியிருக்கிறேன். குறைந்தது ஒருமுறை பெரிய அளவிலும் சருக்குதல் ஏற்பட்டுள்ளது.

குண்டலினி சக்தியை தட்டியெழுப்பும் போது, சாதகர் ஆரம்பத்தில் கிடுகிடுவென ஆன்மீக நிலையில் உயர்கின்ற போதிலும் போதிய மனப் பக்குவம் இல்லாததால், அதே உயர் நிலையை தக்கவைத்துக் கொள்ள முடியாமல் சறுக்கிவிடுகிறார். ஆனால் இப்படி கீழே விழுவதால், எந்த பாதகமும் இல்லை. மேலிருந்து கீழே விழுந்தவுடன் எந்த இடத்தில் விழுந்திருக்கிறோம் என்பதை ஆராய்ந்தால், முந்தைய பிறவியில் எந்த இடத்தை அடைந்திருந்தோமோ, அந்த இடம் தான் இது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எல்லோருக்கும், முந்தைய பிறவியில் விட்டிருந்த இடத்தில் இருந்துதான், இந்தப் பிறவியின் ஆன்மீகப் பயணம் தொடங்குகிறது. இந்தப் பிறவியிலும் மெய்யறிவை எட்ட முடியவில்லை என்றால், இந்தப் பிறவியில் எந்த இடம் வரை எட்டுகிறோமோ, அந்த இடத்திலிருந்தே, அடுத்த பிறவியில் பயணம் ஆரம்பிக்கிறது. இது தொடர்ச்சியான ஒரு பயணம். ஒவ்வொரு பிறவியிலும் ஆரம்பத்திலிருந்து பயணத்தை தொடக்கத் தேவையில்லை. இது, கடவுள் மனிதனுக்கு வழங்கியுள்ள பரிசாகும். உண்மையில் பரிசு என்று சொல்லத் தகுந்த நிஜமான பரிசு இதுவே.

மனதில் படிந்துள்ள அழுக்குகள் நீங்குகையில், இன்னும் பல விசித்திரங்களும் நிகழக்கூடும். உதாரணமாக, கிரியையின் போது சில விபத்துகள் அடிக்கடி நிகழ்வதை நாம் உணரலாம்!

யோக சாதகர் ஒருவருக்கு இதுபோல சிறு விபத்து நிகழ்வதை நீங்கள் பார்த்தால், அவருக்கு வாழ்த்துக் கூறுங்கள் ! கடினமான ஏதோ ஒரு மனப் பதிவை நீக்க, பெரிய அளவிலான ஓர் விபத்து தேவையென்ற நிலையிலும், கடவுள் அந்த சாதகர் மேல் கருணை வைத்து, சிறு விபத்துடன் காப்பாற்றி இருக்கிறார் என்று இதற்குப் பொருள்! இதே போல, பெரிய அளவில் சாதகருக்கு

கிடைக்க வேண்டிய சந்தோஷங்களும் கூட, கிரியையின் விளைவினால், அல்ப சந்தோஷமாக முடிந்து போகலாம். அப்படி நேர்ந்தாலும் வாழ்த்தத் தக்கதே என்றாலும, சாதாரண மக்களின் பார்வையில், அது நாகரீகமாக இராது !

கிரியையாக அன்றி, வழக்கமான விதத்தில் மனப் பதிவுகள் தீரவேண்டுமானால் நிகழவேண்டிய பெரிய விபத்துகள்-பெரிய சந்தோஷங்கள் இரண்டையுமே, கிரியையின்போது சிறு விபத்துகளாகவும், சிறு சந்தோஷங்களாகவும் நிகழ்த்தி, மனப் பதிவுகளை வேகம் வேகமாகக் கடவுள் அழித்துவிடுகிறார் என்பதே நாம் புரிந்து கொள்ள வேண்டியது.

# யோக சாதனையின் போது குருவின் வழிகாட்டுதல்

யோக சாதனையில் சாதகர் ஈடுபடும்போது, ஒவ்வொரு கட்டத்திலும் அவரை சரியான பாதையில் இட்டுச் செல்ல, குருவின் வழி காட்டுதல் மிகவும் அவசியம். குருவின் வழிகாட்டுதல் இல்லாவிட்டால், சாதகர் யோக சாதனையில் நீண்டகாலம் நீடிக்கவே முடியாது. வெளி உலகின் வசீகரங்கள் சாதகரை எப்போதும் ஈர்த்துக் கொண்டு இருப்பதும், இந்த கவர்ச்சிக்கு சாதாரண மனிதர்கள் மிக எளிதில் மயங்கிவிடுவார்கள் என்பதுமே, இதற்கு காரணம். வெளியுலகின் கவர்ச்சிக்கு சாதகர் இடம் கொடுத்தால் ஆன்மீக பாதையில் இருந்து வழுவி விட நேரும். குருவின் நேரடி மேற்பார்வை இருந்தால் மட்டுமே இதிலிருந்து தப்ப முடியும்.

நான் என் வாழ்க்கையில் நிகழ்ந்த சில உதாரணங்கள் மூலம் இதை விளக்க முயல்கிறேன்.

குருவின் வழிகாட்டுதல் எவ்வளவு அவசியம் என்பது பற்றிய என்னுடைய சில அனுபவங்களை, நான் ஏற்கனவே முந்தைய அத்தியாயங்களில் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய விஷயத்தில், குருவின் தீட்சை கிடைத்தவுடன் கிரியை வெளிப்படுவதே சரியாக நடக்கவில்லை. என் குருதான் சில முறை தலையிட்டு, என் உடலில் கிரியை வெளிப்படுவதை

உறுதிப்படுத்தினார்.

அதன் பிறகு, கிரியையின்போது எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை குருவானவர் அவ்வப்போது எப்படி நீக்கினார் என்பதையும் நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். குறிப்பாக, பாவம் செய்து விடுவோமோ என்ற என்னுடைய அச்சம், குருவின் விளக்கங்கள் மூலமாகவே நீங்கியது. என் குரு என்னுடைய சந்தேகங்களை இதுபோல நீக்கியிராவிட்டால், நான் மேற்கொண்டு யோக சாதனையில் முன்னேற முடியாமல் உறைந்து போயிப்பேன். என்னைப் பொறுத்த வரை, என் மனதில் ஏற்படும் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் தெளிவு பெறுவதற்கான விளக்கப் புத்தகமாகவே என் குரு இருந்து வந்துள்ளார்.

மேலும் என் வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட பணப் பிரச்சனைகள் குருநாதர் கொடுத்த மந்திரத்தால் எப்படி நீங்கின என்பதையும் நான் ஏற்கனவே விவரித்துள்ளேன்.

இதெற்கெல்லாம் அப்பாற்பட்டு, மேலும் சில விஷயங்களையும் இப்பொழுது எழுத வேண்டியுள்ளது. என்னைப் போன்ற ஒவ்வொரு சாதகருக்கும் இந்த விஷயங்கள் மிக முக்கியமானவை.

நான் ஏற்கனவே முந்தைய அத்தியாயங்களில் கூறியுள்ளபடி, சாதகரின் உடலில் கிரியை ஆரம்பித்துவிட்டால் அதன் விளைவுகள், உடலின் எல்லா அடுக்குகளிலும் ஒரே சமயத்தில் வெளிப்படலாம் அல்லது ஒரு சமயத்தில் ஒரு அடுக்காகவும் கிரியை வெளிப்படக் கூடும். இப்போது, சாதகரின் அன்றாட வாழ்க்கையில் கிரியை வெளிப்பட ஆரம்பித்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா ?

அன்றாட வாழ்வில் கிரியை வெளிப்பட ஆரம்பிக்கும்போது, சம்பவங்கள் மிக வேகமாக நிகழ்கின்றன. சாதகரின் விதி விரைந்து வெளிப்பட ஆரம்பித்து, மனப் பதிவுகள் துரித கதியில் அழிக்கப்படுகின்றன. இந்த அதிவேக மாற்றங்களின் சுமைகள், சில சமயம், சாதகர் தாங்க முடியாத அளவில் இருக்கலாம்.

எனக்கு அப்படி நேர்ந்தபோது நான் குருவிடம் சென்று முறையிட்டேன். அதிவேக சம்பவங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும் என எந்த அவசியமும் இல்லை என்பதை, வாசகர்கள் இங்கே நினைவில் கொள்ள வேண்டும். பல சமயங்களில், நான் என்ற அகந்தை அடங்கியுள்ள ஞானமய கோசத்தில் கிரியை நிகழும்போது, கொஞ்சம் கூட மகிழ்ச்சி இல்லாத துயரகரமான அனுபவங்கள் ஏற்படக் கூடும். சாதகர் இதனை பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். ஏனென்றால், மனிதனின் புத்தியில் இருந்து அகந்தையின் எல்லாச் சுவடுகளையும் சுத்தமாக அழிக்கவே. ஆதிபராசக்தி இத்தகைய அனுபவங்களைத்தருகிறது.

எனவே, கிரியையின் வேகத்தைத் தாங்க முடியாமல் நான் என் குருவிடம் முறையிட்ட போதெல்லாம் அவர் என்னை ஆட்கொண்டு, சம்பவங்களின் வேகத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் எனக்கு நிவாரணம் அளித்தார்.

இதுபோல துயரகரமான அனுபவங்கள் சாதகரின் வாழ்க்கையில் நிகழும்போது குருவானவர் மட்டுமே துயரத்தின் தீவிரத்தை தீர்க்க முடியும். சில சமயங்களில் சாதகரின் துயரச் சுமையை குருநாதர் தாமே ஏற்றுக்கொண்டு, சாதகரை துயரங்களில் இருந்து விடுவிப்பார். இந்த துயரம் என்பது சாதகருக்கு ஏற்படும் நோய் அல்லது வேறெந்தக் கஷ்டமாகவும் இருக்கலாம். சாதகரின் துயரங்களை குருவானவர் ஏற்கவில்லை என்றாலும், துயரம் லேசாவதை உறுதிப்படுத்த குருவினால் முடியும்.

சில சமயங்களில், சாதகரின் வாழ்வில் ஏற்படும் மகிழ்ச்சிகரமான

அனுபவங்களைக் கூட குருவானவர் தாம் ஏற்றுக்கொண்டு, இந்த அனுபவங்களின் இன்பத்தினால் சாதகர் மீண்டும் உலக வாழ்வின் வசீகரங்களுக்கு பலியாவதைத் தடுப்பார். சாதகர் கொஞ்சம் கூட உணராத விதத்தில் இதைச் செய்யவும் குருவினால் முடியும்.

என் வாழ்க்கையில், என் குருநாதர் இப்படி மறைமுகமாக விதியை எப்படி கட்டுப்படுத்தி இருக்கிறார் என்பதற்கான சில சம்பவங்களை இப்போது என்னால் நினைத்து பார்க்க முடிகிறது. கிரியையின் போது, சாதகரின் நல்ல குணங்கள், கெட்ட குணங்கள் இரண்டையும்தான் அழிக்க வேண்டி இருக்கிறது. இந்தக் காரியம் கச்சிதமாக நடப்பதை, மிகவும் சூட்சுமமான ஒரு விதத்தில் குருவானவர் உறுதிப்படுத்துகிறார். இப்படி நான் சொல்வதை, வாசகர்கள் சரியாக புரிந்து கொள்வார்களா என்ற சந்தேகம் எனக்கு இருக்கவே செய்கிறது. வாசகர்கள் புரிந்து கொள்ளும் விதமாக இதை எடுத்துச் சொல்லும் திறமை எனக்கு இருக்கிறதா என்ற சந்தேகத்தையும் தவிர்க்க முடியவில்லை. ஆயினும் இதுபற்றி என்னால் முடிந்த வரை இன்னும் சற்று விளக்க முயல்கிறேன்.

ஒரு நாள், ஹைதராபாத்தில் நான் என்னுடைய குருவை சந்திப்பதற்காக ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தேன். என் குரு, ஏற்கனவே ஒரு முகவரியை என்னிடம் கொடுத்து, அங்கே வந்து தம்மை சந்திக்கச் சொல்லியிருந்தார். ஹைதராபாத் நகரின் சாலைகள் எனக்கு அவ்வளவு பரிச்சயம் அல்ல. ஆகவே, நான் நகரின் வரைபடம் ஒன்றை எடுத்து, எனக்குத் தெரிந்த சாலைகள் வழியாக நான் செல்ல வேண்டிய இடத்திற்கு எப்படி செல்வது என்பதற்கான பாதை ஒன்றை குறித்து வைத்திருந்தேன். அது சற்று சுற்றுப்பாதைதான் என்றாலும், எனக்குத் தெரிந்த சாலைகள் இருப்பதால், அந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தேன். சுருக்கப்பாதை, எனக்குத் தெரிந்த பாதையாக இருக்கவில்லை.

சுற்றுப்பாதையில் நான் சென்றுக்கொண்டிருந்த போது,

## பராசக்தி

என்னுடைய மொபைல் தொலைபேசி ஒலிக்க ஆரம்பித்தது. பொதுவாக வாகனங்களை ஓட்டும் போது, குறிப்பாக இருசக்கர வாகனத்தில் செல்லும்போது, நான் தொலைபேசியை எடுப்பதில்லை. ஆனாலும் பேசுவது யார் என்பதை மட்டும் பார்த்துக் கொண்டு, பிற்பாடு பேசுவதுண்டு. இந்தத் தடவை அப்படி பார்த்தபோது, தொலைபேசியில் பேசுவது என் குரு என்று தெரிய வந்தது. அவரைப் பார்க்கவே நான் சென்று கொண்டு இருக்கிறேன் என்பதால், வண்டியை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு, தொலைபேசி அழைப்பிற்கு பதில் அளித்தேன். ஆனால் மறு முனையில் பேசியதோ, என் குருவின் குரலாக அன்றி, வேறு ஒரு குரலாக இருந்தது. தொலைபேசியில் பேசிய நபர் குருதான் தமது தொலைபேசியை கொடுத்து, குறிப்பிட்ட பாதை ஒன்றில் வரும்படி என்னிடம் சொல்லச் சொன்னதாகக் கூறினார். இப்போது நான் எங்கே இருக்கிறேன் என்பதையும் அவர் விசாரித்து, அங்கிருந்து குரு சொன்ன பாதையை பிடித்து, வரவேண்டிய இடத்திற்கு எப்படி வரவேண்டும் என்பதையும் அவர் விளக்கினார். நான் இருக்கும் இடத்தில் இருந்து மிகவும் பக்கத்தில்தான் குரு இருப்பதாகவும், எளிதாகவே வந்துவிடலாம் என்றும் அவர் சொல்லவே, நான் என் பாதையை மாற்றிப் பயணித்தேன்.

அந்த தொலைபேசி அழைப்பு சில நிமிடங்கள் தாமதமாக வந்திருந்தால், நான் திரும்ப வேண்டிய இடத்தைத் தாண்டி, ஆரம்பத்தில் குறித்து வைத்த பாதையில் தொடர்ந்து சென்றிருப்பேன். அது தேவையற்ற நீண்ட பாதையாகவும் அமைந்திருக்கும். தொலைபேசியில் நான் கண்டது, குருவின் எண்ணாக அன்றி, வேறு யாருடைய எண்ணாகவேனும் இருந்திருந்தால், நான் பேசியிருக்கவே மாட்டேன்.

எனவே, என் குருதான், நான் தவறான பாதையில் செல்வதை எப்படியோ தெரிந்து கொண்டு, தம்முடைய தொலைபேசியை

இன்னொருவரிடம் கொடுத்து, சரியான பாதையை எனக்கு எடுத்துக்கூறச் சொல்லியிருக்கிறார் என்பது, அப்போது எனக்குப் புரிந்தது. இது ஒரு சிறு சம்பவமாக இருக்கலாம்.

ஆனால், 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதி, மற்றொரு பெரிய சம்பவம் நிகழ்ந்தது. அன்றைய தினம், நான் என்னுடைய காரில் நீண்ட தூரப் பயணம் ஒன்றை தொடக்கி இருந்தேன். நீண்ட பயணம் என்றால், சுமார் 3 ஆயிரம் கிலோ மீட்டர் பயணம். அதாவது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் இருந்து, பல்வேறு மாநிலங்களின் பல குறுகிய சாலைகள் வழியாக 10 நாட்கள் பயணித்து, ஹைதராபாத் செல்ல நான் திட்டமிட்டு இருந்தேன். இப்படி நீண்ட தூரப் பயணம் மேற்கொள்வது எனக்கு புதிதல்ல. ஏற்கனவே இதுபோலப் பல முறை நான் தனியாகவே காரை ஓட்டிக் கொண்டு நீண்ட தூரம் பயணித்து இருக்கிறேன்.

இம்முறை, நான் காரிலேயே ஹைதராபாத் வரப் போவதை, என் குருவிடம் முன் கூட்டியே சொல்லி இருந்தேன். இதைக் கேட்டவுடன் குரு எனக்கு தொலைபேசியிலேயே மந்திரம் ஒன்றை சொல்லிக்கொடுத்து, பயணத்தின் போது அவ்வப்போது அந்த மந்திரத்தைச் சொல்லும்படி அறிவுறுத்தியிருந்தார். ஒவ்வொரு நாளும் பயணத்தை தொடக்கும் முன்பாக, 11 முறை இந்த மந்திரத்தைச் சொல்ல வேண்டும் என்றும் எனக்கு அறிவுறுத்தப்பட்டு இருந்தது. நானும் அதுபோலவே மந்திரத்தை தவறாமல் மனனம் செய்து கொண்டிருந்தேன்.

இந்த மந்திரம் என்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடியது என்று என்னிடம் சொல்லப்பட்டிருந்தது. நான் ஏற்கனவே சொன்னபடி, நீண்ட தூரப் பயணம் மேற்கொண்டது இது எனக்கு முதல் முறை அல்ல என்றாலும், முந்தைய இது போன்ற பயணங்களின் போது என்னுடைய குரு இத்தகைய மந்திரம் எதையும் எனக்கு உபதேசித்திருக்கவில்லை.

மந்திரத்தை உரிய முறையில் ஜபித்தபடி 10 நாள் பயணத்தின் 8 நாட்களை முடித்துவிட்டு, விதிவசமான அந்நாளில், மத்திய இந்தியாவின் உள்ளடங்கிய பகுதியைச் சேர்ந்த குறுகிய சாலை ஒன்றில், நான் பயணித்துக் கொண்டிருந்தேன். மணிக்கு சுமார் 100 கிலோ மீட்டர் வேகத்தில் என்னுடைய கார் ஓடிக் கொண்டிருந்தது. அப்போது பேருந்து ஒன்றை முந்திச் செல்ல நான் முயன்றதை பேருந்து ஓட்டுநர் அனுமதிக்க மறுத்து, என்னைவிட வேகமாகப் பேருந்தை ஓட்டத் தொடங்கினார். பொதுவாக இத்தகைய போட்டா போட்டியில் ஈடுபடும் பழக்கம் எனக்கு இல்லையென்றாலும், அன்றைய தினம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஏனோ வரவில்லை. இதனால் நான் இன்னும் வேகமாகச் சென்று, பேருந்தை முந்த முயன்றேன். தேவையற்ற இந்த முயற்சியில் என்னுடைய கார் சாலையை விட்டு விலகி, சாலையோரத்தில் கொட்டப்பட்டிருந்த சரளைக் கற்கள் மீது மோதி நிலை குலைந்தது. அதே சமயத்தில் சாலையின் குறுக்கே நடந்து செல்ல சிலர் முயன்றதால், நான் முற்றிலுமாக கட்டுப்பாட்டை இழந்தேன். அடுத்த சில நொடிகளில் என்ன நிகழ்ந்தது என்பதை மறக்க, இன்னும் எத்தனை காலம் ஆகுமோ தெரியாது. அந்த நொடியில், அவ்வளவுதான் செத்தோம் என்றே நினைத்தேன். ஆனால் ஏதோ ஒரு அற்புத சக்தி எங்கிருந்தோ வந்து வேலை செய்து, என் கார் கவிழாமல் காப்பாற்றியது. இது எப்படி நிகழ்ந்தது என்பது இன்று வரை எனக்கு ஆச்சர்யம்தான். அவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து சிறு காயம் கூட இன்றி நான் உயிர் தப்பினேன். என்னுடைய காருக்கும் எந்தச் சேதமும் ஏற்படவில்லை. அந்த நொடியில் என்னுடைய குரு சொல்லிக் கொடுத்த மந்திரம் இல்லாவிட்டால், இன்றைக்கு நான் இந்த புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்க மாட்டேன்.

குருவானவர் சாதகரின் விதியை இப்படித்தான் கட்டுப்படுத்துகிறார். விதிவசமாக என்ன நடக்கப் போகிறது

என்பது சாதகருக்கு தெரியாதே தவிர, குருவுக்கு நன்றாகவே தெரியும். அதை அவர் நம்மிடம் சொல்லவில்லை என்றாலும், நம்மைப் பாதுகாக்கத் தேவையான எல்லாவற்றையும், சரியான நேரத்தில் சரியாகச் செய்துவிடுவார்.

மேற்கண்ட இரண்டு சம்பவங்களிலும், குருநாதர் என் விதியை ரிமோட் கன்ட்ரோல் போல எப்படி கட்டுப்படுத்தினார் என்பதை நான் மிகத் தெளிவாகவே உணர்ந்தேன். இந்த சக்தி தமக்கு இருப்பதை குருவானவர் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார். ஆனாலும், விளக்கின் மீது துணியைப் போர்த்தினாலும், விளக்கின் வெளிச்சம் துணியின் ஊடாக சற்று வெளியே கசிவது போல, நடக்கின்ற சம்பவங்கள் மூலம் குருவின் சக்தியை மறைமுகமாக நாம் உணர முடியும்.

இதுபோன்ற இன்னும் பல சம்பவங்களை என் வாழ்வில் நான் சந்தித்திருக்கிறேன். ஆனாலும் குருவின் சக்தி எவ்வளவு மகத்துவமானது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள, மேற்கண்ட 2 சம்பவங்கள் போதுமென நினைக்கிறேன்.

இரண்டாவதாக நான் சொன்ன சம்பவத்தை, இன்னும் கொஞ்சம் பகுப்பாய்வு செய்து பார்க்கலாம்.

குருவின் அமானுஷ்ய சக்திகளை அவர் விரும்பா விட்டாலும் சாதகர்கள் கொஞ்சம் உணரமுடியும் என்பதை முன்னரே குறிப்பிட்டேன். சில சமயங்களில் ஒரே கல்லில் பல மாங்காய்களை அடிக்க குருவானவர் விரும்பினால், தாமே தமது சக்தியை சாதகருக்கு வெளிப்படுத்திக்கொள்வார். சாதகரின் கர்மவினை முழுவதும் விதியாக வெளிப்பட்டு, முற்றிலுமாக அழிய வேண்டுமென்பதே இதன் குறிக்கோள். குருவானவர் தமது சக்தியை தாமே வெளிப்படுத்திக்கொள்வதன் மூலம், குரு மீதான

சாதகரின் நம்பிக்கை வலுப்படும் என்பது இன்னொரு காரணம். இதனால்தான் குருவானவர் சாதகர்களிடம் எப்படி நடந்துகொள்கிறார் என்பது புரியாத புதிர் என நான் ஏற்கனவே சொன்னேன். குருவின் மேன்மையை வெளிப்படுத்தக்கூடிய இத்தகைய சம்பவங்கள் நிகழும்போது, குருவின் உதவி இருக்கையில் நமக்கு கவலையில்லை என்ற எண்ணம் சாதகருக்கு வந்துவிடுவதால், யோக சாதனையின் பாதையிலிருந்து அவர் ஒருபோதும் வழுவமாட்டார் என்பதை சொல்லத் தேவையில்லை.

# கடைசியாக ஒரு வார்த்தை

பரோபகாரம் என்றால் என்ன?

நமக்காக அன்றி, மற்றவர்களுக்காக, உலகின் நன்மை கருதி செய்யப்படுகின்ற காரியத்தையே, பொதுவாக பரோபகாரம் என்கிறோம்.

ஆனால், எனக்காக அன்றி மற்றவர்களுக்காக என்று எண்ணும்போதே, அதில் நான் என்கிற எண்ணம் சேர்ந்து விடுவதால், அது பரோபகாரமாகாது. அதாவது, இவர் மூலம், இந்த உலகிற்கு பரோபகாரமாகட்டும் என்று இறைவன் திருவுள்ளம் கொண்டால் மட்டுமே, ஒருவர் மற்றவர்களுக்கு நன்மை செய்ய முடியும். எனவே, மனித குலத்திற்குப் பரோபகாரம் கிடைப்பது கடவுளின் கையில் இருக்கிறது.

இன்னும் சற்று ஆழமாக சிந்தித்தால், உலகின் எல்லா உயிர்களும் கடவுளை நம்பியே இருப்பதால், யாரும் மற்றவர்களுக்கு உதவவும் முடியாது. மற்றவர்களின் உதவி யாருக்கும் தேவையும் இல்லை. சிருஷ்டியின் அடிப்படை வடிவமைப்பே அப்படித்தான் அமைந்துள்ளது. அதையும் மீறி, யாராவது மற்றவர்களுக்கு நன்மையோ, தீமையோ செய்வதாக நினைத்துக் கொண்டிருந்தால், அதற்கு, அவர்களின் சொந்த அகந்தை, அதாவது நான் என்ற எண்ணம்தான் காரணமே தவிர,

உண்மையில் அவர்கள் மற்றவர்களுக்கு நன்மையோ தீமையோ செய்வதில்லை. அதேபோல, மற்றவர்களின் உதவி நமக்குத் தேவை என யாராவது நினைத்துக் கொண்டிருந்தாலும், அது தவறுதான்.

எனவே, பரோபகாரம், அன்பு, கருணை, இரக்கம் இதுபோன்ற வார்த்தைகளுக்கோ அல்லது அவற்றின் எதிர்ப் பதங்களுக்கோ உண்மையில் எந்தப் பொருளும் இல்லை. இதுபோன்ற வார்த்தைகள் எவ்வளவு பெரியதாகத் தோன்றினாலும், அவை, மனிதனின் அகந்தை காரணமாக, மனித புத்தியிலிருந்து வெளிப்படக்கூடிய வெற்றுக் கருத்துக்களேயன்றி வேறொன்றுமில்லை. பாவ-புண்ணியம் தொடர்பான இதுபோன்ற பகட்டான வார்த்தைகள், வெறும் மாயாஜாலம் போன்றதேயன்றி, நிஜமான அடிப்படை கொண்டவையல்ல. ஐம்புலன்கள் மூலம் மனம் என்ற மாயத்திரையில் தோன்றும் புறவுலகம் என்னும் மாயக்காட்சியின் ஒரு பகுதியே, இது போன்ற கருத்துக்களும் வார்த்தைகளும். இத்தகைய கருத்துக்கள் மற்றும் வார்த்தைகளால், கடவுளை ஒருபோதும் அறிய முடியாது. மனிதனுக்குள் குடி கொண்டுள்ள இறை சக்தியை மனிதன் தனக்குள் தானாக மட்டுமே உணர வேண்டும். இதற்கு வெளியுதவி எதையும் தேடக் கூடாது. தேடவும் முடியாது. கடவுளை அறிவதற்கான முயற்சியில், குருவானவர் ஓர் ஊடகமாக செயல்பட முடியும் என்றாலும், அவரும் கூட, கடவுளின் அருள் அப்படியிருப்பதால்தான் சாதகருக்கு உதவ முடிகிறதே தவிர, குருவாகப் பார்த்து, இந்த முயற்சியில் எந்த உதவியும் செய்துவிட இயலாது. குருவின் உதவி இருந்தாலும் கூட, இறுதியில் சாதகர் தாமாகவேதான் கடவுளை உணர முடியும். அதாவது, கடவுளின் அருளின்றி எந்த ஒரு மனிதனும் கடவுளை உணர முடியாது என்பதே இறுதியான உண்மை. அதாவது, கடவுளை அறிவதற்கான அருள் கடவுளிடமிருந்தே கிடைக்க வேண்டும்.

கடவுளை அறிவதற்கான கடவுளின் அருள் நமக்கு கிடைக்க வேண்டுமானால், முதலில் அதற்கான தகுதியை நாம் பெற வேண்டும். அந்த தகுதி வரவேண்டுமானால், பலப்பல பிறவிகளாக புலன் நுகர்ச்சியால் ஏற்பட்ட மனப் பதிவுகள் முற்றிலுமாக அகல வேண்டும்.

மனப் பதிவுகள் முற்றிலுமாக அழிய வேண்டுமானால், சிருஷ்டி காரியம் முடிந்த பின்னர் மனித உடலுக்குள் உறைந்து கிடக்கும் குண்டலினி என்னும் ஆதி சக்தியை தூண்டி, சிருஷ்டி அற்றுப் போவதை உறுதிப்படுத்த வேண்டும்.

குண்டலினி சக்தியை தூண்ட வேண்டுமானால், குருவானவர் தலையிட்டு, புறவுலகை நோக்கித் திரும்பியுள்ள அந்த சக்தியை நமக்குள் உள் நோக்கித்திருப்ப வேண்டும்.

இது எல்லாமே சரியாக நடந்தாலும், பல பிறவிகளாக நமது மனதில் உருவான அழுக்குகள் முழுமையாக அகல, எத்தனையோ காலமாகலாம்.

தேவைப்பட்டால் மன அழுக்குகள் நீங்கும் வேகத்தை அதிகப்படுத்த குருவினால் முடியும்தான். ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மேல் அந்த வேகத்தை தாங்கும் சக்தி சாதகர்களுக்கு இருப்பதில்லை. இதனால்தான், குருவானவர் சாதகருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ சாதகரின் விதி வெளிப்படும் வேகத்தை, தொடர்ந்து தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். எனவே, சாதகரின் தேவைகளைப் பொறுத்தவரை, குருவே மிகவும் முக்கியமானவர். குருவிடம் சாதகர் முழுமையாக சரணாகதி அடைய வேண்டியது, மிக மிக முக்கியம். மனிதர்களைப் பொறுத்தவரை, கடவுளை உணர, குருவின் கருணை மட்டுமே போதுமானது.

## பராசக்தி

இப்போது இந்தப் புத்தகத்தை முடிக்கும் முன், இறுதியாக, வாசகர்களுக்கு ஒரு கேள்வி.

எப்போதும் உணர்ச்சி அலைகளில் சிக்கித் தத்தளிக்கும் மனம் அமைதியடையவே வாய்ப்பில்லாத நிலையில், மனம் என்னும் திரையில் தோன்றும் மாயத் தோற்றமான இந்த புறவுலகில் நிகழும் சம்பவங்களுடன் கொஞ்சமும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல், வெறும் பார்வையாளராக, நடப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது எப்படி சாத்தியம்.

பற்றற்ற இந்நிலையை நாமாக நம்முடைய முயற்சியினால் உருவாக்கிக் கொள்ள இயலாது. அத்தகைய நிலைக்கு நம்முடைய மனம் உயர வேண்டும். கடவுளிடம் முழுமையாக சரணாகதி அடைந்தால் மட்டுமே, மனம் அந்நிலைக்கு உயர்வது சாத்தியம். கடவுளிடம் முழுமையாக நம்மை ஒப்புக் கொடுப்பதும், நாமாக பார்த்து செய்யக்கூடிய காரியம் அல்ல. கடவுளிடம் சரணாகதி அடைந்துவிட்டதாக நாமாகவே சொல்லிக்கொண்டிருந்தால், அதிலும் நான் என்ற அகந்தை ஒட்டிக்கொண்டிருப்பதால், நம்முடைய சரணாகதியும் வெறும் மனத் தோற்றமாகப் போய்விடும். அப்படியானால் இந்தப் பிரச்சினைக்கு என்னதான் தீர்வு?

குருவின கருணை மட்டுமே இதை தீர்க்க முடியும். இந்த உண்மை, இதைப் படிக்கும் எல்லா வாசகர்களுக்கும் தெளிவாக புரியட்டும் என வேண்டி, என் குருவான சுவாமி சகஜானந்த தீர்த்தரின் தாழ் பணிந்து, இந்தப் புத்தகத்தை இத்துடன் முடிக்கிறேன்.

# அருஞ்சொல் விளக்கம்

**ஆக்ஞா சக்கரம்** - மனித உடலில், இரண்டு புருவங்களுக்கு இடையே அமைந்துள்ள சக்தி மையம்.

**அனாகத சக்கரம்** - தண்டுவடத்தில், இருதய பகுதிக்கு நேர் எதிரே அமைந்துள்ள சக்தி மையம்.

**அனாகத ஒலி** - எந்த ஒரு பொருளும், எந்த ஒரு பொருளுடனும் இடிக்காமல், மனத்திற்குள் தானாகவே உருவாகும் ஒலி. சாதகர் மட்டுமே அதை கேட்க முடியும்.

**ஆனந்தமய கோசம்** - மனித ஆன்மாவைச் சுற்றி, 5 அடுக்குகளாக அமைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் முதலாவது உள்ளடுக்கு. மனிதனாக உருவெடுத்த பிரபஞ்ச சக்தியின் 5 அடுக்குகளில், மிகவும் சூட்சுமமானது இந்த அடுக்கே.

**அன்னமய கோசம்** - நாம் உண்ணும் உணவை பல கூறுகளாக பகுத்து மறுகட்டுமானம் செய்வதன் மூலம் உருவாகக்கூடிய மனித உடல் என்னும் 5 ஆவது வெளியடுக்கு. மனிதனாக உருவெடுத்த பிரபஞ்ச சக்தியின் 5 அடுக்குகளில் மிகவும் ஸ்தூலமானது இந்த அடுக்கு.

**ஆஸ்ரமம்** - யோகியின் இருப்பிடம். சாதகரின் யோக சாதனையை வழி நடத்த தகுதியுள்ள குருவானவரின் வசிப்பிடம்.

**பிரம்மன்** - பிரபஞ்சத்திலும், அதற்கு அப்பால் உள்ள வெளியிலும் நீக்கமற நிறைந்துள்ள அதியுன்னத தெய்வீக சக்தி, கடவுள், எல்லாம் வல்ல இறைவன்.

**புத்தி** - மனிதனுக்குள் அறிவாக வடிவெடுத்த பிரபஞ்ச சக்தி, நன்மை-தீமைகளை பகுத்தறியும் திறன். புத்தி எப்போதும், தான் என்ற அகந்தையுடன் கலந்தே காணப்படும். சித்-மனம் என்னும் பொருள் கடவுள் சக்தியின் கட்டுபாட்டில் இருந்து விடுபட்டவர்கள் போல நாம் நினைத்ததை செய்ய முடிவதற்கு காரணமான ஐம்புலன்களின் உறைவிடம்.

**சித் சக்தி** - மனத்திற்குள் இயங்கும் பிரபஞ்ச சக்தியின் ஒரு வடிவம்.

**சக்கரம்** - மூளை-தண்டுவட மண்டலத்தில் அமைந்துள்ள சக்தி மையங்களில் ஒன்று.

**குரு** - சீடரின் மனதில் இருந்து அறியாமை இருளை அகற்றி, மனதிற்குள் ஏற்கனவே உறைந்துள்ள ஞானம் பளிச்சிடுவதை உறுதிப்படுத்தும் திறன் படைத்த மரியாதைக்குரிய ஆசிரியர்.

**குணங்கள்** - மனதின் 3 குணங்கள்.

**காரண சரீரம்** - 5 அடுக்குகளாக அமைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் உள்ளே அடைப்பட்டுள்ள தனிமனித ஆன்மா.

**கிரியை** - குண்டலினி சக்தியை தூண்டுகையில், மனதில் படிந்துள்ள அழுக்குகளை நீக்குவதற்காக, மனிதனின் உடல், மனம் மற்றும் அன்றாட வாழ்வில் தானாகவே ஏற்படக்கூடிய பல்வேறு மாற்றங்களின் தொகுப்பு.

**குண்டலினி** - சக்தி-பிரபஞ்சமாக வடிவெடுத்த ஆதிபராசக்தி, சிருஷ்டி காரியம் முடித்த பின்னர் ஒவ்வொரு மனிதனின் உடலிலும் ஆசனவாய்க்கும், ஜனன உறுப்புக்கும் இடைப்பட்ட பகுதியில், மூளை-தண்டுவட மண்டலத்தின் வேரில், இந்த சக்தி உறைந்து நிற்கிறது.

**கும்பமேளா** - கங்கை நதிக்கரையில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் முக்கிய திருவிழா.

**மனோமய கோசம்** - மனித ஆன்மாவைச் சுற்றி 2 அடுக்குகளாக அமைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் 3 ஆவது அடுக்கு.

**மாயை** - ஆதிபராசக்தி பிரபஞ்சமாகவும், சிருஷ்டியாகவும் பொய்த் தோற்றம் காட்டி நிற்கும் அதிசூட்சும மாய நிலை.

**மணிப்பூர சக்கரம்** - மனித உடலின் மூளை-தண்டுவட மண்டலத்தில், நாபிக்கு நேரெதிரே அமைந்துள்ள சக்தி மையம்.

**மணித்வீபம்** - காலதேச வர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்ட ஆதிபராசக்தியின் யாருக்கும் தெரியாத உறைவிடம். மணித்வீபம் சொல்லுக்கு வைரத்தீவு என்று பொருள். இந்த தீவை சுற்றிலும் ஆனந்த சாகரம் என்னும் கடல் அமைந்துள்ளது. அண்டசராசரங்களுக்கு அப்பாற்பட்டு, ஆழங்காண முடியாத கால வெளியின் ஏதோ ஒரு தொலைதூர இடத்தில் இந்த தீவு அமைந்திருப்பதாக சமஸ்கிருத கிரந்தங்களில் சொல்லப்படுகிறது.

**மந்திரம்** - கடவுளை வழிபடுவதற்கான அல்லது தியானத்தின்போது மனனம் செய்வதற்கான சமஸ்கிருத வார்த்தை, ஒற்றை உரிச்சொல் அல்லது பல வரிகள் அடங்கிய சொற்றொடர். மூலாதார சக்கரம் - ஆசன வாய்க்கும், ஜனன உறுப்புக்கும் இடையே, மூளை-தண்டுவட மண்டலத்தின் வேர்ப்பகுதியில் அமைந்துள்ள சக்தி சக்கரம்.

**ஓம்** - சர்வ மூல சக்தியான ஆதிபராசக்தியை குறிப்பதற்கான சமஸ்கிருத ஒற்றை உரிச்சொல்.

**பராசக்தி** - சர்வ மூல சக்தியான பிரபஞ்ச சக்தி.

**பிராணமய கோசம்** - மனித ஆன்மாவை சுற்றி 5 அடுக்குகளாக அமைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் 4 ஆவது அடுக்கு. ஜீவாதார அடுக்கு என்றும் சொல்லப்படுகிறது.

**பிராக்ருதி** -ஆதிபராசக்தியான பிரபஞ்ச சக்தியின் ஸ்தூல வடிவம். இயற்கை என்றும் புரிந்து கொள்ளலாம்.

**பிராணம்** - பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் இயங்கு வடிவம். மனித உடலின் பிராணமய கோசத்தில் நிறைந்துள்ள ஜீவசக்தியும் இதுவே.

**ரஜஸ்** - மனதின் முக்குணங்களில் மற்றொரு குணம். பிரபஞ்ச சக்தியின் சாத்வீக குணமே, சிருஷ்டியை பாதுகாக்கிறது.

**சமாதி** - எண்ணங்களற்ற மனநிலை. யோக சாதகர் முதலில் இந்த நிலையை எட்டினால் தான், மெய்யறிவு பெற முடியும்.

**சைவம்** - இந்து மதத்தின் திரிமூர்த்திகளில் ஒருவரான சிவபெருமானை வழிபடுவோர் பின்பற்றும் தத்துவம்.

**சக்தி பாதம்** - சக்திபாத பரம்பரையை சேர்ந்த யோகிகள், சாதகரை சக்திபாத மார்க்கத்தில் கொண்டு வரப் பயன்படுத்தும் ஓர் உபாயம். சக்தி இறங்குதல் என்று இதற்கு பொருள். தீட்சை கொடுப்பது என்றும் சொல்லலாம்.

**சக்தி** - சர்வ மூலமான ஆதிபராசக்தி.

**சக்தி பீடம்** - சர்வ மூலமான ஆதிபராசக்தி உறைகின்ற மையம்.

**சித்தமகா யோகா** - குண்டலினி சக்தியை எந்த ஒரு யோக முறை மூலமாக விழிப்புற செய்தாலும், அதன் பின்னர் எல்லா யோக முறைகளும் பிரம்மாண்டமான எந்த ஒரே பாதையில் பயணிக்க தொடங்குகிறதோ, அந்த பாதை. சக்திபாத பரம்பரையை சேர்ந்த யோகிகள் பின்பற்றும் யோக முறை.

**ஸ்வாதிஷ்டான சக்கரம்** - மூளை-தண்டுவட மண்டலத்தில் பிறப்புறுப்பு ஸ்தானத்தில் அமைந்துள்ள சக்தி மையம்.

**சூட்சும சரீரம்** - மனித ஆன்மா சுற்றி அமைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் 5 அடுக்குகளில், ஸ்தூல் உடல் அல்லாத, சூட்சுமமான இதர 4 அடுக்குகளின் தொகுப்பு. மரணத்தின் போது இந்த சூட்சம சரீரமே உடலை விட்டு அகன்று, பின்னர் வேறு உடலில் மீண்டும் பிறக்கிறது.

**தமஸ்** - மனித மனத்தின் முக்குணங்களில் ஒன்று. சிருஷ்டியின் சம்ஹாரத்திற்கு இந்த குணமே காரணம்.

**தந்திர நிலை** - யோக சாஸ்திர நூல்களின்படி சொப்பன அவஸ்தை என்னும் கனவு நிலைக்கும். ஜாக்ருத அவஸ்தை

என்னும் விழிப்பு நிலைக்கும் இடைப்பட்ட விசித்திரமான ஒரு நிலை.

**தாந்தீரீகம்** - பலப்பல யோக முறைகளில் ஒன்று.

**வைஷ்ணோ தேவி** - ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இமயமலைத் தொடரின் ஒரு பகுதியான திரிகூட மலையில் கோவில் கொண்டுள்ள பெண் தெய்வம். இந்தியாவின் முக்கியமான சக்தி பீடங்களில் மிக பிரபலமானது.

**விஷோகம்** - சோகம் என்பதன் எதிர்ப்பதம்.

**விஞ்ஞானமய கோசம்** - மனித உடலை சுற்றி 5 அடுக்குகளாக அமைந்துள்ள பிரபஞ்ச சக்தியின் 2 ஆவது அடுக்கு. காரண சரீரத்தின் மீது அமைந்துள்ளது. அறிந்தும் - அறியாமலும் ஐம்புலன்கள் மூலம் நாம் சேகரிக்கும் எல்லா அனுபவங்களும் இந்த அடுக்கில்தான் பதிவாகின்றன.

**யோகா** - தனிபட்ட மனிதர்களின் ஆன்மாவை சர்வமூலமான ஆதிபராசக்தியில் ஐக்கியமாக்குதல்.

**யோகி** - பல்வேறு யோக முறையில் ஏதோ ஒரு யோகா முறையை பின்பற்றக்கூடியவர்.

**யோகினி** - பெண் யோகி.

# சக்திபாத மார்க்கத்தைச் சேர்ந்த ஆசிரமங்களின் முகவரிகள்

1. நாராயண்குடி சந்நியாச ஆசிரமம்.
   டேக்ரி சாலை, தேவாஸ், மத்திய பிரதேஷ், இந்தியா.
   **பின்கோடு** - 455 001.
   **தொலைபேசி** 91 07 27223891 ./ 31880

2. சுவாமி விஷ்ணு தீர்த்த சதன் சேவா நியாஸ்,
   12-3, பழைய பலாசியா, ஜோப்பட் கோட்டி, இந்தூர்,
   மத்திய பிரதேஷ், இந்தியா.
   **பின்கோடு** - 452 001.
   **தொலைபேசி** 91 0731566386 / 564081

3. சுவாமி சிவம் தீர்த்த குண்டன் யோகா மையம்,
   துர்கா மந்திர், கலெக்டர் பங்களா அருகில், சிந்த்வாடா,
   மத்திய பிரதேஷ், இந்தியா.
   **பின்கோடு** - 455 001.
   **தொலைபேசி** 91 07 48222294

4. சுவாமி சிவம் தீர்த்த ஆசிரமம்,
முகர்ஜி நகர், ரெய்சான், மத்திய பிரதேஷ், இந்தியா,
பின்கோடு - 464 551.
தொலைபேசி 91 07 482 22294.

5. சுவாமி சிவம் தீர்த்த மகா யோக ஆசிரமம்,
காரிகாட், ஜபல்பூர், மத்திய பிரதேஷ், இந்தியா.
பின்கோடு - 482 008.
தொலைபேசி 91 07 61665027

6. தேவாத்மா சக்தி சங்கம்,
74, நவா-கிராமம், தாஹிசார் போஸ்ட், (வழி மும்ப்ரா)
மும்ப்ரா பன்வல் ரோடு, தானே மாவட்டம்,
மஹாராஷ்டிரா, இந்தியா.
பின்கோடு - 400 612.
தொலைபேசி 91 022 7411400.

7. சித்தமகா யோகா டிரஸ்ட்,
வீட்டு எண், 8-3-952 / 10 / 3 (1167). 2ஆவது மாடி,
ஸ்ரீநகர் காலனி சாலை,
ஹைதராபாத், ஆந்திரபிரதேஷ், இந்தியா.
பின்கோடு - 500 073.
தொலைபேசி 91 9848 219240.

8. சிவம் கிருபா ஆசிரம டிரஸ்ட்,
வீட்டு எண். 28-1463 / 1. தேனே பண்டா, சிவம் நகர்,
சித்தூர், ஆந்திரபிரதேஷ், இந்தியா.
பின்கோடு - 571 004
தொலைபேசி 91 944 0069096, 08572 49048.

9. யோகஸ்ரீ பீட ஆசிரமம்,
சிவானந்த நகர், முனி-கி-ரேத்தி,
ரிஷிகேஷ், உத்தராகண்ட், இந்தியா.
பின்கோடு - 249 201
தொலைபேசி 91 0135 430467.

10. ஓம்கார ஆசிரமம்
சித்தோர், சாசன்கிர்,
ஜூனாகார், குஜராத், இந்தியா.

11. ஓம்கார சதன் ஆசிரமம்,
ஆனந்த், குஜராத், இந்தியா.

12.. சுவாமி விஷ்ணு தீர்த்த ஞான சதன் ஆசிரமம்,
குபுடு சாலை, கேடி குஜ்ஜாற், கன்னூர், சோனேபேட்
மாவட்டம், ஹரியானா, இந்தியா.
தொலைபேசி 91 0124 622150 - 61550

13. விஷ்ணு தீர்த்த சித்த மகா யோக சமஸ்தானம்,
சிவம் குடி ஆசிரமம், காளேஷ்வர் மந்திர் அருகில்,
பகதூர்பூர் சாலை, அமல்நேர் போஸ்ட்,
ஜல்கான் மாவட்டம், மஹாராஷ்டிரா, இந்தியா.
பின்கோடு - 425 401.

14. குருநிகேதன்,
சிவா காலனி, டப்ரா, குவா-யார் மாவட்டம்,
மத்திய பிரதேஷ், இந்தியா.
பின்கோடு - 475 110
தொலைபேசி 91 07524 22153.

15. சுவாமி சிவம் தீர்த்த ஆசிரமம்,
1238, ஆர்.டி.97, ஸ்பேரோ புஷ்,
நியூயார்க், 12780, யு.எஸ்.ஏ.

16. சுவாமி சிவம் தீர்த்த ஆசிரமம்,
ரூட் நெம்பர். 97, பாண்ட் எட்டி, சல்லீவன் கன்ட்ரி,
நியூயார்க். யு.எஸ்.ஏ.

17. சுவாமி சிவம் தீர்த்த ஆசிரமம்,
39, எட்ஜ்மியர் டிரைவ், சியரிங்டவுன்,
நியூயார்க். 11507, யு.எஸ்.ஏ.

18. நியூயார்க் தேவாத்மா சக்தி சங்கம்,
போஸ்ட் பாக்ஸ் 1432,
நியூயார்க். 10185, யு.எஸ்.ஏ.

19. திரு ரவி குமார் கவுசிக், ஹைதராபாத், இந்தியா, மொபைல் எண் .91 8978611137

20. திரு அஜய் ஹம்ஸாகர், ஹைதராபாத், இந்தியா, மொபைல் எண். +91 9449824331

21. நாகேஸ்வர ராவ், ஆந்திரப் பிரதேசம், இந்தியா, மொபைல் எண் +91 8121451216, 9032711335, 8639139422, 9291243367, 9032439290

# நூலாசிரியர் பற்றி...

மலையேற்றசாகசத்தில் ஆர்வம் கொண்டவரான நூலாசிரியர் *15* வயதிலேயே, கங்கை நதியின் உற்பத்தி ஸ்தானமான இமயமலையின் பிரம்மாண்டத்தால் ஈர்க்கப்பட்டார்.

அந்த பிரம்மாண்டத்தை ரசிப்பதற்காக அந்த வயதிலேயே அவர் மேற்கொண்ட *2000* கிலோமீட்டருக்கும் அதிகமான மிக நீண்ட பயணத்தின்போது அதே ரயிலில் தமது இமாலய குருவை சந்தித்ததை தொடர்ந்து, அப்பயணம் முற்றிலும் வேறுபட்ட ஓர் அனுபவமாக மாறிவிட்டது.

ஆனால், அந்த ரயில் பயணம் இன்னும் நீளமான ஓர் ஆன்மீகப் பயணத்தின் துவக்கம் என்பதோ, இப்பயணத்திற்கான திட்டம், பயணம் தொடங்கும் முன்பே வரையப்பட்டுவிட்டது என்பதோ, அப்போது அச்சிறுவனுக்கு தெரியாது.

நூலாசிரியர் தற்போது இந்திய ராணுவத்தில் அதிகாரியாக சேவை புரிந்து வருகிறார்.